42.11806
கொம்ப
SL/PR

# கொம்பறை

வன்னி விழா 2002 ஆண்டு மலர்



# ஸ்ரீ சந்த்ர மௌலீஸ்வர சிவாலயம்





ஆகமவிதிப்படி இந்துமத கிரிகைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தோஷ நிவர்த்தி ஹோமங்கள் செய்வதற்கும் மற்றும் ஜனன ஜாதகம் கணித்தல், விவாஹப் பொருத்தம் பார்த்தல் அத்துடன் திருமணத்திற்கும் தேவையான அனைத்து ஒழுங்குகளையும் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டியது.

## ஸ்ரீ சந்த்ர மௌலீஸ்வர சிவாலயம்


**சிவஸ்ரீ ச.கு. ஸ்ரீதரக் குருக்கள் (கண்ணன் குருக்கள்)**

குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆதீன குரு

திருமணப் பதிவாளர்

**3011 Markham Road #62&63**

**Scarborough, ON**

**416.754.7338, 416.724.7480**

# கொம்பறை

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் - கனடா

வருடாந்த வெளியீடு மலர்-6 இதழ்-1000 ஐப்பசி 20, 2002

## 2002 கொம்பறை மலர்
## வாசகர்களை அன்புடன் உள்ளே அழைக்கின்றோம்

ஆசிரியர் குழு

திரு ச.இராசேஸ்வரன் B.A(Hons),MCSE

திரு சி. யோகராசன் MCSE.

திரு சே. சிவாசீலன் Bsc Eng.

அட்டைப்பட ஓவியம்

ஓவியக் கலாவாருதி யே. மரியநாயகம்.

தட்டச்சு உதவியாளர்கள்

திரு த.சிவபாலு திரு க.பாலசுப்பிரமணியம்
திரு க. தவசீலன் செல்வி பொ.கௌசல்யா
திரு. கா. யசோதரன்

மலர் வெளியீட்டுத் தொடர்புகளுக்கு:

மின் அஞ்சல்:-
vannitamil2003@yahoo.com

தொலைபேசி இல:- (416) 291-4473
(905) 474-1307

அஞ்சல் முகவரி:- **Comparai**
**9 Hancock Cres**
**Scarborough (Ont)**
**M1R 2A2, Canada.**

### எண்ணம்...

மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாக வருடாவருடம் கொண்டாடப் படுகின்ற வன்னி விழாக்களின்போது கொம்பறை என்னும் பெயரில் இம் மலர் வெளியிடப்பட்டு வருகின்றது. இம் மலரினது தரம் தராதரம் பற்றிய வாசகர்களது எண்ணக் கருத்துக்களை அமையம் தெரிந்து கொள்ள விரும்புகின்றது.

உங்களது கைகளில் தவழ்ந்த தவழுகின்ற மலர்களினது அட்டைப்பட அமைப்பு, வடிவமைப்பு, உள்ளடக்கப் பட்டுள்ள ஆக்கங்களது தரம் பயன்பாடு என்பவை பற்றிய மன எண்ணங்களை வெளிப்படுத்து வீர்களானால் எதிர்காலத்தில் சிறப்பான வெளியீடுகளை மேற் கொள்வதற்கு பயனுடையதாக அமையும்.

எதிர் காலங்களில் கொம்பறை எழுத்தாளர்கள், வாசகர்களாகிய தாங்கள் தங்களது சொந்த எண்ணங்களில் உருவாகும் சிறப்பான ஆக்கங்களை விளம்பரங்கள் வரும்வரையில் காத்திராமல் தொடர்ச்சியாக அனுப்பிவைக்கப்படலாம். சிறப்பாக மருத்துவ, விஞ்ஞான, பொருளாதார, புவியியல், இலக்கிய, சமய ஆய்வுக் கட்டுரைகள் விரும்பப்படுகின்றது. இத்தகைய சிறப்பான ஆய்வுக் கட்டுரைகள் எமது சமூகத்தின் எதிர்கால விருத்திப் போக்கிற்கும் எங்களது தாய்மண் பிரதேசத்தின் சிறப்பம்சங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்குமுரிய பெரியதோர் களஞ்சியமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

39354

நிர்வாகசபை 2002/2003
வ.த.ச.க அமையம், கனடா.

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்-கனடா
VANNI TAMIL COMMUNITY AND CULTURAL CENTRE- ANADA
இலாப நோக்கற்ற அமைப்பு - Non profitable Organization – Reg. # 1333183.
64 Snowball Cres, Scarborough (Ont), M1B 1S1, Canada.

தலைவர்:
திரு. ச. இராசேஸ்வரன்
(416) 757-0333
செயலாளர்:
திரு. சி. யோகராசன்
(416) 291-4473
பொருளாளர்:
திரு. த. பாலசுப்பிரமணியம்
(416) 286-4258
துணைத் தலைவர்:
திரு. கா. யோகநாதன்
(416) 609-3179
துணைச் செயலாளர்:
திரு. க. தவசீலன்
(416) 288-8138

நிர்வாக சபை
உறுப்பினர்கள்:

திரு. க.தமிழ்ச்செல்வன்
திரு. ப.புவனேந்திரன்
திரு. க.இரவிச்சந்திரன்
திரு. கு.உதயகுமார்
திரு. இ.தங்கேஸ்வரன்
திரு. சு.சண்முகலிங்கம்
திரு. க.பரமானந்தம்
திரு. பா.நித்தியானந்தம்
திரு. க.தில்லைநாதன்
திரு. பொ.தவராசா
திரு. வே.கணேசலிங்கம்
திரு. பெ.வி.கெனடி
திரு. கா.யசோதரன்
திரு. க.அம்பலவாணர்
திரு. சே.சிவாசீலன்
திரு. வே.இரவிச்சந்திரன்

காப்பாளர்கள்:
வண. ச.கு.ஸ்ரீதரக்குருக்கள்
திருமதி. ஜெயா இன்பநாயகம்
திரு. பி.எஸ்.சூசைதாசன்
திரு. த.சிவபாலு
திரு. யா.மரியநாயகம்
திரு. இ.சிவராசா

கணக்காய்வாளர்கள்:
திரு. எம்.சேவியர்
திரு. க.கோபாலபிள்ளை

# ஒன்றுபட்டு உழைப்போம்.

எமது அமையம் வன்னி மண்ணின் மூன்று மாவட்டங்களையும் ஒருங்கினைத்த வகையில் ஒரே அமைப்பாக இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவ் அமையத்தின் இயக்கமும் செயற்பாடுகளும் கனடாவில் ஏன் அவசியம் என்பது தாய் மண் பிரதேசத்தின் இன்றய சுவடுகளின் பதிவுகள் எங்கள் அனைவரினதும் மனங்களை நெகிழவைத்து அவர்களது துன்ப துயரங்களில் பங்கெடுத்த அவர்கட்கு ஆறுதல் என்னும் உதவி மலர்களை அள்ளிக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தின் சூழ்நிலையில் இருக்கின்றோம்.

இத்தகைய எண்ணப்பாட்டிற்கு நாம் முக்கியத்துவம் கொடுப்போமாயின் எம் மனத் திரையில் எழும் தீய இருள்களான எண்ணங்கள் அனைத்தினையும் அகற்றி எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குப் பிரயத்தனம் கொள்ள வேண்டும்.

நிர்வாகசபை
2002/2003ம் ஆண்டு

**மாவீரன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன்**



**கி. பி. 1777 - கி. பி. 1811**

# பண்டாரவன்னியன்
# கொடிக்கீதம்

வீரந்திகழ் கொடி வெஞ்சமர் வாட் கொடி
வெற்றி மணிக் கொடியே!
பாரிலுயர் மன்னன் பண்டாரவன்னியன்
பண்பு நிறைக் கொடியே! உயர் பண்பு
நிறைக்கொடியே!

மங்கல மஞ்சள் நிறத்திரு வாளுடன்
மாண்பு பெறப் பறக்கும்
செங்கதிரோன் ஒளி வீசிய செந்தமிழ்
வீர இசை பரப்பும் தமிழ் வீர இசை பரப்பும்!

மேற்றிசை நாட்டின வெள்ளையர் வந்திங்கு
மேவு வாணிபம் செய்தனரே - அவர்
பார்த்துப் பயந்து நடுங்கியே ஓடும்
மணிக் கொடி வாழியவே மணிக் கொடி வாழியவே!

ஆயிரம் மாயிரம் வன்னியின் வீரர்கள்
அடிதனில் வந்து நின்றே
தாயின் மணிக் கொடி தனை வணங்கிடும்
தனயர்கள் வாழியவே! தனயர்கள் வாழியவே!

# கொம்பறையே நீவாழி!!!

கொம்பறை கொம்பறை கொம்பறை
வன்னிவழ நாட்டிலே
உழவரது வீட்டிலே
வட்ட வடிவமாகவே
நிமிர்ந்து நிற்கும் கொம்பறை
கொம்பறை கொம்பறை...

பண்டைக்காலத் தமிழரின்
தானியத்தைக் காத்திட
தலைநிமிர்ந்து நிற்கின்ற
தங்கமான கொம்பறை
கொம்பறை கொம்பறை...

வந்தோரை வாழவைக்கும்
வளமான கனடாவில்
வன்னிமண்ணின் வசந்தமணம்
பரப்புகின்ற கொம்பறை
கொம்பறை கொம்பறை...

வெள்ளையனை எதிர்த்துநின்று
வீரமுடன் போரிட்ட
பண்டாரவன்னி புகழ்
பாடுகின்ற கொம்பறை
கொம்பறை கொம்பறை...

அல்லல்பட்ட எம்மினம்
ஆனந்தமாய் வாழ்ந்ததை
துள்ளியமாய் விளங்கவே
துடித்தெழுந்த கொம்பறை
கொம்பறை கொம்பறை..

வன்னித் தமிழ்
கலாச்சார அமையத்தின்
ஆறாண்டு விழாவிலே
நூலாக மலர்ந்திட்ட கொம்பறை
கொம்பறை கொம்பறை..

வாழ்க வாழ்க கொம்பறை
வளர்க வளர்க கொம்பறை
ஈழம் மலர வேண்டுமென்று
வாழ்த்திப் பாடு கொம்பறை.

நெடுங்கேணியூர் சித்தர்

## ஆசிச் செய்தி...

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் ஆறாவது வன்னிச் சஞ்சிகையாக வெளியிடப்பட இருக்கும் கொம்பறைக்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெரு மகிழ்சி அடைகின்றேன்.

வன்னி மண்ணில் பிறந்து கனடா நாட்டில் வாழும் சிலர் ஆறு வருடங்கட்கு முதல் பல நெருக்கடிகளுக்குள்ளும் இளம் சந்ததியினரது கலை, கலாச்சார, மொழி வளர்ச்சியினை அதிகரிப்பதற்கு கலாச்சார அமையம் என்றோர் அமைப்பினை உருவாக்கி அவர்களது கடுமையான உழைப்பினால் இன்று வன்னி விழா நடைபெறுவதில் பெருமை அடைகின்றேன். இவ் அமையமானது கலை, கலாச்சாரத்தினை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் வன்னிப் பெருநிலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் அவசியப் பணிகளையும் செய்து வருகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் வறுமையினால் வாடும் சிறார்கட்கு கல்வி கற்பதற்காக புலமைப்பரிசில் திட்டம் என்னும் ஓர் திட்டத்தினை உருவாக்கி அவர்கட்கு உதவிவரும் பணியினை எண்ணிப் பெருமிதம் அடைகின்றேன். புலமைப்பரிசில் திட்டமானது மேலும் பன்மடங்கு வளர்ச்சிகான வன்னி வாழ் மக்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவது அவசியமானதும் பாராட்டப்பட வேண்டியதுமான விடயமாகும்.

கனடா வாழ் வன்னிப் பிரதேச மக்கள் அனைவரும் இவ் அமையத்தின் பணிகளை எதிர் வரும் காலங்களிலும் மிகவும் சிறப்பாகச் செய்வதற்குத் தம்மாலான உதவிகளை நல்க முன்வரவேண்டும் என்பது எனது அவாவாகும்.

வைத்தியக்கலாநிதி எஸ். சந்திரகுமார் **M.B, F.R.C.P(C)**
Brampton Memorial Hospital Campus
Brampton.

# ஆசிச் செய்தி...

வன்னிவளநாட்டு விளைபொருளாம் செந்நெல்லின் சேமிப்புக் கழஞ்சியம் "கொம்பறை" கனடாவில் "கொம்பறை" என்னும் பெயர் தாங்கி வருடச் சஞ்சிகையாக வெளியிடப்படும் வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் சஞ்சிகையும் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கே உரிய தனித்துவமான கலை, கலாச்சார, அரசியல், பொருளாதார, சமூக இலக்கிய ஆக்கங்களைக் காலத்திற்குக் காலம் ஒன்று திரட்டி ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கும் ஏனையோருக்கும் நல்கும் பயன்பாட்டுத் தன்மை கொண்டதாகும்.

ஆறாவது சஞ்சிகையாக வெளியிடப்படவிருக்கும் கொம்பறைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன். இவ் அமையத்தினரின் பணியானது அளப்பெரியதாகும். யுத்த பூமியாகக் கடந்த காலங்களில் காட்சியளித்த வன்னிப் பூமியில் தாய் தந்தையரை இழந்தும் வறியநிலையில் வாழ்கின்றவர்களுமாகிய பல மாணவர்கள் உள்ளர். இவர்களில் மிகச் சிலருக்காவது தன் வல்லமைக்கேற்ப கல்விச் செலவை நல்கிக் கைகொடுத்து உதவுகின்றது இவ் அமையம்.

வருடந்தோறும் வன்னி விழா என்பதனைக் கொண்டாடுவதோடு பேச்சு, சித்திரம், கவிதைப் போட்டிகளையும் நடாத்தி இளம் சந்ததியினரது கலை, கலாச்சார, மொழி வளர்ச்சியினை அதிகரிப்பதற்கும் அத்திவாரமிட்டு வருகின்றனர். இதனைவிட காலத்திற்குக் காலம் விளையாட்டுப் போட்டிகளை மாணவர்களிடையே வைத்து அவர்களை ஊக்குவிக்கும் செயலானது பாராட்டத்தக்கதாகும்.

இப்பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு இவர்களது கையைப் பலப்படுத்துபவர்களாகவும், பார்வையாளர்களாக அன்றிப் பங்காளர்களாகவும் கனடா வாழ் வன்னிப் பிரதேச மக்கள் அனைவரும் கைகொடுத்து உதவ வேண்டும் என்பதே என் அவா ஆகும்.

இவ் அமையத்தினது எதிர்காலப் பணியானது மேன் மேலும் கிளைவிட்டு ஓங்கி வளர்ந்து எமது சமூகத்திற்குப் பல்வேறு வழிகளிலும் உதவ வேண்டும் எனவும் அத்துடன் அமையமும் வளர்ச்சிபெற வேண்டுமெனவும் முழுமையாக வாழ்த்துகின்றேன்.

இ. விசாகலிங்கம்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
கல்விப்பணிமனை
வவுனியா



# தலைவரின் சிந்தனையிலிருந்து...

எழில் மிகுந்து வளம் நிறைந்த வன்னி மண்ணின் புகழினையும் பாரம்பரியங்களையும் துருவ நாடாகிய கனடாவில் இருந்து போற்றிப் பாதுகாத்துச் செயற்பட்டு வருகின்றோம் என்றால் அம்மண்ணின் சுவாசங்கள் அனைத்தும் எம் உதிரத்தில் ஒன்றாக்க கலந்துவிட்டது என்பதே பொருளாகும். நாங்கள் பிறந்த மண்ணது, நாங்கள் தவழ்ந்த மண்ணது, எங்களுக்கு நல்வாழ்வு தந்த மண்ணது, நாங்கள் அனைவரும் அதனது வளங்களையும் சுகங்களையும் நுகர்ந்து பயன்படுத்தியவர்கள். அந்த நன்றி கலந்த தூய்மையான சுதந்திர எண்ணத்தோடு யாவரும் அதன் மாட்சி பெருக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதே எனதவா. அவ்வாறே இன்று கனடாவில் பலரும் ஒன்றினைந்து கருமமாற்றியும் வருகின்றார்கள்.


அந்த வகையில் 2002/2003ம் ஆண்டிற்குரிய நிர்வாகசபையில் சேவைகள் மிகுந்து ஆளுமைகள் நிறைந்த உறுப்பினர்கள் பலரும் பங்கெடுத்துச் செயற்படுவது யாவரும் அறிந்ததே. இவர்களினால் குழப்பங்கள் கலவாது துலக்கங்கள் நிறைந்த செறிவான கருத்துக்கள் எல்லோராலும் விரும்பத்தக்க வகையில் முன்வைக்கப்படுவதனால் உண்மைச் செயற்பாடுகள் உரிய காலவேளைகளில் எடுக்கப்பட்டு எல்லாச் செயற்திட்டங்களிலும் பங்கு கொண்ட மக்களது மனநிறைவு என்னும் வெற்றிகளைப் பலமுறைகளில் பெற்றுக் கொள்ள வழிவகுத்துள்ளது. இத்தகைய வெற்றிக்கு இன்னோர் முக்கிய காரணம் இவர்கள் கருத்துக்கள் மட்டும் சொல்லி செயல்வடிவங்களில் பங்கெடாதவர்களாக இல்லாமல் தங்கள் கருத்துகளை முன்வைக்கும் அதேவேளையில் அவற்றைச் சிறப்பாகச் செய்துமுடித்து வெற்றி காண்பதிலும் பங்கெடுத்துக் கொண்டவர்களாகச் செயற்பட்டமையேயாகும்.

நாங்கள் எங்கள் வன்னி நிலப்பரப்பிலே நெல்லுப்போட கொம்பறையைப் பயன்படுத்துகின்றோம். அதேபோன்று கனடாவில் சொல்லுப்போடவும் கொம்பறையைப் பயன்படுத்துகின்றோம். அது எங்கள் வன்னியின் பொருளாதாரச் செல்வத்தை வளம்படுத்தும் களஞ்சியமாக மிளிர இது எங்கள் வன்னியின் கல்விசார் வளங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டும் களஞ்சியமாக மிளிர்கின்றது.

அமையத்தினது கடந்தகாலச் சீரிய செயற்பாடுகளினால் வன்னிப்பிரதேசம் முழுமையும் விதைக்கப்பட்ட உதவி என்னும் விதைகள் ஆழமாக வேரூன்றியுள்ளது. வறிய மாணவர்களது கல்விப் புலமைப்பரிசிலுக்கும் வைத்தியசாலைகட்கும் வழங்கப்பட்ட உதவிகள் அனைத்தும் உச்சப் பயன்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எந்த வெளிநாட்டு உதவிகளும் வன்னிக்கு வராத காலவேளைகளில் அமையமானது வைத்தியசாலைகட்கு வழங்கிய உதவியானது பல இலட்சரூபாய்கள் பெறுமதி வாய்ந்ததென வன்னி மண்ணில் பலராலும் பாராட்டப்பட்டமை உதவி வழங்கிய உங்கள் அனைவருக்கும் சிறப்பைக் கொடுக்கின்றது.

ஆளுமை நிறைந்த தோழமை எண்ணங்களோடு கனடாவில் உள்ள நாங்கள் அனைவரும் அன்னை பூமியாம் வன்னி மண்ணை எம் மனக்கண்முன் நிறுத்தி அதனது வாழ்வும் வழமும்கருதி பிறதுர்மன எண்ணங்கள் களைந்து ஒன்று பட்டுச் செயற்பட முன்வருவோமேயானால் இன்று யாம்பெற்ற சேவையின் வெற்றிநிலையைவிடப் பன்மடங்கு வெற்றிநிலைகள் காலத்தால் பின்னடைவு பெறாது என்பது திண்ணம்.

ச. இராசேஸ்வரன்
தலைவர்
வ.த.ச.க அமையம்



# செயலாளரின் கருத்தில்...

அன்னைபூமி எனும் அடங்காப் பற்றாம் வன்னி வளநாட்டிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழுகின்ற, முற்போக்கு எண்ணம் கொண்ட சிலரின் உள்ளத்திலே கருவாகி அது உருவாகி இன்று அகவை ஆறைக்கண்டிருக்கும் கனடா-வன்னித் தமிழ் சமூக கலாச்சார அமையத்தின் மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாக நடைபெறும் "வன்னி விழா 2002" இன்போது வெளியாகும் கொம்பறை மலரூடாக சில வார்த்தைகளை பகிர விரும்புகின்றேன்.


முதற்கண் இத்தனை ஆண்டுகளாய் இவ் அமையத்தின் வளர்ச்சிப் பாதையில் பங்கேற்ற அனைத்து நல்லிதயங்களுக்கும் நன்றி கலந்த பணிவான என் வணக்கங்கள். எந்தவிதமான உதவிகளும் தங்களுக்குக் கிடைக்காத வேளையில் கனடா-வன்னித்தமிழ் சமூக கலாச்சார அமையத்தின் உதவிகள் மட்டுமே தங்களுக்கு கிடைத்தது என்று வன்னியில் வாழும் எம் உறவுகள் சொல்லி மகிழ்வதை நாம் அறியும்போது இங்கு நாம் இந்த உறை பனிக்குள் பட்ட இன்னல்கள் யாவும் இனிப்பாகத்தான் இருக்கிறது. ஆனாலும் இன்னமும் சிலபேர் என்ன நடக்கிறது என்று எட்ட நின்றே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலரோ நாம் இங்கு தப்பி வந்துவிட்டோம் அங்கே அவர்கள் என்னதான் பட்டால் எமக்கென்ன நாம் இனி நாட்டுக்குத் திரும்பவா போகிறோம் என்று ஏதிலிகளாய் நிற்கின்ற எம்மக்களை எண்ணாதிருக்கிறார்கள். இது வேதனைக்குரியதாகும்.

இப்படிப்பட்ட சிலர் இன்றய சமாதானச் சூழலில் தம் இனபந்துக்களைப் பார்க்கவெனப் போன இடத்தில் அங்கேயுள்ள சமூக அமைப்புக்களும், விடுதலை விரும்பிகளும் கனடாவில் இருந்து வந்திருக்கிறீர்கள் அங்கு இயங்கும் கனடா- வன்னித் தமிழ் சமூக கலாச்சார அமையத்தில் உங்கள் பங்கு என்னவாய் இருக்கிறது எனத் தொடுத்த வினாக்களுக்கு விடையளிக்க முடியாமல் திக்கித் திணறி இரவோடிரவாக கொழும்புக்கு ஓடி கனடா வந்து சேர்ந்தவர்களும் இங்கு இருக்கிறார்கள். சமூக அமைப்புக்களில் கருத்து மோதல்கள் இடம் பெறுவது இயல்பு. கருத்து மோதல்களைக் கண்டு காத தூரம் போயிருப்பவர்கள் சிலர். கருத்துக்களை கருத்துக்காளால் எதிர்கொள்வதுதானே கற்றோருக்குச் சிறப்பு?. அஃதிலேல் கற்றோர் என்று சொல்லிக் கொள்ளவதில் என்ன சிறப்பு இருக்க முடியும். அதைவிடவும் இவ் அமையத்தில் பணியாற்றுபவர்களைப் பார்த்து பதவிக்காக நிற்கிறார்கள் என்று பரிகசிக்கிறார்கள் சிலர். இவர்களுக்காக நான் ஒன்று சொல்வேன் இங்கே பதவி என்பது அவர்களுக்கு பணம்தேடிக் கொடுப்பது அல்ல. அன்றியும் அரசியல் செல்வாக்கைத் தேடிக்கொடுப்பதுவோ அல்லது அந்தஸ்த்தை உயர்த்துவதுமோ அல்ல! மாறாக அவர்களுக்கு சொந்த வருமான இழப்புக்களையும் குடும்ப சுக நலங்களில் பாதிப்பையும்தான் ஏற்படுத்துகின்றன. இந்தப் பதவி என்பது சிலுவை. இந்தச் சிலுவையை போரினால் பாதிப்புக்குள்ளாகி அல்லலுறும் எம் வன்னி மக்களுக்காகச் சுமக்கிறோம். இது சுமைதான் ஆனாலும் எம் உறவுகளுக்காய் சுமப்பதால் இது சுகமான சுமைதான். இதைச் சுமக்க மனத்துணிவு வேண்டும்.

இதில் வேடிக்கை என்னவெனில் இதைப் பரிகசிப்பவர்களிற் பலர் இதை நன்கு அறிந்தவர்கள்தான். இவர்களைப் பார்த்துச் சொல்வதென்றால் அண்மையில் இங்கு வெளியாகும் ஒரு பத்திரிகையில் வெளியான பகிரங்கக் கடிதம் என்னும் அரசியல் கட்டுரைக்கு கட்டுரையாளர் இட்ட தலைப்புத்தான் பொருத்தமாகிறது. அது இதுதான் "பரமபிதாவே இவர்கள் தெரிந்தே செய்கிறார்கள் அதனால் ஒருபோதும் இவர்களை மன்னிக்காதீர்". ஆனாலும் இத்தனைக்கு மத்தியிலும் சில சொந்தக் காரணங்களுக்காய் நிர்வாகத்தினுள் இல்லாவிட்டாலும் அமையத்தின் அனைத்து நிகழ்வுகளுக்கும் ஆதரவு வழங்கி வருகின்ற பலர் இன்றும் இருப்பதுதான் அமையத்தின் இன்றைய பலம். "வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் சொன்னது போல அங்கே வாடிக் கொண்டிருக்கும் எமது அன்புறவுகளுக்காய் எம்மால் முடிந்தவற்றைச் செய்வதற்காய் நிர்வாகத்தின் உள்ளேயும், வெளியேயும் இயங்கிய, இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் வன்னி வாழ் மக்கள் சார்பிலே என்றென்றும் நன்றிகள். இங்கே பல விடயங்களை நான் தொட்டுச் சென்றேன் அளவானவர்கள் அணியுங்கள். அனைவரும் வாருங்கள் வடம்பிடிக்க, கனடா-வன்னித் தமிழ் சமூக கலாச்சார அமையம் எனும் தேர் நகர.

நன்றிகள்.

சி. யோகராசன்
செயலாளர் வ.த.ச.க அமையம்



# கணக்காளரின் எண்ணத்தில்...

இப் பூமியிலே மனிதர்களின் வாழ்வு பல நிகழ்வுகளைக் கொண்டதாக அமைக்கப் பட்டிருக்கிறது. அவற்றில் நான்கு அம்சங்கள் மிகமுக்கியமானவை. அவைகள் பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன். இதில் இந்தப் பணக்காரன் என்பவன் ஏதோ வகையில் மனித வாழ்வுக்குத் தேவையான உறைவிடம், உணவு, உடை, சொத்து, தொழில் ஆகியவற்றைப் பெற்றுத் தமது வாழ்வைச் சந்தோசமாக கழிக்க முற்படுகிறான் என்று நாம் எண்ணுகிறோம், காண்கிறோம். ஏழை என்று சொல்லும் பொழுது அது தானாக வரும் தலையெழுத்து என்று சொல்வதா அல்லது முயற்சியின்மையால் நாமே தேடிக்கொள்வது என்பதா? இதில் மனிதன் தன் ஒரு சாண் வயிற்றுக்குத் தீனி போடமுடியாமல்.. இந்தப் பசியிருக்கிறதே அது தாங்கிக் கொள்ள முடியாத கொடுமை. அதிலும் சிறுமையில் பசி கொடுமையிலும் கொடுமை.

பணமுள்ளவன் படிப்பான் அல்லது படிக்காமலும் விடுவான். படித்தவன் நல்ல பதவிகளைத் தேடிக்கொள்வான் அல்லது பணத்தோடு சந்தோசமாக வாழ்ந்து கொள்வான். அறிவில்லாதவன் படிக்காதவன் ஆகிறான். ஆனால் போதிய அறிவு மூளை வளர்ச்சி இருந்தும் பணமின்றிப் படிக்க முடியாமல் படிக்காதவன் ஆகிறானே. அதுவும் கொடுமையிலும் கொடுமை.

இந்தப்பெரும் கொடுமைகளால் எமது தாயகத்திலே - வன்னியில் அவதியுறும் எம் உடன் பிறப்புகளுக்கென அவர்களில் ஒருவருக்கேனும் கண்ணீரைத் துடைக்கவென அல்லது அவர்களின் வயிற்றுப்பசிக்கு ஒரு கவளம் சோறு ஊட்டவென அல்லது அறிவுப்பசிக்கு ஒரு புத்தகமாவது பெற்றுக் கொடுக்கவென கங்கணம் கட்டிக் கொண்டுள்ள ஒரு அமைப்புத்தான் வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமாகும் என்று சொல்வதில் சந்தோசமடைகிறேன்.

இவற்றை இச் சங்கமானது தற்போது வன்னியில் நடைமுறைப்படுத்தி வருவதையிட்டு பெருமை கொள்கிறது. இப்பெருமைக்குரியவர்கள் இக் கனடிய மண்ணில் வாழும் எம் ஈழத்தாய் மண்ணின் உடன் பிறப்புக்களே. அவர்களுக்காக எமது அமையம் தலைவணங்கி தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன் எமது அமைய வளாச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் உறுப்பினர்கள் எதிர்காலத்திலும் பல்கிப் பெருக வேண்டுமென ஆசை கொள்கின்றேன். எமது அமையத்தின் உதவிகள் எமது தாய்மண்ணைச் சென்றடைய வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

க. பாலசுப்பிரமணியம்
கணக்காளர்
வ.த.ச.க அமையம்-கனடா

# பரந்து நீராற்றுச் சேவைவாழ்க!

கொம்பறையே நீ வாழ்க இம் மண்ணில் நீடு
வம்பறையும் கொடு வாதை வதைக்குள் நின்று
எம்பிறிதம் எழுந்தெழுந்து நம்தேச மீட்பை
உம்மிடமும் சொல்லிவைத் தெம் சிந்தைநிறை வாழ்த்து.

சத்திரம் சாவடி கோவில்கள் பள்ளி கட்டும்
வித்தகந்தன்னை விஞ்சும் ஏதிலார்க்குதவு சேவை என்ற
முத்திரை ஒன்றே உந்தன் தாரகமாகக் கொண்டு பணி
இத்தரை மாந்தர்க் கீய்ந்து இடரது துடைத்தீர் வாழ்க.

பேணிநீ ரெமக்கேற்ற ஈகமாயுவந்தளித்துளம்
கோனிடா மன வெளிப்பாடென உறையுளோடுடையாய் நல்
வைத்திய சாலை விடுதிதான் சமைக்க வறியோர் பிற இடமேகிடுமுதவி
உரியதாம் பணிகளாற்ற பணித்த கொம்பறையினரே உங்கள்
நற்பணியென வன்னி மண் தன்னிலே வளர் சேவையாய்
ஆற்ற வைத்த நம் பேராற்றலை வாழ்த்தும் வம்மின்.

புலம் பெயர்ந்திருந்தீரெனினும் தமிழ் உணர்வினாலெம
தவலம் யாவையு மேற்று முணர்ந்திடு சிந்தையாலான நற்பணி
நில மெனும் தாயக மண்ணிடக் காதலைத் துறந்திடதுாய நின்பணி
அலகில் சோதியனாகி யொடேற்றுயர் நற்பணிமலர் சிறந்து வாழ்க.

தடைபல வந்தெம் தேசக் குரலதை நெரித்து ஆள்வோர்
விடையது விளம்பாதிந்த மண்ணிடை விதைத்திடு துயரை எண்ணி
மடையது திறந்த வெள்ளமாயெமக் காதரவு செய்தீர் எந்த
தடையது வந்துமென்ன என்றெமதுரிமையாலே அனைத்திடுகரங்கள்.

அந்நிய தேசந்தன்னில் ஆங்குறு துயர்கள் தாங்கி
எண்ணிடுந்தோறு மெங்கள் வன்னிவாழ் மக்களுக்காய்
நண்ணினீர் என்றாலிந்த நானிலமுளநாள் மட்டும்
பண்ணுடன் பண்பு பேணிப் பரந்து நீராற்று சேவை வாழ்க வாழ்க.

சந்தமும் தமிழும்போல எழுகதிர் வானும் போல
சந்தணக் காற்றா யெங்கும் மணந்திட வேண்டுமுந்தன்
சுந்தரவடிவு கண்டு சுதந்திர வேட்கை பொங்கக்
கொம்பறை மலரைச் சூட்டு தூயவர் பணியும் வாழ்க வாழ்க.


*கே. சிவபாலன்   சி. சண்முகநாதன்   தி. சோதிலிங்கம்*

# SIDNEY & ASSOCIATES

## Injured in a Car Accident?

### Accident Benefits Claims

- Weekly income Replacement Benefits
- Care Giver Benefits
- Housekeeping Benefits
- Medical Care Benefits
- Rehabilitation Benefits
- Death & Funeral Expenses Benefits
- Loss of Education Expenses
- Medication & Arbitration & more...





### Paralegal Services

- Small Claims Court
- Divorce
- Traffic Tickets offences
- Slip & Fall
- Work place Discrimination & Wrongful Dismissal

### Tax Services
### Business Management Consulting

- Personal Income & Business Tax Filing
- Manuel/E-Filing
- Small & Medium Business Tax Consulting
- Bookkeeping Services/Accounting Services
- Revenue Canada & Provincial Medication
- Personal & Business Loan, RESP

### Immigration


- Family Class Sponsorship
- Spousal/Finance Sponsorship
- Independent/Business Class Sponsorship
- Refugee Claims
- Student, Visitor Visa & Work Permit
- Application/Extensions
- Returning Resident Permit
- Appeals



Sidney K. Sithiravadivel. B.A.(Hons)
Derick Ackloo B.A.
D. Jonathan B.A, M.B.

Tel: (416) 745-2794
(416) 745-0010
Fax: (416) 745-9228


**2-2885 Jane Street, North York, ON, M3N 2J6 (Jane/South of Finch)**



# Dr. Kirupa (Dentist)

# பல் வைத்தியர்

## Dr. K. Kirupakaran & Associates



**DOWNTOWN**

**Tel: (416) 928 – 2827**
**Tel: (416) 928 – 9617**

**வாரத்தில் ஏழு நாட்களும்**

**240 Wellesley Street East**
**Toronto, Ontario**
**M4X 1G5**

**Wellesley/Parliament**

**Smile!**

# ‘சமஷ்டி முறையும் கூட்டுச் சமஷ்டி முறையும்’ ஒரு விளக்கம்

*பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா*
*அரசியல் விஞ்ஞானத்துறை*
*பேராதனைப் பல்கலைக்கழகம் –இலங்கை.*

## அறிமுகம்

தற்கால உலகின் அரசாங்கங்களை அவற்றின் வேறுபடும் மாதிரிகளைக் கொண்டு நாம பாகுபடுத்த முடியும். உதாரணம்: பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறைகளைப் பின்பற்றும் நாடுகள், இராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகள், கொம்யூனிச ஆட்சி இடம் பெறும் நாடுகள், மன்னராட்சி முடியாட்சி சர்வாதிகாரிகளின் ஆட்சி இடம் பெறும் நாடுகள் அதே போன்று அரசியல் அதிகாரம் எவ்வாறு குவிந்துள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டும் அவற்றைப் பாகுபடுத்தலாம். உதாரணம் ஒற்றறையாட்சி முறை, சமஸ்டி ஆட்சி முறை, அரைகுறைச் சமஷ்டி முறை, இவற்றுள் நாம் சமஷ்டி ஆட்சி முறை என்றால் என்ன? கூட்டுச் சமஷ்டி முறை என்றால் என்ன? இவை எவ்வாறு வேறுபடுகின்றன எனபதை கவனத்துள் எடுப்போம். சமஷ்டி முறை, கூட்டுட்டுச் சமஷ்டி முறை என்பவை பற்றிய விளக்கங்களுக்குப் போகுமுன்னர் ஒற்றையாட்சி முறை என்றால் என்ன என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் அவசியம். ஏனெனில் சமஷ்டி ஆட்சி முறையும் கூட்டுச் சமஷ்டி ஆட்சி முறையும் ஒற்றையாட்சி முறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதே பிரதானமாகும். அதுமட்டுமல்ல இவையிரண்டும் எவ்வளவு தூரம் அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்வதில் வேறுபடுகின்றன என்பதும் பிரதானமாகும்.

## ஒற்றையாட்சி முறை

ஒற்றையாட்சி முறையில் ஒரு நாட்டின் சகல பிராந்தியங்களையும் தனியொரு இறைமையுள்ள அரசாங்கம் கட்டுப்படுத்தும். ஒரு ஒற்றையாட்சி அரசியல் அதிகாரங்களும் பொறுப்புகளும் மத்திய அரசாங்க அதிகாரிகளிடம் மத்திய மயப்படுத்தப்பட்டிருக்கும். அத்தகைய நாட்டின் அரசியல் யாப்பின்படி மத்திய அரசாங்கம் இறைமை கொண்டது. சிறிய இணைந்த அரசாங்கங்கள், மாநகர சபைகள், கவுண்டிகள், அல்லது திணைக்களங்கள் நடைமுறையில் இருக்கலாம். ஆனால் இவற்றின் பொறுப்புக்கள் மத்திய அரசாங்கத்தின் சட்டங்களினூடாக வழங்கப் படுகின்றன. இவற்றினது கடமைகள் சட்டம் இயற்றுதலை விடக் கூடியளவு நிர்வாகத்தன்மை கொண்டனவாயிருக்கும். இவற்றுக்கான பெரும்பாலான வருமானங்கள் மத்திய அரசாங்கத்தின் மானியங்கள் மூலமே கிடைக்கின்றன. ஒரு ஒற்றையாட்சி முறையில் யாப்பினூடாக குறிப்பிட்ட அதிகாரங்கள் கொண்ட மாகாணங்களையோ, சம அரசுகளையோ உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படுவதில்லை. பெரிய பிரித்தானியா ஒரு ஒற்றை ஆட்சிமுறை அரசாங்கத்தைக் கொண்டிருக்கிறது. அதுபோல் பிரான்ஸ், கொலம்பியா, யப்பான், சுவீடன் போன்ற மற்றைய தற்கால அரசுகளும் ஒற்றையாட்சி முறையைக் கொண்டனவாகும். மேற்சொன்ன நாடுகளில் தேசீய அசெம்பிளி, காங்கிரஸ், பாராளுமன்றம் என்பன முழு நாட்டினையும் ஆட்சி செய்கின்றன. உள்ளுராட்சி அமைப்புக்களது அதிகாரம், மத்திய அரசாங்கத்தினது பொறுப்புக்களும் நிர்வாகமும் எந்தளவுக்கு வழங்கப்படுகின்றன என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிசமானளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. மத்திய அரசாங்கத்தின் வரையறைக்குட்பட்ட சட்ட ஆக்கப்பொறுப்புக்களை பிராந்திய அதிகார சபைகளுக்கு வழங்குதல் அதிகாரப்பரவலாக்கத்துக்கான ஒரு படியாகும். ஆனால் பிராந்திய அரசாங்கங்கள் பற்றி யாப்பில் குறிப்பிடப் படுவதில்லை. அவை மத்திய அரசாங்கத்தின் சட்டத்தினால் ஒருவாக்கப்படுவதோடு, அதுபோன்று திருத்தியமைக்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கவும் படலாம். 1921ம் ஆண்டுக்கும் 1972ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட கால வட அயர்லாந்து அரசாங்கம் இதற்கு உதாரணமாகும். 1920ம் ஆண்டு அயர்லாந்து அரசாங்க சட்டத்தின் கீழ் பிரித்தானியர் உள்ளுர் பொறுப்புக்களுடன் ஸ்ரோமொன்ரில்(Stormont) ஒரு பாராளு மன்றத்தை உருவாக்கினர். இப்பரிசோதனை 1972இல் முடிவுக்கு வந்தது. ஏனெனில் புரட்டஸ்தாந்து பெரும்பான்மையினருக்கும் றோமன் கத்தோலிக்கச் சிறுபான்மையினருக்குமிடையிலான வன்முறைச் சமூகத்தை ஆட்சி செய்ய

முடியாததாகி விட்டது. இவ்வாறு அப் பாராளுமன்றம் நீக்கப்பட்ட தென்ற உண்மை, ஒரு அதிகாரப் பகிர்வின் கீழ் பிராந்திய அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திலேயே முழுமையாகத் தங்கியுள்ளன என்பதைக் காட்டுகின்றது. பிரித்தானிய மந்திரி சபையின் ஒரு தலைப்பட்சமான தீர்மானத்துக்கு யாப்பு ரீதியான தடை எதுவும் இல்லாதிருந்தமையும் அதாவது ஸரோமொன்ற் என்ற பாராளு மன்றத்தைப் பிரித்தானிய அரசாங்கம் நீக்கியமையும், வட அயர்லாந்துக்கான அதன் அரசுச் செயலாளரின் கீழ் வட அயர்லாந்தைக் கொண்டு வந்தமையும் இதை மேலும் உறுதிப்படுத்தின.

1990களின் மத்திய பகுதியில் ஸ்கொத்லாந்திலும் வேல்ஸ்சிலும் அதிகாரப்பகிர்வினை ஏற்படுத்துவதற்கு பெருமளவு ஆதரவு இருந்தது. இதனை ஆதரித்தோர் வட அயர்லாந்து உதாரணத்தைப் பின்பற்றி பாராளு மன்றங்களை அவற்றில் வடிவமைக்கலாம் என பிரேரித்தனர். ஆனால் இப்பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப் படவில்லை. ஏனெனில் 1979ல் நடத்தப்பட்ட ஒரு ஆலோசனை பெறுவதற்கான ஒரு மக்கள் தீர்ப்பில் ஸ்கொத்லாந்து வாக்காளர்கள் அதிகாரப் பகிர்வினை நிராகரித்தனர். ஆகவே ஒரு ஒற்றையாட்சியினுள்ளே பிராந்திய வேறுபாடுகளுக்கு இடமளிக்க பல வழிகள் உண்டு என்பது தெரிகின்றது.

## சமஷ்டி முறை

ஐக்கிய நாடுகள் சபையின் 185 அங்கத்துவ நாடுகளுள் கிட்டத்தட்ட 20 நாடுகள் மட்டுமே சமஷ்டி முறையான அரசாங்கங்களைக் கெண்டுள்ளன என ஒரு ஆய்வு[1] குறிப்பிடுகின்றது. அவற்றுள் 15 நாடுகள் சமஷ்டி யாப்புக்களைக் கொண்டன எனவும், 5 நாடுகள் கூட்டுச் சமஷ்டி முறைகளைக் கொண்டவை எனவும் குறிப்பிடுகிறது. அவ்வாய்வு சமஷ்டி அரசுகளாகவும், கூட்டுச் சமஷ்டி அரசுகளாகவும் பின்வருவனவற்றை இனங்கண்டுள்ளது.

சமஷ்டி முறை நாடுகள்:

1. ஆயன்ரினா
2. அவுஸ்திரேலியா
3. பெல்ஜியம்
4. பொட்ஸ்வானா
5. பிறேசில்
6. கனடா
7. ஜேர்மெனி
8. ஒஸ்ரியா
9. இந்தியா
10. மலேசியா
11. மெக்சிக்கோ
12. செயின்ற்கிறிசும் நெவிசும்
13. சுவிற்சலாந்து
14. ஐக்கிய அமெரிக்கா
15. வெனிசுலா

கூட்டுச் சமஷ்டி நாடுகள்:

1. சுதந்திர் அரசுகளின் பொதுநலவாயம்
2. ஐரொப்பிய சமூகம்
3. சென கம்பியா (செனகல், கம்பியா)
4. ரினிடாட், ரொபேக்கா
5. ஐக்கிய அரேபிய எமிரேற்றஸ்

அரைகுறைச் சமஷ்டி:

1. ஸ்பெயின்

கே.சி.வியர்[2] என்பவர் சமஷ்டி அரசாங்கம் என்ற பதம் அரசுகளின் ஒரு கூட்டமாகும் என விளக்கியுள்ளார். அது பொதுத் தேவைகளுக்காக உருவாக்கப்படுகிறது. ஆனால் அதில் சேரும் அங்கத்துவ நாடுகள் தமது ஆரம்ப சுதந்திரத்தின் பெருமளவினை தொடர்ந்தும் வைத்துக்கொள்கின்றன என்றார். சமஷ்டி பற்றி எழுதியவர்கள் பலர் மேற்சொன்ன விளக்கத்தினை ஏற்றுக்கொண்ட போதிலும் சிலர் குறிப்பிட்ட மாதிரியான அரசுகளின் கூட்டாட்சி என்பதில் வேறுபடுகின்றனர். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் யாப்பு அதிகாரங்களை- ஒப்பந்தங்கள் செய்வது என்றும், ஒரு கூட்டுச் சமஷ்டி பிராந்திய அல்லது சம அரசு அரசாங்கங்கள் மட்டுமே மக்கள் மீது நேரடியாகச் செயற்படுகின்றது என்ற இன்னொரு விளக்கமும் உண்டு. ஆகவே சமஷ்டி வாதம் என்பது ஒரு சட்டப்படியான பதம் எனலாம். அதன் இருப்பு அரசில் யாப்பினை அடிப்படையாகக் கொண்டது. சமஷ்டி வாதம் அசியல் அதிகாரத்தை பிரதேச ரீதியில் பிரிக்கிறது.

கனடாவின் சமஷ்டி ஒரு இணக்கப்பாடு ஆகும். இக் கூட்டுச் சமஷ்டியின் பெரும்பாலான ஆங்கிலேய முன்னோடிகள் புதிய பாராளுமன்றத்தின் கைகளில் சகல அதிகாரங்களையும் ஒப்படைக்கும் ஒரு ஒற்றை ஆட்சி அரசாங்கத்தையே விரும்பினர். இருந்தபோதும் இவர்களை இரு குழுக்கள் எதிர்த்தன. இன்று கியுபெக் என அழைக்கப்படும் கிழக்குக் கனேடிய பிரெஞ்சுக் கனடாப் பிரதிநிதிகளிட மிருந்தே கடுமையான எதிர்ப்புக் கிழம்பியது. இவர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாக்கத் தக்க மிகவும் தாக்கமான வழி சமஷ்டிக் கூட்டாட்சி என நம்பினர். இம் முரண்படும் போக்குக்களுக்கு சமஷ்டி வாதமாக இருந்தது.

கனேடிய சமஷ்டியின் இயல்புகள்:

1. மற்றைய மாகாணங்களை விட ஒன்ராறியோ, கியுபெக் மாகாண அரசாங்கங்கள் கனேடிய சமஷ்டியில் கூடிய பலமுள்ளனவாகும்.


2. கனடா செனேற் சபையில் பிராந்திய பிரதிநிதித்துவத்தின் சமஷ்டித் தத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது. மந்திரி சபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதிலும், மற்றைய சமஷ்டி நியமனங்களிலும் பிரதம மந்திரியினால் மிக நுட்பமாகச் செயற்படுத்துப்படுகின்றது. பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதிலும் இடமளிப்பதிலும் கனடிய சமஷ்டி தோல்வி கண்டுள்ளது.

3. மற்றய எல்லா மாகாணங்களிலிருந்து சேர்ந்து தெரிவு செய்படும் அங்கத்தவர்களை விட ஒன்ராறியோ கியுபெக் என்பவற்றிலிருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் தொகை அதிகம் என்பது ஒரு பிரச்சினை.

4. மேற்கின் பொருளாதார பலத்துக்கும், அரசியல் பெல வீனத்திற்கு மிடையிலான வேறுபாடு இன்னொரு பிரச்சினையாகும்.

தெரிவு செய்யப்பட்ட பொது உத்தியோகத்தவர்களது முன்னுரிமைகளை ஏற்றுக்கொள்ளாதிருத்தல் - சட்ட யாப்பு விளக்கத்தில் வேறுபடுதல்.

கனேடிய அரசாங்கத்தின் முறைப்படி அமைந்த ஒழுங்கமைப்பு




சமஷ்டி முறை தோன்றுவதற்கு ஆகக் குறைந்தது மூன்று காரணங்களாவது உண்டு. 1. சமஷ்டி வாதம் விரிடைந்து வரும் அரசாங்கங்கள் என்ற பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஒரு வழி. 2. ஏகாதிபத்தியச் சக்தியினால் உருவாக்கப்பட்ட பெரும் சாம்ராஜ்யங்களுக்கு சமஷ்டி முறை மாற்று வழி. 3. பரவலாக்கல் மிகத்தூரத்திலுள்ள பிராந்தியங்கள் எல்லாத் தீர்மானங்களும் தமக்குத் தொலைவிலுள்ள தலை நகரத்தில் எடுக்கப்படுவதில்லை என்ற உணர்வை எற்படுத்தும்.

பெரும்பாலான சமஷ்டி அரசுகள் புவியியல் ரீதியில் பெரியன. உதாரணம்: அவிஸ்திரேலியா, இந்தியா, பன்மைத் தன்மை கொண்ட சமூகங்களிலே சமஷ்டி முறைகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் கணிசமான அளவு மொழி, மத, கலாச்சார சுயாட்சி நிலவுகின்றன. இது சுவிற்சலாந்தில் சமஷ்டிவாதம் செயற்பாட்டில் உள்ளமையை விளக்குகின்றது. சமஷ்டி முறை அரசாங்கத்தில் சட்டங்கள் இயற்றும் வரி விதிக்கும் சில பிராந்திய அரசாங்கங்களுக்கு மிடையே பிரிக்கப்படுகிறது. தனிப்பட்ட ரீதியில் தேசிய அரசாங்கமோ பிராந்திய அரசாங்கங்கள் இணைந்தோ மற்றைய மட்டத்திலான அரசாங்கத்தின் அதிகாரத்தை மாற்ற அதிகாரமற்றவை. தத்தமது அரசியல் யாப்புப் பரப்பினுள், அவை சுதந்திரமானவையாகும். ஒரு சமஷ்டி அரசின் பிரசைகள் இரண்டு அரசியல் சமுதாயங்களின் அங்கத்தவர்களாவர். ஒன்று தேசியம் மற்றையது மாகாணங்கள், சம அரசு அல்லது கன்ரன்களது அங்கத்தவர்களாவர்.

## கூட்டுச் சமஷ்டி முறை

1861ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மொன்கோமெறி(Mongomery), அலபாமா(Alabame) என்பன தமது சொந்த அரசாங்கத்தினை ஒழுங்குபடுத்திய போது அமெரிக்காவின் கூட்டுச் சமஷ்டி அரசுகள் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டன. 1960ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஏபிரகாம்லிங்கன் தெரிவு செய்யப்பட்டால் அடிமைகள் பிரச்சினையில் தாம் விரும்பிய வாறு நடக்கும் உரிமைகளில் கட்டுப்பாடுகள் ஒன்றுபடக்கூடுமென்று பயந்ததால் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பிரிந்து சென்ற அரசுகளே இவையாகும். 1960ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதியன்று முதலில் விலகிய சம அரசு தென்கரலைனா ஆகும். மிசிசிப்பி, புளோறிடா, அலபாமா, யோர்ஜியா, லூசியானா என்பனவும் 1961ம் ஆண்டு ஜனவரியில் ரெக்சாசும் வேர்ஜீனியா, ஆர்கன்ஸ், வட கரலைனா, ரெனசி என்பனவும் விலகி பதினொரு சம அரசுகளைக் கொண்ட கூட்டுச் சமஷ்டி அரசுகளாயின. கூட்டுச் சமஷ்டி என்பது தீர்மானம் எடுக்கும் நிரந்தரமான அமைப்பு அல்லது காங்கிரசுக்கு கூட்டுச் சமஷ்டியின் அங்கத்துவ அரசகள் தமது பிரதிநிதிகளை அனுப்பும் இயல்புகளைக் கொண்ட இறைமை கொண்ட அரசுகளின் கூட்டு ஆட்சியாகும். தாம் உடன்படாத எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்க முடியாதெனக் கூட்டுச் சமஷ்டியின் அங்கத்தவர்கள் மறுக்கலாம். போதுமானளவு பாதுகாப்பினைக் கூட்டுச்சமஷ்டி ஏற்பாடுகள் வழங்கவில்லை என உணர்ந்தால் கூட்டுச் சமஷ்டி ஒப்பந்தத்தில் இருந்து இடம் பெறும் அரசுகள் அதிலிருந்து விலகலாம். ஆகவே கூட்டுச் சமஷ்டி என்பதை நிபந்தனைகளுடன் கூடியதொரு கூட்டாட்சி எனலாம். 'ஒரு நிரந்தரமான ஒப்பந்தம்' எனக் கொள்ளப்படும் கூட்டுச் சமஷ்டியில் சில சம அரசுகள் அரசாங்க தாபனங்களை சில வேளைகளில் பகிர்ந்து கொள்ளலாம். உதாரணம் பொதுவான பிரஜாவுரிமை. இவ்வாறு அவை ஒரு இரண்டாம் தர கூட்டு ஆளுமையையும் பெயரையும் பெற்றுக்கொள்ளலாம். இது கூட்டுச் சமஷ்டியாகும்.

இன்றைய புதிய காலத்தின் யதார்த்தங்களுக்கு இடமளிக்கும் கட்டாயமும் குறிப்பாக அரசியல் ரீதியில் இறைமை கொண்ட அரசுகளை இணைப்பதற்கு பயன் பாடான நவீனத்துவத்திற்குப் பிற்பட்டகால சமஷ்டி வாதத்தின் மாதிரியாக கூட்டுச்சமஷ்டியும், கூட்டுச் சமஷ்டி ஒழுங்குபாடுகளும் மறுமலச்சி பெற்றுள்ளன. இவை புதிய தேசங்களாக ஒன்றியைய தேவையற்ற அரசுகளினதும் மக்களினதும் விருப்பங்களை- அரசியல் இறைமை கொண்ட அரசுகளின் பரஸ்பர தங்கியிருத்தலின் வளர்ச்சியும், அதே வேளை தமது தனித்துவமான/வேறுபட்ட அடையாளங்களையும் இருப்பினையும் பாதுகாக்கவும் தனித்துவ யதார்த்தங்களை சிலநேரங்களில் முரண்பாடுகளை, அங்கீகரிப்பதையும் உள்ளடக்கும் தேங்கி நிற்கும் சமஷ்டி வாதத்தின் தத்துவ ரீதியான ஒரு பிரதான அசைவு கூட்டுச் சமஷ்டி மாதிரியாக அபிவிருத்தி பெற்றுள்ளது.

எமது காலத்தில் கோட்பாடாக வல்ல நடைமுறையில் மூன்று விதங்களில் கூட்டுச் சமஷ்டி முறையும் கூட்டுச் சமஷ்டி ஒழுங்குபாடுகளும் புனரமைப்புப் பெற்றுள்ளன:

1. புதிய அரசுகளுக் கிடையிலான தொடர்புகளின் அபிவிருத்திக்கு சமஷ்டி தீர்வுகளைப் பயன் படுத்தும் போது,

2. பன்முகப்படுதலின் விளைவாக நடைமுறையிலுள்ள அரதசுகளுக்கு பதிலீடாகவும்,

3. சாதாரண ஒப்பந்தங்களை விட கூடிய அளவினதாக உலகளாவிய ரீதியில் எழுச்சியடையும் தொடர்புகளை, அனால் முறைப்படி அமைந்த அரசியல் யாப்பு கூட்டாட்சிகளை விட குறைந்த அளவினதாக பொருளாதர அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, திறமையான சேவைகளை வழங்குவது, உயர்ந்தளவு பௌதீக பாதுபாப்பு என்பவற்றை நோக்கிய நிரந்தரமான தொடர்புகளை ஏற்படுத்துவதாக,

நவீனத்துவத்திற்கு பிற்பட்ட உலகினை வடிவமைப்பதில்தான் புதிய சமஷ்டி யதார்த்தங்கள் எழுச்சியைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. உலக வர்த்தகம் அல்லது பொருளாதார விவகாரங்கள் சிறப்பான நிலையை அடைவதற்கான முயற்சிகளிலேயே பெரும்பாலானவை தமது வேர்களைக் கொண்டுள்ளன. உண்மையில் பொருளாதார அவசிம் என்பதனால் வழி நடத்தப்படுகின்றன. அதே வேளை தேசீய இனத்துவ கவனங்கள் எல்லாக் கூட்டுச் சமஷ்டி ஒழுங்குகளிலும் பெரும்பங்கு வகுத்தள்ளன.

ஒரு அரசாங்க மாதிரி என்ற முறையில் லிஸ்ரர் (Lsiter) என்பவர் கூட்டுச் சமஷ்டி முறையின் பண்புகளை உருவாக்கும் பதினைந்து இய்புகளை முன் மொழிந்துள்ளார்.

1. அவற்றின் அரசு என்ற அந்தஸ்தை இல்லாது செய்து விடாது அரசுகளை அது ஒற்றுமைப்படுத்துகிறது.

2. நிலைக்கக் கூடிய சமஷ்டி மாதிரியான கூட்டாட்சிகளை உருவாக்க தடையாகும் அரசுகளின் சனத்தொதை மிகவும் வேறுபடும் தன்மை கொண்டனவையாகவுள்ள அரசுகளை ஒற்றுமையாக்கும்

3. கூட்டுச் சமஷ்டியின் பல்வேறுபடும் நட்புறவாளர்களை பெருமளவுக்கு கடமைப்பாடு கொள்ளவைக்கும் உடன்பாடு- யாப்புக்கள் மாதிரியாய் எழுதப்பட்ட அடிப்படைச் சட்டத்தை அது வேண்டி நிற்கிறது.

4. கூட்டுச் சமஷ்டியில் சேர்ந்த அரசுகள் எல்லாவற்றையும் பயமுறுத்தும் ஒரு பெரும் வல்லரசுக்கு எதிரான பாதுகாப்புத் தேவை அல்லது பலமான பொது பொருளாதார நலன்களின முக்கியத்துவம், அவற்றைச் சேர்ப்பதில் முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதை முன் நிபந்தனையாகக் கொள்கிறது.

5. அதனது அங்கத்துவ அரசுகளால் சுதந்திரமாகச் செயற்படுத்தத்தக்க அரசாங்க அதிகாரங்களை வைத்திருக்கும் ஆகக் குறைந்த அனுமதியை அது வழங்குகிறது.

6. இரு வேறுபடும் மாதிரியான அனுமதியுடன் அது சம்பந்தப்படுகிறது. கூட்டுப்பாதுகாப்பு அல்லது பொருளாதாரக் கூட்டு

7. நாட்டின் பாதுகாப்பு அல்லது பொருளாதார வளர்ச்சி, செழிப்பு என்பவற்றை அதிகரிக்கும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு அங்கத்துவ அரசுகளின் மக்களிடையே பரந்த அளிவிலான ஆதரவு கூட்டுச் சமஷ்டிக்குத் தேவை.

8. ஒரு கூட்டுச் சமஷ்டி முறைக்கு அடிப்படையில் விசுவாசமான மக்களின் வெகுஜன ஆதரவின் படிப்படியான வளர்ச்சியினை ஆபத்துக்குள்ளாக்காது அங்கத்துவ நாடுகளிடையேயான தொர்புகள் அமைய வேண்டும்.

9. இத்தகைய வெகுஜன ஆதரவும் விசுவாசமும் எவ்வாறாயினும் மக்கள் தமது தாயகத்துக்கான விசுவாசத்திற்கு இரண்டாந்தரமானவாக இருக்க வேண்டும். இல்லாவிடில் - கூட்டாட்சி- சமஷ்டி அல்லது ஒற்றையாட்சியாக மாறிவிடும்.

10. ஒரு கூட்டுச் சமஷ்டியில் அங்கத்துவ நாடுகளும் தமது சச்சரவுகளை நடு

நிலைத்தீர்ப்பு அல்லது அரைகுறைத் தீர்ப்பு என்பவற்றினூடாகத் தீர்க்கத் தயாராக இருக்கவேண்டும் வன்முறையால் அல்ல.

11. ஒரு கூட்டுச் சமஷ்டியில் பரஸ்பரம் ஏற்றுக் கொண்ட விதிகள், வழிமுறைகளின் கீழ் கூட்டாக அமைந்த, ஒழுங்காகக் கூட்டப்படும் இணைந்த சபையினூடாக அங்கத்துவ அரசாங்கங்கள் அதிகாரங்களைச் செயற்படுத்த வேண்டும்.

12. (அ). இச்சபை தமது நாடுகளின் சார்பாக பிரதிநிதிகள் பிரதிநிதித்துவ வாக்களிக்கும் முறையைக் கெண்டிருக்கும் (ஆ). அங்கத்துவ நாடுகளை கடமைப்படுத்தும் கருத்தொருமைப்பாட்டினை வழமையான அடிப்படையாகக் கொண்ட ஒர திர்மானம் எடுக்கும் முறையைக் கொண்டிருக்கும் (இ). ஆங்கத்துவ நாட்டு அரசாங்கங்களே நடைமுறைப்படுத்தும் சுமையைக் கொண்டதோடு தீர்மானங்களை முறைப்படுத்தும் முறையைக் கொண்டிருக்கும்.

13. கூட்டாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இலக்குக்களை அடைவதற்குச் செயற்பட அவசியமான நிதியினை அங்கத்துவ நாடுகள் வழங்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது.

14. அதன் அங்கத்தவ நாடுகளின் இறைமையினை பயமுறுத்தாதவாறு அரசாங்கத்தின் நிர்வாக நீதித்துறைக் கடமைகள் அமைய வழிவகுக்கும்.

15. பெரிய சிறிய அங்கத்துவ அரசுகளின் மூலவளங்களின் சமமின்மைகள் எழக்கூடிய மற்றைய பிரச்சினைகளை, அந்த இருப்புக்கள் தீர்வகளை பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையையும் கொண்டிருக்கும்.

(Lister)லிஸ்ரர் என்பவரே கூட்டுச் சமஷ்டி ஸ்தாபனங்களின் பிரதான நான்கு செயல் முறைகளை முன் மொழிந்துள்ளார்:

1. தமது பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கு சில குழுக்களான சிறிய அரசுகள் - மிகச் சிறிய அரசுகள் ஒரு கூட்டுச் சமஷ்டி மாதிரி அமைப்புக்களை உருவாக்கலாம்

2. சகல அரசியல் தொடர்புகளையும் இல்லாது செய்ய விரும்பும் சில பல்லின அரசுகள் தாம் பிரிந்துபோவதாக பயமுறுத்துவதை கூட்டுச் சமஷ்டி ஒரு நிலைத்து நிற்கும் மாற்றாக பரீட்சாத்தமாக கூட்டுச் சமஷ்டி ஸ்தாபனங்கள் அமையலாம் என்ற நம்பிக்கை கொள்ளலாம்.

3. அதிகரித்து வரும் பரஸ்பர தங்கியிருக்கும் உலக பொருளாதாரத்தில் கிடைக்கக் கூடிய நன்மைகளை உச்சமடையச் செய்ய கூட்டுச் சமஷ்டி இணைப்புக்களை நில ரீதியில் தொடர்பான பெரிய சிறிய அரசுகள் விரும்பலாம்.

4. இறுதியாக உலக சமூகம் தன்முன்னாலுள்ள பல அபாயங்கள் என்ற மட்டத்தில் அவ் அபாயங்களை எவ்வாறு சாதகமாகக் கையாளலாம் என்பதில் கவனம் செலுத்தலாம். இத் தொடர்பிலும் கூட்டுச் சமஷ்டி சிறப்பாக இயங்க முடியும்.

---

[1] Stephen Brooks, Canadian Demacracy An Introduction (Canada: Oxford University Press, 2000)
[2] Tom Chambers, Canadian Politics An Introduction (Canada: Thompson Educational Publishing Inc. 1940
3 Douglas E. Williams, Constitution Government and Society in Canda (Tronto: Canadion Publishers, 1988)

# MOKA MARKET

சகல இலங்கை இந்திய மரக்கறி, உணவுவகைகள்,
மளிகைச் சாமான்கள், சஞ்சிகைகள், இறைச்சி
மீன்வகைகள், Video, CD யாவற்றையும்
ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.



உடன் ஆட்டிறைச்சி, மரக்கறி
வகைகளையும் வாடிக்கையாளர்
நன்மை கருதி பெற்றுத் தருகின்றார்கள்

மற்றும் ரெலிபோன் காட், பத்திரிகை.......

அதி கூடிய வாகனத்தரிப்பிடங்களுடன் மிசிசாக்காவில்

**Rathburn & Mavis** சந்திப்பில்

## MOKA MARKET

900 **Rathburn Road West**
**Mississagua**

## 905-273-4137

# போதை அது பேதமை

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதியோ
இன்பமே தினமும் துய்த்திட என்றே - இனியதோ
துன்பப் போதைக்கு அடிமையே யாகுதல்
துன்பமே மீதமாய்ஆகுதே பாரில்

குலமென குணமாய் வளர்க்கிறார் பெற்றோர்
தலமென கனேடிய மண்ணில் சுகந்தம்- இலமென
சலமென மதுவை மதிமயங்க அருந்தியே
பலமெலாம் இழக்க முடிக்கிறார் வாழ்வை

கண்ணின் மைந்தரோ மகளிரோ அன்புக்காய் ஏங்க
பண்பின் மையமாய் வாய்த்தவர் துன்பமாய் - இன்பின்
மபண்பின் மையலாள் துணையவள் இன்உளம் நோக
தன்னெழில் கைநிலை அறுத்தே செல்வதும் ஏனோ?

மாந்தர்கு மறுகுணம் ஊட்டிடும் மதுவை
காந்தமாய் சிறுகுடல் சிதையவும் - சோர்ந்தும்
மீதமாய் அருகியே மாய்க்கின்றார் வாழ்வை
சீதமாய் உதிரம்உறிஞ்சிடும் மதுவால்

அரிது அரிது மானிட வாழ்வு அவனியில் அன்றோ
அரியவர் சோதரர் தம்தமர் தமதுளம் - விரவி
தெரிந்திடா வாழ்வை நொந்துமே வெதும்ப
புரிந்திடா உலகம் செல்வதும் விதியோ?

கடிதினில் காலன் விதிவழி ஏகிடச் சித்தமாய்
பிடிதனில் காலாய் மதிவழி ஆகிட - முடிவினில்
படிதனில் கோலாய் தனிவழி சென்றிட மதுச்
சாடியில் கதியாய் உழல்வதும் விதியோ?

வாழ்வின் இனிமை புரிந்திடாப் பித்தனாய்
மாழ்வின் முடிவினில் செலுத்திடும் - ஊழ்வினை
சால்பின் மதியினில் மயங்கிட மதுவின் சாரம்
தாரையாய் அருந்தி தவித்திடல்விதியோ?

உலகியல் இன்பம் உய்த்திடும் பாங்கு
தலத்தினில் உண்டென உணர்ந்தோர்- நிலவியல்
கலக்கமே இன்றி இனிதே வாழ்தல் நோக்கியும்
துலக்கமே இன்றி மாழுதல் நன்றோ?

மதுவெனும் அரக்கன் நட்பினைப் பூண்டு
சதியெனும் பிசாசமாய் இல்லினைச் சிதைக்க
விதியென நோதல் மடமையே உணர்வீர்
கதியென கேளிர் போற்றியே வாழ்வீர்

நன்றென என்றும் நாடியே நல்லவை
மன்றெனக் கூடி மதிநுட்பத்துடனே - கன்றென
சான்ற பெண்டிரும் மைந்தரும் இன்புற்றிருத்தல்
என்றும் இலமே மதுமயக்குற்றோர்க்கு

அன்பையும் பண்பையும் அறுத்தே சிதைக்கும்
தென்பையும் துணிபையும் தீரமேயாக்கி- இன்பமே
மன்பதை நேயம் அழித்து பித்தரேயாக்கி
வன்பகைப் பேதமை தந்திடும்மதுவே

த.சிவபாலு

# முல்லை பசும் நிலத்தில் பாலினதும் பாலுற்பத்திப் பொருட்களினதும் நிலை

த. யோதிலி BSc.
(Food Science and Technology)

பெரும்பான்மை மக்களின் பிரதான தொழிலாக விவசாயத்தைக் கொண்ட முல்லை மாவட்டத்தில் தலா ஒவ்வொரு வீட்டிலும் ஆகக் குறைந்தது ஒரு கறவை மாடாவது இருக்கும். ஒப்பீட்டளவில் இங்கு பால்மா பாவிப்பவர்களிலும் பார்க்க உடன் பால் பாவிப்பவர்களே அதிகம். இங்கு அனேகமான விவசாயிகளுக்கும் தலா 50, 60 அல்லது அதற்கு மேற்பட்ட மாடுகளாவது இருக்கும். இவர்களில் பெரும்பான்மையானோர் உள்ளூர் நாட்டின மாடுகளையும், எருமை இனங்களையுமே வளர்க்கின்றனர்.

தொழில் நுட்பம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துவிட்ட இக்கால கட்டத்திலும் இங்கு மக்களின் வாழ்க்கை முறை ஏறக்குறைய 19ம் நூற்றாண்டிற்கும் அதற்கு முன்னைய கால கட்டங்களையும் அண்டியதாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் இம் மாவட்ட விவசாயிகள் எல்லோரும் பழமை வாதிகள் என்று அர்த்தமல்ல. இவர்கள் முற்போக்கு சிந்தனை உடையவர்கள்தான். ஆனால் இம்மக்களின் பொல்லாத காலம் போராட்ட சூழ்நிலையும், பொருளாதாரத் தடையும்தான் இவர்களது முன்னேற்றத்திற்கு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கின்றது. இன்றும் இங்கு கால்நடைகள் "பட்டி"களினுள் தான் அடைக்கப்படுகின்றன. இவற்றுக்கு என்று தனிப்பட்ட பராமரிப்புக்கள் ஏதும் செய்வதில்லை. தாராளமான நிலப் பரப்புக்களும் அத்துடன் பெரிய குளங்களும் குறிப்பாக கணுக்கேணிக் குளம், மதவளசிங்கன் குளம், களிக்காட்டுக் குளம், தண்ணிமுறிப்புக் குளம், முத்தையன்கட்டுக் குளம் என்பன பரந்த வயல் வெளிகளுடனும், தரிசு நிலங்களுடனும் இருப்பதால் இவையே அவற்றுக்கு பிரதான மேச்சல் தளங்களாக இருக்கின்றன.

உள்ளூர் இன மாடுகளின் கறவை அளவு அனேகமாக ஒரு லீற்றருக்கும் இரண்டு லீற்றருக்கும் இடைப்பட்டதாகவே இருக்கும். எருமை மாடுகள் மூன்று தொடக்கம் ஐந்து லீற்றர் வரை கறக்கக் கூடியவை.
இருந்தாலும் இங்கு பாலிற்கு இருக்கும் சந்தை வாய்ப்புக்கள் மிகக் குறைவு. இவற்றுக்கான காரணங்கள் பல. அவற்றுள்ச் சிலவாக:

1. பெரும்பாலான வீடுகளில் தமது சுய தேவையை பூர்த்தி செய்யக் கூடியளவு பால் அவர்களிடமேயே இருத்தல்
2. சந்தைப் படுத்துவதற்கு தொலை தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை.
3. பெருத்தமான கொள்கலங்கள் போதாமை
4. பால் இலகுவாக பழுதடைந்து போதல்
5. சிறிய கறவையினங்கள் ஆதலால் கறவைக்கு அதிக மனிதவலு தேவைப்படுதல்
6. தொழில் நுட்பப் பற்றாக் குறை, அறிவு போதாமை
7. போதிய ஊக்குவிப்பு இல்லாமை என்பனவாகும்.

பால் ஒரு நிறை உணவு என்பது நமக்கு மட்டுமல்ல நுண்ணங்கிகளுக்கும் சாலப் பொருந்தும். எமது நாடு ஒரு வெப்ப வலய நாடு என்பதால் இங்கு சூழல் வெப்பநிலை எப்போதும் 30° C க்கு மேற்பட்டதாகவே இருக்கும். பால் மாட்டில் இருந்து வெளியோறும் வரை, பால் கெட்டுப்போதலை, மாட்டின் நீர்ப்பீடன சக்திதான் தடுத்து நிறுத்துகின்றது. ஆனால் வெளியேறிய பின்பு சூழல் வெப்பமும் பாலின் நிறை போசனையும் சிறந்த ஒரு ஊடகத்தை நுண்ணங்கிகளுக்கு (பிரதானமாக பக்றீரியாக்களுக்கு) ஏற்படுத்திக் கொடுக்கின்றது. கொள்கலன்கள் தொற்றறடைதலும் இவற்றின் பெருக்கத்திற்கு உதவியளிக்கின்றது. இதனாலேயே பால் விரைவில் கெட்டுப்போகின்றது.

முல்லை மாவட்ட பால் உற்பத்திக்கு இந்நிலை என்றால் பால் உற்பத்திப் பொருட்களின் நிலை இன்னும் கவலைக்கு இடமளிக்கின்றது. இங்கு பால் உற்பத்திப் பொருட்களாக நெய்யும், தயிருமே முக்கிய பங்கு வகிக்கின்றன. சில

சில இடங்களில் சில இனிப்பு வகைகள் (eg: milk toffee) சிறு குடிசைத் தொழிலாக நடைபெறுகின்றது. இருப்பினும் உற்பத்தியின் அளவு பாலின் அளவுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவாகவே உள்ளது. தயிர் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதில்லை. நெய்யிற்காக பாலாடையை பிரித்தெடுத்த பின்பு விவசாயிகள் தமது தேவைக்கு மிகுதியான தயிரை பெரிய குழிகள் வெட்டிப் புதைக்கின்ற பரிதாப நிலை மிகவும் மன வேதனைக்குரியது. இப்படி உற்பத்தி செய்யப்படும் நெய்வகைகளில் எருமை நெய்யிலும் பார்க்க பசு நெய்யிற்கு எப்போதுமே சந்தையில் நல்ல வரவேற்பு கிடைக்கின்றது. பெருமளவு கால் நடைகளை வைத்திருப்போர்கள் கஷ்டப்பட்டு பால் உற்பத்தி செய்வதே இந்த சந்தை நிலையைக் கருத்தில் கொண்டுதான். குழிகளுக்குள் போகும் தயிருடன் போவது விவசாயிகளது வீணான மனித வலு மட்டுமல்ல போசனை மிக்க வளங்கள்தான்.

சற்று பின்நோக்கிப் பார்க்கையில் கடந்த 15 வருடங்களாகத்தான் நிலமை இவ்வளவு மோசம் அடைந்திருக்கின்றது என்று எனக்குப் புரிகின்றது. 1983, 86 களில் ஆங்காங்கே சில பாற்பண்ணைகள் இயங்கின. அவை வெண்ணையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தன. ஆனால் போராட்டச் சூழல் அதிகரிக்க அதிகரிக்க மின்சாரமும் இல்லாது போனதோடு அந்த நிலையங்கள் அகதிகளின் புகலிடங்களாக மாறி விட்டன.

இந்த மந்த நிலையை சீரமைக்கவே முடியாதா? என்றால் ஏன் இல்லை நிறையவே இருக்கின்றது. உடன் பாலின் ஆகக் கூடிய வாழ்கைக் காலம் மூன்று மணித்தியாலங்கள்தான். இலங்கையின் தென் பகுதியை பெறுத்தவரையில் பால் பழுதடைதலை தள்ளிப் போடுவதற்காக சோடியம் காபனேற்று(NaCO3) சோடியம் இருகாபனேற்று(NaHCO3) போன்ற மென் மூலப் பொருட்களை பாவிக்கின்றனர். இதனால் பாலை சற்று மூலத்தன்மை ஆக்குவதன் மூலம் பக்றீரியாக்களின் செயற்பாட்டு வீதத்தைக் குறைக்கலாம். ஆனால் இன்று நன்கு வளர்ச்சி அடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளில் இலக்றோபெறொக்சிடேஸ் (Lactoperoxidase system-LBS) எனப்படும் செய்முறை மூலம் பாலை ஐந்து மணித்தியாலங்கள் குளிரூட்டி இல்லாது பாதுகாக்க முடியும் என்று கண்டுபிடித்திருக்கின்றனர். இரசாயனத்துடன் சம்மந்தப்பட்டது என்பதால் எமது மாவட்டத்தை பொறுத்தவரையிலும் இம்முறை சாத்தியப்படக்கூடியதே. அதைவிட சரியான ஒரு ஒழுங்கு முறையில் பால் அதிகமாக கிடைக்கும் இடங்களில் இருந்து போசனைப் பற்றாக்குறை அதிகமாக உள்ள இடங்களுக்கு கொண்டு போகும் வாய்ப்பு இருந்தால் வீணாக போசனைப் பொருட்கள் குழிகளில் போய்ச் சேருவதை தவிர்க்க முடியும்.

சமூக அமைப்புக்கள், நலன்புரிச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒருபால் சேகரிக்கும் நிலையத்தை அமைத்து பால் வினயோகிக்கும் நிலை ஏற்படுமானால் பாலிற்கும் பாலுற்பத்திப் பொருட்களுக்கும் மிகச் சிறந்ததொரு பிரகாசமான எதிர்காலம் உண்டு. அதிக அளவில் பால் சேரும் போது எளிய பாலுற்பத்திப் பொருட்களான தயிர், வெண்ணை பிரித்தெடுப்பு , இனிப்பு வகைகள் என்பனவும் செய்து விநியோகம் செய்ய முடியும். மனித வளம் தாரளமாக கிடைக்கக் கூடிய முல்லைத்தீவு போன்ற இடங்களில் யாராவது திடகாத்திரத்துடனும் தீர்க்க சிந்தனையுடனும் செயற்பட முற்படுவார்களேயானால் மாவட்டத்தின் பாலினதும் பாலுற்பத்திப் பொருட்களினதும் நிலையை மட்டுமல்ல பொருளாதார நிலையையும் கூட உயர்த்த முடியும். இவற்றுக்கு பெரிதாக தொழில் நுட்பம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆரம்ப இடர்பாடுகளை சந்திக்க நேர்ந்தாலும் எதிர்காலம் சுபீட்சமாக அமையும். தமிழர்கள் சந்திக்காத இடர் என்று என்ன புதிதாக வரப்போகின்றது. எம்மிடம் இல்லையே இல்லையே என்று ஏங்குவதை விட இருப்பதை எப்படி மேம்படுத்துவது என்று சிந்திப்பவர்கள் முன் வர வேண்டும்.

ஊராரை உண்பாரு முளர் - எம்மில்
ஊருக்கே ஊட்டுவாரு முளர்.

அறிவினும் பெரிதாம் பொறுமை - அதனிலும்
பெரிதாம் இகழாமை.

# RAJA MAHENDRAN, P.Eng

விற்க

**Sales Representatives**




பூரண இலவச
ஆலோசனைகளுக்கு..

வீடு

ராஜா எம். மகேந்திரன்

வாங்க



மனதிற்கேற்ற மனையை வாங்கிட....

**BUS: (416) 491-4002** | **BUS: (416) 315-9397**
**RES: (416) 287-2183** | **PAG: (416) 589-4270**

**1055 McNicoll Avenue, Scarborough, Ontario, M1W**



**SAREE PALACE**

ஸ்காபரோ மத்தியில் நவநாகரீக
ஆடைகளுக்கு

**றூபி அன்ட் றூபி சாறி பலஸ்**

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
உண்மைதானா பாருங்கள்!

**New Born Babies**

**Gift Items,**

**Party Dresses,**

**Sarees,**

**Men Dresses**

**And much more...**



**Jegan/Ruby**
**Tel: (416) 264-7833 - Fax: (416) 264-7834**
**2843 Lawrence Avenue East**
**Scarborough, Ontario, M1P 2S8**
**Brimley/Lawrence**

# Raj Kiruba, MD, MBBS, CCFP


## Family Physician



தமிழில் உரையாடி உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள்!

குடும்ப வைத்தியர் **டாக்டர் ராஜ் கிருபா**

**(905) 948-9455**



**New Patients Welcome**

2 Fenton Rd, Unit #4, Markham, ON, L3R 7B4
(Steeles/Brimley)

Fenton பிளாசாவில் "பிரியாஸ்"க்கு அருகாமையில்



# YAARL CAKE HOUSE



*Cake & Vegetarian cake specialist*
*Specialized in all kinds of cake for all occasions*
*Weddings, Birthdays & Anniversaries*

**T. Chandra**

Tel: (416) 431-6604
Tel: (416) 431-6874

**555 Markham Road**
**Scarborough, Ontario**
**M1H 2A3**

Res: (416) 266-4716
Fax: (416) 431-7272

# கற்சிலைமடுவின் காவல் தெய்வம்

வந்தாரை வாழ வைக்கும்
வன்னி வள நாடு
பொங்கிடும் விடுதலை உணர்வை வளர்த்து
வெங்களமாடிய வேங்கைகள் வீடு
இது பண்டாரவன்னியன் ஆண்டு
இந்திர விழாக் கண்ட இதய பூமி.

தின வெடுக்கும் தடந்தோளும்
திடமுடன் திரண்டு முறுகிய கைகளும்
திண்ணென இறுகிப் பரந்த மார்பும் துடித்திட
கண்ணென வன்னிப் புனித மண் காத்து
கற்சிலை மடுவின் காவல் தெய்வமானவன்

செங்கழல் அணிந்த காலன் பகை
சங்கரித்துக் கொல் எனக் காலனையே
எதிரிமுனை ஏவிடும் தீரன்
எஞ்சாமை மறவர் குலப்பரம்பரை மாமன்னன்.

செங்கண் விழிவழியே வீரமுழக்கமிட்டு
பூனைக்கண் வெள்ளையனைப் புலியெனத் தாக்கி
நேருக்கு நேர் சமர்கண்டு சளைக்காது
போருக்கு எதிர்நின்ற கபடன் றிபேக்கின் படையை
வாள்முனையில் புறமுதுகிட ஓடவைத்த பேரரசன்.

மும்முனைத் தாக்குதலுக்கு ஈடு கொடுத்து
முன்நின்று வீராவேசத்துடன் கொடுவாள் ஏந்தியவன்
நெஞ்சில் விழுப்புண் ஏந்தி புறநானூற்று வீர வரலாறாய்
நெடிது ஆண்ட தமிழ்ப் பரம்பரையின் வைரத்தூண்
தாயக விடுதலைக்கு தன் பாதச் சுவடுகள் தந்து
சேய்களுக்குப் பாதை காட்டி நின்ற முதல்வன்.

கரிக்கட்டு மூலைக் காக்கை வன்னியன் சூழ்ச்சியால்
களமுனையில் சிறையான பண்டாரவன்னியன்
சாகுமுன் வீரம் படைக்கச் சந்தர்ப்பமும் கைகூடியது
சாடிய ஒருகை தட்டலோடு குதிரைகள் அத்தனையும்
கூடியே எதிரிமுனை பாய்ந்து தாக்கியவேளை
கண்ணிமைப் பொழுதில் கார்முகிலை வெட்டிய மின்னலாய்
விண்ணதிர மறைந்து வெள்ளையருக்கு தண்ணீர் காட்டினான்.

துப்பாக்கியின் தேடலுக்கு மத்தியிலும் துணிவுடன்
உடைவாளுடன் மீண்டும் வன்னியில் வீரசாகசம்
உடையாவூர் போரில் விழுப்புண் தாங்கிய மார்பினனாய்
பனங்காமத்தில் வீரசுவர்க்மடைந்த வணங்கா முடியன்
பகைக்கு அடங்காத வீரத் தமிழ் ஆடலேறாக எங்கள்
இதய பூமி காக்கத் தன்னையே தந்த மன்னவன்

உயிர் மூச்சு உள்ளவரை மண்ணுரிமை காத்து
உறங்கா மறவனாய் இனமானங் காத்து புகழ் பூத்து
கற்சிலை மடுவின் காவல் தெய்வமானவன்
முல்லை மன்னன் வழி வல்வை மைந்தனும் முழு
வல்லமையும் படைத்தவனாய் வெண்ணி வென்ற கரிகாலனாக
வன்னியரசன் நினைவு சுமந்து வரலாறு தொடர்வான்

ஈசைச் சுடர்களின் ஆனந்த ஜோதியில்
ஈன்ற தாய் மண்ணின் முகம் சிலிர்த்து மலர
தமிழீழம் என்ற வாகைப் பூச் சூடி மகிழ்வோம்.

*வள்ளுவர் சுரோ*
*கனடா.*

# வன்னியின் ஒரு இனிய களப்பூமி

சிறகு விரிக்காத
சின்னஞ் சிறு கிராமம்
அபிவிருத்திக் காதலன் வந்து
தொட்டுணராக்
கன்னிமை கொண்ட
வன்னியின் இனிய
ஒரு களப்பூமி

மரங்களை அழித்து
ஒளிக்கம்பக் காமுகர்கள் வந்து
கற்பழிக்காத தெருக்கள்

நிமிர்ந்து பார்க்கும்
கற்பக தருவும் சற்று
வளைந்து நெளிந்து
நிற்கும் தென்னையும் கூடி
வரவேற்புரை நிகழ்த்தும்

மாவும் பலாவும்
மாண்பான கமுகும்
வாழையும் வண்ண மலர்களும்
ஒன்றாய்க் கூடி
குசலம் விசாரிக்கும்

பச்சைப் பட்டுடுத்தி
பரவசமாய்
வயல்வெளிகளும்
கோவிலும் குளமும்
அருகருகே இருக்கின்ற
அழகு நிறை மருதநிலம்

அம்மனுக்கு குளிர்த்தியும்
அப்பனுக்கு நிறைமணியும்
செய்யும்
ஐயர் இல்லாப் பூசகர்கள்
பக்திப் பரவசமாய்
செய்கின்ற பாங்கு
சொல்லிடவே வார்த்தையில்லை

வைகறைப் பொழுதில்
சேவலகள் அங்கு
கூவி எழுப்பும்
வண்டினமும்
வண்ணப் பறவைகளும்
ஒலியெழுப்ப
நன்றியுள்ள ஞமலிகள்
நல்ல நாதமெழுப்ப
இருளைக் கிழித்து இரவி
அங்கு பரவசமாய்
மெல்ல மேலெழும்புவான்

இதமான குளிர் தென்றல்
அங்கு தாலாட்ட
இரவிற்கு நன்றி சொல்லி
இளங்காலைப் பொழுதிற்கு
வணக்கம் சொல்லும்

நாட்டுக் கூத்தும் நாடகமும்
கிளித்தட்டு மறிப்பும்
கிட்டியடிப்பும் நெத்தியடியாய்
நித்தமும் நடக்கும்
கிராமவிருத்திச் சங்கமும்
மாதர் சங்கமும்
பிரேரணை மீது
விவாதம் நடத்தும்
வாசிகசாலையும் அங்குள்ள
ஆரம்பப் பாடசாலையும்
பாராளுமன்றமாய் விளங்கும்.

மேய்ப்பான் இல்லாத
ஆடுகளும் மாடுகளும்
அங்கு அளவில்லாத
சுதந்திரத்தையே
சுவைத்திடும்.

உடன் கறந்து காய்ச்சிய பாலும்
நல்ல கட்டித் தயிரோடு
மோரும் நெய்யும்
முதல்நாள் எடுத்த
சுவைத் தேனும் அங்கு
தெவிட்டாது
கொட்டியிருக்கும்

கொம்பறையில் நெல்லும் சேமித்த
பன்றிக் கருக்கலும்
வத்தலும் நல்ல
பாலைப் பாணியும்
பதப்படுத்தியே வைத்திருப்பார்

வேட்டையாடுகின்ற
மான் மரை பன்றி
இறைச்சியிலே நல்லதொரு
வேட்டைக் கறியும்
கொச்சி மிளகாயில்
சம்பலும் கொஞ்சம்
கட்டித் தயிரும் கலந்து
புத்தம் புதிய
பச்சை அரிசிச் சோற்றுடனே
உண்டாலே தெரியும்
அதன் சுவையும் சுகமும்.

முரலிப் பழத்தோடு நாவலும்
நறுவிலிப் பழத்தோடு நல்ல
பலாப்பழமும் வீரைப்பழமும்
அடவியெங்கும்
அடர்ந்தேயிருக்கும்.

பேரூந்து வண்டிகள்
பெரிதாக இங்குவந்து குழப்பங்கள்
விளைவிக்கவில்லை

சலங்கை கட்டிய
மாட்டு வண்டிகள்
இசைக்கின்ற இராகம்
இசை மன்னர்களையே
தோற்கடிக்கும்.

ஈருருளி மிதி
வண்ணடியோடு
உந்துருளி சிலவும்
தேசிய வாகனமாய்
உழவு இயந்திரங்கள் பலவும்
பந்தயங் கட்டி ஓடும்.

நெல்லும் உழுந்தும்
பச்சைப் பயறும்
பசுமையான நல்ல
காய்கறிகளும் சீராக
மிளகாய் புகையிலை
வெங்காயம் கிழங்கு என்றும்
நிலக்கடலை குரக்கனோடு
எலுமிச்சை தோடையெனும்
சோடையின்றிப்
பயிரிடும் உழவர்கூட்டம்
உழைத்திடுவார் தினமங்கு

அனால் இன்றோ
பூபாளம் இசைத்த மண்ணில்
முகாரி இசைக்கிறது
தென்றல் தவழ்ந்த மண்ணில்
புயல் தாண்டவமாடுகின்றது
சொந்த மண்ணிலேயே
நொந்து தினம்
அகதியாய் அலக்கழியும்
அவலம் அங்கு.

இனிய தாய் மண்ணே
தமிழீழத் தாயகமே
பேரினவாதப் பேய்கள்
உன்னில் நித்தமும் நித்தமும்
ஆடிய அகோரத் தாண்டவம்
அடங்கிவிட்டதா?

ஏவப்பட்ட எறிகணைகளாலும்
தாழப்பறந்த வான்பரப்பு
வல்லூறுகளாலும்
வதைக்கப்பட்டதினால்
வடிவிழந்து நிற்கிறாய் ஆனாலும்
உனது சூரியக் குழந்தைகள்
எக்காளமிடும் எதிரியை
வீரியத்துடன்
சுட்டெரித்ததனால்
உன்னைச் சுற்றி இன்று
சமாதான இராகங்கள்
இசைக்கத் தொடங்கிவிட்டது
இசைக்கப்படும் இராகம்
சமாதனமாயோ அன்றேல்
அமர்க்களமாயேனும் நிச்சயம்
இசைத்து முடிப்பார்கள்
மங்களமாய் உன் மண்ணின்
மைந்தர்கள் அப்போது உனை
அலங்கரித்து அழகுபார்க்க
உலகெங்கும் தயாராகிவிட்டார்கள்
உன் புதல்வர்கள்.

*பொன் பத்மநாதன்*
*மொன்றியல்.*

Asha LUXMY

# Asha's Luxmy

Fast Food and Take-Out

"THE BEST NEVER REST"



☞ Chair Rental

☞ Caterers for Wedding Parties Take-out

416-288-8177

## 416 - 288 - 8177

**Asha's Luxmy Fast-Food and Take-Out**

**1849 Lawrence Avenue East**
**Scarborough, Ontario**
**M1R 2Y3**
**(Lawrence/Pharmacy)**

# வரந்தர வேண்டும் முருகா!

*கலாமணி சி. தெய்வேந்திரம்பிள்ளை*
*நெடுங்கேணி*

நெடுங்கேணிக் கதிர் வேலாயுதர் அலய மணியோசை, ஓம் என்ற பிரணவ நாத அலைச்சுருளாய் ஓங்கி ஒலித்து காற்றின் அணுக்களிலே கலந்து காதுமடல்களில் நுளைந்து கொண்டிருந்தது

நாவலர் வீதியைச் சேர்ந்த இரத்தினம் அவர்களின் ஒலிபெருக்கி "கனலில் கருவாகிப் புனலில் உருவான கந்தனூர் எந்தவூர்" என்ற சீர்காழி கோவிந்தராசனின் பாடலை இசைத்துக் கொண்டிருந்தது.

முல்லைத்தீவு - வவுனியா செல்கின்ற பிரதான வீதியில் அமைந்த பெரிய நகரம் நெடுங்கேணி ஆகும். அறுபது கிராமங்மளின் தலைநகரான இவ்விடம் செல்வச் செழிப்பு மிக்கது. பொன் விளையும் பூமி அது இதற்குப் பொருந்தும். மரக்கறிக் களஞ்சியமான இங்கிருந்து பெருமளவு மரக்கறி வகைகள் சுற்று வட்டாரங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

புகையிலை, மிளகாய், வெண்காயம் ஆகியன பயிர்கள் பணப்பயிர்கள். அவை ஒருபோக விளைவிலேயே குடிசைகளைக் கோபுரமாக்கி விடும் வல்லமை படைத்தவை.

வேலாயுதம் அவசர அவசரமாக முழுகத் தொடங்கினார். கந்தசஷ்டி விரதத்தை அவர் உபவாசமிருந்தே அனுஷ்டிப்பவர். மிளகு தண்ணீரோடு இருந்து ஏழாம் நாள் பாறணை முடிப்பவர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது பலத்த எறிகணை மாரி சொரியவே உடுத்த உடைகளோடு ஊரை விட்டோடியது அவரது குடும்பம். முள்ளியவளை, முத்துஜயன்கட்டு, புதுக்குடியிருப்பு என அவரது குடும்பம் மூன்றாண்டுகளும் வெவ்வேறிடங்களில் வாழ்ந்துவிட்டு நெடுங்கேணி திரும்பியது.

ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணி செல்கின்ற வீதி இருபுறமும் உள்ள காடுகள் நாற்பதடி அகலத்தில் வெளியாக செம்மண் கிரவல் போடப்பட்டுச் செப்பனிடப்படிருந்தது.

ஆங்காங்கே சிற்சில வீடுகளைத் தவிர ஏனயவை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. ஏழை மக்கள் சிறுகச் சிறுகச் சேமித்து பசிகாத்துச் சேகரித்துக் கட்டிய குடிசைகள் எதுவுமே இல்லை. பெருமளவு கல்வீடுகள் கூரையின்றிக் காணப்படுகின்றன.

அவசர அவசரமாகத் தனது மனைவி குழந்தைகளைச் சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு அன்றாடம் சமையல் செய்வதற்கான சட்டி, பானை, அரிசி, தேங்காய் ஆகியவற்றோடு தனது வளவை அடைந்த அவர் அதிர்ந்து போனார். ஐந்தறை வீடு அத்திவாரம் மட்டுமே எஞ்சிய நிலையில் அதுவும் பாதிப்புற்ற நிலை.

முப்பதினாயிரம் செலவில் கட்டிய முன்கூடம், தரையில் படுத்தபடி கிடக்கிறது. வளவெல்லாம் பழமுதிர்ச் சோலையாக வைத்திருந்தார் அவர்... ஒரு இனிப்புத் தோடை ஒரு புளித் தோடை ஒரு எலுமிச்சை மூன்று மாமரங்கள் சில பூமரங்கள் மூன்று தென்னை மரங்கள் நான்கைந்து கமுக மரங்கள் தவிர வேறெதுவுமேயில்லை!?

அது அவரது மனைவியின் சீதனக் காணி. முன்பு இந்திய இராணுவம் கட்டிய வீட்டைத் தரைமட்டமாக்கி வீட்டுக் கற்களை பதுங்கு குழிக் கிடங்குகளில் போட்டு மூடியிருந்தது. அதனையெல்லாம் நடராசா என்பவர் மூலம் அகழ்ந்தெடுத்து மிகுந்க சிரமத்தின் மத்தியில் தனது மனைவியின் சகோதரர்கள் தந்தையாரின் உதவியோடு மீண்டும் கட்டியெழுப்பிய கசப்பான நினைவுகள்...

வீட்டுக்குப் பனை தறித்த போது அடிமேல் அடி இடிமேல் இடியாகச் சந்தித்த சோதனைகள். மாரிமழை பொழியப் பொழிய வேலங் குளம் தம்பிஜயா குழுவினர் கூரை வேலை செய்த கோலங்கள்...கொழும்பு ஓடு எடுத்து கூரை வேய்ந்து நிலத்திற்கு மண் போட்டு அடித்துச் சாணியால் மெழுகி தகரங்களால் கதவு

யன்னல்களை அடைத்து அதில் வாழத் தொடங்கிய காலங்கள்...

வீட்டைச் சுற்றிப பூ மரங்கள் வாழை தென்னை முருங்கை தோடை எலுமிச்சையென பசுஞ்சோலை. முன்புற வேப்ப மரத்தின் பழுத்த இலைகளை விளக்குமாறுகொண்டு கூட்டித் துப்பரவு செய்வது. பயிர் கொடிகளுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி ஊற்றுவது வீதியோர புற்செடிகளைத் துப்பரவு செய்வது பொழுதே காணாது.

ஒரு ஏக்கர் வளவிலேயே பின்புறம் இருந்தது தென்னந்தோப்பு. இருபது தென்னை மரங்கள் நிறையக் காய்த்துப் பழுத்து மாசம் தோறும் இருநூறு தேங்காய்களை விற்று வீட்டுச் செலவை பார்த்துக் கொண்டமை. விழுகின்ற ஓலைகளையெல்லாம் பழுதுபடாமல்ச் சேர்த்து சிற்றம்பலம் என்ற முதியவரைக் கொண்டு கிடுகு பின்னி விற்பது...

பனம் பழங்களில் பண்டங்கள் செய்து உண்பது. பனம்பாத்தி போடுவது. அப்பப்பா— "காணிநிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும்" என்ற மகாகவி பாரதியின் கனவு அவனது வாழ்வில் நிறைவேறாவிட்டாலும் சொல்லுக்குச் சொல்லு வரிக்குவரி இவனது வாழ்வில் நிறைவேறியிருந்தது.

ஆனால் எல்லாம் இருந்தும் இல்லாத ஒன்று அவர்களுக்குப் பிள்ளை இல்லை. "கண்ணூறு, நாவீறு அணுக்குண்டை விட பொல்லாதது, புகழ் உயிராபத்தானது" அவனது பொன்மொழி.

பிள்ளைகள் இல்லை இவர்களிற்கு வீடு ஏன்? என்று எண்ணிய பொறாமைக்காரர்கள் இப்பொழுது பெருமகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றரை வயதைத் தாண்டிய குழந்தை சரண்யா ஓரிரண்டு சொற்களையே உச்சரிக்கின்றாள். தன்போன்ற குழந்தைகளோடு பழகி மொழி வளத்தைப் பெறவேண்டிய அவள் தன்னந்தனியே பெற்றுக்கொண்டோரின் பெருஞ் சொற்களை புரிந்திட முயன்று தவிப்பது பெருந் துன்பமே.

இறம்பைக் குளம் வினாயகர் ஆலயத்தில் சிற்சில வெள்ளிகளில் பொங்கல் இடம் பெற்ற போதும் அவ்வாலயம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. இவ்வருடம் திருவிழாவும் இடம் பெறவில்லை. நாகதம்பிரான் கோவில் ஓரளவேனும் இயங்குகின்றது. ஏனெனில் அது கடை வீதியின் அருகே இருக்கின்றது.

நெடுங்கேணி என்னும் பெயருக்கு காரணமான வில்வையடிக் கிணறு நெடுங்கேணி முழுவதும் தண்ணீர் விநியோகஞ் செய்த தண்ணீர்த் தாங்கியை நிறைத்து வந்தது. அதனுள்ளே வீழ்ந்த குழந்தை ஒன்று தண்ணீரின் மேலே தவழ்ந்த அதிசயமுண்டு. இக்கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட வில்வையடி வினாயகர் பிரசித்தமானவர். இன்று அந்த ஆலயம் வெள்ளிக் கிழமைகளில் பொங்கலோடு மட்டும் இருக்கிறது. பழய முருகன் ஆலயமும் காடு மண்டிக் காணப்படுகிறது. ஓரளவு சில பக்தர்கள் சென்று வருகிறார்கள்.

நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் காட்டின் மத்தியிலே உயர மலையில் முன்புறம் வினாயகர் ஆலயத்தோடு சேர்ந்து குடியிருக்கிறார். வருடம் தோறும் சித்திரைப் பௌர்ணமியிலே சிறப்பாக இடம் பெற்று வந்த பொங்கல் விழா சென்ற ஆண்டிலே இடம் பெறத் தவறி விட்டது. இக்கோயிலுக்குரிய பூசை பொங்கற் பொருட்கள் எல்லாம் பூசகரின் வீட்டுப் பெட்டகத்திலிருந்து காணாமல் போய்விட்டன.

நெடுங்கேணிக் கடை வீதி சுடலை போல காட்சியளித்து இப்போது திருந்தி வருகிறது. மூன்று பலசரக்குக் கடைகளும் ஒரு தேனீர்க்கடையும் இரு கூட்டுறவுக்கடைகளும் இயங்கிவருகின்றன. பொருட்கள் எல்லாமே கிடைத்தபோதும் இன்னமும் பிடவைக் கடையும் அரிசிக் கடையும் இல்லாதது கவலைக்குரியதே. நெடுங்கேணி மகாவித்தியாலயம் சிறப்பாக இயங்குகின்றது. வெண்நிற ஆடைகளில் மாணவர்கள் வீதியால் செல்வது நிலமை வழமைக்கு திரும்புவதை நினைவுபடுத்துகின்றது.

கதிர்வேலாயுதர் ஆலயத்தின் பெரிய காண்டாமணி காணாமல் போய்விட்டது. இருக்கின்ற மணியும் வெடித்து அவல ஓசை எழுப்புகின்றது. மூலவரான வேலாயுதம் அப்படியே காணப்படுகின்றது. முருகன் வள்ளி தெய்வானை சிலைகள் மங்கிய வெங்கலச் சிலைகளாய் காட்சி தருகின்றன. மடைப்பள்ளி களஞ்சியம் என்பன தரைமட்டமாகியுள்ளன. சீரழிந்த நிலையில் இரண்டு சூரன் சிலைகள் அவனின் பல தலைகள் முருகனின் மஞ்சம் என்பன வசந்த மண்டபத்திலே காணப்படுகின்றன.

கோவிலைச் சுற்றி பற்றைக் காடுகள் கோவில் மண்டபத்திற்குள்ளும் செடி கொடிகள் மூலவிக்கிரங்கள் உள்ள இடத்தே

வௌவால்களும் குடியிருக்கின்றன. பெரியவர் திரு.நித்தியானந்தம் அவர்கள் இந்த ஆலயத்தைக்
கழுவி கந்தசஷ்டி காலங்களில் பூசனை புரிந்தார். எட்டுப் பேர்வரை விரதகாரர்கள். இவர்கள் மாலை மூன்று மணியளவில் ஒன்று கூடியிருந்து கந்தசஷ்டி கவசம் கந்தபுராண வசனம் படித்து வந்தனர். ஏழாம் நாள் காலை பெரிய பொங்கலிட்டு நிறைவு செய்தனர்.

வேலாயுதம் முருகன் ஆலயத்தை அடைத்தார். அங்கே பக்தர்கள் காத்திருந்தனர். வேதனையோடும் விம்மலோடும் அவர் கந்தபுரண வசனத்தை வாசித்த போது எல்லோரும் கண்கலங்கி விட்டனர் முல்லைத்தீவு வவுனியா ஆகிய இரு மாவட்டங்களிலுமே நடக்கின்ற சூரன்போர்கள் எல்லாவற்றையும்விட நெடுங்கேணி சூரன்போர் மிகவும் சிறப்பானதாகும்.

அறுபது கிராமங்களையும் அங்கே காணலாம் கந்தசஷ்டிகாலங்களில் மண்டபமே ஆண் பெண் விரதக்காரர்களால் நிரம்பிவழியும். பட்டிக்குடியிருப்பு சிற்றம்பலம் அவர்கள் பயன் சொல்லக் கந்தபுராணப் படிப்பும் தவறாது இடம் பெறும். சூரன் போரின் மறுநாள் பெரும் அன்னதானம் நடைபெறும். அன்றிரவு தெய்வானை அம்மன் திருக்கல்யாணம் மெய்மறக்க வைக்கும்.

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பது போல் நெடுங்கேணி மக்களுக்கு மட்டுமல்ல அறுபது கிராம மக்களுக்கும் பொதுச்சொந்தமான அந்த ஆலயம் அடுத்த ஆண்டுகளை ஆவலுடன் பார்த்திருக்கின்றது.

## மலையகத் தியாக தீபங்களே!

விடியலின் பூபாளச் சத்தம்
கேட்குதோ இல்லையோ
எங்கள் காதுகளுக்கு
உங்கள் சிசுக்களின்
அழுகுரல் மட்டும் கேட்கும்.

நாங்கள் அருந்துவது
தேனீர் மட்டுமல்ல
உங்கள் கண்ணீரோடு
நீங்கள் சிந்திய செந்நீரும்
சேர்த்தே.

*தா.ஜா. கலைச்செல்வன்*
*மன்-தாராவுர்.*

## புரட்டாதி 11

மனித வாழ்வில்
மறக்கமுடியுமா
இந்த நாள்
இரண்டாயிரத்தி ஒன்றின்
புரட்டாதி மாதத்தின்
பதினோராம் நாள்
வான்முட்டும்
கோபுரங்கள்
சரிந்து விழுந்த நாள்
அதி வல்லரசு கூட
ஆடிப்போன நாள்
யாராலும்
வெல்ல முடியாதென
உயர்ந்து நின்ற
கட்டிடங்கள்
உருக்குலைந்து
தலைகவிழ்ந்து
பொடியாகிப்
போன நாள்

இதுவெல்லாம்
எங்கே நடந்தது?
வியட்நாமிலா இல்லை
லெபனானிலா அல்ல
பாலஸ்தீனத்திலா
வான்முட்டும்
புகைமூட்டம்
மனிதஉயிர்களின்
ஈனக்குரல் ஒலிக்கிறதே
இந்த அவலம்
எங்கே நடந்தது?
ஈரானிலா? ஈராக்கிலா?
இல்லை கிரோசீமாவிலா
கனவுகளைச் சுமந்து
வானத்தில் பறந்த
விமானங்களைக் கடத்தி
மானிடமே மனிதத்தை
அழித்த விந்தை
எங்கே நடந்தது?

ஆணவம் மிகு
அகம்பாவத்துடன்
ஆட்சி செய்த
அமரிக்க வல்லரசின்
முற்றத்தில்தான்
இந்த அனர்த்தம்
எதிரியானாலும்
அவனும் மனிதனே
என்பதால் மனித
நேயத்தை மதிப்போம்
மானிடத்தை நேசிப்போம்
மண்ணிடை மறைந்த
மாந்தர்க்கெல்லாம்
எங்கள் கண்ணிடை
கரையும்
கண்ணீர்ப் பூக்கள்
காணிக்கையாகட்டும்.


*பெ. வி. கெனடி*
*கனடா.*

# Yarlnagar Trade'a'rs



- ◊ இலங்கை-இந்திய உணவுப் பொருட்கள்
- ◊ உடன் மரக்கறி வகைகள்
- ◊ திருமணம் மற்றும் விசேட பூசைக்குரிய மாவிலை, வாழையிலை, அறுகம்புல், முடித்தேங்காய் வாசனைத் திரவியங்கள்
- ◊ இறக்குமதி செய்யப்பட்ட சுமித்மிக்சி (Smith Mix), றைஸ் குக்கர்(Rice Cooker)
- ◊ ஓடருக்கு பலகார வகைகள்

**மக்கள் தேவையுணர்ந்து மேற்குறிப்பிட்ட பொருட்களைத் தரமான முறையிலும், குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே தரிப்பு ஸ்தாபனம்.**



**உரிமையாளர்: இ. நவரட்ணம்**

**தொலைபேசி: (416) 285-0587**

**Yarlnagar Trade’a’rs**
**1239 Ellesmere Road**
**Scarborough, ON**
**M1P 2X8**


**யாழ்நகர் றேடர்ஸ்**
**1239 எல்ஸ்மயர் வீதி**
**ஸ்காபரோ, ஒன்ராறியோ**

# Dundas Dental Centre

**Dr. Vanathy Jeevakumar & Associates**

டாக்டர் (திருமதி) வானதி ஜீவகுமார் அன் அசோஷியெட்

அனைத்து பல் மருத்துவ சேவைகளுக்கும் மிசிசாகாவில்
வாரத்தில் ஏழு நாட்களும்



## பல் மருத்துவர்கள்:


Dr. Vanathy Jeevakumar BDS
Dr. Quis Kazala D.D.S
Dr. Borris Zivanovic D.D.S
Dr. Girish Deshpande BDS, MDS (Orthodontic)
Dr. Mustafa Abouzgia BDS, Dip OMFS, MSE, FRCD(Oral Surgeon)

## General Dentistry Including Brace and Implants

**Business Hours:**

| | |
|---|---|
| Monday – Friday | 10.00 AM – 8.00 PM |
| Saturday & Sunday | 10.00 AM – 5.00 PM. |






**Tel: (905) 281-0273 - Fax: (905) 281-8792**
**29 Dundas Street East, Mississauga, Ontario**
**L5A 1V9.**

# பைந்தமிழே பள்ளி எழுந்தருளாயே!!

பகலவன் எழுந்தனன் பாரிருள் அகன்றது
பள்ளியை நோக்கியே பாலர்கள் படர்ந்தனர்
பகலெழும் பரிதியைக் கண்டே மலரினம்
பவித்திர மாய்இதழ் பரப்பிச் செரித்தன
செகமெலாம் மாந்தர்கள் தம்தொழில் நாடினர்
சாதகர் இசையொடு குழைந்தே பாடினர்
சுகமெலாம் நிறைந்த சுந்தர வதனியாம்
செந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

சேவல்கள் கூவின சீதள வாவியின்
செவ்விய மலர்கள் சிந்தின தேனினை
ஆவலோடு அரிவையர் ஆடியே பாடினர்
ஆடவர் தம்வினை ஆற்றப் போந்தனர்
நாவினில் சிறந்த நாவலர் பலரும்
நாடெலாம் சென்றே நனிசுவை நிறைந்த
பாவியம் பாடினர் பண்புடை மொழியாம்
பைந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

கோயிலின் வாயில்கள் திறந்தன கோகிலம்
கோதின மாந்தளிர் கொழுந்தென மிளிரும்
ஆயிரம் ஆயிரம் புள்ளினம் ஆர்த்தன
ஆவைகள் எங்கும் அலறின சங்கம்
பாயிரம் பனுவல் பயின்றிடும் புலவர்
பைந்தமிழ் பாவினம் பாடியே மகிழ்ந்தனர்
சேயிழை யார்கள் சென்றனர் சினகரம்
சேழுந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

நாளெலாம் உழைத்திடும் நங்கையர் எங்குமே
நவநாகரிக ஆடைகள் அணிந்துமே சென்றனர்
ஊழெலாம் வென்றிடும் உத்தம ஊழியர்
ஊவந்துசெய் முயற்சி உலகெல் லாமே
வாழவே வேண்டும் என்றிடு விருப்பால்
வண்டமிழ் வாணரும் பாணரும் சேர்ந்தே
நாளெலாம் இன்தமிழ் கனடாவில் கற்றனர்
நம்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

குருகுகள் ஒலித்தன கோகிலம் விழித்தன
கூவின மலரொடு குவளையும் விரிந்தன
அருவிகள் சலசலத்தோடின அதனிடை
அழகுற மீனினம் அசைந்தே நீந்தின
கருவிளையோ டாம்பல் கணிவிழித் தலர்ந்தன
கண்டவர் மயங்கும் காளையர் விழித்தெழத்
தெருவினில் தெரிவையர் தீந்தமிழ் இசைத்தனர்
தேன்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

காவெலாம் மரல்கள் கவினுடக் கமழ்ந்தன
காடெலாம் மானினம் கண்மிரண் டோடின
நாவெலாம் இசைமொழி நாரியர் நயனத்து
நாண்மலர் விரிந்தன மழலையர் மருண்டனர்
தேவெலாம் விழையும் தெள்ளிய தமிழைத்
தேருவெலாம் மொழிந்துமே சென்றனர் தேனுகர்
பாவெலாம் வடிக்கும் பயனபடு மொழியாம்
பைந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

வெண்ணிலா ஒளிரவே விடிவெள்ளி காலிற்று
வெற்றிலைச் சுரளொடு விரைந்தனர் தொழிலர்
மண்ணினின் விடிவையே விழைந்திடும் விபுலர்
மனமகிழ் வுற்றனர் எங்குமே மக்களின்
கண்ணிலே ஒழியும் கருத்திலே மகிழ்வும்
கனிந்தன புவியில் களிப்பொடு வாழந்திட
எண்ணியே ஏங்கும் ஏத்தினர் தேவியை
எம்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

கருக்கலில் எழுந்துமே காக்கைகள் கரைந்தன
கன்றின மெங்கும் களிப்புடன் துள்ளின
தெருக்களில் எங்கும் தேனிசை பரந்தன
தேவரும் மூவரும் கேட்டன நயந்தனர்
தருக்களில் தேனிறால் சிந்தின நறவம்
தாயொடு சேயரும் தண்ணளி ததும்ப
அருக்கனின் உதயத்தில் ஆனந்தம் அடைந்தனர்
அருந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

அசையெனச் சீரென அலர்கவிப் பாவலர்
ஆக்கமாம் பாவினம் அமிழ்தெனச் சொரிந்தனர்
இசையினிற் சிறந்த இன்தமிழ் வாணரும்
இயலிசை நாடகம் இயற்றினர் அரங்கில்
நசையெனச் சிறந்த நற்றமிழ் பயில்வோர்
நாடியே முத்தமிழ் வளம்பெற ஓம்பினர்
விசையுறு பந்தென விளங்கிடும் தமிழர்தம்
வியன்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

மல்லிகை மொட்டுகள் மலர்ந்தன பந்தரில்
மாதுளை மாவி னொன்றை மந்தாரை
முல்லையின மெங்கும் முறுவலித் தாலின
முன்றிலிற் துளசி முகர்வையின் வருந்தாம்
அல்லியும் ஆம்பலும் அல்ந்தன குளத்தில்
அன்புடன் அரியினை வழுத்தினர் அடியார்
கொல்லையிற் கோவினம் சொரிந்தன பாலைக்
கோதிலாத் தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

கடல்படு திரவியம் கொண்டே மீனவர்
கரையினில் வந்து அணைந்ததைக் கண்டே
மடல்விரி மலரென மங்கையர் மதிந்தனர்
மாரனின் கணைகளும் அல்ந்தன கரும்பில்
கடல்என மக்கள் களிப்புடன் கரையினில்
கதிரவன் உதயம் கண்டே களித்தனர்
மடலின் மட்டென இனிக்கும் சுவைதரும்
மாணெழில் தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

கண்டெனச் சுவைக்கும் கன்னித் தமிழுனைக்
காதலின் மொழியெனக் கண்டவர் மொழிவர்
பண்டெலாம் நின்புகழ் காத்தனர் மன்னர்
பாலெலாம் நின்னையே பரவினர் பல்லோர்
தண்டமிழ் நாட்டினர் னெறிடும் திசையெலாம்
தம்மொழி ஓம்பியே தாயெனப் போற்றினர்
வண்தமிழ் வள்ளலும் வாணரும் கவிஞரும்
வாழ்த்துந் தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.

பற்றபல நாடுவாழ் தமிழர்கள் இன்றுனைப்
பகரலே வெள்குவர் பாவையர் எல்லாம்
சிற்சில மொழிகளிற் சிரத்தையே கொண்டனர்
சிறுவரும் பெரியரும் மறந்தனர் நின்னை
நற்பல நூல்கள் நிறைதிரு மகளுனை
நாளம் பொழுதும் மறந்திடல் அழகோ
எற்படு முன்னே இயம்பிடு வோம்உனை
ஏம்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே.


**இளம்பிறையான்**

# Dr. பகீரதன் Dr. சிவநேசன்

# Dentists

Dr. Bahee

Dr. Sivanesan



Complete Dental Care for the whole family

All Dental Plans Accepted

**Kennedy & Finch**
3852 Finch Avenue East Suite 207
Scarborough, Ontario
(416) 291-1085

**Keele & Finch**
Wednesdays by Appointments
(416) 728-0345

# குழந்தைகள் நிறுவனரீதியற்ற சூழலில் கற்றுக்கொள்வதே அதிகம்

***கற்றல் –கற்பித்தல் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு***

*த. சிவபாலு பி. எட். (சிறப்பு) எம். ஏ.*

பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது என்பது ஒரு சாதாரணமான விடயம் என்பது பெரும் பாலான பெற்றோரிடையே நிலவும் பொதுமைக் கருத்து. ஆனால் உளவியல், மருத்துவ, கல்வியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி மனிதப்பிறவியின் வளர்ச்சிப்பருவங்கள் ஒவ்வொன்றிலும் கற்றல் நடவடிக்கைகள் பாரிய தாக்கத்தினை உளத்தில் ஏற்படுத்துகின்றது. கல்வி என்பது உள்ளார்ந்த ஆற்றலைக் கல்லி எடுப்பது அல்லது வெளியே கொண்டு வருவது என்பது பொருளாயின் எல்லாக் குழந்தைகளும் கற்றுத் தேறமுடியும் என்பது உண்மை. உள்ளார்ந்த அறிவாற்றலை வெளியே கொண்டு வருவது கல்வியின் பணி என்பதால் கற்றலுக்குரிய அகப் புறத் தூண்டிகளின் செயற்பாடுகள் முக்கியம் வகிக்கின்றன. உளவிருத்தி என்பது குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதே ஆரம்பிக்கின்றது. எனவே கற்றல் நடத்தையும் அங்கேயே தொடங்குகின்றது என்பது வெளிப்படை. எனவே பெற்றோர் பிள்ளைகளின் உடலியல் வளர்ச்சிக்கு மாத்திரம் அல்ல உளவியல் வளர்ச்சிக்கும் ஆதாரமானவர்கள்.

மனிதப் பிறப்பின் விந்தைகளில் மனித உயிராக்கம் வியப்பிற்கு உரியதொன்றாகும். பெண்ணின் முட்டையைச் சுற்றி நீந்திவரும் இலட்சக் கணக்கான விந்தணுக்களில் ஒன்றுமாத்திரமே பெண்ணின் முட்டையை (கருவைச்) சென்றடைந்து கருவாகி மனித உயிராக உருவாகிப் பிறப்பெடுக்கின்றது. குழந்தை தாயின் கருவறையில் இருந்தே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றது என்பதனை உளவியல், விஞ்ஞான ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. குழந்தை வளர்ச்சிப்படிகள் எவை? குழந்தைகளை நாம் ஏற்றவாறு பேணி வளர்க்கின்றோமா? அவர்களின் தேவைகளை நாம் உரியகாலத்தில் பூர்த்தி செய்கின்றோமா? என்பனபோன்ற கேள்விகள் எம்முன்னே எழுகின்றன. பிள்ளைகளை கற்கவைப்பதற்குப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் போதும் மற்றயது எல்லாம் பாடசாலையைப்பொறுத்தது அல்லது தனிப்பட்ட முறையில் மேலதிகமாகக் கற்க (Tution) ஒழுங் செய்து கொடுப்பதுதான் பெற்றோரின் கடமை என்று எண்ணும் பெற்றோர்கள் மிக அதிகம் பேர் எம்மிடையே வாழ்ந்து கொண்டு தமது பிள்ளைகளைத் தாமே அறியாமல் தவறாக வழிநடத்துகின்றார்கள். இவற்றிற்கு பெற்றோர் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி சற்றுச் சிந்தித்துச் செயற்பட வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை அங்கேயே கற்கத் தொடங்குகின்றது என்பது மருத்துவவியலாளர்கள், உளவியலாளர்களின் துணிபு. தாயின் ஆரோக்கிய வாழ்வு, அவரது பழக்க வழக்கங்கள், மதுப்பழக்கம், புகைப்பிடித்தல் போன்றன மனவெழுச்சி நிலைகள் போன்றன குழந்தைகளின் உடலிலும், உளத்திலும் தாக்கம் விளைவிக்கின்றன என்பது நிரூபணமான உண்மையாகும். தாமதமாகக் கல்வி கற்கின்ற பிள்ளைகள் அல்லது மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் எனப்படுவோரில் பலர் தாய்மார் குழந்தைகளை வயிற்றில் வைத்திருக்கும் போது ஏற்படும் மனத்தாக்கங்கள், ஏக்கங்கள், இழப்புக்களால் பாதிக்கப்படுவதினால் இடம்பெறுகின்றன அல்லது அவர்களது மதுப்பழக்கம், புகைபிடித்தல் போன்றனவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கற்பம் உற்ற தாய்மாருக்கு 'வளைகாப்பு' விழா எடுத்து அணிந்து அவரை மகிழ வைக்கும் ஒரு வைபவம் தமிழ் மக்களிடையே பண்டைக்காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளமைக்கும் குழந்தை உளவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளமையைக் காட்ட முடிகின்றது. தாய் மகிழ்வாக இருப்பதனால் பிள்ளையின் உளவளர்ச்சியும் நேர்த்தியானதாக இருக்கும் என்பதோடு மட்டுமல்லாது வளையல் ஓசை கருவில் உள்ள குழந்தைக்கு இன்பக்கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பதும் அறியப்பட்ட உண்மையாகும். எனவே குழந்தை கருவுற்றதிலிருந்தே பேணி வளர்க்கவேண்டியது

முக்கியமானதாகும். தாய்மார் தமது வயிற்றில் இருக்கும் குழந்தைக்காக நல்ல உணவுகளை உண்பது மட்டுமல்லாது மன மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வைப்பதோடு அதிர்ச்சிதரும் செய்திகளையும் அவர்கள் கேட்டுத் துன்பமடையாமலும் இருத்தல் குழந்தையின் உளவிருத்திக்கு மிக மிக முக்கியமானதாகும்.

பிரசவ காலத்தில் கூட வைத்தியர்களின் கவனக் குறைவால் குழந்தைகளின் உடலியல் உளவியல் தாக்கங்கங்கள் ஏற்படுவதும் உண்டு. எடுத்துக் காட்டாக எனக்குத் தெரிந்த குழந்தை ஒன்று பிறந்தபோது அக் குழந்தையின் பிரவசத்தின் போது மருத்துவர்களால் பாவிக்கப்பட்ட ஆயுதத்தின் தாக்கம் அக் குழந்தையின் மூளையில் உள்ள நரம்பைத் தாக்கியுள்ளமையால் அக் குழந்தைக்கு ஒரு பக்க வளர்ச்சி சற்றுக்குறைவாகக் காணப்பட்டது. அவர் வளரும் போது ஒரு காலும் ஒரு கையும் ஏன் ஒரு கண்ணுமே சற்று வித்தியாசமானதாகக் காணப்பட்டது. இது பெற்றோரின் கவனக் குறைவல்ல வைத்தியர்களின் கவனக்குறைவே என்று கூறினாலும் அக்குழந்தை வளர வளர ஏற்ற பயிற்சிகள் கொடுத்து அவரது தன்மையைச் சீர் செய்தமையும் வைத்தியர்கள் தான் என்றாலும் பெற்றோரின் பங்களிப்பு இங்கு மிக அதிகம் என்பதனைக் குறிப்பிடத்தான் ஆகவேண்டும். பயிற்சியளித்தல், என்பது கிரமமான முறையில் செய்வதற்கு எந்தவித தயக்கமும் இன்றி அவர்கள் தமது பிள்ளையுடன் தமது நேரத்தைச் செலவு செய்தமையை நான் நன்கு அறிவேன். எனவே இது வைத்தியர்களின் பங்களிப்பிலும் பார்க்க பெற்றோரின் பங்களிப்பே முக்கியம் பெறுகின்றது.

குழந்தை ஒன்று, தான் பிறந்த உடனேயே யாரும் சொல்லித்தராமலே தானாகவே சுவாசித்து தனது சுவாசப்பையை நிறைத்துக் கொள்கின்றது. அதன் பின்னர் அழவும் தொடங்ககின்றது. குழந்தையின் அடிப்படை ஆழுமையின் தன்மை அல்லது வடிவம் அதன் ஆரம்ப ஆண்டுகளைப் பொறுத்ததாக அமைகின்றது. அதாவது குழந்தை மற்றவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை அல்லது சந்தேகம், தனது தகைமையைப் பற்றி உணரவும் மூளையின் தொழிற்பாட்டுத் தரத்தின் கொள்ளவும் என்பனவற்றைப் பொறுத்ததாகும். சுவாசித்தல், தொட்டு உணர்தல், பார்த்து அறிந்து கொள்ளுதல், உண்ணுதல், சுவையறிதல் என்பனவற்றைக் குழந்தை யாரும் சொல்லித்தராமல் தானாகவே கற்றுக் கொள்கின்றது.

''மனித வாழ்வில் மூளை அணுக்களுக்கிடையேயான தொடர்புகளின் மிக நெருங்கிய தொகுதி மிக உச்சக்கட்டமான வளர்வினை பிறந்த முதலாவது மாதத்தில் கொண்டுள்ளது. அதாவது வளர்ந்தவர்களின் சராசரி மூளைத் தொகுதியின் வளர்விலும் பார்க்க மிகக்கூடதலான அளவு முதல் இரண்டு ஆண்டுகளிலுமே அதாவது மனித வாழ்வின் காலத்தில் அண்ணளவாக 50 விழுக்காடுகள் வரையான வளர்ச்சியினை அடைகின்றது. அது இரண்டு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடையில் மூளை வளர்ச்சிப்பாங்கு குறைவடைந்து செல்கின்றது. அதன்பின்னர் 72 வயது வரைக்கும் ஒரே சீரானதாக அமைகின்றது''[1] என ஹவாட் காடினர் குறிப்பிட்டமையினை நாம் அவதானிக்க முடியும்.

தவழ்ந்து, தத்தித் தடுமாறி நடைபயிலும் பருவத்தே தொடுதல், ருசித்தல், இழுத்தல், தள்ளுதல், மேலே ஏறுதல், கீழே இறங்குதல் போன்றவற்றினூடாக உலகின் தன்மையையும் சக்திகளையும் அறிந்து கொள்கின்றது. இவையனைத்தினையும் குழந்தை தனது சூழலில் இருந்து பெற்றுக் கொள்கின்றது. இக்காலகட்டத்தில் பெற்றோர், பாதுகாவலர், பராமரிப்பாளர்களது பங்களிப்பு மிக முக்கியமானதாகும். பல விடயங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் காலமாக இது அமைகின்றது. பல பிள்ளைகள் தொலைக்காட்சிக்கு முன்பாக அல்லது தொட்டிலில் அல்லது தள்ளு வண்டியில் வைத்துப்பூட்டப்பட்டே காலத்தைக் கழிக்க விடப்படுகின்றார்கள் இதனால் அக்குழந்தைகள் உடல் விருத்தியோ அல்லது உளவிருத்தியோ அடையாதவர்களாக அல்லது குறைந்த விருத்தியையே பெற்றவர்களாக வளர்கிறார்கள். எடுத்துக்காட்டாக நண்பர் ஒருவரின் ஆண்குழந்தையை அவர்கள் மிகவும் கவனமாக வளர்ப்பதாக ஓடி ஆடி விளையாடவிடாது ரிவிக்கு முன்பாகவும் தள்ளு வண்டிலுமாக வைத்துக் கண்காணித்து வந்தார்கள். பாடசாலைக்காலம் வந்ததும் அப்பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்தபோது ஆசிரியையிடம் அக்குழந்தை தன்னைத் தூக்கிச்செல்லும்படி கேட்டு அடம்பிடித்துள்ளது. மற்றயபிள்ளைகள் நூல்நிலையத்திற்குச் நடந்து சென்று திரும்பி வந்த போதிலும் இப்பிள்ளை நடப்பதற்குச் சிரமப்பட்டதென்றால் தவறு எங்கே இருக்கின்றது என்பதனை நாம் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். உரியகாலத்தில் பிள்ளைகளுக்கு ஏற்றவற்றை நாம் செய்துதான் ஆகவேண்டும் என்பதனைப் பலபெற்றோர்கள் உணர்ந்து கொள்வதில்லைத் தவறாக நாம் எம் பிள்ளைகளை நோகாமல் வளர்க்கின்றோம்

எனக்கூறி அவர்களின் எதிர்காலத்தை, வாழ்வை பாழடிக்கின்றமையைத்தான் செய்கின்றார்கள். பிள்ளைகளுக்கு எழுத்துப்பயிற்சிக்கு முன்னர் அவர்களின் கைவிரல் நரம்புகள் எழுதுவதற்குரிய பக்குவத்தைப் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாதது. இவற்றைப் பாடசாலைக் காலத்திற்கு முன்பே பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டியர்கள் பெற்றோர்களே. இவ்வித பயிற்சிகளைப் பெரும்பாலான பெற்றோர்கள் தெரிந்தோ தெரியாமலோ தமது பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவதில்லை. தவறாக தொலைக்காட்சி பார்ப்பதிலும் தொலை பேசியில் அரட்டை அடிப்பதிலும் (கனடா போன்ற இலவச தொலைபேசி உள்ள நாடுகளில்) கழிக்கும் காலத்தைத் தம் குழந்தைகள் பயனுறும் வகையில் நடந்து கொள்வதில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு விளையாட்டு பாடசாலைகள் அவர்களின் பாடசாலைக்கு முன்னய ஆண்டுகளில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பினும் பல பெற்றோர் அவற்றைப்பற்றித் அறிந்திராதவர்களாக அல்லது அவற்றில் அக்கறை அற்றவர்களாக இருப்பதும் அவதானிக்கப் பட்டுள்ளது. ஓடி ஆடி விளையாடி உள்வலுவையும், உடல் வலுவையும் வளர்த்துக் கொள்ளவேண்டிய பருவத்தில் வீட்டினுள் பூட்டி வைக்கும் விந்தை மனிதர்களின் நிலையை என்ன என்றுரைப்பது. தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் பல பிள்ளைகள் தமது கை வினைத் திறன்களை வளர்த்துக் கொள்ளத் தவறுகிறார்கள் என்பது உளவியலாளர்களாலும், கல்வியியலாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதிலும் இந் நிலைமையில் அதிகம் மாற்றம் கண்டுள்ளமை காணப்படவில்லை.

வயோதிபர்கள் தமது வாழ்வையும் தாம் செய்தனவற்றையும் மீள்பார்வை செய்து என்னத்தைச் செய்திருக்க வேண்டும் அல்லது செய்தோம் என்பதில் ஆச்சரியமடைகின்றார்கள். இளைஞர்கள், வளர்ந்தோர், வயோதிபர் ஆகியோர் தொடர்புகளின் தெளிவினை அல்லது கருத்தினை கண்டு பிடிக்கிறார்கள் அல்லது மீளக்கண்டு பிடிக்கிறார்கள். இவை ஒன்றில் இலகுவாக உணச்சிவசப்படக் கூடியனவும், அகங்காரம் கொள்ளவைப்பனவும், வலுவானதும் ஒத்துழைப்பு மிக்கதுமானதும், அடங்காத்தனமும் ஆர்வ முள்ளமையும், முழுமையாக வசதியானதும் வசதியளிக்கத்தக்கதும் ஆகிய தொடர்பு நிலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையும் மனித விருத்தியில் தொடர்ச்சியானதும் ஆகும்.

பண்பாட்டு உயிரியல் கலப்பின் எண்ணங்கள், உணர்வுகள் பற்றிய விசாரணைகள் மனித விருத்தியில் சிக்கல் நிறைந்ததும், ஆரோக்கியமானதும், பூரணமாக வரவேற்கப்படுவதும் எதிர்க்கப் படுவதுமான வெளிப்பாடுகளின் பல நிலைகளைத் தோற்றுவிக்கின்றன.

இவ்வித தன்மைகளைக் கொண்ட மனித வளர்ச்சிப் பருவங்களுக் கேற்ப நடத்தைகளும் மாறுபாடடைந்து செல்வத்தினை அவதானிக்கலாம். பாலர் முதல் முதியோர் வரை மனித இயல்புகளுக்கும் வயதிற்கேற்பவும் பாகுபடுத்திப் பார்க்கப்படுகின்றது. குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம், குமர்ப்பருவம், முன் மனிதப் பருவம், மனிதப் பருவம், வயோதிபப் பருவம் எனப் பலவாறாக உளவியலாளர்கள் மனித வளர்ச்சிப்பருவங்களை வகைப்படுத்துகின்றனர்.

மனித வளர்ச்சிப் பருவத்தில் முதல் இரண்டு ஆண்டுகளும் மிகவும் முக்கியம் வாய்ந்த காலமாகும். இக்காலப் பகுதியில் முதல் நான்கு மாதங்களில் கேட்டல், பார்த்தல், என்பவற்றோடு ஒலி எழுப்பும் செயற் பாடுகளைக் குழந்தைகள் மேற்கொள்கிறார்கள். பொருட்கள், ஒலிகளை ஞாபகத்திலிருத்தல், தமது கைகள், விரல்களால் பரீட்சித்தல், கண்டு அறிதல். சமூகத் தொடர்பாடல் விளையாட்டுக்களை ஆரம்பித்தல் முக்கியமாக பெற்றோர் அல்லது கவனிப்போரின் செயல்கள், ஒலிகளை பாவனை செய்தல் போன்றனவற்றை மேற்கொள்கின்றார்கள்.

எட்டுமாதத்தில் பரிட்சயமானவர் களையும், புது முகங்களையும் அடையாளம் காணுதல், புதியவர்களில் பயத்தினை வெளிப்படுத்துதல், மறைத்து வைக்கப்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்தல், விருத்தியடைந்த சமூகத் தொடர்பாடல் விளையாட்டுக்களை விளையாடுதல், வளர்ந்தவர்களின் நடிப்புக்களையும் செய்கைகளையும் பாவனை பண்ணுதலோடு அம்மா, அப்பா போன்ற அடிக்கடி சொல்லப்படுகின்ற சிக்கலான சொற்களையும் சொல்லத் தொடங்குகிறார்கள்.

குழந்தைகள் தமது பன்னிரண்டாவது மாதத்தில் சொற்களின் கருத்துக்களைப் புரிந்து கொள்கிறார்கள், ஆம், இல்லை போன்ற சொற்களின் பொருளை விளங்கிப் பேசவும் முனைகிறார்கள். இக்காலத்திலேயே உதவியோடு எழுந்து நின்று நடக்கவும் தொடங்குகின்றார்கள். பராமரிப்பாளருக்கும் தனக்குமுள்ள வேறுபாட்டைப் பிரித்துணரவும் தனது வழமையான வேலைகளைச் செய்யவும் முனைகிறார்கள். உதாரணமாக குடித்தல், உண்ணுதல், உறங்குதல் போன்றவற்றைச்

செய்ய முற்படுகின்றார்கள். தான் முன்னர் கண்ட இடத்தில் பொருட்களைக் கண்டுபிடிக்கவும் செய்கிறது.

பதினெட்டு மாதங்களில் துணையின்றி நடக்கத் தொடங்குகிறார்கள், தாங்களாகவே உண்கிறார்கள். பொருட்களின் உண்மைத்தன்மை எண்ணக்கருவை விளங்கி வளர்த்துக் கொள்கிறார்கள். பொருட்களை அதன் குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிரயோகிக்கத் தொடங்குகிறார்கள். வேறு ஒருவரையும் கற்பனை விளையாட்டில் கலந்துகொள்ள வைத்து விளையாடுதல், வாசித்தல் போன்ற பாவனை விளையாட்டுக்களிலும் ஈடுபடுகிறார்கள்.

இருபத்தி நான்கு மாதக் குழந்தைகள் அதாவது குழந்தமைப் பருவ இறுதியில் நடத்தல், ஓடுதல், படிகளில் ஏறுதல், முச்சக்கர வண்டி ஓட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதோடு, இலகுவான வழிகாட்டல்களைப் பின்பற்றவும், இரண்டு அல்லது மூன்று சொற்கூட்டத்தைப் பயன்படுத்தவும் தொடங்குகிறார்கள்.

இப்பருவத்தில் பெற்றோரின் அல்லது கவனிப்பாளரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. குழந்தையின் உள, உடலியல் வளர்ச்சியில் மிக முக்கியமான காலகட்டமாகக் கொள்ளப்படுவதனால் இப்பருவம் கருத்தூன்றிக் கவனிக்கப்பட வேண்டியதே. குழந்தைகளிடம் இயல்பாகவே உள்ள நுண்மதி ஆற்றலை வெளிக்கொண்டுவரும் அறிவியல் விருத்தியில் அவர்களுக்கு உள்ள உள்ளார்ந்த உந்துதலை விட பிறஉந்து சக்திகள் அல்லது புறத் தூண்டிகளின் பங்களிப்பு அறிவாற்றலை வளர்க்க முக்கியம் வாய்ந்தது என்பது உளவியலாளர்களின் துணிபு.

''சில பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், குழந்தைப் பராமரிப்பாளர்கள், ஏன் சில விளையாட்டுப் பொம்மை உற்பத்தியாளர்களின் நம்பிக்கைக்கு மாறாக பராமரிப்பாளர் அல்லது பெற்றோரின் தனித்துவ தொடர்புகள் குழந்தைகளின் உள விருத்திக்கு முக்கிய பங்களிக்கின்றது. உணவளித்தல், நீராட்டுதல், உடைமாற்றுதல் போன்ற நேரங்களில் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் குழந்தைகளுடன் தொடர்ச்சியான புறத் தூண்டிகளைச் செய்கின்றனர். குழந்தையுடன் கதைத்தல் விளையாடுதல் போன்றவற்றால் பொருட்களுக்கும், மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை தெளிய வைக்கிறார்கள். இவை இயல்பாகவே பிள்ளைகளின் உளத்தினை யாரும் அறியாத வகையில் விருத்தி செய்கின்றது''[23] என்பது உஷ்கிறிஸ் (1984) என்பவரது ஆய்வின் முடிவாகும். மிகத் துரிதமாகவும் இடைவெளியற்றதாகவும் விருத்தியடையும் உளத்திற்குத் தீனிபோட்டு வளர்ச்சியடையச் செய்வது யார்? என்னும் கேள்வி எழுகின்றது. பெரும்பாலும் பெற்றோருடன், அல்லது பராமரிப்பாளருடன் பொழுதைக் கழிக்கும் குழந்தையின் அறிவுப்பசிக்கு தங்களை அறியாமலே உணவளிப்பவர்கள் பெற்றோர்களே. பெரும்பாலான பெற்றோர்கள் வேலைக்குச் செல்வதால் சில வேளைகளில் முதியோர்களான பெற்றோரின் பெற்றோர் பிள்ளைகளைப் பராமரிக்கின்ற நிலை காணப்படுகின்றது. அல்லது பராமரிப்பாளர் ஒருவரை நியமித்து அல்லது பராமரிப்பு நிலையத்தில் குழந்தையை ஒப்படைத்து விட்டுச் செல்லுகின்ற நிலைமையையும் காண்கின்றோம். இப்பருவத்தில் உள்ள குழந்தையின் உளவியற் தேவைகள் என்ன என்பதனை அறியாவிட்டாலும் அவற்றை ஈடுசெய்யும் வகையில் பெற்றோர் குழந்தையின் மீது பாசம் சொரிந்து அளவளாவி உறவாட வேண்டிய கடப்பாடு உடையவர்கள் என்பதனை மறுக்கமுடியாது. ஆனால் பெற்றோர்களின் வேலைப்பழுக் காரணமாக குழந்தைகளுடன் நேரத்தைக் கழிக்கின்ற தன்மை மிக அரிதாகக் காணப்படுவதனையும் மறுப்பதற்கில்லை. தாயைக் கண்டால் பயந்து வீரிட்டு அழும் குழந்தைகள், தந்தையைக் கண்டால் அழும் குழந்தைகள், சில நிறங்களைக் கண்டால் அல்லது சில பொருட்களைக் கண்டால், அல்லது அந்நியரைக்கண்டால், அல்லது மீசை, தாடியுடன் வருபவர்களைக் கண்டால் அழும் குழந்தைகளைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். இவற்றின் காரணம் என்ன? யாரும் குழந்தைக்கு இவற்றைச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும் அவர்கள் அழுவதற்குக் காரணம் என்ன? தந்தையின் முகமோ தாயின் முகமோ பரிட்சயம் இல்லாத குழந்தை அழுவது இயல்பே. அதற்கு யார் காரணம்? குழந்தையா? அல்லது பெற்றோரா?

இவற்றிற்கான காரணங்கள் ஏன் என்பதனைப் பெற்றோர்கள் சற்றுச் சிந்தித்துத்தான் பார்க்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக எனது நண்பர் ஒருவருக்கு பெண் குழந்தை ஒன்று கிடைத்தது. அக்குழந்தை மூன்று நான்கு மாதங்களின் பின்னர் சிவப்பு நிறத்தைக் கண்டால் வீரிட்டுப் பயந்து அழத் தொடங்கிவிடும். பெற்றோருக்கு இது மிகவும் கவலை தரும் விடயம் மட்டுமல்ல தாய் தன்னிடம் உள்ள சிவப்பு உடுப்புக்களை எல்லாம் பெட்டியில் பூட்டிவைக்க வேண்டிய நிலை தோன்றியது. சிவப்பு உடுப்பை உடுத்தினால் தாயிடமே போகமல் பயந்து

அழுகின்ற நிலை அக்குழந்தைக்கு ஏற்பட்டுவிட்டது. அக்குழந்தை வளர்ந்து எல்லாவற்றையும் உணர்ந்து அறிந்து காரணம் காணும் வரை இந்த நிலைமை நீடித்தது. எனவே குழந்தைகளின் உளத்தைப் பாதிக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் அவரைப் பராமரித்துப் பாதுகாக்கின்ற தாய், தந்தை, சகோதரர்கள், பேரன், பேத்தி அல்லது வளர்ப்புத் தாய் அல்லது பராமரிப்பாளரிடம் உள்ளது. வேலைக்குச் செல்லும் பெற்றரோர் சாதாரணமாக தமது குழந்தைகளை பகல் பராமரிப்பு நிலையங்களிலோ அன்றி தங்கள் பெற்றோரிடமோ அன்றி உறவினரிடமோ விடுத்துச் செல்வது வழமை. பகல் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள், பாடசாலை முன் திட்டங்கள் போன்றவற்றில் பிள்ளைகளை விடுத்துச் செல்லும் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் நிலைகள் விருப்பு வெறுப்புக்கள் அனைத்தையும் பராமரிப்பாளர்களிடம் அல்லது ஆசிரியர்களிடமோ சொல்லி வைத்தல் மிக மிக முக்கியமானதாகும். இது 'வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகட்டுவதற்கு' ஒப்பதாகும். ''கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்'' செய்வதனால் பயன் ஏதும் இல்லை என்பதனைப் பெற்றோர் உணர்ந்து கொண்டு செயற்படுதல் தங்கள் குழந்தைகளின் விடயத்தில் மிக முக்கியமானதும், பிள்ளையின் உளவர்ச்சியில் தாக்கங்கள் ஏற்படாதவகையில் நடந்துகொள்வதுமாகும்.

''தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரையும்'' என்று நம் முன்னோர் சொன்னதன் அர்த்தம் என்ன என்பதனை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டாமா? உள விருத்தி அல்லது அறிவு விருத்தி என்பது ஏதோ பாடசாலையில் அல்லது வகுப்பறையில் நடைபெறுகின்றது எமக்கும் அதற்கும் தொடர்பில்லை அது ஆசிரியரின் வேலை என எண்ணிக் காலங்களிக்கும் பெற்றோர் எத்தனைபேர் நம்மிடையே இருக்கிறார்கள். குழந்தைகளின் உளவியற் தேவைகளை நன்கு அறிந்து அதற்கு ஏற்ப ஆவன செய்யாத விடத்து அவர்களின் உளவிருத்தியில் தடங்கல்கள் அல்லது பின்னடைவுகள் எற்படுவது தவிர்க முடியாததாகிவிடும். பொதுவாக தொலைக்காட்சியைப் பார்க்க விடுத்து தமது வேலைகளைச் செய்கின்ற அல்லது பிள்ளைகளையும் தொலைக்காட்சியைப்பார்க்க வைத்து தாமும் பார்க்கின்ற தாய், தந்தையர் இன்று அனேகர். பிள்ளைகளின் உளத்தொழிற்பாட்டை மட்டுமன்றி உடலியற் செயற்பாட்டையும் இது விருத்தி செய்வதற்குப்பதிலாக தடைசெய்வதாக அல்லது தாமதப்படுத்துவதாக அமைகின்றமையை அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

''பாடசாலைக் காலத்தில் குழந்தை தனக்கென ஒரு 'வாழ்க்கை முறையை' வளர்த்துக் கொள்கின்றது''[32]. என மனித விருத்தி பற்றி ஆராய்ந்த கிறேஸ் ஜே. கிறாக் என்பவர் குறிப்பிடடுள்ள கருத்தின்படி முதல் ஐந்து ஆண்டுகள் காலமும் ஏனைய பாடசாலைக் காலங்களைவிட மிக முக்கியமானது. இந்தக் காலத்திலேயே குழந்தை வளர்ச்சியிலும், கற்பதிலும் மிக முழுமையாக ஈடுபடுவதாக அல்லது தனது சூழலோடு தொடர்புறுவதாகக் காணப்படுகின்றது. ஒரு சிறிய குழந்தை கற்பதற்கு மிக அதிகம் உண்டு. இக்காலத்தில் குழந்தைக்கு இசைவாக்கமும், அடித்தளஅமைப்பும் குறைவாகவே காணப்படும். குழந்தைக்கு ஒழுங்கமைப்பு இருக்காது. ஆனால் அவற்றை சுற்றாடலில் உள்ள ஒத்தனவற்றை அவை திரும்பத் திரும்ப காண்பதால் அடையாளம் கண்டு விருத்திசெய்து கொள்கின்றது. இந்த வடிவங்களுக்கான தேவைகள் அக்குழந்தையை தான் காண்பவற்றைப் பார்த்து பாவனை செய்யத் தூண்டுகின்றன. வெளியுலக உணர்வுகளைத் தொடுதல், உணர்தல், ருசித்தல், பார்த்தல் என்பனவற்றை பரீட்சித்துப் பார்க்க முற்படுகின்றது. ஆரம்ப வகுப்பில் உள்ளவர்கள் மிகக் கடினமான அல்லது சிக்கலான சொற்களை ஏவுதல், விசாரித்தல், விளங்கவைத்து இணங்கவைத்தல், இரசித்தல், தாக்குதல் போன்றவற்றில் தம்மால் அநுமதிக்கப்படுபவர்கள் அல்லது விருப்பமானவர்களுடன் உபயோகிக்கத் தொடங்குகிறார்கள்.

பாடசாலைப் பிள்ளைகள் சம்பிரதாய சடங்குப் பாடல்கள், பண்ணிசைகள், ஒருவரோடொருவர் திரும்பத்திரும்ப பிடிபட்டுக்கொள்ளும் ''விளையாட்டு விதிகள்'' என்பனவற்றின் மூலம் கற்றுக் கொள்கிறார்கள். இளம்பராயத்தினர் வாழ்வின் முக்கியத்துவத்திற்கும், அர்த்தமுடைமைக்கும் தேர்வுகளுக்கும், தீர்மானங்களுக்கும் இடையே பிரச்சினையை எதிர் நோக்குகிறார்கள். வளர்ந்தவர்கள் இசை அல்லது இயற்கையின் அழகைத் திரும்பக் கண்டறிந்து குழந்தைகள் போன்று புதிய அநுபவத்தினால் ஆச்சரியமும் மகிழ்வும் அடைகிறார்கள்.

''முதியோர்கள் எமது குழந்தைகளுடன் பொழுதைக்களிப்பதினால் குழந்தைகள் மிகுந்த பயனை அடைகின்றார்கள். ஆபிரிக்காவில் உள்ள 'பாபா' மரங்களுக்குக் கீழ் முதியோர்கள் தாம் அறிந்து

வைத்திருப்பவற்றை இளந் தலை முறையினருக்குச் சொல்லித் தருவதன் ஊடாக பண்பாட்டு விழுமியங்களைக் கற்பிக்கிறார்கள். அத்தகைய மரங்கள் கனடா போன்ற நாடுகளில் இல்லையே"[4] என்பது குழந்தைகள் பற்றியும் முதியோர்கள் பற்றியும் உளவியல் ஆய்வினை மேற்கொண்டுவரும் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உள மருத்துவ நிபுணர் வைத்தியக் கலாநிதி மோட்டன் பஸ்ஸர் அவரக்கள் முதியோர் பற்றிய கருத்தரங்கொன்றில் பேசும் போது குறிப்பிட்டதோடு அவர் ஏன் கல்வியில் முதியோரின் பங்களிப்பு முக்கியமானது என்பதனைக் குறிப்பிட்டமை கருத்திற் கொள்ளத்தக்கது.

"ஒரு சிந்தனையை விதைப்பாயானால் ஒரு செயலை நீ அறுவடை செய்வாய், ஒரு செயலை விதைப்பதால் நீ ஒரு வழக்காற்றை அறுவடைசெய்வாய், ஒரு வழக்காற்றை விதைத்தால் நீ ஒரு பண்பை அறுவடைசெய்வாய், ஒரு பண்பை விதைப்பதால் நீ நிகழ்வுகளைக் கட்டுப் படுத்துகின்ற சக்தியைப் பெற்றுக்கொள்வாய்"[4] என சாள்ஸ் றீட் என்னும் பேரறிஞர் குறிப்பிட்டமைக்கு ஏற்ப மனித வளர்ச்சிப் பருவங்களில் நாம் பெற்றுக்கொள்ளும் எண்ணங்கள், உளப்பாங்குகள், கற்பனைகள், செயல்கள், வழமைகள், பண்புகள், கட்டுப்பாட்டுச் சக்தி என்பனவெல்லாம் புறநிலை, அகநிலைக்காரணிகளினால் எமக்கு ஏற்படுகின்றன. அதாவது மனித வளர்ச்சியானது உடல் நிலையிலும், சூழலிலும் தங்கியுள்ளது. இவை எல்லாம் குழந்தைப் பருவத்திலிருந்தே உளத்தில் பதியவைத்து வளர்க்கப்பட்டு வருவன எனலாம். நாளாந்த செயற்காபடுகள், காண்பவை, கேட்பவை போன்றவற்றால் நாம் அறிந்தோ அறியாமலோ எமது உளம் வளர்வு பெற்று வருகின்றது. உடலுக்கு உணவு அளித்து அது ஜீரணித்து உடலில் சேர்ந்து வளர்ந்து வருவதுபோன்றே உளத்தின் செயற்பாட்டிற்கும் ஆரோக்கியமான சூழ்நிலை நல்ல அறிவு விருத்திக்கு மூலாதாரமாக அமைகின்றது. உள்ளார்ந்த சக்கி, வலிமைக் கேற்ப புறநிலைத் தன்மைகளும் பிள்ளைகளின் உளவிருத்திக்கு முக்கியமானவையாகும்.

இன்று உலகின் எப்பாகத்திலும் அல்லது எந்த நாட்டிலும் இளைஞர்களின் வன்முறை எல்லை மீறல்கள் அதிகரித்து கட்டுக்கடங்காத தன்மையில் விபரீத விளைவுகளை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றன. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் இளைஞர்களின் வன்முறைகள் அதிகரித்து வருவதனை நாம் நாளாந்தம் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் மூலம் அறிகின்றோம். இதற்குக் காரணம் என்ன? இதனைவிட தற்கொலை, கொலை என்பனவும் இந்த நாடுகளில் மிகவேகமாக அதிகரித்து வருவதனை நாம் காண்கின்றோம். கனடாவைப் பொறுத்த வரை குறிப்பாக தமிழ் சமூகத்தில் இளைஞர்களின் வன்முறைகளும், கொலை, தற்கொலை என்பனவும் அதிகரித்து வருகின்றன. இவற்றிற்கான காரணங்கள் என்ன என்பதனை அறிந்துகொள்வதற்கு இளைஞர்களின் ஆரம்பகால வாழ்க்கை முறையினை ஆயவேண்டியது முக்கியமானது எனக் கொள்ளப்படுகின்றது. குழந்தைப் பருவத்தே அவர்களின் வளர்ப்பு முறைகள், அவர்களின் உள்ளத் தாக்கங்கள் பற்றி அறிந்துகொள்ளும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் எதனை எமக்கு எடுத்துக்காட்டுகின்றன எனின் பெற்றாரியம் சரியாக இடம்பெறவில்லை என்பதே. பெற்றோர் பிள்ளைகளை அவர்களின் உளவியற் தேகைளான அன்பு, காப்பு, அரவணைப்பு, நட்பு, கணிப்பு, ஆதரவு, ஏற்பு, உற்சாகமூட்டல், போற்றுதல் போன்ற தேவைகள் ஒவ்வொரு குழந்தையும் தமது பெற்றோர், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள் போன்றோர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. இத்தேவைகள் கிடைக்காத அல்லது பூரணப்படுத்தப்படாதவிடத்து அவர்களின் உளத்தில் அது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கங்கள் மூளையின் ஒரு மூலையில் தங்கி அது பின்னர் வளர்ச்சியடைந்து பிள்ளைகளின் உளநிலையைக் கட்டுப்படுத்துவதோடு, அவர்களை திசை மாறிச் செல்லவும் காலாக அமைகின்றது.

குழந்தைகளின் நுண்மதி, அல்லது விவேக ஆற்றல் ஏழு முக்கிய சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. கழிவிரக்கம் எனும் மற்றயவர்களின் உணர்வுகளை மதித்தல், அல்லது பகிர்ந்துகொள்ளுதல், மனச்சாட்சி, கணிப்பு, பணிவு, சகிப்புத்தன்மை, நடுநிலை ஆகியன உங்களது பிள்ளைகளை ஒழுக்க நிலை சார்ந்த எதிரிடைகள், அழுத்தங்கள் என்பவற்றிற்கூடாக வாழ்க்கை முழுமையும் எதிர் நீச்சல் போட்டு வளர்ந்து வருவதற்கு உதவுவனவாக அமைகின்றன.

கழிவிரக்கம் என்பது மற்றவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதனை அறிந்து அவர்களின் பால் கருணைகூர வைக்கும் தன்மை வாய்ந்தது. இப்பண்பு இன்னொருத்தர் துன்பப்படும் வேளை உதவி நல்கும் மனப்பாங்கை வளர்பதாகும். மற்றவர்களின் உணர்ச்சிபூர்வமான வேதனையை உணர்ந்து இரக்கசுபாவத்தோடு அல்லது கருணை உள்ளத்தோடு அணுகுவதற்கு உங்களது

பிள்ளையை ஊக்குவிக்கும் தன்மை கொண்டது.

மனச்சாட்சி என்பது உள்ளிருந்து உறுத்தும் தன்மை கொண்டது. தவறிலிருந்து சரியானதை தீர்மானித்து சரியானவழியில் மனப்பாங்கைச் செல்லவைக்கும் தன்மை கொண்டது. இது நல்லவற்றோடு எதிரிடையாக வரும் எதிர்ப்புக்ளை எதிர்த்து முகத்தில் உணர்ச்சியைக் காட்டினாலும் கூட சரியான வழியிற் செயற்படவைக்கின்றது. நேர்மை, பொறுப்புக்களை ஏற்றல், மாறுபாடடையாத பூரணத்துவமுடையதாக விருத்தல் ஆகிய பண்புகளை வளர்ப்தாக அமையும்.

மனக்கட்டுப்பாடு என்பது பிள்ளை செயற்படும் முன்பே சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டது. இது பிள்ளையின் வளர்சியில் சரியானவற்றை அறிந்து அதன் வழி தனது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றது. இவ்வம்சம் பணிவு, தாராளமனப்பான்மை என்பனவற்றையும் வளர்க்கின்றது.

மதிப்பு அல்லது கணிப்புத் திறன் என்பது ஏனையோரை, அவர்கள் பயனுள்ளவர்கள் என்பதனைக் கருத்திற் கொண்டு வரவேற்கும் தன்மையைத் தருகிறது. இந்த அம்சமே உங்களது பிள்ளைகளை தங்களை மற்றவர்கள் எப்படி மதித்து வரவேற்று உபசரிக்கிறார்களோ அவ்விதமே ஏனையோரையும் உபசரிக்கும் மனப்பாங்குக்கு இட்டுச்செல்லும் தன்மையைத் தருகின்றது. இது வன்முறைகள், நெறிபிறழ்தல், வெறுப்புணர்வு என்பனவற்றைத் தடைசெய்யும் அத்திவாரமாக அமைகின்றது. உங்கள் குழந்தை தனது நாளாந்த வாழ்வில் மதிப்பை ஏற்படுத்திக்கொண்டு வந்தால் அது அவ்விதமே மற்றவர்களின் தவறற்ற தன்மைகளையும் உணர்வுகளையும் கவனிப்பார். அத்தோடு தன்னைப் பற்றிய மாபெரும் மதிப்பையும் வெறிக்காட்டுவார்.

பணிவுத்தன்மை மற்றவர்களின் பொதுநலம் அவர்களது உணர்வுகளைப்பற்றி கருத்தூன்றிக் கவனிக்கும் தன்மையைக் கொடுக்கின்றது. இத்தன்மை வளர்க்கப்படுவதால் மற்றவர்களிடம் பரிவுடையவராகவும் சுயநலமற்றவராகவும் மற்றவர்களை பணிவாக உபசரிப்பது சரியானது என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ளும் தன்மையை அது பிள்ளைக்கோ அல்லது குழந்தைகளுக்கோ தருகிறது. பணிவுத் தன்மையைப் பெற்றுக்கொள்ளும் ஒரு பிள்ளை மற்றவர்களில் கருணையும் அவர்களின் தேவைகளைப் பற்றி கருத்திற்கொள்வதனையும் அவற்றை பெற்றுக்கொள்ள உதவும் தன்மையையும் அல்லது பெற்றுத் தருகின்ற தன்மையையும் வளர்த்துக் கொள்கிறது.

சகிப்புத்தன்மை மற்றவர்களிடம் காணப்படும் வேறுபட்ட தன்மைகளை மதித்துப் பாராட்டும் தன்மையைத் தருகின்றது. இன, மத, மொழி, பால், தோற்றம், பண்பாடு, நம்பிக்கைகள், செயற் திறன்கள் அல்லது ஆண்,பெண் தொடர்பியல்புகள் போன்ற வேறுபாடுகளைக் கடந்து மற்றவர்களை மதிக்கும் பாங்கை பிள்ளை வளத்துக்கொள்ளும் தன்மையையும் புதியனவற்றை ஏற்கின்ற தன்மையையும் கொண்டதாக அமைகின்றது. இந்த அம்சம் உங்கள் பிள்ளையில் மற்றவர்களைப் பணிவோடும் புரிந்துணர்வோடும் உபசரிப்பதோடு காழ்ப்புணர்வு அல்லது வன்மம், வன்முறை, பிடிவாதம், மக்களை அவர்களின் தன்மைகளின் அடிப்படையில் மதிப்பளித்தல் போன்றவற்றிற்கு மாறாக நிற்கம் தன்மையையும் இது வளர்க்கின்றது.

நடுநிலை என்பது நீதி, நியாயம், நேர்மை, பக்கச் சார்பின்மையாக ஏனையோரை உபசரிக்கும் அல்லது வரவேற்கும் தன்மையைக் கொண்டது. இத்தன்மை உங்கள் பிள்ளை மற்றவர்களை வேறுபாடற்று உபசரிக்கும், அல்லது அனுசரிக்கும் தன்மையைத் தருகின்றது. மற்றவர்கள் சொல்பவற்றைக் கேட்டல், பகிர்தல் போன்ற உணர்வுபூர்வமான உளப் பண்புகளை வளர்ப்பதாகும். உங்கள் பிள்ளை ஏனையவர்களுடன் விளையாடும்போது சாதி, சமய, இன, மொழி, தோற்றம், பால் போன்ற பாகுபாடுகளைக் கடந்து எல்லோரையும் ஒரு சேர மதிப்பளிக்கும் வகையில் நடந்துகொள்ளும் தன்மையை வளர்த்தல் முக்கியமானதாகும். இப்பணிக்கு குழந்தைகளிடம் இயல்பாகவே உள்ள இயல்பூக்கம் சீரியமுறையில் வழி நடத்தப்படவேண்டும். நல்லவற்றிற்கும், தீயவற்றிற்கும் இட்டுச்செல்லும் பாங்குடையது இயல்பூக்கம். அது மனவெழுச்சிக்கு அடிமையாவது. எண்ணங்கள், நடத்தைகளுக்குக் காரணமாக அமையும் இயல்பூக்கத்தை தீவிரமடைய வைப்பதோ அன்றி தவறான வழிக்கு இட்டுச்செல்லவைப்பதோ குழந்தையின் சூழலால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆகவே குழந்தைக்குரிய நல்ல சூழலை (Environment) ஆக்கித்தருவது பெற்றோரின் பாரிய கடனே.

உளவியலாளர்களால் ஆய்ந்து அறிந்து சொல்லப்பட்ட இவ்வித அம்சங்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர், பராமரிப்பாளர்கள் பிள்ளைகளின் உளத்தில் விதைத்தல் இன்றியமையாதது. பிள்ளையின் ஆரோக்கியமான உளவிருத்திக்கும்

நெறிபிறழாமல் வளர்வதற்கும் சரியான தடத்தில் நாம் அவர்களை வளர்த்தல் எம் கடனே.

புதிய பழக்க வழக்கங்களை நாம் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரும்போது அல்லது பயிற்றும் போது இவை நடத்தையோடு தொடர்புடைய மேலே சொல்லப்பட்ட ஏழு அம்சங்களோடும் பின்னிப் பிணைந்தன. இது நேரம், ஒப்படைத்தல் அல்லது ஈடுபாடு, பொறுமை என்பனவற்றை உள்ளடக்கியது. எடுத்த மாத்திரத்தே நாம் ஒன்றை பிள்ளையிடம் திணிக்க முற்படக்கூடாது. மிக அமைதியாக படிப்படியாக, பொறுமையோடு செயற்படுதல் அவசியமாகும். எமக்கு உள்ள வேலைப் பழுக்கள், அகப் புறக் காரணிகள், பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றினால் நாம் நாளாந்தம் எமது பொறுமையை இழந்து எம்மை அறியாமலே உணர்ச்சிவசப்படுவதும் அதன்பால் ஆத்திரம், காழ்ப்பு, கோபம் போன்ற உணர்வுகளுக்கு தெரிந்தோ தெரியாமலோ அடிமைப்படுகின்றோம் இது மனித சுபாவம் என்பது வளர்ந்தவர்களால் புரிந்து கொள்ளமுடியும் எனினும் குழந்தைகளால் அதனைப் புரிந்து கொள்ளமுடியுமா? அவர்களால் நீங்கள் இளைப்புற்றிருக்கிறீர்கள், களைப்புற்றிருக்கிறீர்கள், கோபத்தில் இருக்கிறீர்கள் என்பதை எல்லாம் உணர்ந்தா உங்களிடம் உரிமை கொண்டாட அல்லது தேவைகளை அணுக வருகிறார்கள். அவர்களிடம் நாம் எமது சினத்தைக்காட்ட முடியுமா? அதனால் அப்பிஞ்சு உள்ளங்களில் ஏற்படும் வடுவை ஆற்றமுடியுமா? அது நீண்டகாலத்தில் பிள்ளையின் நெறி பிறழ்விற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது என்பதனை நாம் நன்கு உணர்ந்து கொண்டுள்ளோமா? பிள்ளைகளின் எதிரிடையில் கணவன் மனைவி தகராறு, உரையாடல்கள், விமர்சனங்கள் எல்லாம் அவர்களின் உளத்தைப் பாதிக்கும் செயல்கள்தான். சொல்வதிலும் பார்க்க செயலில் காட்டுவதுதான் ஒரு குழந்தையின் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. எனவே நாம் குழந்தைகளை அணுகும்போது அவர்கள் நாம் சொல்வனவற்றிலும் பார்க்க எமது செயல்களிலேயே மிகுந்த ஈடுபாடும் கருசனையும் கொள்வார்கள். அவர்கள் ஒருவரைப்பார்த்து பாவனை செய்வதின் மூலம் தாம் என்னத்தைக் கற்றுக்கொள்கின்றார்கள் என்பதனை வெளிக்காட்டுகின்றார்கள். பார்பரா குளறோசோ என்னும் குழந்தை உளவியலாளர் ''நான் ஏன் இதனைச் செய்யக் கூடாது என்னும் வினாவை எழுப்பி அவற்றை நான்கு விடைகளையும் தந்து ஒரு வடிவத்தையும் தந்துள்ளார் 'பால் சார்ந்து ஆரோக்கியமான பிள்ளைகளை வளர்த்தல்' என்னும் நூலின் எழுத்தாளர் லின் லெயிற்''[5] என்று தனது கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டுகின்றார். இதன் வழி பணிவற்றது, துன்புறுத்தத்தக்கது, நியாயமற்றது அல்லது நடுநிலையற்றது, நேர்மைத் தன்மையற்றது என்னும் பண்புகளை அவர்கள் உணர்ந்து கொள்ள வைத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஒருசிலரை ஒதுக்கிவிட்டு மற்றவர்களை வரவேற் பணிவுத்தன்மையின் பாற்படாது. அவ்விதமே வீட்டில் உள்ள ஒரு செல்லப்பிராணியைத் துன்புறுத்தல் எடுத்துக்காட்டாக ஒரு நாயின்மீது வெந்நீரை ஊற்றுதல் அல்லது பூனையின் வாலைப்பிடித்து அதனைத் தூக்குதல் போன்றனவற்றை ஒரு பிள்ளை உணர்ந்து செய்தல், வளர்ந்த பிள்ளை ஒன்று இரண்டு வயதுப் பிள்ளை விளையாடும் பொம்மையைப் பறித்துச் செல்லுதல் நியாயமற்ற செய்கையாகும். ஒரு வளர்ந்த பிள்ளை நண்பர் ஒருவருக்காக ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதுவது அல்லது வேறு ஏதாவது செய்யத் தீர்மானிப்பது நேர்மைத்தனம் அற்றது. இத்தகைய பண்புகள் வளராமல் தடுப்பதற்கு நல்ல உரமிட்டு பண்படுத்தப்பட்ட நிலத்தில் வளரும் பயிர் போன்று காலத்தே அவர்களை நெறிப்படுத்த நிலம் பண்படுத்தப்படல் வேண்டும். உளம் என்னும் தன்மை பாதிப்படையாத வகையில் மட்டுமன்றி நல்லனவையும் சரியானவற்றையும் குழந்தைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஏழுவயதும், நான்கு வயதும் உள்ள இரு குழந்தைகள் உள்ள ஒரு வீட்டிற்கு சென்றபோது நான்கு வயதுடைய பிள்ளை கழிவுப் பொருட்களான பெட்டிகள், பத்திரிகைகள், பேப்பர் குளாய்கள் போன்றவற்றில் தனது புலனைச் செலுத்தி பல பொருட்களைத் தனது முயற்சியினால் செய்து வைத்துள்ளமை என்னை ஆச்சிரியத்திற்குள்ளாக்கியது. குசினிக்கு முன்பாக 'பேகர் கிங்' என எழுதி அதனை நன்கு அலங்கரித்து தனது குசினியின் சுவரில் ஒட்டி விட்டு முன்னுக்கு மேசையில் ஒரு பாசலுக்குள் பொருட்களை வைத்து பின்பண்ணி விட்டு அதனை பேகர் என எழுதியும் வைத்திருந்தார். அது மட்டுமன்றி ஏழு வயது நிரம்பிய சகோதரனுக்கும் இக் குழந்தைக்கும் வழங்கப்பட்ட காற்றாடியை செயற்பட வைப்பதற்காக மூத்தவர் கதவைத் திறந்து வெளியே சென்று அதனை சுவரோரமாக நின்று உயர்த்திப்பிடித்தார். ஆனால் இளையவரோ வீட்டினில் வரவேற்பறையில் சற்று உயரத்திலிருந்த குளிரூட்டித் துவாரத்தின் முன்பாகத் தனது காற்றாடியைப் பிடித்து அது வேகமாகச் சுழல்வதைச் சகோதரனுக்கும்

காட்டிப் பகிர்ந்து கொள்ளும் திறனைக் காணக்கூடியதாக இருந்தது. இவை பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களின் வெளிப்பாடே. இதில் நான் அவதானித்த சிறப்பு அம்சம் என்னவெனின் அவர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பாணியில் பெற்றோர் ஆதரவு தருகிறார்களே தவிர சுவர் பழுதாகிறது அல்லது குப்பைகளைப் போடுகிறார்கள் என்று அவர்களின் முயற்சிகளுக்குத் தடைஏதும் விதிக்காது ஒத்தாசை நல்குவதையும் அவதானிக்க முடிந்தது. எனவே உள்ளார்ந்த இத்திறன்களை வெளிக்கொண்டு வரும் பணிகளில் பெற்றோரின் பங்களிப்பு மிக மிக முக்கியம் வாய்ந்தது. எதனையும் தட்டிக் கொடுக்க வேண்டுமே யன்றி தடுக்கக் கூடாது. அவ்விதம் தடை செய்வதால் அவர்களின் மனமுறிவுக்குக் பொறுப்பை பெற்றோர் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக வரும் பொழுது அறுவடை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

பிள்ளைகளிடம் இயல்பாகவே உள்ள நுண்மதியினை தட்டி எழுப்பும் பணி பெற்றோர், ஆசிரியர், பாதுகாவலர், பராமரிப்பாளர் அனைவரிடமும் கையளிக்கப்பட்டுள்ள தெனினும் பெற்றோரே இதில் முதன்மையானவர்கள் என்பதனை அவர்கள் தட்டிக் கழிக்கமுடியாது. குழந்தைகளிடம் உள்ள ஆர்வம், ஆக்கத்திறன், கற்றல் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் அவர்களிடம் இயல்பாகவே அமைந்துள்ள நுண்மதி ஆற்றலை உறங்க விடாது விழிப்படைய வைத்தல் வேண்டும். ''பிள்ளைகள் கற்றல் பசியோடு உள்ளார்கள்''[6] இவற்றை நாம் ஒவ்வொருவரும் உணரந்து செயற்படுகின்றோமா என்பதனை எம்மைப் பார்த்தே கேட்கவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளளோம். இதையே கல்வி உளவியலாளர் அஸ்லி மொன்ரக்கு அவர்கள் 'பிள்ளைகள் உலகில் மிகக் கூடுதலான கற்றற்பசியோடு உள்ளவர்கள்' என்று குறிப்பிட்டுள்ளமையை நாம் கருத்திற்கொண்டு அவர்கள் கற்றுக்கொள்ள எம்மாலானவற்றைச் செய்து உதவுதல் எம்கடனே. பருவத்தே பயிர் செய்தல் சாலச் சிறந்தது இல்லையேல் அதன் விளைவை நாம் அறுவடை செய்யமுடியாது. மாறாக அவர்களின் உளத்தை விருத்தி செய்கின்ற பணியில் இருந்துதவறி வளர்ந்துவரும் அறிவியல் உலகிற்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாக மனமுறிவு ஏற்றபட்டு நெறிபிறழ நாமே வழிசமைப்பவர்களாக ஆவோம் என்பதனைக் கருத்தில் இருத்தி எமது குழந்தைகளின் எதிர்காலத்தை உத்தேசித்து அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியமான உளவியற் தேவைகளை நாம் நிவர்த்தி செய்ய ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுதல் அத்தியாவசியமானதும் அவசியமானதும் கூட என்பதனை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பாடசாலைகளிலும் உங்கள் பிள்ளைகள் வெற்றிபெற உழைக்கவேண்டிய பாரிய பணி பெற்றோர்களிடமே உள்ளது. ''ஆசிரியர்களை அடிக்கடி சந்தித்தல் கூடிய பயனை அளிக்கும்''[7] என ஐ. யோன் காஷன் அவர்கள் குறிப்பிடுவது கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். பிள்ளையைப் பெறுவதற்கு முன்னர் பிள்ளை கருவுற்றதிலிருந்து வளர்ந்து ஆளாகும் வரை நாம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய அறிவு நம் அனைவருக்கும் இன்றியமையாதது. எனவே ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் மெய்பொருள்காண்பது அறிவு'' என்னும் முதுமொழிக்கேற்ப ஆலோசனைகள் வழங்கக்கூடியவர்களிடம் எல்லாம் அவற்றைப்பெற்று பிள்ளைகளை, எமது எதிர்காலச் சமுதாயத்தை நல்ல முறையில் வளர்த்து வழிகாட்டவேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்களிடமே உண்டு. ''எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் கெட்டவர் ஆவதும் . . . '' என்ற கண்ணதாசனின் பாடலின் அர்த்தத்தைப் புரிந்து அதன்வழி பிள்ளைகளை நெறிபிறழாத வழி தவறாத பிள்ளைகளாக ஆக்கி நாட்டின் நற்பிரசைகளாக வளர்த்தல் பெற்றோரின் தலையாய கடனே. பிள்ளைகள் விடும் தவறுகளுக்குப் பெற்றோரே தண்டனை பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட பிள்ளைகள் தான் காரணர்கள் அல்ல பெற்றோரும் பங்கேற்க வேண்டியவர்களே என்பதில் பொதிந்துள்ள உண்மையை உணர்ந்து செயற்படவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

''ஊர்ந்து செல்லும் ஆமையைக்கூடப் பாய்ந்து செல்லும் புரவிகள் பூட்டிய வண்டியில் வைத்தால் அது போய்ச்சேர வேண்டிய இடத்திற்கு விரைவாகவும் எளிதாகவும் போய்ச் சேர்ந்துவிடும்''[9] என திரு. அ.பொ.செல்லையா அவர்கள் குறிப்பிட்டது போன்று அமைதியாக ஊர்ந்துசெல்கின்ற குழந்தைகளை அவர்கள் போய்ச்சேர வேண்டிய இடத்திற்கு அனுப்பிவைப்பதில் குதிரையாகவும், வண்டியாகவும் செயற்படவேண்டியவர்கள் பெற்றோரும் ஆசிரியர்களுமே. எனவே குழந்தைகளின் இயல்புகள், தன்மைகள், விருப்பு வெறுப்புக்கள் என்பனவற்றை அறிந்து அதற்கேற்ப அவர்களை இட்டுச் செல்ல வேண்டும். அதற்காக எனது பிள்ளை

எல்லாவற்றிலும் முன் நிற்கவேண்டும் என்பதோ அல்லது இந்தத் துறையில்தான் துலங்கவேண்டும் என்றோ எதிர்பார்த்து அவர்களால் முடியாத சுமைகளைச் சுமக்க வைப்பதனால் சுமை அதிகரித்தால் கொள்கலம், அல்லது கொண்டு செல்லும் வண்டி உடைந்து சிதறுண்டு போகும் என்பதனையும் நாம் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். நாம் பிள்ளைகளுக்கு எதனையும் வலிந்து திணித்தல் கூடாது அது நன்மைதருவதை விடத் தீமையே விளைக்கும் என்பதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

தாய்மொழிக் கல்வி பிள்ளைக்கு மிக அவசியம் என்பதனையும் இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. தாய்மொழி என்பதில் இன்று புலம் பெயர்ந்த நாட்டில் உள்ளவர்கள் மத்தியில் வித்தியாசமான கருத்துக்கள் கொள்ளப்படுகின்றன. குழந்தை கருவுற்றதில் இருந்து அது தனது பெற்றோருடன் அளவளாவும் மொழி அவர்களது தாய்மொழி என்று பொதுவாகக் கொள்ளப்படுகின்றது.

''புகுந்த நாட்டின் பாடசாலையில் வெற்றிகரமாகப் புலம் பெயர்ந்தோர் ஒன்றிணைவதற்கு விசேடமான கல்வி அளவீடுகள் தேவை என்பதனை ஒருவரும் மறுக்க முடியாது. அண்மைக் காலங்களில் ஒரு பிள்ளையின் ஆளுமையின் முக்கிய அம்சம் தாய்மொழியே என்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது அவனின் மனவளர்ச்சிக்கும், புதிய சூழ்நிலையில் அவன் ஒன்றிணைவதற்கும் மிக முக்கியமானதொன்றாகும்' என ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் என்னும் பாரிய அமைப்பு தனது அங்கத்தவ நாடுகளில் வந்து குடியேறியுள்ளவர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழிகளைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும் என ஒரு தீர்மானத்தை 1978 இல் நிறைவேற்றியது. இக்கருத்தினை நாம் சற்றுக் நிதானத்துடன் கருத்திற்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். தாய்மொழியையோ அல்ல வேறு ஒரு மொழியையோ இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாகக் கற்றுக்கொள்ளும் பிள்ளை தான் கற்கும் சூழலில் ஆங்கிலத்திலோ அன்றி பிரஞ்சிலோ பின்னடைவைக் கண்டுள்ளது என்பதற்கு மாறாக அவ்விதம் தமது தாய்மொழியை வீட்டில் பேசி அல்லது கற்று வரும் பிள்ளைகள் சிறந்த மொழி ஆற்றலுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதனைப் பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இலக்கணத் தவறற்றதாகவும் நல் வசன அமைப்புக்களையும் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் வளர்த்துக் கொள்கின்றார்கள் என்பது உண்மை. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாத எமது பெற்றோர் தமிழைக் கற்பதால் குழந்தை ஆங்கிலத்தை மறந்துவிடும் அல்லது ஆங்கிலத்தை முழுமையாகக் கற்றுக் கொள்ளாது அல்லது குழப்பமடையும் என நினைந்து தமிழைத் தமது பிள்ளைகளுக்குக் கற்றுத்தராது விடும் பெற்றோரின் அறிவீனத்தை என்ன என்பது. ஒரு பிள்ளையின் அறிவாற்றல் விருத்திக்கு தாய்மொழிக்கல்வி சாலச் சிறந்தது என்பது கல்வி உளவியலாளர்களது துணிபு. அவற்றை அறிந்து நாமும் அதன்வழி நின்று எம் குழந்தைகளின் எதிர்காலத்தை மலர்விக்க நாம் முன்வரவேண்டும்.

---

[1] Thomas Armstrong, Ph.D, *Awakening Your Child's Natural Genius: Enhancing Curiocity, Creativity, and Learning Abilily,* Jeremy P. Tarcher, Inc. Los Angeles. 1991

[2] Michele Borba, Ed.D. Building Moral Intelligence, Jossey-Bass A wiley company, San Francisco, 2001.

3 Grace J. Craig, Humn Development Prentice Hall, Englewood Clffs, New Jersey, 1992

4 Dr. Morton Baiesser, Speech, Vasantham –Annual General Meeting, Toronto, 2002

5 Michele Borba,Ed.D. *Building Moral Intelligence*, Jossey-Bass A wiley company, San Francisco, 2001

6 Barbara Clooroso, *Kids are woth it: Giving your Child the Gift of Inner Discipline,* Somerville Publishing, 1994.

7 Paul Eggen (University of North Florida) & Don Kauchak (University fo Utah), *Educational Psychology: Classroom Connections*, Macmillan College Publishing, 1994.

8 I.John Gasson, *Helping Your Child Succeed At School*, Wawic Publising, Toronto Los Angeles, 1995.

9 அ.பொ.செல்லையா, *'கல்விபற்றிச் சிந்திப்போம் செயற்படுவோம்'* திருக்கணித அச்சகம், சாவகச்சேரி 1993

# UNITY - A - AUTOMOTIVE AND BODY SHOP

- Auto Collision Repairs
- Body Works
- Painting
- Insurance Claims
- Windshield Glass
- Under Coating
- Rust Proof

**Free Estimate**

- **Computerized Examinations and Repairs**
- **Mechanical & Electrical Works**
- **Computerized 4 Wheel Alignment**
- **Interior & Exterior Shampooing**
- **Muffler & Exhaust Specialists Pipe Bending & Welding**
- **New tire sales, Installation and Wheel Balancing**
- **Fuel injection Service & Tune-up**
- **Safety Inspection & Certification**
- **Suspension and Transmission**
- **Interior and Motor Shampoo**
- **Oil Change (Castrol GTX)**

ONTARIO'S DRIVE CLEAN

Call: Ram

Tel: (416) 285-8956

73 Howden Road, Scarborough, Ontario, M1R 3C7


(Lawrence & Birchmount – Near to Collision Reporting Centre)

NEW

# BANANA LEAF CATERING

**TAKE OUT SERVICES**

New Banana Leaf FOOD



*CATERERS OF EXOTIC ASIAN AND ORIENTAL CUISINE SPICES. RICE. FLOUR ETC.*

**WE SPECIALIZE IN INDIAN, SRI LANKAN AND CHINESE FOODS**

## VEGITARIAN & NON-VEGITERIAN

**Weddings, Birthdays, Family Parties and Special Events**



திருமணம் பிறந்ததினம் மற்றும் சகல வைபவங்களுக்கும் தரமான சுவையான உணவு வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்

100 பேர்களுக்கு மேல் கொள்ளக்கூடிய மண்டபம் வாடகைக்கு உண்டு

**431 Nugget Avenue #10**
Scarborough, Ontario
M1S 4J5

**RUBAN**

**Office: (416) 609-9247**
Pager: (416) 600-1030
Cellular: (416) 704 8208

# அளம்விலும் அந்தோனியார் ஆலயமும்

எப்.ஏ. அமலதாஸ்
பணிக்கர் வம்சம் அளம்வில்

முல்லை மாவட்டத்தின் பழைமைவாய்ந்த ஆலயங்களாக அளம்வில் சந்த அந்தோனியார் ஆலயம், மாத்தளன் மாதாகோயில், வலைஞர்மடம் மாதாகோயில் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயம் ஆகியன விளங்குகின்றன. அவற்றுள் எமது புனித சந்த அந்தோனியார் ஆலயமானது இலங்கைத் தீவிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. அத்தோடு அளம்வில் கிராமத்தில் வாழகின்ற மக்கள் அனைவருமே கிறீஸ்தவர்களாகவும் புனித அந்தோனியாரின் பக்தர்களாகவும் வாழ்வது இங்கே குறிப்பிடத்தக்கது.

அளம்வில் சந்த அந்தோனியாரின் பக்தர்கள் முற்காலத்திலே ஏறக்குறைய அனுராதபுர ராசதானியின் ஆட்சியின்போது இந்தியாவின் ஆர்க்காடு மாவட்டம், கேரளம் போன்ற பகுதிகளில் இருந்து யாழ் வடமராட்சியில் உள்ள கற்கோவளம் என்ற கிராமத்தில் கால்பதித்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் சந்ததி கடல் கடந்து திரவியம் தேடும் பெரும் டிங்கி பாய்க்கப்பல் உரிமையாளர்கள், அதி சிறந்த நுண்ணிய வைத்தியர்கள், பணிக்கர்கள் என்ற பிரிவினர்கள் இருந்தனர். இவர்கள் எல்லோருமே தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாவர்.

இவர்களில் பணிக்கர்கள் ஆழியாவளை, செம்பியன்பற்று ஊடாக மாத்தளன், அளம்வில் போன்ற கிராமங்களில் குடியேறினார்கள். ஒரு பக்கம் உப்பளமும் மறுபக்கம் வில்லுக் குளமுமாக இருந்ததனால்தான் இக்கிராமத்திற்கு அளம்வில் என்ற காரணப் பெயர் ஏற்படலாயிற்று. நாளடைவில் அப்பெயர் மருவிச்சென்று அளம்பில் என அழைக்கப்பட்டு வருகின்றது.

இப் பிரதேசத்தில் உள்ள பதிவான நிலப் பகுதிகளில் காணப்பட்ட நீர்க்கிடங்குகளைப் பயன்படுத்தியும் பொறிக் கிடங்குகளை வெட்டியும் பழகிய யானைகளைக் கொண்டு கால் கண்ணிவைத்தும் யானைகளைப் பிடித்து பந்திகளில் அடைத்து ஒரு முழம் இரண்டு பவுன் என்ற வீதத்தில் கண்டி அரசனுக்கும் ஏனைய அரசர்களுக்கும் விற்றுத் தமது வருமானத்தைப் பெருக்கிப் பெரும் செல்வந்தர்களாகச் செழிப்புடன் வாழ்ந்தார்கள்.

பணிக்கர்களின் தலைவர்களை “மொத்தக்கர்” என அழைத்தனர். இவர்கள் தென்னமரவடி, ஆண்டான்குளம், கல்மடு, முள்ளிவாய்க்கால், ஆலங்குளம் போன்ற பிரதேசங்களில் பிரபுக்களாகவும், அரசசபை அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் முருகபக்தியுள்ள பழமைவாய்ந்த இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தினைச் சின்ன வன்னியன் காலம் எனக் குறிப்பிடலாம்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவுப் பிரதேசத்தையும் அதை அண்டிய பகுதிகளிலும் நீர்நிலைகள் உள்ள தாழ்ந்த நிலப்பகுதிகளைக் கொண்ட காட்டுப் பிரதேசங்களில் 13 முழமுள்ள இராசயானைகள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களும் உள்ளன.

போத்துக்கேயருடைய ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் இந்தியாவின் கோவையில் இருந்து துறவறக்குருக்கள் ஈழத்தில் உள்ள மாதகல், பருத்தித்துறை, மாத்தளன், அளம்வில் போன்ற கிராமங்களுக்கு மரக்கலங்கள் மூலம் (சிறு பாய்க் கப்பல்) வந்து இறங்கினர். பின்பு இவர்கள் அப்பகுதியை அண்டிய கிராமங்களில் சத்திய வேதத்தினைப் போதிக்க ஆரம்பித்தனர்.

இலங்கைத் தீவின் கிளக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலைக்குக் கோவைக் குருக்கள் செல்வதற்கு அளம்விலில் இருந்து கால்நடையாகவே சென்றுள்ளார். இவர்களது வளிப்பாதை அளம்வில் வாடிவீடு, சின்ன இறக்கம், உலத்துவெளி, கோட்டகக்கேணி, சகலாத்துவெளி, தென்னமரவடி, அமரிவயல், தனிக்கல், திரியாய் என்னும் கிராமங்களாக இருந்தன.

..ச்சுக் கவணர் ஒருவர் வடமாகாணத்தில் இருந்து திருமலை செல்லவந்த சமயம் அளம்வில் வாடிவீட்டில் தங்கிச் சென்றுள்ளார். அவர் அளம்வில் கிராமத்தில் தண்ணீர் மிகவும் சுவையானது எனவும் தனது குறிப்பேட்டில் எழுதியுள்ளார். இவ் வாசகம் இன்றும் கொழும்பு தொல்பொருள் காட்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருமலைக்குச் செல்வதற்காக வருகைதரும் குருக்கள்மார் அனைவரும் அளம்விலில் தங்கித் திருப்பலி கொடுப்பது வழக்கம். ஆனால் பழைமையான முருகபக்தி உள்ள இந்து மக்கள் இவற்றினைப் பெரிதுபடுத்துவதில்லை. அவர்களுகளுக்கு இடையூறும் செய்வதுமில்லை. இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் கோவைக் குருக்கள் ஒருவர் திருப்பலி நிறைவேற்றும்போது பணிக்க வம்சத்தில் பிள்ளைப் பாக்கியம் இல்லாததனால் கௌரவக்குறைவும் தலைமை இழக்கும் மனவேதனையும் விரக்தியும் அடைந்த மொத்தக்க ஆரியப்பணிக்கர் இக் குருவினைச் சந்தித்து தனது மனவேதனையையும் மனக்குமுறலையும் வெளிப்படுத்தினார். குருவானவர் மொத்தக்கருக்கு ஆறுதல் வாத்தைகள் குாறி அரவணைத்து ஆசீர்வதித்து மறுமுறை நான் வரும்போது நீ மகவுடன் இருப்பாய்யென வாய்மொழிந்தார். காலங்கள் ஓடின. அன்றிலிருந்து ஒன்பதாம் மாதம் மொத்தக்க ஆரியருக்கும் அவரது மனைவிக்கும் இறையருளால் ஓர் ஆண்மகவு கிடைக்கப் பெற்றது.

பிறிதொருதடவை திருமலை செல்வதற்காக குரு நேரடியாக அளம்வில் கடற்கரையில் வந்து இறங்கினார். இதையறிந்த ஆரியர் குடும்பம் அவரது வாடிவீட்டை அண்மித்து மிகுந்த பணிவுடனும் தாழ்சியுடனும் அவரை வணங்கி அவரின் ஆசீர்வாதத்தினைப் பெற்றதுடன், அவருக்கு வெகுமதிப் பொருட்களையும் காணிக்கையாக்கினர். குருவானவரிடம் தங்களது மகவினைக் கிறீஸ்த்தவ வேதத்தில் சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அவர்களது வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட குருவானவர் மறுநாள் குழந்தைக்கு திருமுழுக்களித்து அந்தோனிப் பணிக்கர் என நாமமும் சூட்டினார். இதை அவ்வூர் மக்கள் பலரும் பார்த்திருந்தனர். இதன் பின்னர் அவ்வூரைச் சேர்ந்த பலரும் சத்திய வேதத்தில் சேர்ந்து கொண்டார்கள். மொத்தக்க ஆரியர் ஏழு நாட்களில் புனித அந்தோனியார் பெயரில் ஓர் ஓலை குடிசைகட்டி அதற்கு அபிசேகம் செய்யுமாறு குருவைக் கேட்டுக் கொண்டார். அதன்பிரகாரமே குருவும் அக்கடமையினை நிறைவேற்றினார்.

பெயரளவில் சத்திய வேத புனித அந்தோனியார் ஆலயமாக இருந்தாலும் தமிழ் இந்துக்களின் முறைப்படியாக பொங்குதல், கற்பூரம் கொழுத்துதல், நேர்த்திக்கு அப்பம் கொடுத்தல், இறைக் கட்டுதல், நேர்த்தி வைத்தல் ஆகிய நடைமுறைகளும் காணப்படுகின்றன. அது மாத்திரமின்றி மக்கள் வரம்கேட்டு அதில் பலனும் அடைந்து கொண்டார்கள். தொலைந்த பொருட்களை நேர்த்திமூலமாகப் பெற்றுக் கொள்ளவும் நோய் பிணி நீங்கவும் அருள்பாலித்து அற்புதங்கள் நிறைந்த கோவிலாக மாறிப் பிரபல்யம் பெற்றது. இக் கேவிலில் திருவிழா வரும்போது இலங்கை அரசாங்கமானது வர்த்தகமானிப் பிரசுரம் செய்து அதனை விளம்பரப்படுத்துகின்றது.

போத்துக்கேயரின் ஆட்சி முடிவடைந்து ஒல்லாந்தர் ஆட்சி நடாத்திய காலத்தில் முல்லைத்தீவுப் பகுதிக்கு வருகைதந்த ஆட்சியாளர்களும் அவர்களது படைப் பிரிவினரும் அங்கிருந்த சகல கோவில்களையும் அழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இவற்றுள் முக்கியமாக முள்ளியவளை இராசதானி, குமாரபுரம் முருகன் கோவில், வற்றாப்பளை அம்மன் கோவில், வலைஞர்மடம் மாதாகோவில், அளம்வில் புனித அந்தோனியார் கோவில் ஆகியன முக்கியமாக அடங்கும். இங்கு குறிப்பிடத்தக்கது யாதொனில் அளம்வில் அந்தோனியார் ஆலயத்தில் உள்ள திருச்சுருபமானது எதுவித சேதமுமின்றி எரியாமல் இருந்தது. இச்சுருபமானது இந்தியாவின் கோவையில் இருந்து இங்கு கொண்டுவரப்பட்டதாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கிறீஸ்த்தவராக குருமார்கள் இயங்கமுடியாது தடைவிதிக்கப்பட்டது. அதே நேரத்தில் அவர்கள் நாடுகடத்தவும் பட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகளின் பிற்பாடு கிறீஸ்த்தவ வேதத்தின் முன்னேற்றமானது குன்றிக்கொண்டே சென்றது. சில காலங்கள் கழித்து கோவைக் குருமார்ளில் ஒருவரான யோசுவாஸ் முனிவர் அவர்கள் மாறுவேடத்தில் முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு வந்து திருப்பலி ஒப்புக் கொடுத்துமுள்ளார்கள். கோவில்களில் பழையமுறைப்படி நடைபெற்றுவந்த வழிபாட்டு

முறைகளையும் மாற்றி அமைத்தார்கள் என்று நாட்குறிபேடுகள் காட்டுகின்றன.

அளம்வில் கிராம மக்கள் தமக்கு நோய்கள் ஏற்படும்போது கோவில் கிணற்றில் குளிப்பாட்டுதல், கோவில் காவல் எனக் கோவிலில் இருத்தல், உபவாசம் இருத்தல் போன்றவற்றினைச் செய்வார்கள். அந்தோனியாரது அதிசயங்களில் ஒன்றாக வெள்ளைக் குதிரையில் அந்தோனியார் வருவது போன்றும், காவலாளிகள் கறுப்புக் குதிரையில் வருவது போன்றும் தென்பட்டதாக கோவிலில் காவல் இருந்த மக்கள் குறிய கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு.

முற்காலத்திலே புதுக்குடியிருப்பு, மாத்தளன், முள்ளிவாய்க்கால் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வண்டில் கட்டி கோவில் திருவிழாத் தொடங்கமுன்னர் வருவார்கள். இவர்கள் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் கோவில் பணிகள் செய்வதில் ஈடுபடுவார்கள். காலப்போக்கில் இவ்வாலயம் ஓர் யாத்திரிகைத் தலமாக மாறியது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் முடிவுற்று ஆங்கிலேயரது ஆட்சிக்காலம் தொடங்கியதும் சகல கோவில்களும் புத்துயிர் பெற்றன. சமயப்பாகுபாடுகள் ஓரளவு நீங்கியது. கிறீஸ்த்தவ குருமார்களுக்கு சமய போதனையின் பொருட்டு அனுமதிகள் வழங்கப்பட்டது. யாழ் மேற்றாசனமும் உருவாக்கப்பட்டது. ஓலைகளால் வேயப்பட்ட கோவில்கள் அனைத்தும் பெரிய அளவில் கட்டியெழுப்பப்பட்டது.

1900ம் ஆண்டின் பின்னர் படிப்படியாக எல்லாக் கோவில்களும் வளர்ச்சி பெறத்தொடங்கியது. பிற்பட்ட காலங்களில் வென்னப்பு, கட்டுநேரி, நீர்கொழும்பு போன்ற இடங்களில் இருந்து மீன்பிடித் தொழிலுக்காக வந்த பரவ சிங்களச் சமூகத்தவர்களும் ஊர் மக்களோடு இணைந்து கோவில் கட்டுமானப் பணிக்காக மனமுவந்து நிதியுதவி செய்து கோவிலைக் கட்டினார்கள். 1940ம் ஆண்டளவில் இக்கோவிலானது புதுப் பொலிவுடன் கம்பீரமாக் காட்சி தந்தது.

1984ம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இக்கிராம மக்கள் முதலாவதாக இடம்பெயர ஆரம்பித்தார்கள். பின்னர் 1987ம் ஆண்டில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட மோதல்களால் இந்திய இராணுவத்தின் விசேட படைப்பிரிவு அளம்விலில் நிலைகொண்டு பாரிய அழிவுகளை ஏற்படுத்தியது.

இதன் பின்னர் 1990ம் ஆண்டு தொடங்கிய இரண்டாங்கட்ட ஈழப்போர்க் காலத்தில் சிறீலங்கா அரசாங்கம் அளம்விலையும் அதனை அண்டிய கிராமங்களையும் விமாகக் குண்டுகளினால் மோசமாகத் தாக்கி அழித்தது. இத்தகைய விமானத் தாக்குதலும் செல்தாக்குதலும் ஏறக்குறைய ஒன்பது மாதகாலம் இடம்பெற்றது. இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் 42 விமாக்குண்டுகள் அளம்வில் பிரதேசத்தில் வீசப்பட்டது என்பதாகும். இதன்காரணமாக முல்லைத்தீவு பங்குக் குருவானவர் குழாமுறிப்புக்கு இடம்மாறி இருக்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டது. அவ்வாறாக அவர் அங்கு இருக்குங்காலை அந்தோனியார் அவரது கனவில் தோன்றி என்னைமட்டும் தனியாக விட்டுச் சென்றுவிட்டாயே எனத் தெரிவித்தாராம். மறுநாளே குருவானவர் அளம்வில் கோவிலுக்குச் சென்று அந்தோனியார் திருச்சுரூபத்தையும் வேறும் சில பொருட்களையும் எடுத்துச் சென்றார்.

மறு நாள் காலையும் வழமைபோல் அளம்வில் கிராமத்தில் குண்டு போடப்பட்டது. அதில் ஓர் குண்டு கோவிலின் முன்பக்கமாக விழுந்து வெடித்ததனால் கட்டிடத் தொகுதியின் பெரும்பகுதி அழிவுக்கு உட்பட்டது. அதன் பின்னர் இவ்வாறாக் குண்டுத்தாக்குதலை நடாத்திய விமானி உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்தார் என அறியக்கிடக்கின்றது. ஏழு மாதகாலங்களின் பின்னர் இலங்கை இராணுவத்தினர் அளம்விலைவிட்டு வெளியேறிய பின்னர் அதாவது 1992ம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் அங்கு படிப்படியாகக் குடியேறத் தொடங்கினர். இருப்பினும் மக்கள் பூசைகள் அற்ற கோவில் ஒன்றுடனேயே வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

1999ம் ஆண்டில் முல்லைத்தீவுப்பிரதேச பங்குக் குருவாக தவராஜசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். அதன் பின்னர் இவ்வாலயம் படிப்படியாக முன்னேறத் தொடங்கியது. ஆலயமும் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டது. புனித அந்தோனியார் சுரூபம் குழாமுறிப்பில் இருந்து கொண்டுவரப்பட்டு குாட்டில் வைக்கப்பட்டது. இவ்வருடம் அதாவது 2002ம் ஆண்டிலும் இக்கோவிலின் திருவிழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

கனேடிய தமிழ் வானொலி
CANADIAN THAMIL RADIO (CTR)

24
மணிநேர தமிழ் ஒலிபரப்பு

ஆரோக்கியமான நிகழ்ச்சிகள்
ஆழமான சிந்தனைகள்
நாகரீகமான நடப்புகள்

பிரியமுள்ள
கலாதரன்

| | |
|---|---|
| வரவேற்பாளர்: | (416) 264-8798 |
| செய்திப் பதிவு: | (416) 264-0655 |
| நிகழ்ச்சிப் பங்கேற்பு: | (416) 264-0699 |
| தொலைநகல்: | (416) 264-9500 |

மண்ணையும்
மனங்களையும்
நேசிப்போம்!

# Sunflowers furniture




**Annual Summer Sale!**

**Apply Today to Receive Sunflowers Store Credit Card and get**

**3 MONTHS INTEREST FREE**

# All Brand Names Mattress 50% Off



## Two Great Locations to Serve You Better

**Toronto**
**3024 Kennedy Road**
**(416) 609-8556**


**Mississauga**
**1225 Dundas Street E.**
**(905) 270-5422**

**www.sunflowersfurniture.com**

# Tuxedo Grocery

Specialize in
Sri Lankan, East-West Indian &
Canadian Groceries

Fresh Meat, Fish & Vegetable



5 வருடங்களைக்
கடந்து..
மிகவும் மலிவு
விலையில்...

**42 Tuxedo Court**
**Scarborough, Ontario, M1G 3S3**
**(Markham & Ellesmere)**

# Tel: (416) 438-1299

**Surendran**

# காத்திருப்பு..

நீ--
பிரிந்து போனபின்பு
காலங்கள் கடந்து
கவலைகள் நிறைந்து
இறந்து போகத்தான்
இந்த
இடத்திற்கு வருகிறேன்
அதோ--
ஒற்றை ரோஜாவுடன்------

நாங்கள் இருந்த இடம்
நீ மறந்த இடம்
என்னை
இறந்து போகவிடவில்லை.

தேன் பருகிப் பறந்த வண்டு
பூ மலர்ந்ததைப் பார்க்க
திரும்பிவரப் போவதில்லை
என்பது எனக்குத் தெரியும்
இருந்தும்
நீ வருவாய் எனநினைத்து
உயிரைச் சுமந்து
உனக்காகக்
காத்திருந்து கரைகிறேன்------

ஞாபகமிருக்கிறதா---------?
உன்னைச் சந்திக்க
வரும்போது
ஒரே ஒரு
ஒற்றை ரோஜாவுடன்
வருவேனே
அந்தச் சிவப்பு ரோஜா
இன்னும் என்னுடன்தான்!

நீ எங்கே
இன்னுமொரு ரோஜாவுக்காக
இப்போது காத்திருக்கிறாய்-?
என்று நான் கேட்கமாட்டேன்
இன்னும் நான்
உனைக் காதலிக்கிறேன்
உனககாக
அதே ரோஜாவுடனும்
அதே நினைவுகளுடனும்
காத்திருக்கிறேன்---------

இந்த வெளியில் இருந்து
எங்கள் எதிர்காலம் பற்றி
எத்தனை கனவுகளைச்
சுமந்திருப்போம்
ஆசை விதைகளை
என்னுள் விதைத்துவிட்டு
பாசவலை அறுத்துப்
போனவன்தானே
நீ!

நான்
உனக்காகச் சுமந்துவரும்
அந்த ரோஜாவை
ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு
என் இதழ்களை ரசிக்கும்
பெறுமதியான
பொழுதுகளைக் கூட
மறந்துவிட்டாயா------?

புகையிரதம் வந்துபோக
புழுதி பறக்கும்
அப்போது
எனக்கு மறைப்பாக
உன் உயிரை விரிப்பாயே
அந்த
உணர்வுகளைக் கூடவா
துறந்துவிட்டாய்----?

இந்த வெள்ளை மணலில்
எனக்காகக் காத்திருக்கும்
கணங்கள் எல்லாம்
சொர்க்கத்துச் சுகங்கள் என
சொல்லிச் சிலிர்ப்பாய்
காத்திருக்கிறேன்---------
என் இதயம் எரிகிறது
சுடுகாட்டுத் தணல்போல.

இன்று வருவாய்----------
நாளை வருவாய்---------
காத்திருந்தே
கரைந்து கொண்டிருக்கின்றேன்
நீ--
என்று வருவாய்----?

இந்த வெளியில் இருந்து
மணல் அளைந்து
நாம்---
பேசிய வசனங்களும்
பேசாத மௌனங்களும்
எத்தனை------- எத்தனை-------

உன்---
கைவிரல் பதிந்த வெண்மணல்
என் கால்பட்டு
கசங்கிவிடக் கூடாது என்பதில்
கவனமாய் இருக்கிறேன்--------

மணலில் இருக்கும்
உன் விரல் ரேகைகளைப்
பாதுகாக்க நினைத்துப்
பாதியிலே என் பயனங்களைத்
தொலைத்துமிருக்கிறேன்.

காற்றடித்தால் வலித்துவிடும்
உன்---
கைரேகைக்கு என்று சொல்லி
காற்றைக் கூட
நிறுத்தி வைத்திருக்கிறேன்-------

எங்கள்
உறவுக்குத் துணைநின்ற
இந்த மணல் வெளியில்
நாம் உட்கார்ந்து பேசிய
பச்சை மரங்களின்
முகங்களைப் பார்!
அவை என்
உணர்வுகள் துடிக்கும்
நிலை கண்டு
தம் உயிர்களைத்
துறந்து விட்டன.

கால் புதைய
கனதூரம் நடந்திருப்போம்
கதைத்துக் களைத்திருப்போம்
அந்த
நிமிடங்கள் கூடவா
நினைவில் இல்லை----------?

நான் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்
உன் நினைவுகளுடன்
இருந்தும்
கண்ணீரைக் கூட
கட்டுப்படுத்திக் கொண்டு---------
நீ தொட்ட இடத்தில்
ஒட்டியிருக்கும் உன்
கைரேகை
கரைந்துவிடக் கூடாது
என்பதற்காக--------- நீ
என்னைத் தேடிவரும் அந்த
இறுதி நிமிடம்வரைக்கும்!

*ப. பத்மஜோதி*
*வவுனியா.*

**Eswaran Take Out**

**ஈஸ்வரன் ரேக் அவுட்**
**அன்ட் கேற்ரறிங்**



சுவையான சுத்தமான
இலங்கை, தென்னிந்திய சைவ,
அசைவ உணவு வகைகள் பல
வருட அனுபவம்
வாய்தவர்களினால்
தயாரிக்கப்படுகின்றது.

நீங்களே வந்து வேண்டிச்
செல்லலாம் அல்லது உங்கள்
விழாக்கள் வைபவங்களுக்கு
உங்கள் ஆர்டரின்பேரில்
சுவையான உணவு வகைகள்
வினியோகம் செய்யப்படும்.

105 Kennedy Road South Unit # 8
Brampton, Ontario

Tel: (905) 452-7607

39354

**and Catering**

# கண்ணகி வழிபாடு

## அறிந்த வரலாற்றில் அறியப்படாத பாகங்கள்

*திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்* B.A (Hons)

இலங்கை வரலாற்றில் எத்தனையோ வழிபாடுகள் இருந்திருக்கின்றன. ஆயினும் புத்தர் வழிபாட்டிற்கு முந்தியது இந்து சமய வணக்கமாகும். அதில் ஒரு பகுதியாகக் கண்ணகி வழிபாடும் இணைந்து கொண்டது. இந்த வழிபாடு சிலப்பதிகாரத்துடன் சம்பந்தப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இலங்கைக் கயவாகு வேந்தன் கலந்து கொண்டதாகவும் அந்த மன்னன் சிங்கள மன்னனே என்றும் அம் மன்னன் கண்ணகி வழிபாட்டினைச் சிங்கள மக்களிடம் புகுத்தியதாகவும் காட்டப்படுகின்றது.

மூன்று முக்கியமான விடயங்களை நிலைநாட்டும் முகமாக இளங்கோ அடிகளால் உண்டாக்கப்பட்ட காப்பியமே சிலப்பதிகாரமாகும். அவையாவன:

1) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

2) பத்தினிப் பெண்டிரை வானோரும் ஏத்துவர்.

3) ஊழ்வினை திரும்பி வரும்.

இழங்கோ அடிகளார் "நாட்டுவோம் ஒரு பாடுடைச்செய்யுள்" எனத் தன்னடக்கமாகப் பேசுவதால் இக்காவியம் கற்பனையே என்பதைச் சொல்லியுள்ளார். ஔவையார் தனது தனிப்பாடல் ஒன்றில் சங்கத்தமிழ் மூன்றும் தா எனப் பாடுகின்றார். இப்பாடலின் மூலமாக ஔவைக் கிழவி ஒரு வரலாற்றுச் செய்தியினை விட்டுச் சென்றிருக்கின்றார். அது யாதெனில் ஔவையாராகிய நான் சங்ககாலத்தைச் சேர்ந்தவர் அல்ல என்பதுவேயாகும். சங்ககாலத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்க் கிழவி சங்கத்தமிழ் மூன்றும் தா எனப் பாடுவது பொருத்தம் உடையதாகத் தெரியவில்லை.

'வல்வில் ஓரி' என்பது ஒரு தமிழ்க் கவிதை வரியாகும். ஓரி என்னும் அரசனைச் சிறப்பிக்கப் பாடப்பட்டது. இந்த இடத்தில் ஸ்ரீராமரைச் சொல்வது கூடப் பொருத்தம் குன்றியுள்ளது. ஏனெனில் பெண்களுக்குக் கூட வில் எடுத்து எய்தியமையால் அவருக்கு அந்த ஆளுமை அற்றுப் போகின்றது. இவை குறிப்பால் உணரப்படும் செய்திகளாகும்.

### வரலாற்றுச் செய்திகள்.

வரலாறு வேறு, வரலாற்றையும் இன்னோரன்ன செய்திகளையும் வரலாறுபோல விளங்கிக் கொள்வது வேறு. இந்தியன் "இங்க்" என விற்பனை செய்யப்படும் இங்க் சீனாவில் தயாரிக்கப்பட்டது. ஆனால் பெயர் இந்தியன் இங்க் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது செய்தி. இதற்குள் சிறிய வரலாறு ஒன்று தென்படுகின்றது.

முதலைக்கு நாக்கில்லை. சிங்கத்திற்கு சிறிய இருதயமே உண்டு. நுளம்புக்கு 27 பற்கள் உண்டு. தாஜ்மகாலை மும்தாஜிற்காகச் சாஜகான் கட்டினான். அது காதலின் நினைவாகக் கட்டப்பட்ட பளிங்கு மண்டபம். இது ஒரு வரலாற்றுச் செய்தி. ஆயினும் ஒக்ஸ்போட் இந்திய வரலாறு என்ற நூல் சாஜகான் மும்தாஜ் காதல் குறைபாடு கொண்டது என்றும் மும்தாஜ் முதலிலே திருமணம் செய்தவரென்றும் குறிப்பிடுகின்றது. எனவே வரலாறு வேறு, வரலாற்றை விளங்கிக் கொள்வது என்பதுவேறு.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு வடக்கிலும் பார்க்கக் கிழக்கிலும் வன்னியிலும்தான் கூடிய அளவு வேரூன்றியுள்ளது. வடக்கில் தோன்றிய கண்ணகி வழிபாடு ராஜராஜேஸ்வரி கோயிலாக மாற்றம் அடைந்து உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இதனை மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலில் வித்துவான் கந்தையா குறிப்பிட்டிருக்கின்றார்.

கண்ணகி வழிபாட்டைப் புத்தமத மக்களும் ஏற்றுக் கொண்டு வழிபடுகின்றார்கள். அது கஜபாகு மன்னன் பரப்பியது என ஒரு சாராரும்

மறு சாரார் சிங்கள மக்கள் தமிழ் மக்களிடம் இருந்து இதை எடுத்துக் கொண்டார்கள் என்றும் கொள்கிறார்கள். இந்த இரண்டிலுமே உண்மையில்லை. இந்த இரண்டுமே மேலோட்டச் சிந்தனையின் வெளிப்பாடே.

கற்பனைக் கதையோட்டமான சிலப்பதிகாரக் காவியத்தில் கஜபாகு என்ற ஒரு மன்னன் இலங்கை மன்னனாகச் சுட்டிக்காட்டப்படுகின்றான். கற்பனைக் காவியத்தில் வருகின்ற ஒரு மன்னன் நிஜ மன்னனாக இருக்கமுடியாது. சிலப்பதிகார காலத்தில் கஜபாகு என ஒரு மன்னன் இருந்ததாக வரலாறு சுட்டிக்காட்டவில்லை. அற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இலங்கையில் இல்லவே இல்லை. எனவே கற்பனை மன்னனான கஜபாகு மன்னன் கண்ணகி வழபாட்டைச் சிங்கள மக்கள் மத்தியில் புகுத்தினான் என்றால் அது வரலாற்று முரண்பாடே.

கண்ணகி வழிபாடு சிங்கள மக்கள் தமிழ் மக்களிடம் இருந்து எடுத்துக் கொண்ட நல்லதோர் வழிபாட்டுமுறை என மறுசாரார் குாறுகின்றனர். இந்த அணுகுமுறையும் தவறானது. ஏனெனில் எந்தவொரு வழிபாட்டுமுறையும் பரப்பப்படுகின்றதே தவிர எடுத்துவரப்படுவதில்லை. உதாரணமாகப் புத்தவழிபாட்டுமுறை இலங்கைத் தீவுக்குத் தேவநம்பியதீசன் மகிந்தன் சங்கமித்தை ஆகியோரால் எடுத்துவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து எத்தனையோ வழிபாட்டு முறைகளில் புத்தமதம் பிரச்சனைகளை எதிர் கொண்டு காலத்திற்குக் காலம் மோதிக் கொண்டது. மகாயானம் ஹீனயானம் போன்ற புத்தமதத்தின் பிரிவுகளையும் அழிந்துபோன சில உட்பிரிவுகளையுமே இவ்விடத்தில் குறிப்பிடுகின்றேன்.

ஈழத்தில் குடியேறிய மக்கள் இந்துமதத்தையோ அதன் உட்பிரிவுகளாகக் கருதப்படும் சைவம், வைணவம், சாக்தம் என்பவற்றைப் பரப்ப முற்படவில்லை. ஏனெனில் இங்கு புராதனமாக இருந்த மக்கள் இந்து மக்களாகவே இருந்தார்கள். இலங்கைளில் புராதனமாக இருக்கும் ஐந்து ஈஸ்வரங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றது.

போத்துக்கேயர் காலம் தொடங்கி இக்காலம் வரைக்கும் கிறீஸ்த்தவமதம், கத்தோலிக்கம், பெந்தோகொஸ்த்து போன்ற வழிபாட்டு முறைகள் இலங்கையில் பரப்பப்பட்டவையே. இதனை நான் இவ்விடத்தில் சுட்டிக்காட்டக் காரணம் சமயங்கள் பரப்பப்படுகின்றன என்பனவாகும். எவரும் எங்கும் சென்று ஒரு சமயத்தை ஏற்றுக் கொண்டு வீடு திரும்புவதில்லை என்பதுவே இதனால் உணர்த்தப்படுகின்றது.

## தமிழர்கள் பரப்பினரா கண்ணகி வழிபாட்டை?

இவ்வாறு பார்க்கும்போது தமிழர்கள் கண்ணகி வழிபாட்டைச் சிங்கள மக்களிடையே பரப்பினரா என்ற கேள்வி எழுகின்றது? இல்லவே இல்லை. அவ்வாறு பரப்பப்பட்டதற்கான எந்தச் சான்றுகளும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. புத்தர் நாகதீபத்திற்கு வந்ததாக வரலாறு உண்டு. மகேசுரன் என்ற மன்னனுக்கு ஏற்பட்ட ஒரு தகராற்றைத் தீர்க்கவே அங்கு சென்றார் என்கிறது மகாவம்சம். புத்தர் வாழ்நாளில் தன்னையும் தன் போதனையினையும் குாறினாரே அன்றி நாகதீபத்திலோ கல்யாணியிலோ பரப்பியதாக வரலாறு இல்லை. புத்தருக்குப் பின்வந்தோரே அதனைப் பரப்பினார்கள். மகேசுரன் என்ற பெயர் தமிழ்ப் பெயரே! நாகதீப என்ற நாட்டைச் சுவாமி விபுலாநந்தர் போன்ற ஆய்வாளர்கள் நிக்கோபார் தீவு எனக் கொண்டாலும் யாழ்ப்பாணமும் அதனோடிணைந்த தீவுகளும் (பிரதானமாக நயினாதீவை) நாகதீப எனக் கொள்வதே சரியானதாகும். நாகர்களில் ஒருசாரார் புத்தமதத்தை ஏற்றுக் கொண்டதனால் நாகதீபத்தில் நாகவிகாரைகள் தோன்றலாயின. நயினாதீவு யாழ்ப்பாணம் என்பவற்றில் உள்ள விகாரைகள் இதற்கு உதாரணங்களாகும். நாகர்தீபம் (அதாவது நாகர்கள் தெயவத்திற்குக் காட்டிய திருவிளக்கு) நாகதீப என மருவி இடப்பெயரைச் சுட்டுகின்றது என்ற சந்தேகமும் நாகதீப என்ற சொல்லாட்சியில் தொக்கு நிற்கின்றது.

கண்ணகி வழிபாடு பரப்பப்படவில்லை எனில் கண்ணகித் தெய்யோ எனச் சிங்கள மக்கள் எப்படிக் கண்ணகி வழிபாட்டை ஏற்றார்கள்? அதனை விடுவிக்கும்போது சிலருக்கும் கசப்பாக இருக்கும். ஆனால் அங்குதான் வரலாற்றை விடுவிக்கும் அணுகுமுறை உள்ளது.

தேவநம்பியதீசன் போன்ற சமயப் பரப்பிகள் தமிழர்களாக இருந்தார்கள். அவர்கள் தமிழில் பௌத்தத்தை வளர்க்க இலங்கை வந்தார்கள். இதனால் தமிழ் மக்களில் ஒரு சாரார் முதலில் மொழியை மாற்றாது மதத்தை மாற்றிப் பௌத்தர்களானார்கள். பெரும்பாண்மையான

தமிழ் மக்கள் காலப்போக்கில் பௌத்தத்தைத் தமிழில் பரப்ப ஒருப்படவில்லை. எனவே தமிழ் மொழியை அண்டியதாக ஒரு மொழி பௌத்தத்தைப் பரப்பத் தோவையாக இருந்தது. அதனை அத்தமிழர்களே உருவாக்கினார்கள். அம்மொழிதான் இன்றைய சிங்கள மொழியாகும்.

அ என்ற அகரத்தில் இருந்து ∴ நீங்கலாக சிங்கள மொழியானது தமிழ் மொழியினைப் பின்பற்றுவது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடமாகும்.

இரண்டாம் பராக்கிரமபாகு தொடங்கி இரண்டாம் கஜபாகு மன்னன் தொன்மைப் புகழ் குூறும் கல்வெட்டுக்களும் தமிழ் மொழியில் அமைந்துள்ளன. எனவே இம் மன்னர்கள் சிங்கள மொழி விருத்தியடையாத காலத்தில் தமிழ்ப் பௌத்தர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அடையாளங்களாகும்.

கண்ணகி வழிபாடு சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படவில்லை. பௌத்தத்திற்கு மாறிய தமிழ் மக்கள் ஏற்கனவே தம்மிடம் இருந்த வழிபாட்டு முறை ஒன்றினை தாம் மதம் மாறிய போதும் எடுத்துச் சென்றுள்ளார்கள் என்பதே பொருத்தமானதாகும். அந்த வழிபாட்டையும் புத்தமதம் உள்வாங்கிக் கொண்டது. புத்த பள்ளிகளில் மற்றைய இந்துத் தெய்வங்களும் புத்தர் இந்துவாக இருந்தபோது வழிபட்ட தெய்வங்களே.

கண்ணகித் தெய்வத்தை வழிபடுவோர் இந்த விடயத்தினையும் விளங்கிக் கொள்வது சிறப்பானதாகும். ஒத்தாட்சிமடத்தில் இருக்கும் தமிழ் மக்களின் உறுதிகளில் அவர்கள் சிங்கள மக்கள் எனக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் சிங்களராக மாறிப் பின்பு புத்தவழிபாட்டை நிராகரித்து மீண்டும் தமிழர்களானார்கள். இதனால்தான் இந்த மக்களுக்கான காணி உறுதிகளில் மேற்குறித்த வாசகங்கள் காணப்படுகின்றது.

இன்ன றுங்கனிச் சோலைகள் - செய்தல்
இனிய தீர்த்தண்சு னைகள்இ யற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்.

*பாரதியார்.*

## நிலையற்ற தோல்வி...

பாடப்புத்தகம் கையிலேந்தும்
பள்ளிமாணவர் இலட்சியம்
பரீட்சையிலே சித்தி பெற்று
பல்கலைக்கழகம் நுழைதலேயாம்
உற்றவரும் பெற்றவரும்
ஊட்டி வளர்த்த அசையினால்
பரீட்சையிலே தோல்வி காணும்
பாலகரோ துவண்டிடுவார்
திறமை வேறு படிப்பு வேறு
உணரும் நிலை வரவேண்டும்
பெறுகின்ற சித்திகளால்
திறமையது வளர்வதில்லை
திறமைதனை அளவிட
பட்டம் புள்ளி தருவதில்லை
பெறுகின்ற பட்டமதால்
வாழ்வு வளம் காண்பதில்லை
கல்வியிலே தோல்விவரின்
கலையென்றும் விளையாட்டென்றும்
விருப்புடனே ஈடுபட
பலதுறைகள் இங்குண்டு
எத்துறையில் கால்பதித்தும்
திறமையுடன் முன்வரலாம்
பிறர் வியந்து நோக்கும்வகை
புகழோடு வாள்ந்திடலாம்
திறமையின் துணைகொண்டு
அனுபவங்கள் பெற்றிடலாம்
அறிவை வளர்த்துப் பல
உயர்வுகளும் கண்டிடலாம்.

*ஜெயபாலன் பிரசாத்*
*மு வித்தியானந்தக் கல்லூரி.*

## நிலைமறந்தார்

சொந்த மண் மறந்து
பேசிய மொழி மறந்து
இருந்த நிலை மறந்து
வாழ்ந்த தரம் மறந்து
வாழ்வோரே நம் தமிழர்
மேலை நாட்டினிலே.

முறைதெரியா நடை நடந்து
முறையறியாப் பணம் சேர்த்து
வழிதெரியாச் செலவு செய்து
வகையாகப் பிடிபட்டே
தொகையாக அடைபட்டவர்

# THARSHANAS

Sri Lankan, East Indian, Canadian Food Items, Fresh Fish,
Fresh Meat & Vegetables, Video & Audio Transfer



- இலங்கை இந்திய பலசரக்குச் சாமான்கள்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- தமிழ், மலையாள, இந்தி வீடியோப் பிரதிகள்
- உடன் மரக்கறி வகைகள்
- உடன் மீன்வகைகள்
- பழவகைகள்

**தற்பொழுது துரித பணமாற்றுச் சேவையுடன்**


*உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்*

## தர்சனாஸ் சுப்பர் மார்க்கட்

3413 Fieldgate Drive, Mississauga, ON Tel: (905) 625 8152
29 Dundas St. East, Mississauga, ON Tel: (905) 2707576


# Accident/Injuries

- **Motor Vehicles Accident**
- **Slip & Fall**



**உங்களது இழப்பீட்டினை நியாயமான முறையில் சிறந்த சட்டவல்லுனரால் பெற்றுத்தர**

## அதுமட்டுமல்லாமல்



**உங்களது மங்களகரமான வைபவங்களை திறம்பட புகைப்படம் பிடித்துத் தரவும் நாடுங்கள்.**

**Rajh**

**Tel: (905) 826-9445**
**Cell: (416) 889-3636**

# GLOBAL


EDUCATIONAL TRUST PLAN

**RESP**
Registered Education Saving Plan

**CESG**
Canada Education Savings Grant

## Other Services Include:

- ☞ **Income Tax**
- ☞ **Bookkeeping**
- ☞ **Life Insurance**



Please Contact:

Saba Rajeswaran B.A. (Hons.) M.C.S.E
Entrollment Officer

Tel: (416) 750-9022 (416) 757-0333
Fax: (416) 757-7499 (416) 208-4817

9 Hancock Crescent, Scarborough, ON, M1R 2A2
Email: rajes2001@hotmail.com

## சொர்க்கம்

கதிரவன் மறையும்
கருக்கல் பொழுதில்
நந்திக் கடலதன் கரையில்
நடந்தால்..
தென்றல் வந்து
தேகம் தழுவிட
எந்தன் மண்ணில்
இருந்து கதைத்தால்
பொங்கல் தினத்தில்
அம்மாள் கோவிலின்
புனித தீபம் எரிவதை
பார்த்தால்..
மாலைப் பெழுதில்
வட்டுவாகல் பாலத்தில் நின்று
கதிரவன் சரியும்
காட்சியை இரசித்தால்..
கரிய எருமைகள்
காயா மோட்டையில்
தலைகள் தெரிய
தண்ணீருள் அமிழும்
அழகிய காட்சியை
அள்ளிப் பருகினால்..
குருந்தூர் மலையில்
நெடுந்தூரம் ஏறி
கொஞ்சும் வன்னியின்
அழகை இரசித்தால்
பனையோலை வீட்டில்
பசுஞ்சாற்றுத் திண்ணையில்
படுத்துக் கொஞ்சம்
கண்களை மூடினால்
எருமைத் தயிரினை
பழஞ்சோற்றிலிட்டு
எலுமிச்சம் புளியும்
வெங்காயமும் போட்டு
கரைத்துக் குடித்து ஒரு
ஏவறை விட்டால்..
சோதரா..
சொர்க்கம் உனக்குத்
தொலைவில் இருக்காது
அது..
எங்கள் சொந்த மண்ணின்
நினைவில் இருக்கும்!

*வந்நாப்பனையான்*

## ஒன்றுபட்டு யுகம் காண்போம்

ஒற்றுமையாய் யுகம் அமைத்து
ஒழுக்கமுடன் வாழ்ந்திடுவோம்
வேற்றுமை மறந்து நாங்கள் - எல்லோரும்
வெற்றிக் கொடி நாட்டிடுவோம்

ஜாதி இல்லை பேதமில்லை
நாமெல்லாம் ஒரு தாய் பிள்ளை
ஏற்றத்தாழ்வு எமக்கில்லை - நாம்
எல்லோரும் சேந்தே வாழ்வோம்

யுத்தநிலை வேண்டாமென்று
நித்தம் நித்தம் வணங்கினோம்
சிந்திய இரத்தம் போதுமென்று
சிந்தித்து நாம் வாழ்வோம்

உறவிழந்து உரிமை இழந்தோம்
உள்ளதையும் இழந்து நின்றோம்
பார்போற்றும் தமிழினத்தை - நாம்
பண்போடு காத்திடுவோம்

கண்ணிழந்தோம் காலிழந்தோம்
கணப்பொழுதில் உயிரிழந்தோம்
ஒன்று சேர்ந்து வாழ்ந்திருந்தால்
ஒருவருக்கும் குறைவில்லையே

ஒன்று பட்டால் வாழ்வுண்டு
என்றெண்ணி வாழ்வோமே
ஒன்று சேர்ந்து நாங்கள் எல்லாம்
ஒற்றுமை யுகம் அமைப்போமே

ஒற்றுமையே எங்கள் வாழ்வு
ஒற்றுமை நீங்கினில் தாழ்வு
ஒற்றுமைதான் எங்கள் உயர்வு
ஒன்றுபட்டு யுகம் காண்போம்.

**Dr. திருமதி மோகனசுந்தரி (D.M.A)**
**காரைதீவு.**

# ஈழத்தில் தமிழ் நூல்களுக்கான பிரசுரகளமும் சந்தைப்படுத்தலும்

*-கலாபூசணம் முல்லைமணி- வே. சுப்பிரமணியம்*

ஒரு இலக்கியப் படைப்பை வாசகர்களிடம் இட்டுச்செல்வது வெளியீட்டுச் சாதனமே. எழுத்தாளனின் கற்பனையில் உருவாகி கையெழுத்துப்பிரதி ஆகும்படைப்பு நூல்வடிவு பெறும்போதே வாசகனுக்கு இலக்கியம் கிடைக்கிறது. எழுதுவது எழுத்தாளனின்பணி பிரசுரம் செய்வது வெளியீட்டாளரின் தொழில் அதனைச் சந்தைப் படுத்துவது புத்தக சாலைகளின் வேலை.

இலக்கியப்படைப்பு வாசகர்கூட்டத்தை அடைய வேண்டுமானால் இம் முத்திறத்தாரின் பங்களிப்பு அவசியம். ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ் நூல்களின் பிரசுரகளம் எத்தகையது? நூல்களைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பு ஆரோக்கியமானதா? பிரசுரகளமும் விற்பனை வாய்ப்பும் எழுத்தாளனை ஊக்குவிக்கும் முறையில் அமைந்துள்ளனவா? இவைபற்றி உரக்கச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் தமிழ் நூல்களை வெளியிடும் நிறுவனங்கள் முற்றுமுழுதாக இல்லை என்று சொல்லிவிட முடியாது. எத்தனையோ வெளியீட்டு நிறுவனங்கள் தம்மாலான பணியைச் செய்து கொண்டுதான் வந்துள்ளன. ஆனால் இரண்டொன்றைத்தவிர ஏனையவை வர்த்தகரீதியாக செயற்படவில்லை. வெளியிடும் நூல்களும் குறிப்பிட்ட நிறுவனத்துடன் தொடர்புடைய ஒரு சிலருக்கே களம் அமைத்துக் கொடுக்கின்றன.

எழுத்தாளர் கூட்டுறவுப்பதிப்பகம், தமிழ் வெளியீட்டுக்கழகம், யாழ் இலக்கியவட்டம், அரசு வெளியீடு, சிரித்திரன்பிரசுரம், மாணிக்கம் பிரசுரம், முல்லை இலக்கியவட்டம், மலர் இலக்கியக் குழு, அன்பு வெளியீடு, அருணா வெளியீட்டகம், பிரியா பிரசுரம், வட இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகம், வரதர் வெளியீடு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம், முள்ளியவளை இயல் இசை நாடகக் கலாமன்றம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வீரகேசரி பிரசுரம், முதலான அமைப்புக்கள் ஈழத்துத் தமிழ் நூல்களை வெளியிட்டு வந்துள்ளன. இவற்றில் பெரும்பாலனவை ஒரு சில நூல்களை வெளியிட்ட பின்னர் செயலிழந்துவிட்டன. இரண்டொரு நூல்களை வெளியிட்ட பின்னர் இயற்கை எய்திய நிறுவனங்களும் இவற்றுள் அடங்கும். வீரகேசரிப் பிரசுரத்தைத் தவிர ஏனையவை வர்த்தக ரீதியில் செயற்படவில்லை. கலை இலக்கிய ஆர்வம் மட்டுமே இவைகளின் மூலதனம்.

மேலே குறிப்பிட்ட அமைப்புக்களை "முத்திரையாக" பயன்படுத்தி எழுத்தாளர்களின் மூலதனத்துடன் நூல்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்கள் அநேகம். ஆண்டுக்கொரு நூலை வெளியிடுவதே பெரிய சாதனையாகக் கருதப்பட்டது.

வீரகேசரி நிறுவனத்தின் நூற்பிரசுர முயற்சி 1972இல் தொடங்கப்பட்டது. எழுத்தாளன் எழுதுவதுடன் நிறுத்திவிட அதனை நூலாக்கி வாசகர் மத்தியில் கொண்டு செல்வதற்கான தொழில் முறைகளை வர்த்தகரீதியல் திட்டமிட்டுச் செய்வதற்கு இந்நிறுவனத்திற்கு வாய்ப்பும் வசதியும் இருந்தது. பல ஆயிரம் பிரதிகள் அச்சிடவும், நகர வாசகர்கள் மட்டத்திலன்றி கிராமப்புற வாசகர் மட்டத்திலும் அவற்றை விற்பனை செய்யவும் திட்டமிட்டுச் செயற்பட்டது. வீரகேசரி நூல் வெளியீட்டுத்துறையினர் பின்வரும் இலக்குகளை முன்வைத்துப் பிரசுர முயற்சியைத் தொடங்கினர்.

1. ஈழத்து வாசகர்களிடையே ஈழத்து எழுத்தாளர்களைப் பிரபலம் அடையச்செய்தல்.

2. வாசகர்கள் மத்தியில் புத்தகங்களை வாங்கும் பழக்கத்தையும் வாசிப்புப் பழக்கத்தையும் அதிகரிப்பது.

3. புதிய எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிப்பது.

4. எந்தவொரு சாதாரண எழுத்தாளனும் தம் படைப்பை நூலுருவாக்க வாய்ப்பளிப்பது.

5. கையடக்கமான விலையில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை விநியோகிப்பது.

1972இல் தொடங்கிய நூற்பிரசுர முயற்சி ஆண்டொன்றிற்கு ஆறு பிரசுரங்களாகத் தொடங்கி 1975-1977 காலப்பகுதியில் பத்து நூல்கள் என்ற அளவில் விரிவடைந்தது. ஆரம்பத்தில் சிறுகதை, நாடக நூல்கள் வெளியிடப்பட்ட போதும் காலப்போக்கில் நாவல்களே வெளியிடப்பட்டன. க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேற்றுக்காக அல்லது திருமணத்திற்காக காத்திருக்கும் பெண்பிள்ளைகளே அதிகமான வாசகர்களாக இருந்ததால் அவர்களைக் கவரும் விதத்தில் ஜனரஞ்சகமாக எழுதவேண்டும் என்று எழுத்தாளர்களுக்கு அறிவுரை கூறப்பட்டது. எனினும் தரமான நாவல்கள் சிலவேனும் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வன்னியைக் களமாகக் கொண்ட மூன்று தரமான நாவல்கள் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்துள்ளன. இவற்றில் இரண்டு வன்னியைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.பாலமனோகரன் (நிலக்கிளி) தாமரைச்செல்வி (சுமைகள்) என்போரால் எழுதப்பட்டது. காட்டாறு என்னும் வன்னியைக் களமாக்கொண்ட நாவல் செங்கை ஆழியானால் எழுதப்பட்டது.

வீரகேசரி நூல் வெளியீட்டுத்துறையின் நோக்கங்கள் ஓரளவிற்கு நிறைவேறியது என்றே கூறலாம். அனுபவம் வாய்ந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு மட்டுமன்றிப் புதிய எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. எனினும் வீரகேசரிப் பிரசுர முயற்சி 1980களின் நடுப்பகுதிவரை மட்டுமே நீடித்தது. 75க்கு மேற்பட்ட ஈழத்து நூல்கள் வெளியாகின. வீரகேசரி போன்ற பொருளாதார பலமும், அச்சுவசதியும், விநியோக வாய்ப்பும் உள்ள ஒரு நிறுவனத்தாலேயே பிரசுர முயற்சியைத் தொடரமுடியவில்லை.

தற்போதைய நிலையில் தமிழ் நூல்களை வர்த்தகரீதியில் வெளியிடும் நிறுவனம் எதுவுமில்லை அதற்கான காரணம் என்ன?

1. தமிழ் நூல்களைப் பிரசுரிப்பது லாபகரமான தொழில் எனப் பணம்படைத்த முதலாளிமார்கள் கருதவில்லை.

2. இலங்கையிலுள்ள நூல் வெளியீட்டு நிறுவனங்கள் கலை இலக்கிய ஆர்வத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டவை. வியாபாரத் தந்திரங்கள் தெரியாத எழுத்தாளர்கள் தொடங்கிய நிறுவனங்கள் நிலைத்து வாழமுடியவில்லை.

3. இலங்கையிலுள்ள புத்தகசாலைகள் ஈழத்து இலக்கியப் படைப்புக்களை விரும்பிப் பெற்று விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இந்திய நூல்களை முற்பணம் கொடுத்து வாங்கி விற்கும் புத்தகசாலைகள் ஈழத்துப் படைப்புக்களை வாங்கினாலும் அதற்கான பணத்தைச் செலுத்த ஓராண்டிற்கு மேல் செல்கிறது.

4. ஈழத்து வாசகர்களும் ஜனரஞ்சகமான தென்னிந்திய நூல்களைச் சிறப்பாக நாவல்களை விரும்பி வாங்குகிறார்கள். ஈழத்து வாசகர்களுக்கு ரமணிச்சந்திரனைத் தெரிந்த அளவு வ.அ.இராசரத்தினத்தைத் தெரியாது.

இந்த நிலையில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளன் தனது படைப்பினை தானே முதலீடுசெய்து பிரசுரித்து தானே சுமந்து சென்று விற்பனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றான். ஆர்வத்தின் நிமித்தம் நூலின் ஆயிரம் பிரதிகளை அச்சிடுவிக்கும் ஒரு எழுத்தாளன் அவற்றை விற்று போட்ட முதலைத் திரும்பப் பெறக் குறைந்தது ஐந்து ஆண்டுகளேனும் எடுக்கிறது. முதலீடு செய்த பணத்தைத் திரும்பப் பெறாத சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு புத்தகத்தை வெளியிட்டுத் தனத கையைச் சுட்டுக்கொண்ட எழுத்தாளன் இரண்டாவது நூலை வெளியிடத் துணிவதில்லை. தமிழகத்தின் நிலை வேறு. அங்கு எழுத்தாளனின் நூலைப் பெற்றுப் பிரசுரிக்கும் அமைப்புக்களுக்குக் குறைவில்லை. பழனியப்பா பிரதேர்ஸ், பூங்கொடிப் பதிப்பகம், வானதி வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ்ப் புத்தகாலயம், நர்மதா வெளியீடு, மணிமேகலைப் பிரசுரம்,

வர்த்தமானன் பதிப்பகம், சென்னை புக்ஸ், சோமு புத்தக நிலையம், ஐந்திணைப் பதிப்பகம் முதலான எண்ணிறைந்த பதிப்பகங்கள் உண்டு. இவை புத்தகங்களை ஒரு வணிகப் பண்டமாகக் கருதுகின்றன. இவ்வளவு முதலீடு செய்தால் இவ்வளவு லாபம் வரும் என்று கணக்கிட்டுத்தான் புத்தகப் பிரசுரத்தில் ஈடுபடுகின்றன. இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் சந்தை வலைப் பின்னலை ஏற்படுத்திக் கொள்கின்றன. ஒரு நூலை வெளியிட்டவுடன் முதலிட்ட பணத்தைத் திரும்பப் பெறவேண்டும் என அவசரப்படுவதில்லை. ஒரு நூல் விற்றபணம் வந்து கொண்டிருக்கும்போது இன்னொரு புத்தகம் தயாராகிக் கொண்டிருக்கும். முதற் பதிப்பு விற்பனையாகி முடிந்தவுடன் அடுத்த பதிப்புக்குக் தயார் செய்யப்பட்டுவிடும்.

நூறு பக்கமுடைய புத்தகத்தின் ஆயிரம் பிரதிகள் அச்சிட இந்தியாவில் ரூபா பதினெட்டாயிரம் (18,000.00) (இலங்கை ரூபா முப்பத்து நாலாயிரம்) செலவாகும். அச்சிடும் பிரதிகளின் தொகை கூடினால் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் ரூபாவரை செலவு குறையும். ஆனால் இலங்கையில் நூறு பக்கமுடைய புத்தகம் அச்சிட அறுபதினாயிரம் ரூபாவரை செலவாகும். தமிழகத்தில் அச்சிடும் நூல்களில் அறுநூறு (600) பிரதிகளை தமிழக அரசு கொள்வனவு செய்யும் ஏற்பாடு உண்டு. இதனாலும் பரந்த சந்தைப்படுத்தல் வசதி இருப்பதாலும் நூல் வெளியீட்டு நிறுவனங்கள் தொடர்ந்து லாபகரமாக இயங்கும் வாய்ப்பு உண்டு. வசதிபடைத்த ஈழத்து எழுத்தாளர்கள் பலர் தமது நூல்களை இந்தியாவில் அச்சிடுவிக்கின்றனர் அல்லது இந்திய பிரசுர நிலையம் ஒன்றினூடாக வெளியிடுகின்றனர்.

இலங்கையிலும் சில எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டங்கள் உண்டு. எனினும் அவை காலத்துக்குக் காலம் கொள்வனவுக்கான திட்டத்தை மாற்றுகின்றன. இவை அனைத்தும் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஸ்தாபனங்களாகும். எல்லாக் காலத்திலும் நூல் கொள்வனவுக்குப் போதிய நிதி கிடைப்பதில்லை. வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஒரு எழுத்தாளனின் நூல்களை ஆண்டுதோறும் எண்ணாயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்து வந்தது. இப்போது அதனை இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாவாகக் குறைத்துள்ளது. உயர் கல்விக்கான நூல்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் எனக் கொள்கை வகுத்துள்ளது. இந்து சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு எழுத்தாளர்களின் நூல்களை ஐயாயிரம் ரூபாவுக்குக் கொள்ளவனவு செய்வது வழக்கம். தற்போது சமய சம்பந்தமான நூல்களுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் அமுலுக்கு வரவிருக்கிறது. எழுத்தாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்வது இலங்கைக் கல்வி உயர்கல்வி அமைச்சு. இந்த அமைச்சு ஒரு எழுத்தாளனின் முந்நூறு தொடக்கம் ஐநாறு நூல்களைக் கொள்வனவு செய்துவந்தது. 2002ற்கான நிதியொதுக்கீடு கேள்விக்குறியில் இருப்பதால் கொள்வனவில் நிச்சயமற்ற நிலையே காணப்படுகின்றது.

இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள் வெளியீடு செய்து நான்கு ஐந்து ஆண்டுகள் சென்ற பின்பும் புத்தகக் கடைகளில் வாங்க முடியும். இலங்கைப் புத்தகங்களை அங்ஙனம் கடையில் வாங்க முடியாது. ஏழுத்தாளர்கள் கடைகளுக்குப் புத்தகம் விற்பனைக்குக் கொடுப்பது குறைவு. இதற்குக் கடைக்காரர்கள் ஆர்வம் காட்டாததே காரணமாகும். நான்கு ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டால் எழுத்தாளரிடமே அவர் வெளியிட்ட நூல் இருக்காது.

பழைய எழுத்தாளர்களின் நூல்களை இளம் சந்ததியினர் வாசிக்க விரும்பினாலும் அவற்றைப் பெறமுடியாத நிலையுண்டு. வன்னிப் பிரதேச புனைகதை இலக்கியம் பற்றி ஆய்வு செய்யப்புகும் பல்கலைக்கழக மாணவர் வன்னியூர்க் கவிராயர் எஸ். எல். சௌந்தரநாயகத்தின் ஈழத்துக் காவிய தீபகம் என்னும் சிறுகதைத் தொகுதியையோ, தாமரைச்செல்வியின் "சுமைகள்" நாவலையோ தேடிப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இன்று உள்ளது. சோமசுந்தரப் புலவரின் "சிறுவர் செந்தமிழ்" கவிதைத் தொகுப்பு எந்தக் கடையிலும் கிடைக்காது.

நிலையான பிரசுரகளம் இன்மையால் எழுத்தாளருக்கு மட்டுமன்றி இளைய தலைமுறை வாசகர்களுக்கும், ஆய்வு மாணவர்கட்கும் பாதிப்பு உண்டு. எனவே ஈழத்துத் தமிழ் நூல்களைப் பிரசுரிக்கக்கூடிய வர்த்தகரீதியான அமைப்புக்கள் சிலவேனும் தோற்றுவிக்க வேண்டியது அவசியம்.

நகரின் மத்தியில் ஓர் வித்தியாசமான புடவை மாளிகை!

# மிலெனியம்
## சாறி பலஸ்



**Unusual Sellections**

தூய காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், திருமணப் பட்டுக் கூறைகள், சல்வார், சுடிதார் எங்கும் கிடைக்கும் ஆனால் வித்தியாசமான தெரிவுகளுக்கு


MILLENNIUM
SAREE PALACE

Expect the Unexpected Selections
only at Millenneium Saree Palace

பட்டு என்றதும் "பட்டென"
நினைவுக்கு வரவேண்டிய ஒரே இடம்

**416-750-9613**
**1245 Ellesmere Road**
**Scarborough, Ont., M1P 2X8**

# Quality Bread Bakery



Different Kinds of
Bread, Buns, Cakes,
Muffins & Much
More...




For your parties you can order short eats

1221 Markham Road Unit #13
(Markham/Ellesmere)
Scarborough, Ontario
M1P 3A6.

☎ Tel: (416) 431-9829

# All Seasons

## PARTY RENTALS & SALES



உங்கள் மங்களகரமான திருமணம் மற்றும் சகல
விதமான கொண்டாத்திற்கும் அலங்காரத்துடன்
மண்டபம் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

- Table, Banquet Hall, Photography
- Balloon Decoration, DJ, Catering
- Chairs, Dishes, Glassware, Linen
- Chafing, Fountain, Wedding Arches

Digital Sound Crew
DJ Services
Special Effect

416-292-1311

2250 Midland Road Unit # 19, Scarborough, Ontario

# கடல் கடந்த நாட்டினிலே!

முதற்பரிசு பெற்ற கவிதை

படை படையாய் வந்து எம்மைப்
பரிதவிக்க விட்டதனால்
நடை நடையாய் நாடெங்கும்
அலைந்துலைந்தோம்
தடை தடையாய் தமிழ் மொழிக்கும்
உணவுக்கும் மருந்துக்கும் உயிர் வாழும்
உரிமைக்கும் வந்ததனால்
கடல் கடந்தோம்.

கடல் கடந்த நாட்டினிலே . . . . . .
மடல் வரைந்த உறவுகளுக்கும்
பதில் எழுத முடியாதோராய்
பனி குளிரதில் நடுங்கி உழைத்திடும்
இயந்திர வாழ்க்கை கொண்டோர் பலராவர்.

உழைத்திடும் பணமதை
ஓட்டிடும் வண்டிக்கும் வீட்டு வாடகைக்கும்
வந்து சேர்ந்த கடனுக்கும் காப்புறுதிக்கும்
ஊருக்கும் தொலைபேசிச் சேவைக்குமென
கூறுபோட்டு முடித்திடுவர் பலர்.

வந்த நாடு நல்ல நாடு
வாழும் வகையோ பலவுண்டு
என்றுரைப்பார் சிலர்,
வந்த நாடு சொந்த நாடோ
யூதருக்கு ஜேர்மனியில் நேர்ந்த கதி
எங்களுக்கும் நேர்ந்திடுமோ
என்றஞ்சி வாழ்வாரும் சிலருளர்
அந்நிய மொழி நடை உடை
இவையுடை பண்பாட்டதால்
மூழ்குவோரும் சிலருளர்
முடிநிறம் மாற்றி
தமிழ் பெயர் சிதைத்து
தோடையை இடையாக்கி அதில்
உடைமாட்டி
'கெந்தல்' நடை பழகும்
எந்தன் இனத்தாரும் சிலருளர்

பகலில் பாடசாலை அது முடித்து
மாலையில் வேலை செய்து
பல்கலைக்கழகம் சென்று
பட்டதாரியாவோரும் பலருளர்

பிறந்தபதி துறந்த துயர்
பெற்றவரை இழந்த துயர்
கடல் கடந்த நாட்டினிலோ
கலந்து வாழ முடியாத் துயர்
என்ற பல துயர்களினால்
எம்மவர் பலரது உள்ளங்களிலோ
தாக்கங்கள் பலவுண்டு

பெற்றோர்க்குப் பணியாத
பிள்ளைகளாய் . . . . . .
பிள்ளைகளைக் கண்டிக்க முடியாத
பெற்றோராய் . . . .
பண்பாட்டுப் பிறழ்வு பகிரங்கமாகிறது.

ஒற்றுமை பேண
ஊரக்கு ஒரு சங்கம்
ஊயர் நெறி போதித்த
பாடசாலைக்கொரு சங்கம்
கூடித் தொழில் செய்த
தொழிலாளர் பெயர் கூறி ஒரு சங்கம்
தமிழ் வளர்க்கச் சில சங்கம்
என்றிவையுமுண்டு

காற்றலையில் தமிழ் சுமந்து
கண் செவியில் புகுத்துகின்ற
இருபத்து நான்கு மணிநேரமும் இயங்குகின்ற
வானொலி தொலைக்காட்சிச் சேவைகளும்
இங்குண்டு - எனினும்
முகவரி தேடும் மனிதர்களாய் பலர்

இருப்பின் இழப்பும்
இழப்பின் இருப்பும்
கைக்கொண்டு
அந்நிய நாடு அங்கீகரிக்கும் தமிழை
கற்க மறுக்கும் - தம் பிள்ளைக்குக்
கற்பிக்க மறுக்கும் தமிழரும் உள்ளனரே
கடல் கடந்த நாட்டினிலே!!


மீரா இராசையா

# DR. SUGANTHY SUTHAGAR

டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்

**FAMILY DENTIST** **குடும்ப பல் வைத்தியர்**

- **Cosmetic and General Dentistry**
  பற்களை அழகு படுத்தல் மற்றும் பொதுவான பல் வைத்திய வேலைகள்
- **Orthodontics (Braces) for Adults & Children**
  முதியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்
- **Free Consultation**
  இலவச மருத்துவ ஆலோசனை
- **Sedation for Nervous Pationts**




**3410 Sheppard Avenue East Suite 311, Scarborough, ON, M1T 3K4**


**416-299-7466**



*சிவா ராமையா பத்தரின் நிர்வாகத்தில்...*

# Sri Sakthy Jewellery





ஸ்ரீ சக்தி நகை மாளிகை

**Tel: (416) 499-4070**
**Fax: (416) 499-6945**

**2525 Pharmacy Avenue**
**Scarborough, Ontario**

# சைவத்தின் பழமையும் சிறப்பும்

முத்தமிழ் வித்தகர் அ. பொ. செல்லையா

சைவசமயமே சற்சமயம், சைவ சமயமே அனாதியானது என்றெல்லாம் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்றும், சிவ வணக்கம் உலகின் பல பாகங்களிலும் பரவி இருந்தது என்றும் ஆராய்ச்சிகள் நிறுவுகின்றன.

சிவ வணக்கம் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் நிலவிய தோடன்றி, சீனா, ஜப்பான், இந்துக்கடல் தீவுகள், பசுபிக் கடல் தீவுகள், ஆபிரிக்கா, பாபிலோன், கிறீஸ் ஆகிய நாடுகளிலும் நிலவி இருந்தது என அறிஞர்கள் கூறியுள்ளனர். எகிப்தில் பிரமிட்டுக்களின் சுவர்களிலும், கிரீசில் விசா என்னுமிடத்திலும், அயர்லாந்தில் கிறிஸ்தவ ஆலயங்களிலும், இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் கண்டெடுக்கப்பட்ட புதை பொருட்களிலும் சிவலிங்கங்கள் காணப்படடதாகக் கூறப்பட்டுள்ளது.

சிந்து சமவெளியில் சிவலிங்கம் காணப்பட்டுள்ளது. இங்ஙனமே யோக வடிவிலான பல உயிர்களால் சூழப்பட்ட ஆண் தெய்வச் சிலையும் காணப்பட்டது. இங்ஙனம் உலகமெல்லாம் பரவி இருந்த சைவசமயம் தமிழர்க்கே உரியதென்பதாகும். சைவத்தில் இருக்கும் ஆரியக் கலப்பால் சைவம் வடக்கிருந்து வந்தது என்பாரும் உள்ளனர். ஆனால், சைவம் தமிழருடையது. பழந்தமிழ் கொள்கையே சைவசமயம் என மறைமலை அடிகள், திரு.வி.கலியாணசுந்தர முதலியார் போன்றோர் கூறியுள்ளனர்.

சைவசமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் பற்றி ஆய்ந்த பல மேனாட்டு அறிஞர்கள் கூறியுள்ள முடிவுகள் சைவத்தின் மேன்மையையும் தொன்மையையும் வன்மையையும் தன்மையையும் காட்டுவதாகும்.

''தென்னிந்தியாவிற்குரிய சைவ சித்ததாந்தம் தமிழர் அறிவுத்திறனால் விளைந்ததாகும். அது தமிழரின் தத்துவமேயாகும்'' என்றார் ஜான். எச். பியட்.

''சைவ வழிபாடு இந்தியா முழுவதும் பரவியுள்ள தொன்மை வாய்ந்த தொன்றாகும்'' என்றார் திரு.பாய்.

''சமய உலகில் இந்தியாவிலுள்ள மிகத் தொன்மையான சமய நெறிகளின் வாரிசாகச் சைவ சித்தாந்த முறை அமைந்துள்ளது. அது தமிழரின் சமயமாகும். வேறு அனைத்தும் தமிழர்கட்டு அயன்மை உடையதாகும். பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப் படுவதாலும், அதன் சில கூறுகளின் பழைமையினாலும், அது பிற எல்லாச் சமயங்கட்கும் மேலானதாகும்,'' என்பார் திரு. டபிள்யூ. கௌடி.

''இந்தியச் சமயங்களில் சைவ சமயம் ஒன்றே கடவுள் தத்துவத்தைத் தெளிவாகவும், திட்ட வட்டமாகவும் கூறுகின்றது. எனவே, இது மிகச் சிறந்த சமயமாகக் கருதப்படுகிறது'' என்கிறார் என். மாக்னிக்கால். மேற்கண்டவை மட்டுமல்ல, மேலும் பலர் கூறியுள்ளனர். இன்னமும் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சைவத்தினது லிங்க வழிபாடு பற்றி ஒருமித்த கருத்தில்லை. எனினும் சிந்துவெளியில் கிடைத்த சிவலிங்கம் பற்றிய ஆய்வின்படி அது திராவிடர்களுக்கு உரியது என்கிறார்கள் அறிஞர் ஈரசா, டாக்டர் சிலேட்டர் ஆகியோர்.

இந்த உலகம் உயிரும் சடமும் ஆகக் காட்சியளிக்கிறது. இக்காட்சியின் தோற்றமே படைப்பு ஆகும். ஆனால், உயிர்கள் படைக்கப் படவுமில்லை, அவை அழிக்கப்படவுமில்லை, தோற்றங்களின் வளர்ச்சியும் பரிணாமமானது. அதனை, ''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி'' என்று சிவபுராணத்தில் மாணிக்கவாசக சுவாமிகளே பாடியுள்ளார். உயிரற்ற பொருளாகிய இவ்வுலகம் காலத்தின் இறுதியில் நுண் பொருளாய்ப்பின் ஆற்றலாய் மாறி ஒடுங்கிவிடும்.

இறைவன் தனித்து நிற்கிறான். உயிர்களிடத்தில் அவன் கலந்தும்,

சடப்பொருள்கள் இடத்தில் விரவியும், உள்ளான். இம் மூன்றையும் இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் உள்ள நிலைகளாகவே கூறுவர். சைவ சித்தாந்தம் இதனைப் பசு, பதி, பாசம் என்பதனால் அதன் உண்மையையும் இயல்புகளையும் பல்வேறு தடை வினைகளால் விளக்குவது வியப்பிறந்த செயலாகுமென அறிஞர்கள் கூறுவர்.

இறைவனின் இயல்புகளாகச் சைவ சித்தாந்திகள் கூறுவது சிந்தனைக்கு உரியதாகும். இறைவனே மேலான பொருள், குணமும் குறியும் அவனுக்கு இல்லை. அவன் ஒருவனே ஆவான். இப்படிப் பல. சித்தாந்திகளின் சிந்தனைகள் வியப்பூட்டுவன வாகும். அறிவியல் அறிவோடு இணைந்து செல்கின்றன.

சைவ சித்தாந்தம் என்பது தமிழ் நாட்டில் மட்டுமே பெருவழக்காக உள்ளது. காஷ்மீரச் சைவமும், மைசூர் வீரசைவமும் பலவகையில் அதிலிருந்து வேறுபடுகின்றன. சைவ சித்தாந்தக் கொள்கைகளைக் கூறும் மூத்த நூல்கள் யாவும் வடமொழியிலேயே உள்ளன எனச் சிலர் சொல்வர். ஆனால், மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை ஆகியோர், ''ஆதியில் வேதங்களும் ஆகமங்களும் தமிழிலும் இருந்தன, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என இன்று வழங்கும் இதே பெயர்களோடு நான்கு வேதங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றாகிய சாமவேதம் இராவணனால் பாடப்பட்டது. காலப் போக்கில் தமிழ் வேதாகமங்கள் அழிந்துவிட்டன, வடமொழி வேதாகமங்கள் நிலைத்து விட்டன. அவைகளைத் தமிழரும் தமது பிரமாண நூல்களாகத் தலைப்பட்டு விட்டனர், வேறு சிலர் தமிழில் மட்டுமே முன்பிருந்த வேத உபநிடதங்களை வடமொழியாளர் தம் மொழியில் பெயர்த்து எழுதிக்கொண்டனர்'' என்பர்.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சங்க இலக்கியங்களிலும் இடையிடையே காணப் படுகின்றன. நான்காம் நூற்றாண்டுக்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தவையாகிய திருமுறைகளும் சைவத்தின் பழமையையும் சிறப்பையும் விளக்குகின்றன.

எனவே தமிழர் சமயம் என்பது சைவம். தமிழரின் பழமை வாய்ந்த கொள்கை கோட்பாடுகளே சைவம், சிவபெருமானே சைவத்தின் முழுமுதற் கடவுள் என்பதனை வரலாற்றால் தெளிந்து, சைவர்களாக, சிவபக்தர்களாகத் தமிழர்கள் விளங்கிட வேண்டும்.

## முதியோர் எம் சொத்து

தோளிற் சுமந்த தாத்தாவை
தோளன்போல் நின்ற வேளை
தோல் சுரங்கிப் போனதென்று
தொலைவில் தள்ளலாகுமோ?

கைபிடித்து நடைபயில வைத்து
கதைகள் பல சொன்ன பாட்டியை
காது கேட்கவில்லை என்று
கழித்து வைக்கலாகுமோ?

தத்தி நடை பயின்ற வேளை
நடை காட்டித் தந்த பாட்டாவை
மூன்று காலில் நடந்தார் என்று
முடக்கி விடலாகுமா?

உச்சி குளிர எண்ணை தேய்த்து
தலை முழுக வைத்த பாட்டியை
உச்சி மயிர் நரைத்தது என்று
ஒதுக்கி விடலாகுமா?

பள்ளி செல்லப் பயந்த போது
கல்வி பற்றிக் கதைகள் சொல்லி
பள்ளி செல்ல வைத்த பாட்டாவை
பல்லுப் போனதென்று பழிக்கலாகுமோ?

அள்ளிச் சோறு தின்ன நிதம்
அடம் பிடித்த வேளையிலே
பாலும் சோறும் உண்ணத் தந்து
பலகதைகள் சொன்ன பாட்டியை
பக்க வாதம் வந்ததென்று
பாயில் முடக்கலாகுமா?

பல்லு விழுந்த பாட்டியை
பழசு என்றும் நைன்ரி என்றும்
கூன் விழுந்த தென்றும்
நக்கல் பண்ணலாகுமா?

கண்ணிருந்தும் குருடராய்
காதிருந்தும் செவிடராய்
வாயிருந்தும் ஊமையாய்
முதியோரை நடத்தலாகுமோ?

பல் விழுந்து போனாலென்ன
பக்க வாதம் வந்தாலென்ன
கூன் விழுந்து போனாலென்ன
கோலூன்றி நடந்தாலென்ன
உச்சி மயிர் நரைத்தாலென்ன
உதடு கோணிப் போனாலென்ன
உயரிய சொத்துக்கள் முதியோரே
கற்பக தருவும் முதியோரே

முற்றிப் பழுத்த மாங்கனி
தித்திப்பு ஊட்டும் என்று நாம்
தின்று பார்த்துக் கொண்டோமே
முத்துப் போன்ற முதியோர்கள்
என்றும் எம் தேசிய சொத்துக்கள்
என்றே திடமாய் உறுதி கொள்வோம்.

இ. மதுமிதா
விசுவமடுக்குளம் கிளிநொச்சி.


**DENISON DISCOUNT PHARMACY**

# உங்கள் மருந்துக்கடை

- All Drug Plans Accepted
- Seniors Discount 10%
- No $2 charge for Seniors and people on welfare
- Diabetic Centre

• For your convenient:
We Speak English, Tamil,
Hindi and Gujarati

Low Low
Low Prices




VELU (Pharmacist)

**FREE DELIVERY SERVICES**


Tel: (905) 479-8999
Fax: (905) 479-8885


7380 McCowan Road # 9A
Markham, ON, L3S 3H8
McCowan/Denison


VIVEKA Printers
Printing
Graphics
Signs
Bindery
Copy Centre
Bindery
Numbering
Dye Cutting
Scoring
Folding
Perfect Binding
Stapling
Graphics
Web Design
Full Color Design
Scanning
Sales Office
3160 Eglinton Avenue East #10
Scarborough, ON, M1J 2H3
(416) 410-6401
80 Barbados Blvd #4
Scarborough, Ontario
(416) 269-1994
www.viveka.com
info@viveka.com

# Insurance & Financial Services

Liberty Mutual





London Life

Balan Kanapathipillai (Agent)

## All Insurance & Financial Services

3 *Auto*
3 *Home*
3 *Life*
3 *Disability*
3 *R.R.S.P*
3 *Mutual Fund*
3 *Group Insurance*
3 *Child Education*
3 *Travel*
3 *Business*



**Office: (416) 321-1515**
**Cell: (416) 452-6975**
**Pager: (416) 336-4027**

**4433 Sheppard Avenue East Suite 200**
**Scarborough, ON**
**M1S 1V3**

**Home Office:**
**Tel: (905) 294-2429**
**Fax: (905) 201-6028**

**15 Krenmiles Cres**
**Markham, ON**
**L3S 2C9**

# அடங்காப்பற்றின் செட்டிகுளப் பிரதானிகளும் அவர்தம் வழிபாட்டு மரபுகளும்

ந. ஞானவேல் B.A, Dip.In.Tech, Dip.In.Edu.
மருக்காரம்பளை, வவுனியா.

இன்றைய செட்டிகுளப் பிரதேசமானது அன்று பல்கிப் பெருகி குளங்களையும், குடியிருப்புக்களையும் கொண்டு காணப்பட்டது. அருவி ஆற்றுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களையும் மதவாச்சி, தந்திரிமலை, குதிரைமலை, சூடுவைத்தபுலவு, தம்பனை, பூவரசங்குளம் அகிய பிரதேசங்களையும் எல்லையாகக் கொண்டு காணப்படுகின்றது. இதன் தென்தோடி எல்லையில் ஓடும் அருவிறாறும் (மல்வத்து ஓயா, கதம்பநதி) இடையறுத்து ஓடும்கல்லாறும் இதன் வளத்துக்கு காரணமாகின்றன. மேலும் பாவற்குளம், முகத்தான்குளம், வாகைகட்டிய ஒலுக்குளம் மணியர்குளம், செட்டிகுளம், நொச்சிகுளம், நேரியகுளம், சிப்பிக்குளம், இலுப்பைக்குளம், தம்பன்னாக்குளம், கொங்கராயன்குளம், ஆண்டியாபுளியங்குளம் முதலான பெரிதும் சிறிதுமான குளங்கள் செட்டிகுளப் பிரதேசத்தைச் செல்வம் கொழிக்கும் பூமியாக வந்தோரை வாழவைக்கும் பிரதேசமாக மாற்றுவதற்கு மூல காரணங்களாக அமைந்தன.

செட்டிகுள பிரதேசமானது வன்னிப் பிரதேசத்தில் பனங்காமம், கருநாவற்பற்று, தென்னமரவாடி, கரிக்கட்டுமூலை போன்றவற்றைபோல நீண்டதொரு வரலாற்றுப் பின்னனியையும் தனக்கென்ற தனித்துவமான மதப்பாரம்பரியங்களையும் கொண்டுள்ளது. இப்பிரதேசமானது காலத்துக்கு காலம் குடியோற்றப்பட்ட மக்களை கொண்ட பிரதேசம் என்ற கருத்து மேலெழுந்து நிலவினாலும் அங்கு காணப்பட்ட தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் 16ஆம் நூற்றாண்டின் வையாபுரி ஐயரால் எழுதப்பட்ட வையாபாடல் என்ற வரலாற்று நூலின் மூலமாகவும், வன்னிப் பிரதேச ஆங்கிலேய அரசின் அதிகாரியாக விளங்கிய ஜே.பி.லூயிஸ் அவர்களது Manual of vanni என்ற நூலின் மூலமாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாகவும், இன்று இப்பிரதேச மக்களால் பேணப்பட்டு வருகின்ற மரபுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் இங்கு இருந்ததை அவதானிக்க முடிகின்றது.

செட்டிகுளமும் ஆதிக் குடிகளும்.

செட்டிகுளம் பிரதேசமானது இலங்கையின் ஆதிக்குடிகளாகிய நாகர், இயக்கர் ஆகியோரது காலத்திலேயே வாழ்வியற் புலமாக காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. மகாவம்ச குறிப்பின்படி இயக்கர் மகியங்கனையிலும் வக்கலையிலும் நாகர் நாகதீபத்திலும் களனியிலும் இருத்ததாக அறிய முடிகின்றது அந்த வகையில் இயக்கர் நாகரது பாரம்பரிய மரபில் வந்தவர்களே பிற்கால வேடர்களாக மாறுதல் பெறுகின்றனர். செட்டிகுளப் பிரதேசத்துக்கு அருகில் உள்ள தத்திரிமலையில் காணப்படுகின்ற மிருகத்தின் எலும்பினால் வரையப்பட்டு இருக்கும் கிறுக்கல் சித்திரங்களையும், எழுத்துக்களையும் இப்பகுதியில் இருந்த வேடர்கவழிவந்தோர் வரைந்துள்ளனர் என அறிய முடிகின்றது. அதனை போன்று வேட்டையாடுதலை மையமாக கொண்ட மக்கள் கூட்டத்தினர் அண்மைக்காலம் வரை செட்டிகுளப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தமையையும் இன்று மகியங்கனையில் வேடர் வழிவந்தோர் வாழ்வதையும் அவ்வழி வந்த "திசகாமி' என்பவன் அங்கே வாழ்ந்து அண்மையில் மறைந்தமையையும் அவர்கள் மரபில் வந்தோர் இன்றும் தமது குல வழி மரபுகளை பேணுவதையும் அவதானிக்கலாம். அதனைப் போன்று செட்டிகுளப் பிரதோசத்தில் முசல்குத்தி கொங்கராயன்குளம், பாவற்குளம், மதவுவைத்தகுளம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற பாறைத் தொடர்புகளிலே காணப்படும் குகைகளில் இத்தகைய வேட்டையாடல் தொழிலை மையமாக கொண்ட மக்கள் வாழ்த்து வந்தமைக்கான பல தடயங்கள் இன்னும் காணப்படுகின்றன. கல் ஆயுதங்கள் எண்ணிக்கைக் கோடுகள் என்பன இவற்றுள் சிலவாகும்.

ஈழத்தின் இன்றைய நீர்வள நாகரீக பண்பாட்டுக்கு வழிகாட்டியாக மகாவம்சம் கூறும் விஜயன் தம்பன்னியில் வந்துஇறங்கிய மல்வத்து ஓயா (அருவி ஆறு) வழியே நாளடைவில்

அனுராதபுரத்தை அடைந்தான் என மகாவம்சம் கூறுகிறது. மல்வத்து ஓயா செட்டிகுளப் பிரதேசத்தின் தெற்கே எல்லையாக அமைவதால் விஜயன் ஆதிமக்களின் வழித் தோன்றலாகிய குவேனியை அடக்கியதைப் போன்று இப்பிரதேசத்திலிருந்து மக்களையும் அவன் அடக்கிதன் ஆதிக்கத்தை நிலை நாட்டியதற்கு புவியியல் நிலைகள் ஏதுக்களாக அமைந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

இதே போன்று வன்னியர்கள் அடங்காப்பற்றில் குடியேறுவதற்கு முன்னர் அங்கிருந்த ஆதிக்குடிகளோடு யுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டதாக வையாபாடல் 35 ஆவது செய்யுள் கீழ்வருமாறு கூறுகின்றது.

வாழ்த்திருக்கும் காலமதிற் றனிக்கல்
வரையதனிற் சகரனென்று மகர னெனறும்
தாழ்ந்த குல வேடர்படை யுடனே கூடித்
தரணிதனி லரசாக வாழ நானி
வாழ்ந்த மனத் தரக்கரிரா மருக்குத் தோற்றே
யகன்றநாட் சதர்கிழக்கு மூலை தன்னி
வாழ்ந்தவிழி யோர்மேற்கு மூலை நாட்டி
வரசுபுரிந்த தாரநில முடையோம ரென்ன.

செட்டிகுளப் பிரதேசத்தின் குளங்கள் அதன் குளக்கட்டுக்கள், கலிங்குகள் என்பனவற்றின் அமைப்புக்களாகக் கொண்டு நோக்குகின்ற போது கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலம் இருந்தே செட்டிகுளப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்து வந்தமையை அறிய முடிகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தை சார்ந்த குளங்களில் ஒன்றாக பாவற்குளம் விளங்குகின்றது. இலங்கையில் உள்ள மற்றெந்தக் குளத்துக்கும் இல்லாத "கண்மாய்கள்' ஐந்து இக் குளத்தில் காணப்படுகின்றன. ஒத்த சிங்களப் பெயர்கள் இல்லாத குளங்களில் இதுவும் ஒன்றுாதும். இதனைக் கொண்டே தமிழர்கள் மிகவும் பழங்காலம் தொடக்கம் இப்பிரதேசங்களில் வாழ்ந்துள்ளார்கள் என்பதனை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட கால அணைக்கட்டுக்களில் ஒன்றாக கல்லாற்றில் உள்ள குறிஞ்சாக்குளத்தேக்கமும் காணப்படுகின்றது.

செட்டிகுளமும் வன்னியரும்

அக்கினி குலத்தை சார்தவர்களாகிய வன்னியர்கள் மதுரை, காரைக்கால், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மலையாளம், தொண்டைமண்டலம், வடகிரிநாடு, ஆகிய பிரதேசங்களில் இருந்து ஈழத்து வன்னிப் பகுதிகளுக்கு வருகை தந்ததாக வையா பாடல் கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

கோணேசர் கல்வெட்டின்படி கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்த குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வர நாதருக்கு சேவை செய்யவென மருங்கூரிலிருந்து முப்பது வன்னியர்களையும் கொண்டுவந்து குடியேற்றினான் எனவும், வையாபாடற் குறிப்பின்படி மதுராபுரியில் இருந்து அறுபது வன்னியர்கள் மாருதப் பிரவையின் மகன் சிங்கமன்னனின் (வாலசிங்க வரராஜசிங்கன்) திருமனத்துக்காக வந்ததாகவும் வந்தவர்களான அறுபது பேருள் ஒரு வன்னியனைத் தவிர ஏனய அனைவரும் அடங்காப்பற்றுக்கு அனுப்பப்பட்டனர் எனவும் அறிய முடிகிறது. இவ்வாறு வன்னியின் குடியேற்றம் கி.மு ஐம்பதாம் நூற்றாண்டு வரையில் ஏற்பட்டதாக வையாபாடல் கூறுகின்றது.

இருப்பினும் செட்டிகுளப் பிரதேசத்திற்கு வருகை தந்த வன்னியர்கள் போர் வீரர்களாகவோ அல்லது தெழும்பர்களாகவோ வருகை தராது செல்வம் பொருந்திய வாணிபத் தொழிலைப் புரிகின்ற செட்டிமாரது பரம்பரையில் வந்தவர்களே செட்டிகுள பிரதேசத்தில் சிறப்பான குடியேற்றங்களை அமைத்திருந்ததாகத் தெரிகின்றது


அப்போது கலிமூவா யிரத்து
றானவரு டல்சென்ற தற்றாடன்னிற்

# A1 Bakery Delite

## Our Bread and Buns are Baked Fresh Everyday



சுவையான சம்பலுடன் இடியப்பமும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்



2 Fenton Road Unit # 8
Markham, Ontario

Tel: (905) 477-0720

Store Hours:

Mon-Fri 6:45AM - 8:00 PM
Sat-Sun 8:30AM - 9:00 PM

# PRIYAS

இலங்கை - இந்திய - கனேடிய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், இறச்சி மற்றும் கடலுணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.

தரமான VCD, DVD படங்கள்
வாடகைக்குக் கொடுக்கப்படும்

EAST-WEST INDIAN AND
SRI LANKAN GROCERIES

பிரியாஸ்

Tel: (905) 415-8508
Fax:(905) 415-0091

2 Fenton Road Unit 6 & 7
Markham, Ont., L3R 7B3
(Steeles/Brimley)



பிரியாஸ்

(905) 944 –1229

1661 Denison Street
Markham, Ontario
(Denison/Kennedy Mall)

செப்பரிய வல்லியர சாணி யென்னுஞ்
செந்திருவுக் குலகியல்முகத் தருளவேண்டித்
தப்பரிய வசியற்குலத்துதித்தேன் வீர
நாரயண னெனவுரைப்போ னோடமேறிந்
தப்பவை சேந் தருபுயலுக் கஞ்சியேகித்
தண்கடலில் மலையதனைச் சார்ந்தான்னறே.

அம்மலையைக் குதிரைமலை யென்ன வோதி
யதனடைதாய்க் குட்டிமர மமைத்துப் பின்னர்
மொம்மலுறு பொற்றலைக்கஞ் சாச்சஞ் சீவி
பென்னிருப்பு வெள்ளியெனப் புனையவல்ல
வெம்மருந்து மம்மலையி லியற்றி யானை
யெழுபதினாயிரஞ் சமந்த மொன்னுங் கூட்டி
யம்மலையினிடை வைத்தே காளி யென்னுந்
தையல்தனை யிறைஞ்சியவன் சார வைத்தான்.

அன்னதற்பின் கரையினிற்கள் ளச்சி லாப
மாழ்ந்தகடற் சிலாபமென வமைத்துப்
தன்னிரற் றிலங்கு மெழி லைய னாரைத்
தாவறுசீக் கடலதனுக்கு வைத்துப்
பின்னரவன் செட்டிகுளப் பகுதியில் வந்து
பேர் பெறுவவ வாலையெனு நதியுண்டாக்கி
நன்னகர் செட்டிக்குரிய குளமெறோர் பேர்
நாட்டினான் நாவலர்கள் நயந்து போற்ற.

என்ற மேற்படி வையா பாடல் 30,31,32 ஆகிய செய்யுட்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது கலியாண்டு 3392 இல் (கி.பி 199) வீர நாராயண செட்டி என்பவன் மன்னாரின் இன்றைய அரிப்பில் பாண்டியனது மகளாகிய சித்திராங்கனை என்ற அல்லி அரசாணிக்கு முத்து கொடுப்பதற்காக ஒடத்தில் புறப்பட்டுச் சொன்றான். கடலில் ஏற்பட்ட புயலினால் அஞ்சி அல்லிராணி இருக்கும் அரிப்புக்கு செல்லாது அதற்துத் தொலைவில் உள்ள கடல் மலையைச் சார்ந்தான். அம்மலைக்கு குதிரைமலை என்று பெயரிட்டான். தனது ஒடத்தில் கொண்டு வந்த எழுபதினாயிரம் யானைகள் சுமக்கதக்க பொன், இரும்பு, வெள்ளி, என்பனவற்றை அம்மலையினிடையே புதைத்து வைத்தான். அதற்குக் காவலாக காளி என்னும் தெய்வத்தினை வணங்கி அமைத்தான். கடற்சிலாபமுண்டாக்கி அங்கே ஐயனாரையும் நிறுவி செட்டிகுள பகுதி நோக்கிவந்து அங்கே தங்கியிருந்து வவ்வாலை என்ற கேணியையும் அமைத்தான். என அறிய முடிகின்றது. அத்துடன் வீரநாராயணச்செட்டி என்ற பெயருடைய அச் செட்டியார்தான் அவ்வாறு வந்து இறங்கிய இடத்துக்கு செட்டிகுளம் என்ற பெயரைச் சூட்டினார். (நன்னகர் செட்டிக்குரிய குளமென்றோர் பெயரும் நாட்டினான்.

சுமார் கி.பி 247 இல் மதுரையில் இருந்து பரதவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற வணிகனின் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்கு கரையை வந்து அடைந்தான் என்றும் பின் தன்னைச் சேர்ந்தவர்களுடன் செட்டிகுளத்திற் குடியேறி அங்கு வவ்வாலை என்ற கேணியொன்றையும் சந்திரசேகருக்கு கோயில் ஒண்றையும் சுமார் 289 இல் அமைத்தான் என்று manual of vauni என்ற நூலில் லூயிஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

வீரநாரயண செட்டி தமிழகத்தின் கொங்குநாட்டுக் குதிரைமலை என்ற ஊரில் இருந்து வந்தவனாக இருக்கலாம். அதனாற் போலும் அவன் இலங்கையில் முதல் அடைந்த இடத்துக்கு குதிரைமலையெனப் பெயரிட்டான். எனக் கூறும் கலாநிதி க.செ.நடராசா அவர்களின் கருத்தும் மனங்கௌள்ளத்தக்கதாகும்

# ASIAN SALON

**ஏசியன் சலூான்**

**Unisex Hair Design**

**Specialized in Hair Design, Make-up, Dress Making, Gifts and Bouquets..**



*Open 7 Days a Week*



1233 Ellesmere Road
Scarborough, Ontario
M1P 2X8
(Ellesmere/Midland)

**Tel: (416) 757-8002**



# ELLESMERE FISH & MEAT MARKET



**Direct Importers of Fresh Fish from Florida, Trinidad & Sri Lanka**

**- FISH - MEAT - FROZEN FOODS**

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட நண்டை இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

**1243 Ellesmere Road**
**Scarborough, ON, M1P 2X8**

TEL/FAX: **(416) 285-8558**

அடங்காப்பற்றின் பகுதிகள் எங்கனும் வன்னியரது ஆட்சியும் ஆதிக்கமும் காலத்திற்குகாலம் அதிகரிக்கலாயின. வீரநாராயண செட்டிக்குப் பின்னர் செட்டிகுளப் பகுதியானது நடுச்செட்டிகுளம், வெங்கலச்செட்டிகுளம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு வன்னிப்பிரமுகர்கள் தலைமை தாங்கியதை அறிய முடிகின்றது. அந்த வகையில்

காவலவர் வங்கிஸகத்தோன் தேவராயன்.
கதித்திடு நற் கிளைகாத்தான் கோடி தேவன்
ஏவர்களும் புகள் கந்த வனததானென்போ
னிவர்கள் செட்டிகுளப் பகுதியின் முதன்மையானார்
தாவுநகர் மன்னவனத் துங்க ராயன்
சதுரகிரி யோன்பனங் காமந் தன்னில்
மேலவர்கள் புகள்வீற் நிருந்தான் மிக்க
மேன்மையுடன் யாவர்களும் போற்ற மாதோ.

என்ற 78 ஆவது வையாபாடல் செய்யுளின்படி தேவராயன்,கொடித்தேவன்,கந்தவனத்தான் ஆகிய செட்டி மரபில் வந்த வன்னியர்கள் தலைமை தாங்கியுள்ளனர்.

செட்டிகுளமும் ஐரோப்பியரும்.

ஈழத்தின் ஏனைய பிரதேசங்கள் எவ்வாறு காலத்திற்குகாலம் ஐரோப்பியரது ஆதிக்கத்தின் கீழ் வந்ததோ அதனைப் போன்று செட்டிகுளப் பிரதோசமும் ஏனைய அடங்காப்பற்றின் வன்னிப் பிரதேசங்களை விட ஆரம்பத்திலேயே அவர்தம் ஆட்சிக்குள் வந்தது. செட்டிகுளப் பிரதோசத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிய போத்துக்கோய தளபதி பற்றி வையா பாடலின் 33 ஆவது செய்யுளில் வரும்

"லந்த நகர் பறங்கியரை சாண்டானந்தா
ளதிருட்டா னெனும் பறங்கி யரசை யாண்டான்.

பறங்கியர் (போத்துக்கேயர்) செட்டிகுளத்தை ஆண்டமையால் பறங்கிச் செட்டிகுளம் எனற பிரிவு செட்டிகுளப்பற்றில் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தது. சி.எஸ். நவரத்தினம் அவர்கள் தனது வன்னியும் வன்னியர்களும் என்ற நூலில் பறங்கிச் செட்டிகுளத்தில் போத்துக்கேயரின் வழிவந்தவர்களை அவர்களது நிறத்தைக் கொண்டு அறியக் கூடியதாக இருக்கின்றதுதொனவும் அப்பிரதேசத்துக்குரிய ஆடைகளையே அவர்கள் அணிகின்றார்கள் எனவும் கூறியுள்ளார்.


இதே போன்று கரவைக்கிழார் எழதிய தணியாத தாகம் என்ற வரலாற்றுக் கற்பனை நாடக நூலின் மூலம் போத்துக்கோயர் எவ்வளவு தூரம் செட்டிகுளப் பகுதியை தமது ஆணைக்கு உட்படுத்தினார்கள் என்பதனை அறியலாம். இன்னும் பறையனாலங்குளத்திலும் போர்த்துக்கேயரது ஆதிக்கம் நிலவியதற்கான தடயங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒல்லாந்தரது காலத்திலும் பூநகரி, பறையனாலம்குளம், போன்ற வன்னி அரசின் பகுதிகள் ஒல்லாந்த அதிபதிகளின் ஆதிக்கத்தில் இருந்ததை அறிய முடிகின்றது. லூயிஸ் அவர்கள் ஒல்லாந்தர் காலத்து வன்முறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் புதுக்குடியிருப்பில் இலங்கை நாராயணனும் முள்ளியவளையில் பெரிய மெயினாரும் கருநாவல் பற்றில் அம்பல வன்னியனும் தென்னமரவாடியில் சேதுகாவல வன்னியரும் பூநகரியில் பொன் கஸ்பார் கவுசையனாரும் ஆட்சி புரிந்ததாகக் கூறுகின்றார்.


இதே போன்று ஆங்கிலேயர் காலத்திலும் செட்டிகுளப் பிரதேசம் மன்னாருக்கான போக்குவரத்துப் பாதையின் மையமாக விளங்கியமையும் ஆங்கிலேயர் இந்தியத் ஆதாட்டத் தொழிலாளர்களை இப்பிரதேசத்தினூாமாகவே அழைத்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இன்றும் செட்டிகுளம் பறையனாலங் குளம் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர் கால வாடி வீடுகளும் குதிரை லயங்களும் காணப்படுகின்றன.

# BAHAVAN VEDIO & RENOVATION

உங்கள் அனைத்து வீடியோ படப்பிடிப்புத் தேவைகளுக்கும் மற்றும் சகல வீட்டுத் திருத்த நிர்மாண வேலைகளை நியாயமான விலையில் செய்திடவும் எம்மை அழையுங்கள்



**பாலா ராஜா**
**Bala Raja**



**Phone: (416) 492-4861**
**Cell: (416) 520-7547**

**20 Brookmill Blvd Unit # 109**
**Scarborough, Ontario**



# LOURDES - லூர்ட்ஸ்

LOURDES

## EAST & WEST INDIAN STORE
## CONVENIENCE & GROCERY

**Importers, Distributor & Retails of ......**
- East & West Indian Groceries
- Fresh Fish & Meat
- *Fresh Vegetables & Fruits*
- Frozen Food

லூர்ட்ஸ்
பல்பொருள்
அங்காடி

*உடன் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன், இறைச்சி வகைகள் மற்றும் பழ வகைகள் இன்னும் பல....*

**Tel: (416) 266-5025**
**Fax: (416) 266-2674**

195-199 Markham Road, Scarborough, Ontario, M1J 3C3
(Markham/Eglinton)

செட்டிகுளமும் தொல்பொருளியலும்

பாழடைந்த குளங்களையும் சிதைந்த குள வரப்புக்களையும் அழிந்த மத வழிபாட்டு நிலையங்களையும் இடிந்த குடியிருப்புக்களையும் செட்டிகுளப் பிரதேசத்தில் இன்றும் காணலாம்.

முசல்க்குத்தியில் ஓர் இராசதானி இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. தோணிக்கல்(தோணி போன்ற கல்லமைப்பு), களிமண்ணினால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள், சுட்ட களிமண் தகடுகள் இலச்சனைகள், மன்னரது மாளிகை இருந்ததற்காள நீண்ட மண்டபம் ஒன்றின் சிதைவுகள் என்பன இங்கு காணப்படுகின்றன. இம் முசல்க்குத்தியின் கன்னிமடு என்ற இடத்தில் இருக்கும் பாறைத் தொடர் குகைகளுக்கிடையேயும் பல கல்லாசனங்கள் காணப்படுகின்றன. இப்பாறைத் தொடர் ஒன்றில் மூன்று வரிகளில் ஆன பிராமிக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது.

மணியர் குளத்தின் வைரவர் ஆலயத்திற்குப் பின்னால் உள்ள காடடர்ந்த மணியர்குள வாய்க்கால் செல்லும் பிரதேசத்திலும் பல தொல்பொருட் சிதைவுகள் காணப்படுகின்றன. அவை பெரிதும் சிறிதுமான கற் தூண்கள். அத் தூண்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண் நிறுத்திகள், செங்கற்களின் சிதைவுகள், உடைந்த மட்பாண்ட ஓடுகள் எனப் பலவற்றை அவதானிக்க முடிகிறது. இவை போன்ற தொல்பொருட் சிதைவுகள் பாவற்குளம், விறுமன்கல்லு, சின்னப்புளியாலங்குளம், கந்தசாமி நகர், விளாத்திக்குளம், அருவித்தோட்டம், கிறித்தோகுளம், அல்லைவெளி, பட்டுவெளி, சாந்தான் அளை,வரவுசேனைக் குளம், பெரிய தம்பனை, கப்பாச்சிமுகத்தான் குளம், குறிஞ்சாக் குளம், கொங்கராயன் குளம், துட்டுவாகை மயில் முட்டை இட்ட குளம், பூவரசன் குளம், பறையனாலங் குளம், மதவு வைத்த குளம், நெடுங்கரைச் சேனை, இலுப்பைக் குளம், ஆனை விழுந்தான், பெரியகட்டு முதலான இடங்களிலும் காணப்படுகின்றன.

செட்டிகுளப் பிரதேச மக்கள் பாவித்த பாரிய திரிகைக் கற்கள்(ஆட்டுக்கற்கள்) வீரபுரம் செட்டிகுளம் மகாவித்தியாலய பின்வளவு, முகத்தான்குள புதையல்பிட்டி ஒழுங்கை, செட்டிகுள காவல் நிலைய முன்புறம்போன்ற இடங்களில் காணப்படுகின்றன. எனினும் இவற்றைச் சிலர் பாரிய தூண்களை நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண் நிறுத்திகளாகவும் கருதுகின்றனர்.

பாவற்குளம் சின்னத்தம்பனையில் கண்டு எடுக்கப்பட்டு வவுனியா தொல்பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இரும்பால் ஆன கத்தி, சாக்கூசி, விளக்கு ஏற்றப்பயன்படும் சிட்டி, கதவுக்கைபிடி என்பன வன்னிப் பிரதானிகளது காலத்தைச் சார்ந்தவைகளாகக் காணப்படுகின்றன.

கிறிஸ்தோகு குளம் கல்லற்றின் கரையில் உள்ள அல்லக்கட்டில் ஐ.தம்பு என்னும் ஊரவர்கண்டு எடுத்த பாசிமணிகளும் உடைந்த வளையல்களும் நீண்ட வரலாற்றைப் பிரதிபலிக்கின்ற தொல்பொருட்களாகும். செட்டிகுளம் இரண்டாம் பண்ணையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மகிடாசுரமர்த்தனியின் சிலை என்பனவும் செட்டிகுளப் பிரதோசத்தின் தொன்மையை பறைசாற்றுகின்றன.

இன்று வவுனியா தொல்பொருட் காட்சிச் சாலையில் காணப்படுகின்ற பத்ம பீடத்தில் நிற்கும் நிலையில உள்ள ஆணினது உருவமானது செட்டிகுளப் பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டு வவுனியா அரசாங்க அதிபரின் இல்லத்தினால் வழங்கப்பட்டதாக கருதப்படுகின்றது. இது தலையும் இரு கைகளும் சிதைந்த நிலையில் மார்பிலே நீண்ட பூநூலும் கழுத்திலும் இடையிலும் பாதத்திலும் ஆபரணங்களும் உள்ளதாகக் காணப்படுவதனால் இச்சிலை மன்னனொருவனின் சிலை எனக் கருத முடிகின்றது. ஆனால் தொல் பொருள் திணைக்கள அறிக்கையில் அகிலேஸ்வரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றும் செட்டிகுளப் பிரதேசத்தின் பல இடங்களில் பல தொல் பொருட்கள் வெளிப்படுவதும் அவை இன்னதென அறியப்படாமையாலேயே அழிக்கப்படுவதும் வருந்தத்தக்க செயலாகும்.

சந்திரசேகரீஸ்வரம்

ஈழத்திற்கு விஜயன் வருகை தருகின்றபோது வடக்கே நகுலேஸ்வரமும் கிழக்கே கோணேஸ்வரமும் மேற்கே திருக்கேதீஸ்வரமும் முன்னேஸ்வமும் தெற்கே தெய்வேந்திர


# BALA INCOME TAX SERVICES

## பாலா வருமான வரிச் சேவைகள்

- Income Tax
- Immigration

EFILE

- வருமானவரி
- குடிவரவு





**தொடர்புகளுக்கு:**
P. Balasubramanium B.A (Bala)

15 Maresfield Drive
Scarborough, ON, M1V 2W9
(McNicoll/McCowan)

**Tel: (416) 335-3233**
**Fax: (416) 335-3235**

முனையில் சந்திரசேகரீஸ்வரமும் என்ற ஐம்பெரும் ஈஸ்வரங்கள் ஈழத்தின் நான்கு திசைகளிலும் இருந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. மேற்கூறிய ஆலயங்களில் தெய்வேந்திர முனையில் அமைந்திருந்த சந்திரசேகரீஸ்வரம் என்ற ஆலயத்தைத் தவிர ஏனைய ஆலயங்கள் எல்லாம் இன்று புனருத்தானம் பெற்று பண்டைய பெருமை கூறும் வழிபாட்டுத் தலங்களாக மாறி உள்ளன.

இன்றய மாத்தறை மாவட்டத்தின் தெவினுவரவில்(தெய்வேந்திரமுனை) காணப்பட்ட சந்திரசேகரீஸ்வரம் என்ற ஆலயம் போர்த்துக்கேயரது வருகைக்கு முன்னர் சிறப்போடு இருந்ததை தொலமி, இப்னுபதுாதா,கியுதோ, மக்கன்சி, ஜோன் வில்லே முதலான தேச சஞ்சாரிகளது குறிப்புக்களில் இருந்து அறிய முடிகின்றது. 1588ஆம் ஆண்டு போர்த்துக்கேய தளபதி கியூதோ தலமையில் சென்ற போர்த்துக்கேய படைகள் இக்கோயிலை அழித்தனர். இவ்வாறு அழிந்த கோவிலின் எச்சங்களான நந்தி, 21/2 அடி உயரமுள்ள சிவலிங்கம் கல்லான வாயிற் தூண்கள் என்பன இங்கு காணப்படுகின்றன. தேவனுக்கு உரிய துறையாகிய தெய்வேந்திரமுனையில் காணப்பட்ட இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த சிவத் தலத்தினை மீண்டும் புனருத்தானம் செய்து பண்டைய பெருமை கூறும் சிவத்தலங்களாக அமைக்க யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை.

மேற்படி தலத்தினைப் போன்ற சிறப்புக்கள் வாய்ந்த சந்திரசேரீஸ்வரம் என்ற பழம் பெரும் சிவத்தலம் ஒன்று செட்டிகுளப் பகுதியில் இருந்ததாக அறிய முடிகின்றது. அதாவது வையாடல்க் குறிப்பின்படி வீரநாராயணச் செட்டி என்பவரால் செட்டிகுளத்தில் சந்திரசேகரீஸ்வரருக்கு கோயில் அமைத்ததாக அறிய முடிகின்றது.

அன்னதற் பின் கரையினிற்கள் ளச்சிலாப
மாழ்ந்தகடற் சிலாபமென வமைத்துப் பின்னர்த்
தன்னிகரற் றிலங்கு மொழி லைய னானரத்
தாவறுசீர்க் கடலதனுக் கருகு வைத்துப்
பின்னரவன் செட்டிகுளப் பகுதியில் வந்து
பேர்பெறுவவ் வாலையெனு நதியுண்டாக்கி
நன்னகர் செட் டிக்குரிய குளமென் றோர்பேர்
நாட்டினான் நாவலர்கள் நயந்து போற்ற

சந்திரசே கரன்கோயில் தனையுண் டாத்கித்
தாரணியுள் ளோரெவருந் தாழ்ந்து போற்று
வந்த நதிக் கௌருபுடையோர் கிணற்றின் மீதி
லறுபதினா யிரம்யானை சுமந்த பாரத்
தந்திடு பொன் னையும் வைத்துச் சடா சுமுனி
சாத்தானும் வைத் தேகாலஞ் சென்றா னப்பா
லந்தநகர் பறங்கியர சாண்டா னந்தா
ளதிருட்டா னெனும் பறங்கி யரசை யாண்டன்.

மேற்படி வையா பாடல் 32,33 செய்யுளின் படி செட்டிகுளத்துக்கு வருகை தந்த வீரநாரயணசெட்டி அங்கு வவ்வாலை என்ற கேணியையும் அதற்கு அண்மையில் சந்திரசேகரன் ஆலயத்தையும் நிறுவினான். அத்தகைய சந்திரசேகரன் சிவாலயத்தை பரிபாலனம் செய்வதற்காக அறுபதினாயிரம் யானைகளை சுமக்கத்தக்க பொன்னையும் பெறுமதி வாய்த திரவியத்தையும் அங்கேயுள்ள வவ்வாலைக் கேணிக்குள் அமைத்திருந்த ஆழக்கிணற்றினனுள் இட்டுப் புதைத்தான் என்றும் அத்திரவியத்தை காவல் செய்வதற்காக சடாசுமுனி,சாத்தான் ஆகிய தேவதைகளை நியமித்தான் என மேற்படி செய்யுள்களின் மூலம் அறிய முடிகின்றது.

இதே போன்று J.P லூாயிஸ் அவர்களும் கி.பி 247 இல் மதுரையில் இருந்து வருகை தந்த வீரநாரயணச்செட்டி கி.பி 285 இல் வவ்வாலை என்ற கேணியையும் அதற்கு அண்மையில் சந்திரசேகரன் என்ற ஆலயத்தையும் அமைத்ததாக தனது நூலில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு வீரநாராயனச் செட்டியால் அமைக்கப்பட்ட சந்திரசேகரன் ஆலயத்தை பிற்காலத்தில் யாழ்ப்பாண

INDUSTRIAL ALLIANCE
LIFE INSURANCE COMPANY

NORWICH UNION

USC
EDUCATION SAVINGS PLANS

*"தன்னினம் தாழ்ந்தபின் உயிர் வாழாமை"*
கரும்புலிகள்.

**We will shop around and select the best company with competitive price.**

உங்கள் வாழ்க்கைக்குத்
தேவையான காப்புறுதியைப்
பல காப்புறுதிக் கம்பனிகளிடம்
இருந்து பரிசீலித்துக் குறைந்த
விலையில் பெற்றுத்தரத் தயாராக
இருக்கின்றோம்.

- ☑ நம்பிக்கை
- ☑ நாணயம்
- ☑ உத்தரவாதம்




T. K. Thevarajah


**Res: (905) 471-9061**
**Bus: (905) 762-1288 x248**
**Fax: (905) 762-1688**

# சங்கானைச் சந்தை

*FOR RETAIL & WHOLESALE*

- ☑ மரக்கறிச் சந்தை
- ☑ மீன் சந்தை
- ☑ இறைச்சிச் சந்தை
- ☑ பலசரக்குச் சந்தை





**2800 Eglinton Avenue East, Unit #17**
**Scarborough, ON, M1J 2C9**
**(Eglinton/Brimley)**
**(416) 261-1392**

இராச்சியத்தை ஆண்ட பரராயசிங்க மன்னனும் ஏனைய வன்னியின் குறுநில மன்னர்களும் வழிபட்டதாக அறிய முடிகின்றது.

சதுர் வேத மனுசாத்திரஞ் சகல கலை யுணர்வுகளுஞ் சந்திரசேகரன்
துதிகூறுந் துங்கமாப் பாணனிவர் தமையழைத்தெழமென் னாளும்
எதுதீமை வரிதுமவை யடராம லிரட்சைபுரி தெய்வ மென்றே
மதிநேரு முகுமடவாள் விடையளிக்க வனைவரையு மனுப்பினானே.

ஊர்முத்த நயினாரைக் கோவில்தனி லுறையவைத்தங் குண்மை யாகச்
சீர்பூத்த சந்திரசே கரன்பூசை செய்யவெனச் செம்பி நாளும்
ஏர்பூத்த பொற்பணங்க ளறுபத்தொன் நீத்துதிருப் பூசைக்கென்று
வார்பூத்த முலைமடவார் தங்களோடு பரராச மன்னன் வாழ்ந்தான்.

என்ற வையாபாடலின் 93,97 செய்யுட்கள் சான்றாகும். மேற்படி வரலாற்றுக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இச் சந்திரசேகரீஸ்வர ஆலயத்தையும் அது அமைந்துள்ள பிரதேசங்களையும் நோக்குகையில் இன்றைய செட்டிகுளத்தினை அடுத்து அமைந்துள்ள முதலியார் குளதடதில் இருந்து சிப்பிக்குளம் ஊடாக கப்பாச்சி என்ற கிராமத்தினை அடையும்போது அங்கு ஓர் கேணி காணப்படுவதை காணலாம். இதுவே வையாபாடல் கூறும் கேணியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அக்ணேிக்கு அண்மையில் உடைந்த நிலையில் காணப்படுகின்ற இந்து ஆலயமெனடறின் சிதைவுகளும் பரந்து காணப்படுகின்றது. நீண்டு பின்னர் வளைந்து "ட" வடிவில் காணப்படுகின்ற அக் கேணியானது மிகவும் ஆழமுடையதாக காணப்படுகின்றது.

இப் பிரதேச மக்களோடு நேர்முகம் காணல் வாயிலாக இக் கேணியினதும் ஆலயம் பற்றியதுமான பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்களது கூற்றின்படி கொடிய வரட்சிக்காலத்தில் கூட இக் கேணி வற்றவில்லை எனவும் அதன் ஆழம் இன்னும் காணப்படவில்லை எனவும் கூறுகின்றனர். வையா பாடலில் கூறப்பட்டது போன்று வீரநாரயணச் செட்டியால் புதைக்கப்பட்ட புதையல்கள் இன்னும் இருப்பதாக இப் பிரதேச மக்கள் நம்புகின்றனர். 1962 இல் கப்பாச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் சிறிய தங்க முலாம் இடப்பட்ட கலப்பை ஒன்றை எடுத்ததாக அறிய முடிகின்றது. மேலும் தங்கத் தோணி, தங்க கட்டில் என்பனவும் ஒருசிலரது கண்களுக்கு தென்பட்டு மறைந்ததாக அவர்களது கூற்றுக்களில் இருந்து அறிய முடிகின்றது. அங்கு சிதைந்து காணப்படுகின்ற சந்திர கோதீஸ்வரம் எனக்கருதப் படுகின்ற ஆலயத்தின் அழிபாடுகளை நோக்குகையில் பெரிதும் சிறிதுமான கருங்கற் தூண்கள் அத் தூண்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண்நிறுத்தித் தாங்கிகள் வாசற் படிக்கட்டுக்கள் மற்றும் சுடப்பட்ட சிறிதும் பெரிதுமான செங்கட்டிகள் என்பன காணப்படுகின்றன.

திருக்கேதீஸ்வரம், வவுனிக்குளம், உருத்திரபுரம், இரணை இலுப்பைக்குளம், சாத்திரியார் கூளாம்குளம் போன்ற வன்னி மன்னர்களது ஆதரவினை பெற்ற இடங்களில் கண்டு எடுக்கப்பட்ட பெரிய சிவலிங்கங்களைப் போல் இவ் அழிந்த சிவாலயத்தில் இருந்து கண்டெடுக்கப்படவில்லை என்னும் ஆலய சூழலைச் புதைபொருள் ஆய்வுக்கு உட்படுத்தும் போது திருக்கேதீச்சரம் போன்று பல தொண்மையான இவ் ஆலயத்திற்குரிய தெய்வத் திருவுருவங்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

இன்னும் இவ்வாலயக் கேணிக்கு அருகில் உள்ள வயதை மதிக்க முடியாத விருட்சங்களாகிய மருதமரம் பனிச்சை மரம், ஆலமரம் என்பன காணப்படுகின்றன. ஆலயக்கேணிக்கு அண்மையில் காணப்படுகின்ற ஆலமரத்தை கல்லாலமரம் எனக் கருதுகின்றனர். சிவபெருமான் ஞான தெட்சனா மூர்த்தியாக பிரம்ம குமாரர்களாகிய சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகியோருக்கு கல்லாலமர நிழலிலே ஞான உபதேசம் செய்தமை குறிப்பிடத்தக்கது. வவ்வாலைக் கேணியையும் சந்திரசேகரர் ஆலயத்தையும் அன்டிய இன்றைய காட்டுப் பகுதியினுள் பல சிதைந்த கட்டங்கள் காணப்படுகின்றன. அவை வீரநாராயணச் செட்டி தன்னுடன் மதுரையில் இருந்து அழைத்து வந்த பரதர்களின் இருப்பிடங்களாக இருக்கலாம். மேலும் இன்றைய மதவாச்சி, மன்னார்வீதி அன்று இவ்வவ்வாலையை அன்மித்த கப்பாச்சியை ஊடறுத்ததாகவே அமைந்தது. அதாவது தந்திரிமலை, கப்பாச்சி, வீரமாணிக்கபுரம், கற்கடந்த குளம், குதிலைமலை, மாதோட்டம் என்ற ஒழுங்கிலேயே அமைந்திருந்தது. மாதோட்டத்தில் திருக்கேதீஸ்வர ஆலயமும் குதிரைமலையில் அஸ்வகிலீஸ்வரர்


# எஸ். ரி. பி பூட் மார்க்கட்

உங்களின் விருப்பத் தெரிவுகளுக்கேற்ற பல வகைகளையும் தொகையான பொருட்களையும் இலங்கை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து தரும் ஒரே இடம்

மரக்கறிவகைகள், பழவகைகள், மீன்வகைகள், இறைச்சிவகைகள் அனைத்தும் ஒரே இடத்தில்


## இது மட்டுமா?

பெரியளவில் தெரிவுகள் உள்ளடங்கிய தமிழ்ச் சினிமா, நாடகக் கொப்பிகளும் பொற்றுக் கொள்ளக் கூடிய ஒரே இடம்



**We Stock......**

- ☑ **M & M Twins Products**
- ☑ **Larich Products**
- ☑ **Niru Products**
- ☑ **Ceycan Products**





**எஸ்.ரி.பி பூட் மார்க்கட்**

83 Kennedy Road, Suite #9
Brampton, Ontario
**T.P (905) 450-8433.**

ஆலயம் அமைந்திருப்பதற்கான சாத்தியங்கள் ஏதுவாக அமைகின்றன. திருக்கேதீஸ்வர புராதன சின்னங்களுக்கிடையே பாண்டியரது கலை மரபு காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. அதேபோல் மதுரையில் இருந்து வருகை தந்த வீரநாராயணச் செட்டி என்பவரால் இங்கும் பாண்டியரது கலை மரபில் ஆலயத்தை அமைத்திருக்க வாய்ப்புண்டு.

இவ்வாறு சிறப்புடைய வவ்வாலை கப்பாச்சி அகிய இடங்களில் குடியிருந்த மக்கள் இக் குடியிருப்புக்களில் இருந்து நீங்கியமைக்கான காரணம் எது எனச் சரியாக கூறமுடியாத போதும் பின் வரும் காரணங்கள் ஏதுக்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. வட புல யாழ்பாண மன்னர்களுக்கும் தென்புல சிங்கள மன்னர்களுக்கும் இடையே நடைபெற்ற யுத்தம் வரட்சி வெள்ளப்பெருக்கு, மலேரியா, கொள்ளை நோய், அருவி ஆற்றின் ஊடாக வில்பத்து காடுகளில் இருந்து வரும் யானைகள், காட்டெருமைகள் போன்ற விலங்குகளினால் எற்படும் ஆபத்துக்கள் என்பனவே அத்தகைய காரணிகளாக இருக்கலாம்.

இங்கு இருந்து இடம் பெயர்ந்த மக்கள் வாகை கட்டிய ஒலுக்குளம், காத்தான்குளம், (முகத்தான்குளம்) ஆகிய பகுதிகளில் குடியோறினர். இன்றைய முகத்தான் குளத்துக்கு அண்மையில் உள்ள பகுதிகளை மேலாய்வு செய்த போது அங்கு புராதன கட்டடங்களின் சிதைவுகள் இருக்கக் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய முகத்தான்குளம் வினாயகர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள பகுதி இவ்வூர் மக்களால் புதையல்பிட்டி எனக் கூறப்பட்டு வருகின்றது. இவ் இடத்தினை கூர்ந்து அவதானிக்கும் போது அங்கே ஒரு மத வழிபாட்டுத்தலம் இருந்ததற்கான சான்றாதாரங்கள் கானப்படுகின்றன. அதாவது பெரிதும் சிறிதுமான கற்துண்கள் அத்தூண்களை நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண்நிறுத்திகள், வாசற் படிக்கட்டுகள் என்பன காணப்படுகின்றன.

முகத்தான் குளப்பகுதி மக்களோடு நேர்முகம் காணல் வாயிலாக மேலும் பல தகவல்களை பெற முடிந்தது. திரு முருகேசு அவர்களது கூற்றுப்படி 1952ம் ஆண்டு இப் புதையல் பிட்டியில் இருந்து வெங்கலத்தினால் ஆன சிறிய சடராசர் உருவம் ஒன்றும், சிறிய செம்பு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறுகின்றார். அதே போன்று தற்போதைய முகத்தான்குளம் வினாயகர் ஆலய சிவாச்சாரியார் ஆகிய சிவஸ்ரீ சுந்தரானந்த சர்மா அவர்களும் மேற்படி புதையல் பிட்டியில் இருந்து சிறிய சிவலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக கூறுகின்றார். இதே போன்று 1984ல் செட்டிகுளம் கிராமக்கோட்டின் நீதவானாக விளங்கிய திரு உனப்புவ அவர்களும் இப் புதையல் பிட்டியை ஓர் வழிபாட்டு நிலையமாக இனம் கண்டதும் அதனை பாதுகாக்குமாறு இவ்வூர் மக்களை வேண்டிக் கொண்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

எனவே வல்வாலையில் அமைக்கப்பட்ட சந்திரகேதீஸ்வரர் ஆலயத்தின் தொடர்ச்சியாகவே இவ் ஆலயம் அமையலாம் என ஊகிக்க முடிகின்றது. அண்மைக் காலம்வரை செட்டிகுளப் பிரதேச மக்கள் ஆடி அமாவாசை தினத்தன்று ஆற்றும் பிதிர்க்கடன் சடங்குகளை இவ் வவ்வாலைக் கேணியில் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

### மகிடாசுர மர்த்தனி அம்மன் சிலை

செட்டிகுளப் பிரதேசத்தில் முன்னே நோக்கிய சிவ வழிபாட்டினைப் போன்று சக்தி வழிபாடும் சிறப்பாக அமைந்ததை நன்கு அவதானிக்க முடிகின்றது. வையாபாடல் குறிப்பின்படி வீரநாராயணச் செட்டி குதிரை மலையில் தான் புதைத்த புதையலைக் காக்க காளி வழிபாட்டினை ஆற்றியதை அறிய முடிகின்றது.

----- யானை எழபதினாயிரஞ் சுமந்த பொன்னுங் கூட்டி
யம்மலையிடை வைத்தே காளி என்னுந்
தையல் தன்னை யிறைஞ்சியவண் சார வைத்தான்


என்ற வையா பாடல் அடிகள் மூலம் அதனை நன்கு அவதானித்துக் கொள்ள முடிகின்றது. 1949ஆண்டு செட்டிகுளப் பிரதேசக் காடுகளை வெட்டி புதிய குடியேற்றங்களை மேற்கொள்கையில் அக்காடுகள்ல் மறைக்கப்பட்டு இருந்த புராதன ஆலயங்களின் சிதைவுகள், தெய்வத் திருவுருவங்கள், வன்னியரது இல்லங்களின் சிதைவுகள் என்பனவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய முகத்தான்குளம் இரண்டாம் பண்ணையாகக் காணப்படுகின்ற பிரதேசத்தை

# GOPAL DESIGN FURNITURE

## Direct from Manufactures

**For your professional home implement needs**

- New Store Renovation
- Kitchen Renovation
- Washroom Renovation
- Complete Basement
- Floor Tiling
- Dry Walling
- General Plumping Repairs



உங்கள் இல்லங்களை அலங்கரிக்க கனேடிய, இத்தாலிய, இலங்கை தளபாடங்களை உங்கள் விருப்பத்திற்கேற்ப அழகுற பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் வீடு, கடை புனரமைப்பு வேலைகளை திறம்பட செய்து கொள்வதற்கும் தயங்காமல் நாடவேண்டியவர்கள்..

**Gopal Design Furniture Mfg. Inc.**

**Tel: (416) 293-9814**
**1600 Brimley Road Unit #8**
**Scarborough, ON**
**(Brimley/Ellesmere)**

**Monday to Saturday 11:00 AM – 9:00PM**
**Sunday 12:00 PM – 7:00 PM**

வாடிக்கையாளர் நலன் கருதி எமது மற்றுமொரு சகோதர நிறுவனம் மார்க்கத்தில்...

# FONTENA DESIGN FURNITURE

FONTENA
Design Furniture

5051 Highway 7 East Unit #1
Markham, Ontario
Tel: (905) 944-1222
**(Highway 7/McCowan)**

காடு வெட்டும் போது நிலத்தில் புதையுண்டு இருந்த அழகிய மகிடாசுரமர்த்தனி அம்மன் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அச் சிலையை வழிபாட்டுப் பொருளாகக் கருதாது உடனடியாக அனுராதபுரம் தொல் பொருட் காட்சி சாலைக்கு அனுப்பினர். தற்பொது வவுனியா தொல் பொருட்காட்சி சாலையில் அவ் அழகிய சிலையைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இச் சிலையின் கலைத் தன்மையினை நோக்கம் போது இதுவரை ஈழத்தில் கண்டெடுக்கப்பட்ட மகிடாசுர மர்த்தனி அம்மன் சிலைகளில் இதுவே மிகப் பெரிதாகக் கருதப்படுகின்றது. ¾ உயரம் கொண்ட இச் சிலை கருங்கல்லினால் முன்பக்கம் மாத்திரம் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. தாமரை மலராசனத்தில் எழுந்து நிற்கும் இச் சிலையின் காலடியில் எருமைத் தலையும் இடது பக்கத்தில் பாயும் சிங்கமும் வலது பக்கத்தில் ஆட்டுக்கடா ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு கரங்களைக் கொண்ட இத் திருஉருவின் இடது புற மேற் கரம் சக்கரத்தினையும் வலது புற மேற்கரம் சங்கினையும் வலது புற கீழ்கரம் உடுக்கினையும் இடது புறகீழ்கரம் இடுப்பில் வைக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. இதன் இருகாதுச் சேனைகளும் நீண்டனவாகவும் அதில் அணியப்பட்ட ஆபரணங்கள் தோள்பட்டையில் தொடுமளவிற்கு நீண்டு அமையப் பெற்றுள்ளனவாகவும் உள்ளன. இடுப்பில் இருந்து முளங்கால் வரையிலான பகுதி ஆடைகளால் மறைக்கப்பட்டும் மேல் அவயங்கள் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகின்றன. மேலும் இச் சிலையில் காணப்படும் சிறப்பு என்ன வென்றால் சிவ முகூர்த்தங்களைப் போன்று இடுப்புப் பகுதியின் இரு கரைகளிலும் இருந்தும் இரு நாகங்கள் சீறிப்பாய்வது போல நாகங்கள் இடம் பெற்றுள்ளன. இதே போன்று தோள்பட்டையில் இருந்தும் இருநாகங்கள் சீறிப்பாய்வது போல் இவ் உருவம் காணப்படுகின்றது.

எனவே மேற்கூறிய சிலையை முழுமையாக நோக்குகின்ற போது கி.பி. 10ம் நூற்றாண்டினில் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. அதாவது ஈழத்தில் சோழர்களது ஆட்சி நிலவியதற்கு முன்னர் அமைக்கப்பட்ட சிலையாக தொல் பொருள் ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது.

**கண்ணகி வழிபாடு**

வன்னிப் பிரதேச சக்தி வழிபாட்டு மரபில் கண்ணகி வழிபாடு சிறப்பானது. செட்டிகுளப் பிரதேசத்திலும் பழம்பொரும் அம்மன் ஆலயம் இருந்ததைக் "கண்ணகி பள்ளுப் பாடல்" மூலம் அறியலாம்.

அங்கண்ணம்மைக் கடவை செட்டிபுல மச்சூழ்
ஆனதொரு வற்றாப்பளை மீதுறைந்தாய் ----

என்ற கண்ணகி பள்ளுப் பாடல் அடியை நோக்குகையில் யாழ்ப்பாணம் கந்தரோடைக்கு அண்மையில் உள்ள அங்கன் அம்மைக் கடவைக் கண்ணகி ஆலயம் இருந்ததாக அறிய முடிகின்றது. எனினும் தற்போது செட்டிகுளப் பிரதேச கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாவற்குளம் 4ம் வாய்க்கால் கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்பான வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றை விட சக்தி வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் பலவற்றை செட்டிகுளப்பகுதியில் காண முடிகின்றது. கக்காரன் குளத்திலும் பாவற்குளம் இரண்டாம் வாய்க்கால், ஜந்தாம் வாய்க்கால் ஆகிய இடங்களில் உள்ள காளிஅம்மன் கோயில்களும் செட்டிகுளம் துட்டுவாகை, அடம்பன்குளம், அழகாபுரி, வீரபுரம், பெரியம்பனை ஆகிய இடங்களில் உள்ள முத்துமாரி அம்மன் கோயில்களும் குறிப்பிடத்தக்கவை

**ஜயனார் வழிபாடு**


ஈழத்தின் எந்தப் பகுதிக்கும் இல்லாதது வன்னிக்கே உரித்தான வழிபாட்டு மரபாக ஜயனார் வழிபாடு காணப்படுகின்றது. அத்தகைய ஜயனார் வழிபாட்டுமரபு வரலாற்றுக் காலம் தொடக்கம் செட்டிகுளப் பிரதேசத்தில் ஆற்றப்பட்டு வருவதை காணமுடிகின்றது. முன்னே நேக்கியதைப் போன்று வீரநாராயணச் செட்டி குதிரை மலையில் தன்னால் புதைக்கப்பட்ட புதையல்களுக்கு காவலாக ஜயனாரை வழிபட்டதாக வையாபாடல் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற ஜயனார் வழிபாட்டின் குறிப்புக்களை செட்டிகுளப் பிரதேசமெங்கும் காணமுடிகின்றது. அந்தவகையில் வரவுசேனைக் குளத்தில் அழிந்த ஆலயம் ஒன்றின் எச்சங்கள் காணப்படுகின்றன.

# JET TRAVELS

S. Nagalingam

IATA

jettravels@on.a1bn.com



அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்!

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான
பதிவுகள் மற்றும் பயணச்சீட்டுக்கள்......

குறைந்த செலவில் நிறைந்த சேவையில்..
உலக நாடுகள்கள் எங்கும் மிக
இலகுவாக சுற்றிவர......

416-291-0177


## Jet Travels

Tel: (416) 291-0177 Fax: (416) 291-4049


4429 Sheppard Avenue East
Scarborough, Ontario
M1S 1V3


PRO MAR

Awards & Promotions




Trophies
Cop.Awards
Plaques
Medals
Laser Engraving
Sand Carving
Screen Printing





www.promarprint.com
585 Middlefield Road Unit #1
Scarborough, Ontario

416-291-2344

இவ் ஆலய இடிபாடுகளுக்குள் கருங்கல் தூண் ஒன்றின் உச்சியில் பறவை ஒன்று பறக்கும் நிலையில் சிற்பமாக பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு தேன் எடுக்கச் செல்பவர்கள் இவ் ஆலய சூழலில் மணியின் ஓசையைக் கேட்டதாக கூறுகின்றனர். இவ்வாறு தேன் எடுக்கவும் வேட்டைக்காகவும செல்லும் மக்கள் இவ் ஆலயத்தை ஐயனார் ஆலயம் என்று அழைத்து வந்தனர். இதனைப் போன்று விளாத்திகுளம் அருவித்தோட்டத்திலும் ஓர் சிதைந்த ஆலயம் காணப்படுகின்றது. இவ்வாலய சிதைவுகளுக்கு மத்தியில் யானையின் பாத சிற்பமும் கற் தூண்களில் வடிவமைக்கப்பட்ட தீபங்களும் காணப்படுகின்றன. இதே போன்று குறிஞ்சாக் குளத்தில் கரு மண்ணினால் செய்யப்பட்ட யானைப் பொம்மை ஒன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இச் சான்றுகளை வைத்து மேல்வாரியாக நோக்கினால் ஐயனார் காடுகளில் உறைபவர் என்ற மரபு அடிப்படையிலும் அவரது வாகனம் யானை என்பதாலும் இவ் ஆலயங்கள் ஐயனார் ஆலயங்களாக இருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

இன்றும் வழிபாட்டு நிலையில் உள்ள ஐயனார் ஆலயங்களை செட்டிகுளப் பிரதேசத்தின் கிறித்தோகுளம், மயில் முட்டையிட்ட குளம், ஒட்டறாக் குளம், கொங்கராயன் குளம், முகத்தான் குளம், பெரிய கட்டு முகத்தான் குளம், இரண்டாம் பண்ணை, பாவற் குளம் ஆறாம் படிவம் , வீரபுரம் ஆகிய இடங்களில் காணப்படுகின்ற ஐயனார் ஆலயங்கள் அம் மரபினைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது.

விநாயகர் வழிபாடு

கணங்கள் முதல்வன் காட்டு விநா
யக மூர்த்தி யொண்றைக் கரத்தீர்ந்து
குணங்களுடையீர் குலதெய்வம்
கொண்டே சொல்லி ரென வுரைத்தார்-----


என்ற வையாபாடல் செய்யுளின்படி வன்னிப் பிரதேசத்தில் ஏனைய தெய்வங்களைப் போன்று காட்டு வினாயகரையும் வழிபட்டதையும் காணமுடிகின்றது. இத்தகைய விநாயகரது வழிபாட்டு மரபு செட்டிகுளப் பிரதேசத்திலும் சிறப்பாக ஆற்றப்பட்டதை அறிய முடிகின்றது. கல்லாறு அருவித் தோட்டத்தில் சிதைந்த ஆலயத்தில் 6 அடி சுற்றளவுள்ள திரு மஞ்சனக் கிணறு, கருங்கற் தூண்கள், உடைந்த பானை ஓடுகள் செங்கற்கள், என்பன காணப்படுகின்றன. இவ் ஆலயத்தை இவ்வூர் மக்கள் பிள்ளையார் கோவில் எனக் கூறி காட்டுக்கு வேட்டையாடப் போகும் போது வழிபட்டு வருகின்றனர். பாவற்குளம், பூவரசங்குளம், பெரிய தம்பனை, கப்பாச்சி, வரவு சேனைக்குளம்முதலான இடங்களில் வன்னிப் பிரதானிகளது கால விநாயக ஆலயங்களின் சிதைவுகளை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது. கிறித்தோகுளம், அல்லைக் காட்டில் ஒரு புரதான விநாயகரது சிலையும் நேரிய குளத்தில் இன்னொர் வினாயகரது சிலையும் கண்டெடுக்கப்பட்டன. பாவற்குளம் ஞானியாவூரில் அமைந்துள்ள சித்தி வினாயகர் ஆலயமும் நீண்ட வரலாற்றை உடையது. இவ் ஆலயத்தின் மூலவரான விநாயகரது திருவுருவம் இருக்கும் பீடமும் அதில் இடம் பெற்றுள்ள சிற்ப அலங்கார முறையும் சோழர் கால பாணியை பிரதிபலிப்பதாக அமைகின்றது.

மேற் குறித்த ஆலயங்களை விட பாவற்குளம் பாறைத் தொடரின் மீது அமைக்கப்பட்டுள்ள ஆலயம் பாவற் குள முடங்குச் சந்தி விநாயகர் ஆலயம், முகத்தான்குள விக்கினேஸ்வரர் ஆலயம், பெரியபுளியங்குளம், அழகாபுரி, சின்னக்குளம், பாவற்குளம் முதலாம் படிவம், பூமடு, பாவற்குளம் ஆறாம் படிவம்,மணியர்குளம், பூவரசங்குளம், பெரியதம்பனை முதலிய இடங்களில் உள்ள பிள்ளையார் கோயில்கள் செட்டிகுளம் துடரிக்குளம் வீதி தான்தோன்றிப் பிள்ளையார் கோவில்முதலான சிறிதும் பெரிதுமான வினாயகர் ஆலயங்கள் இன்றும் செட்டிகுளப் பிரதேசத்தில் வழிபாடாற்றப்படும் ஆலயங்களாகும்.

வயல்களில் ஈக்கள் அதிகம் தென்பட்டால் விநாயகருக்கு பொங்கல் பொங்கி அப் பொங்கல் நீரை வயலில் தெளித்தால் ஈக்கள் அகன்று விடும் என செட்டிகுள மக்கள் கருதுகின்றனர். யானைகள் அதிகம் வந்து வயலை நாசம் செய்தால் காட்டு விநாயகருக்கு நேர்ந்து பொங்கல் பொங்கி வழிபட்டால் யானைகளின் அட்டகாசம் குறைந்துவிடும் என்று எண்ணுகின்றனர். வயலில் நெல்லை அள்ளும் போது முதல் மூட்டையை அயலில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு என்று கூறி

# கீதவாணி

# Geethavaani



Tel: (416) 267-1100
Fax: (416) 267-7707

**TODAY'S HITS**
**YESTERDAY'S MEMODYS**

*எம்மிடம் தரப்படும் அறிவித்தல்கள், வாழ்த்துக்கள் உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்களைச் சென்றடைகின்றன என்பதனை மறந்து விடாதீர்கள்.*

## We Bring the Whole World to Your Home

**2800 Eglinton Avenue East Suite 200**
**Scarborough, Ontario, M1J 2C9**

Email: geethavaani@worldtamilradio.com
www.worldtamilradio.com

வைத்த பின்னரே ஏனைய மூட்டைகளை கட்ட தொடங்குவது செட்டிகுளப் பிரதேச மக்கள் மத்தியில் பொது மரபாக இருந்து வருகின்றது.

பாத வழிபாடு

வழிபாட்டு இடங்களில் திருவுருவச் சிலைகளை வழிபடுவதைப் போன்று இறைவனது பாதங்களை வழிபடுவது இந்திய வழிபாட்டு மரபில் இருந்து வரும் ஓர் அம்சமாகும். ஈழத்தின் சிவனொழிபாத மலையின் உச்சியில் ஒருபாதச்சுவடு காணப்படுகின்றது. அதனை இந்துக்கள் சிவனது பாதம் எனக்கூறி அம்மலைய சிவனொழிபாத மலை எனக் குறிப்பிடுகின்றனர்.

செட்டிகுளப் பிரதேச மேலாய்வுகளில் ஈடுபட்ட போது பல இடங்களில் சோடி பாதச் சுவடுகள் கற்களில் சிற்பமாக செதுக்கப்பட்டு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் முகத்தான் குள பிள்ளையார் கோவிலிலும் மேற்பாக இடதுபக்க மூலை உடைந்த நிலையில் ஓர் பாத படிவச் சிற்பம் காணப்படுகின்றது. அதனை அம்மனது பாத சுவடு என அவ்வூர் மக்கள் கருதி வழிபடுகின்றனர். இதே போன்று முகத்தான்குள புதையல் பிட்டி அமைந்துள்ள இடத்தில் இருந்து 100m தூரத்தில் உள்ள வீடுடொன்றில் மூன்றடி சற்சதுர பாதச் சிற்பம் காணப்படுகின்றது. இதன் அடிப்பாகத்தில் பூரண கும்பம் இருப்பதாபவும் இரு மலுங்கிலும் சூரியனும், சந்திரனும் அதனோடு இணைந்து பொறிக்கப்பட்டுள்ளது. இதே போன்று பெரிய புளியங்குளத்தில் மூன்று பாதச் சுவடுகளை வைத்து வழிபடுகின்றனர். செட்டிகுள மகாவித்தியால பின்வளவு, கப்பாச்சி போன்ற இடங்களிலும் இப் பாதச் சிற்பங்களை நன்கு அவதானித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாண தொல் பொருட்காட்சி சாலையின் முன்னாள் பொறுப்பதிகாரியாக இருந்த திரு மா.போ. செல்வரத்தினம் அவர்கள் ஈழத்தின் பண்டைய கண்ணகி கோட்டங்களில் பாத பீடங்களும், சிலம்புகளுமே வழிபாட்டுப் பொருட்களாக இருந்ததாக தனது "சிலம்பு விளக்கு" என்ற நூலில் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. முன்னே நோக்கியதைப் போன்று செட்டிகுளத்திலும் கண்ணகி வழிபாடுமரபில் வந்த பாத வழிபாட்டுச் சுவடுகளே எனதோன்றுகின்றது. அதே நேரம் ஈழத்தின் பௌத்த வழிபாட்டு மரபில் புத்தரது சிலைகள் தோன்றுவதற்கு முன்பு பாத வழிபாட்டு மரபுகளே பேணப்பட்டன. அந்த வகையில் இப் பிரதேசத்தில் வாழ்த ஆதி தமிழ், பௌத்த மக்களால் வழிபடப்பட்ட புத்த பகவானது பாத சுவடுகளே என கருதப்படுகின்றன.

ஏனைய வழிபாட்டு மரபுகள்

காதம்ப நதியாகிய அருவியாற்றின் கரையில் செட்டிகுளப் பிரதேசம் அமைந்து இருப்பதால் இங்கு முருகவழிபாட்டு மரபுகளும் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். எனினும் இவ் முருக வழிபாடு பற்றிய சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இலங்கையின் நகர்ப் புறங்களில் காணப்படுகின்ற முருகன் ஆலயங்களை செட்டிகுள வகுப்பினரே (நாட்டுக் கோட்டை செட்டிமார்கள்) பரிபாலனம் செய்வது குறிப்பிடத்தக்கது. ஆதலால் புகழ்பூத்த முருகன் ஆலயங்கள் செட்டிகுளப் பிரதேசத்தில் அமைந்திருக்க வாய்ப்புண்டு. செட்டிகுள புகையிரத நிலைய முருகன் கோயில், முதலியார்குள பால முருகன் கோவில், பெரிய புளியங்குள முருகன் கோயில், நேரியகுள கந்தசாமி கோயில் என்பன இன்று செட்டிகுளத்தில் காணப்படுகின்ற முருகன் ஆலயங்களாகும்.

குருக்கள் புதுக்குளம் இராமயன்கல் விஷ்ணு ஆலயம் தந்திரிமலை இராமர் ஆலயம், மற்றும் வைரவர் ஆலயங்கள், வீரபத்திரர் ஆலயங்கள் என்பன செட்டிகுளப் பிரதேசத்தில் குறிஞ்சிகள் தோறும் பரந்துகாணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே மேற் கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது செட்டிகுளப் பிரதேசமானது தனக்கென்ற தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்களையும் வழிபாட்டு மரபுகளையும் கொண்டதாக இருப்பதை அவதானிக்கலாம். இவ் ஆய்வின் மூலம் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் நீண்ட வரலாற்று உண்மைகள் மறைந்து கிடக்கும் செட்டிகுளப் பிரதேசத்தின் வரலாற்று ஆய்வு பற்றி ஓர் முன்மொழிவாகவே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இன்றைய செட்டிகுளப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பாதுகாப்புத் தன்மைகள், சுதந்திரமாக

# ஸ்ரீ அனகா சில்க்

**FASHIONS – GIFTS – TOYS - FANCY**

**இப்போது பெரிய இடத்தில் மிகக்கூடிய தெரிவுகளுடன்....**



*எல்லாவகையான சேலைகள், உயர்ந்த ரக சுரிதார் வகைகள், பஞ்சாபி வகைகள் மற்றும் அனைத்து இந்திய நவநாகரீக உடைகள், இமிற்ரேசன் ஆபரண வகைகள் யாவற்றுக்கும் தன்னிகரற்ற தனி ஸ்தாபனம்.*

*சிறுவர் சிறுமியருக்கான உடுப்பு வகைகளுக்கு நகரில் தனித்துவம் பெற்றவர்கள்.*

## Sree Anaghaa Silk


**TEL: (416) 267-4833**

**2607 Eglinton Avenue, Scarborough, ON**

*இரா சுப்பர் மார்க்கட்டின் மேல் மாடியில்*

**TEXTILE IMPORTERS**

# டில்டன் ஜெனரல் கென்ராக்ரர்



- **Flooring**
- **Electrical**
- **Tiling**
- **Kitchen**
- **Counter Top**
- **Washroom**

Call: **RAVI**

**(416) 431-4648**
**(416) 828-8518**

- **Basement Finishing**
- **Plumbing**
- **Dry Wall**
- **Painting**
- **Ceiling**

# Dildan General Contractor

வரலாற்று இடங்களுக்கு சென்று ஆய்வுகள் மேற்கொள்வதில் ஏற்படுகின்ற தடங்கல்கள் எனப் பல காரணங்களால் முழுமையான ஆய்வினை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

செட்டிகுளத்தில் வெளிப்படுகின்ற புராதன கலை சின்னங்களை பேணிப் பாதுகாக்க இப்பிரதேச உயர் நிறுவனங்கள் ஆவன செய்ய வேண்டும். "வவ்வாலையில்" சிதைந்து கிடக்கின்ற சிவாலயத்தினையும் மீண்டும் புணருத்தாரணம் செய்து பண்டைய செட்டிகுள புராதானிகளது பெருமை கூறும் சிவத்தலமாக மிளிர செட்டிகுளப் பிரதேச சைவ அன்பர்கள் ஒவ்வொருவரும் முனைந்து முன்வர வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. நடராசா க.செ.வையாபாடல் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு 1980.
2. Lewis J.p manual of the Wanni Districts Ceylon, 1895.
3. Navaratnam C.S.Vanni and the Vannniyas- 1963.
4. கலாநிதி சிற்றம்பலம்,சி.க.கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னி நாடும் தொல்லியற் சான்றுகளும்-பண்டார வன்னியன் விழா மலர் 1982.
5. தனபாக்கியம்.ஜி, இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக்கலாசாரமும், சென்ஜோசப் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு- 1988.
6. Navaratnam, C.S., A short history of Hinduism in Ceylon- 1964.
7. ஞானவேல், ந. வன்னி மண்ணில் சிதைவுறும் சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள். North-East Sri Lanka, Provincial Council- 1998.
8. முல்லைமணி சுப்பிரமணியம். வே. புகழ் பூத்த வன்னி மண்ணின் காவலர்கள், பண்டார வன்னியன் விழா மலர்- 1988.
9. செட்டிகுளம் கொத்தணி மலர், செட்டிகுளம் கொத்தணி பாடசாலைகள் வெளியீடு- 1993.
10. பேராசிரியர் பூலோகசிங்கம் பொ.வன்னி நாட்டின் வரலாறு- சிறு அவதானங்கள், மருத நிலா, வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர்- 1996.
11. இளம் சைவப்புலவர் ஞானவேல். ந. வன்னிச் சிவாலயங்கள் சிவதத்துவமலர், கோயில்குளம் அருள்மிகு சிறி அகிலாண்டேஸவரி சமேத சிறி அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா மலர்- 1996.
12. கரவைக்கிழார் கந்தசாமி,க. தணியாத தாகம்(வரலாற்றுக் கற்பனை நாடகம்) யாழ்பாணம் கலைவாணி அச்சகம்- 1976.
13. செல்வரெத்தினம். மா. பொ "சிலம்பு விளக்கு"- 1984.



நன்றி

திரு.க.முருகேசு, திரு.சீ.வி.பேரம்பலம், திரு.L.C.லெம்பட், திரு.க. ஜேசுதாசன், திரு.ஜ.தம்பு, திரு.இ.ஏரம்பு, திரு.ப.லிங்கம், திரு.அ.பென்சமின், திரு.வ. சிறீஸ்காந்தபாலன், திரு.அ.சிவபாதம், திரு.சிவ ஸ்ரீ சுந்தராணந்தசர்மா, திருமதி.ம. சபாலிங்கம், செல்வன்.க. இரவிக்குமார்.




**கார்த்திகை (மலர்த்) தீபம்!**

ஆர்த்து மழை பொழிந்த அழகுவான் செயலதனை
வார்த்தைகளால் வாழ்த்துதற்கு வாயில்லாக் காரணமோ
கார்த்திகை மலர்கள் சேர்ந்து கையில் விளக்கேந்தி
நீர்த்திவலை நெய் கூட்டி நீண்டெரிந்து வாழ்த்துவன.

**வ. கண்ணன்**
**முள்ளியவளை**

# YARL'S SUPER STORE

**Canadian, East-West Indian Grocery**
**Fresh Fish, Meat and Vegetable**

**இலங்கை, இந்திய பல சரக்குச் சாமான்கள்**




- ☑ உடன் மரக்கறி வகைகள்
- ☑ பழவகைகள்
- ☑ பூசைச் சாமான்கள்
- ☑ உடன் மீன் வகைகள்
- ☑ ஏழு நாட்களும் பங்கு ஆட்டு இறைச்சி

- ☑ இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளைமீன், ஒட்டி, ஓரா, உயிர் நண்டு மற்றும்

- ☑ மீன் வகைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் மிக மலிவாக கிடைக்கும் ஒரே இடம்.

☞ பலசரக்கு வகைகளுக்கு: (416) 923-9806
☞ மீன் வகைகளுக்கு: (416) 923-8093

**யாழ்ஸ் சுப்பர் ஸ்ரோர்**
**607A Parliament Street**
**Toronto, Ontario**
**M4X 1P6**



# புதிய புலமும் பிரச்சினைகளும்

*திரு இ. தங்கேஸ்வரன்*

உலகில் மனிதர்கள் பல்வேறுபட்ட காரணங்களுக்காகப் புலம் பெயர்கின்றனர். இவற்றுள் உயிரைப்பாதுகாத்துக் கொள்ளவும், அமைதியான வாழ்வைத் தேடியும் புலம்பெயர்தல் பிரதானமானது. ஆனால் புலம் பெயர்தலால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றிய அறியாமை பலருக்கு நேராகவோ மறைமுகமாகவோ புதிய புலம் பலிக்களமாகிவிடுகின்றது.

புலம் பெயர்வால் ஏற்படும் உணர்வு மற்றும் உளவியல் உடற்தொழிலியல் தொடர்பான பிரச்சனைகள் புலம் பெயரும் அனைத்து இன மக்களும் எதிர் கொள்ளும் ஒரு முக்கியத்துவம் மிக்க பிரச்சனையாகும். கனடாவில் குறுகிய காலத்தில் அதிகளவில் (ரொரன்ரே பொரும்பாகத்தில்) குடியேறி எல்லோராலும் கண்டுகொள்ளக் கூடிய சிறுபான்மை இனமாகிவிட்ட (Visible Minority) தமிழ் மக்களின் பிரச்சனை முகங்கள் பெரிதாகத் தெரிவதும் ஊடகங்களால் பெரிதுபடுத்தப்படுவதும் மற்றய புலம்பெயர் இனங்களின் பிரச்னைகளில் இருந்து வேறுபட்டிருப்பதும் அசாதாரண விடயமல்ல. வித்தியாசமான சாதி சமய இன பின்புலங்களில் இருந்து வருபவர்கள் எல்லாம் ஒரேவிதமான புதியபுலப் பிரச்சனைகளை எதிர்நோக்கினாலும் பிரச்சனைகளுக்குரிய எதிர்த்தாக்கம் (Reaction) ஒரே மாதிரியாக இருக்கமாட்டாது. இனத்திற்கினம் எதிர்த்தாக்கம் மாறுபடும். இவ்வெதிர்த்தாக்கமானது "பானையில் உள்ளது அகப்பையில் வரும்" என்றவாறே அமையும்.

எமது இனத்தைப் பொறுத்தவரையில் புலம்பெயர்தலால் பாரம்பரியமாகப் பெற்றுவந்த சமூகவாழ்வியல் அறிவு மற்றும் நடைமுறைகளை இழந்து ஓய்வின்றி ஓடியோடி உழைக்கும் ஒரு இயந்திர வாழ்க்கைக்குள் சிக்கியுள்ளது. இன்றய பெற்றோர்கள் பாரம்பரிய அறிவூட்டல் மூலம் பெற்றுக் கொண்ட எமது சமூக வாழ்வியல் அறிவானது புலம் பெயர்ந்த இளம் பராயத்தினருக்குப் போதியளவு கிடைக்கவில்லை. அத்துடன் அவர்கள் புதியபுல சமூகவாழ்வியல் அறிவை தாராளமாகப் பெற்றுள்ளார்கள்.

அதற்குமாறாகப் பெற்றோர்கள் புதியபுலச் சமூகவாழ்வியல் அறிவை மொழி மற்றும் நேரமின்மை காரணமாக போதியளவு பெற்றுக் கொள்ள முடியவில்லை. பெற்றோர் பிள்ளைகட்கு இடையிலான இவ் அறிவியல் சமமின்மை புலம் பெயர் தமிழர் மத்தியில் ஒரு பூதாகரமான பிரச்சனையாக உள்ளது. எமது பாரம்பரிய குரட்டுத்தனமான முறைப்படி இப்பிரச்சனை பூசிமெழுகி மறைக்கப்பட்டாலும் மீறிச் சில பிரச்சனைகள் தற்கொலை, குடும்ப உறவுப் பிரிவு, இடமாற்றம் (நாட்டுக்கு நாடு, நகரத்திற்கு நகரம், பட்டணத்திற்குப் பட்டணம்) என்று நிகழும்போது வெளியே தெரியவருகின்றது. புலப்பெயர்வால் ஒரு பிரச்சனையைத் தீர்க்க மேலும் ஒரு புலம் பெயர்வானது சரியான தீர்வாக அமையும் என்பது கேள்விக்குறியே.

மேலும் எமது இனத்தின் சமூகவாழ்வியல் பின்புலம் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று நெற்றிக் கண் திறக்கும் நடைமுறைப் பாங்குடையது. அத்துடன் விடுதலைப்போரானது பிழைவிட்டால் மண்டையில் போடலாம் என்று இளம் மனதுகளில் விதை புதைத்து விட்டிருக்கின்றது. மற்றும் புலம் பெயர் நாடுகளில் பாரம்பரிய சமூக வாழ்வியல் அறிவை ஊட்டும் முக்கிய ஊடகமாக திகளும் தென்னிந்திய சினிமாக்கள் சண்டைகளையும் வன்முறைகளையும் சமூக ஒழுங்குகளைக் காப்பாற்றுகின்ற நோக்கில் பாவிக்கப்படும்போது நியாயமெனக் காட்டுகின்றது. மெல்ல மெல்ல எமது இளம்பராயத்தினருக்கு வன்முறையானது போதிக்கப்படுகின்றது. அத்துடன் சிறு பிள்ளைகள் பிழைவிடும்போது எத்தனை பெற்றோர்கள் அன்பாக அதைத் திருத்த முற்படுகின்றோம். அனேகமானவர்கள் எரிந்து விழுதல் மூலமும் "பளார் என்று அறைவதன் மூலமும்தான்" திருத்த முனைகின்றோம். இந்த வகையிலும் பெற்றோர்கள் இளம்பராயத்தினருக்கு பிரச்சினைக்குரிய தீர்வு வன்முறை என்பதனை மறைமுகமாகப் போதித்து விடுகின்றனர்.

வன்முறைக்கான விதைகளை மனதில் உள்வாங்கிய நிலையில் பாலியல் வயதடையும் இளைஞர்கள் யுவதிகள் அதனை

வெளிக்காட்டும் துணிவைப் பெறுகின்றார்கள். தாம் ஒதுக்கப் படுகின்றோம் அவமதிக்கப் படுகின்றோம் பெற்றோரால் அரவணைக்கப்படவில்லை போன்றவற்றை உணரும்போது வன்முறையை நாடுகின்றார்கள் அல்லது உளவியல் ஆதரவு வேண்டி உபகலாச்சார வாழ்வில் சிக்கி விடுகின்றார்கள். இது பல இளம் வயதினரின் எதிர்காலத்தினைப் பாழாக்கியுள்ளது. பலர் பாடசாலைகளில் இருந்து நீக்கப்படுகிறார்கள். இவ்வாறு பிரதான சமூக ஓட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்கள் மேலும் உளவியல் தாக்கத்திற்கு உட்பட்டு தம்போன்ற சகாக்களுடன் சேர்ந்து உபசமூகக் குழுக்களாக தோற்றம் பெறுகின்றார்கள். இவ்வாறான குழுக்கள் தோன்றியபின் இவர்கள் செய்யும் சமூக அத்துமீறல்களையும் வன்முறைகளையும்தான் ஊடகங்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் பார்க்கின்றார்கள். வாழ்வில் உளவியல்ரீதியாகப் பலியானவர்களை நாடு கடத்த வேண்டும் பிடித்து அடைக்கவேண்டும் என்று தீர்வு சொல்ல முற்படுவது புத்திசாலித்தனமானது அல்ல.

உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் இளம்பராயத்தினர் வன்முறை மற்றும் சமூக ஒழுங்கு மீறல்களில் ஈடுபடுவது நாட்டிற்கு நாடு கூடிக் குறைந்து காணப்படவில்லை. ஐரோப்பா, கனடா மற்றும் ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்களின் சமூகவியல் பிர்சனைகள் விரலுக்கேற்ற வீக்கப் பரிமானத்திலேயே காணப்படுகின்றது. கனடாவில் மட்டும் அசாதாரணமாக இளைஞர்கள் சமூக ஒழுங்கு மீறல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது உண்மையில்லை. ஊடகங்களினால் ஊதிப்பெரிதாக்கிய தமிழ் இளைஞர்களின் வன்முறை பற்றிய செய்திகள் பிரச்சனைகளின் மேலோட்டமான ஒரு தளத்தைக் காட்டுவதாகவும் எமது இனத்தின்மீது குற்றம் சுமத்துவதுமாகவே காணப்படுகின்றது. இச் செய்திகளால் எம்மவர்கள் தலை குனிவதை விடுத்து பிரச்சினைகளின் வேர்களை அறிந்து ஆவன செய்ய முயர்சசிக்க வேண்டும். ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எமது இளைஞர்களி பிரச்சனைகளை ஆய்வு செய்து அதனடிப்படையில் செய்திகள் வெளி வருவதில்லை. எனவே இச் செய்திகளால் அவமானம் என்பது ஒரு பிரச்சினையில்லை. ஆனால் எமது இளைஞர்கள் புதிய கலாச்சார அதிர்ச்சியால் பாதிப்படைந்து வாழ்க்கையைப் பாழாக்குவது மனம் வருந்தத்தக்கதும் சிந்திக்க வேண்டியதுமாகும்.

## வன்னி மகள் வாழ்வளிப்பாள்

வன்னி வளம் தனில்
எழில் கொஞ்சும் வயலெல்லாம்
நெற்சொரியும் வளங்கள் பல
நிறைந்த அன்னைப் பெருநிலமே!
இன்றைய சந்ததி உன் மடியில்
இடரின்றி வாழ வழியேது தாயே
இரு பிளவாய் வன்னி அங்கே
உள் வன்னி வெளி வன்னி என்கிறார்
பிணங்களை நீ சுமக்கும் காட்சிதனை
பிரமனும் பரமனும் அறிவாரா?
சுடுகாடாய் மாறிவிட்ட வன்னி இன்று
பஞ்சத்துடன் பரிதவித்த பலருடனே
பரதேசி மடம்போல் மாறிவிட்ட
பரம்பரை வாழவரும் வன்னியங்கே
சிந்துகின்ற குருதி சிறுகுளமாய்
சிற்றாறாய் நின்மடியில் ஊறியுலந்து
சீறிப் பாய்கின்றதேயது சிற்றாறா
சிறுகுளமா?
அடிவயிற்றில் பசிநெருப்பின் அவஸ்த்தை
அகதியென்னும் பொதுப் பெயர் எமக்கு
அச்சமின்றி நாம் வாழ வழிசமைப்பாயா?
நிறை மாதக் கர்ப்பிணிக்கும்
நிறை குறைந்த குழந்தைக்கும்
ஆரோக்கியம் இங்கில்லை
ஆங்கில மருந்துமில்லை
போதிய உணவில்லை
போக்கிடம் வேறின்றி
போரிற்குப் பலியாகி மடிகின்ற மானிடனே
நோய்தனைச் சுமதங்கே
நொந்து வாழும் உனக்கிங்கே
நோர்வேயின் சமாதானம்
தோழனாய் இருக்குமன்றோ

வன்னி என்ற கொம்பறையில்
வளரும் நம் மகளுக்கு
வயதோ இருபத்தைந்து
அவள் துயருக்கு வழிசமைப்பாள்
இந்த வன்னி மகள் வாழ்வளிப்பாள்.

*குசலமேரி இராதாகிருஷ்ணன்*
*திருமலை.*

# ஓ மானிடமே!

சாவின் விழிம்பினில்
பூமி!
மானிடத்து மடமைகளின் ஓர்
முழுமைச் சின்னமாய்
பூமி!
ஓ மானிடமே!
சூரியக் கடலின் நீலச் சிவர்களிலே
அறியாமையின்
பேரதிர்வுகள்!

ஆகாயத்தின் தீ வெள்ளம்
அரியணையின்
வாசலிலே!
எங்கே ஆற்றற் படை?
பூமிக்கு இயற்கை தீட்டிவைத்த
உயிரியல் வண்ணம் இனி
பச்சசையல்ல மானிடமே
அது சிவப்பு !
பூமியைத் தழுவிடும் நிலவின் விரல்களில்
இனி இந்த அல்லிகள்
விரியாது மானிடமே
எரியும்!
யுகச் சிற்பிகள் செதுக்கிவைத்த
பனிமலைச் சிற்பங்கள் இனி
முகமிழந்து போகும் !
இனி இந்தப் பூமியில்
நீரலைகளின் போர்க்கொடிகளே நெடிதுயரும்
!
நிலத் திடல்களோ
நிர்மூலமாகி மண்டியிடும் !
இன்றைய இரவேதான் நாளைய
பகலாகப் பாவனைக்கு வரும்!
பூபாள இராகம் இனி
படுவானுக்கேயன்றி
அது எழுவானுக்கல்ல
மானிடமே!
பகலினில் கட்டிடப் பொந்தினுள் பதுங்கி
இரவினில் இரைதேடலுக்கு இறகு
விரிக்கின்ற
வெளவால் வாசமே இனி
அரங்கிற்கு வரும்!
நாளைய
தரையின் அகதியாய்
தண்ணீர்ப் புலத்திற்கு
படகேறப் போகும் தாற்பரியத்து மானிடமே!

வாழ்வுப் பூவின்
வண்ண இதழ்களுக்காய்
பூமித் தருவுக்கு இறைக்கும்
பொல்லா அமிலத்தில்
பாழும் இருப்பெல்லாம் பற்றி
எரிகிறது!
எழுந்திடு!
இனியேனும்
ஆற்றலின் ஆயுதம் சுமந்து
இருப்பைக் காத்திட
அந்த
இயற்கையின் களமேறு !
வேற்றுக் கிரகத்திற் தேடுகின்ற
வெண்ணை இந்தப்
பூமியின் விரல்களுக்குள்ளேயே
உறைந்து கிடக்கின்றது
விழி திற !
அணு உலைக்காட்டின்
எரிமலைப் பிழவுகளுள்
அறியாமையைப் புதைக்கும்போதே
இந்த அகிலம் துலங்கும்!
ஏவுகணைப் பாறைகளை
நொருக்கி வீழ்த்தும்போதே
அந்த
ஓசோன் மண்டலத்தின்
உச்சிக் கோபுரங்கள்
எழும்பும்!
பிரபஞ்ச மாவெடிப்பிற்கு அப்பால்
வியாபிக்கும் விவேகத்தில்
இந்தப் பூமி அமரும்போதே
கிரகத் தொகுதியெங்கும்
இந்த
மானிடத்தின் ஆட்சி நிமிரும் !
ஓ மானிடமே !
இப்போ
சாவின் விழிம்பினில்
பூமி !
சாவின் விழிம்பினில
பூமி !

**கந்தசாமி இராஜநாதன்**

# Vijaya's Silk



**கல்யாண கூறைப்புடைவைகளுக்கு**
**கைராசியான ஸ்தாபனம்**



*மங்கையர் மனங்கவரும் நவநாகரீக பட்டு ஆடைகள்,*
*கூறைப்புடைவைகள், சிறுவர் சிறுமிக்கான ரெடிமேட் உடைகள்.*
*பரதநாட்டியத்திற்கு தேவையான பஞ்சாபி உடைகள்,*
*ஆண்களுக்கான பட்டு வேட்டிகள், எந்த நிறமானாலும் ஏற்ற*
*சாறி பிளவுஸ் வகைகள், அன்பளிப்பு அழகு சாதனப்*
*பொருட்கள் மற்றும் எவர் சில்வர் பாத்திரங்கள்...*

**விஜயாஸ் சில்க்**

**27 Dundas Street East, Mississauga, ON, L5A 1V9**

**Tel: (905) 273-7997 - Fax: (905) 273-7323**

# Residential Real Estate Services

ROYAL LEPAGE

**Bus: (416) 284-4751**
**(24 Hrs Pager)**

**Fax: (416) 284-6343**



**Res: (416) 759-3841**
**Cell: (416) 569-3841**
**E-Mail:**
**jprapagharan@hotmail .com**

**Praba Jeganathan**
Sales Representative



**Residential Real Estate Services**
4218 Lawrence Avenue East
West Hill, ON, M1E 4X9

# சீதனமென்னும் சிறுமை ஒழிப்போம்

*யேசுதாசன் பமீலா*
*இலண்டன்*

நாம் தமிழீழச் சமுதாயத்திலே சீதனம் என்னும் கொடிய அரக்கன் பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக தலைவிரித்தாடுகின்றது. இதனால் பெண்ணினம் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

உலகத்திலே இயற்கையின் விதிப்படி ஆண் பெண் என்னும் இருபாலார் தோன்றினர். அவர்கள் உடல் அமைப்பிலும் குணஇயல்பிலும் வேறுபாடுகள் உடையவர்களாகக் காணப்பட்டனர். இவர்களே கணவன் மனைவி என இணைந்து சமூகத்தில் குடும்பம் என்னும் அமைப்பைப் பேணிவந்தனர். இந்நிலையில் இவர்கள் ஒன்றுபட்டு வாழ்க்கை நடாத்தியதுடன் சந்ததி வளர்வதற்காக குழந்தைகளையும் உருவாக்கினர். இறைவனின் விதிமுறைப்படி பெண்ணானவள் குழந்தையைத் தன் வயிற்றிலேயே தாங்கி பத்து மாதம் சுமந்து பெற்று வளர்க்கும் பணியை பொறுப்பேற்கிறாள். இதனால் இவள் சிறப்பாற்றல் பெற்றவள் எனப் பலராலும் போற்றப்படுகிறாள். இவளது தாய்மைப் பண்பு ஒரு ஆண்மகனையும் வழிநடாத்தும் ஆற்றல்மிக்கது. இதனால் ஆண் பெண் இருவரும் இணைந்து வாழ்க்கை நடாத்துவது தமிழ்ப்பண்பாடக வளர்ந்து வரலாயிற்று.

தமிழ்ப் பண்பாட்டில் ஆரியப்பண்புகள் கலந்தவேளையில் பெண்ணின் ஆற்றல் ஆணின் ஆற்றலைவிட குறைந்தது என்னும் ஓர் நிலை உருவாகியது. இதனால் ஆணைச் சார்ந்து அவன் கட்டுப்பாட்டில் வாழும் பெண்ணுக்கு பொருளாதாரப்பலத்தை ஏற்படுத்துவதற்காக பெண்ணின் பெற்றோர் பொருளைக் கொடுத்து ஆணுடன் திருமணம் என்னும் இல்வாழ்க்கையில் பெண்ணை இணைத்துவிடும் வழக்கம் தோன்றலாயிற்று. இதற்கு அக்காலத்தில் சிறிய தனம் எனப் பெயர் வழங்கப்படலாயிற்று. இது காலப்போக்கில் மருவிச் சென்று சீதனம் என்னும் பெயர் பெற்று இருக்கலாமென அறியக்கிடக்கின்றது.

காலப்போக்கில் இந்த வழக்கமானது சிறிது சிறிதாக மாறி திருமணத்தின் போது பெண் வீட்டாரிடமிருந்து செல்வங்களோடு வரவேண்டும் என்னும் வழக்கம் உருவாகின்றது. அதுவே இன்று நம் தமிழ்ச் சமுதாயத்தில் சீதனம் என்னும் பெயரில் தலை விரித்தாடுகின்றது. அநேக பெண்களின் வாழ்க்கையில் ஏற்படும் திருமண வாழ்க்கைக்குத் தடையாக அமையும் அளவிற்கு சீதனக் கொடுமை வளர்ந்து வருகின்றது. பெண்ணானவள் எவ்வளவு அழகு செயற்திறன் கல்வி அறிவு உடையவளாக இருந்தாலும் சீதனம் என்னும் கொடுமையினால் அவளது வாழ்க்கை தடைப்படும் அளவிற்கு போய்விடுகின்றது. பல குடும்பங்களில் இச் சீதன முறையானது வியாபார முறையாகவும் நடைபெறுகின்றது. இச் செய்கைகளினால் பெண்களின் தாய்மைக்கே பெறுமதி இல்லாமல் போகும் அவல நிலை தோன்றுகின்றது. சில தருணங்களில் ஆண் பெண் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணத்தில் இணைய முற்படும்போதுகூட சீதனக் கொடுமையினால் பிரிந்து வாழவேண்டிய நிலைகளும் உருவாகின்றது.

மக்களாகிய நாம் இதன் கொடுமையை இதனால் வரும் விளைவுகளைப்பற்றிச் சிந்நியாதிருக்கின்றோம். இது நம் தமிழ்ச் சமுதாயத்தில் பெரியதொரு பிரச்சனையாக உருவெடுத்திருக்கின்றது. நம் நாட்டில் பெண்ணுக்குத் திருமணம் பேசும்போது சீதனம் வாங்குவதோடு நின்றுவிடாது ஆணின் பெற்றோர் தமக்கும் நன்கொடைகள் என்ற பெயரில் சொத்துக்களைப் பெற முனைகின்றார்கள். இதனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் பெண்களின் திருமண வாழ்க்கையைத் தீர்மானிப்பவையாக பொன், பொருள், பணம், அசையாச் சொத்துக்கள் காணப்படுகின்றன.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைப் படிப்பித்து வேலைவாய்ப்புக்களையும் தேடிக் கொடுக்கின்றார்கள். அவர்கள் அக்காலப்

பகுதியில் தேடிக் கொண்ட பணத்தினையும் சீதனமாகப் பெற்றுவிடுகின்றார்கள். பெண் எவ்வாளவு தகுதி அடைந்தவளாக இருந்தாலும்சரி அவள் பெற்றோர் என்னதான் கஸ்ரப்பட்டாலும் சரி தாங்கள் நினைத்படியே சீதனம் பெற்றுத் திருமணம் செய்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆண்கள் சீதனம் எனக்கு விருப்பமில்லை அது எனது தாயாரின் விருப்பம் எனக் காரணம் காட்டி வேண்டிய பணத்தைப் பெண்ணின் பெற்றோரிடமிருந்து வாங்கிச் செல்கின்றனர். சீதனம் வாங்குவது ஒரு இழிவான செயல் என்பதனை ஒரு ஆண் மகனும் சிந்திப்பது கிடையாது.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பதற்கேற்ப ஆண்கள் பணத்துக்காகத் திருமணத்தில் தங்களை விற்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இதன் கொடுமையினால் பெண் இனம் பாதிக்கப்படுவதுடன் நிற்காது ஆண்களையும் பாதிக்கும் நிலை சிலசமயங்களில் உருவாகின்றது. பல பெண் சதோதரிகளுடன் பிறந்த ஒரு ஆண் மகன் சீதனம் கொடுத்து தன் சகோதரிகளை வாழவைக்க வழி இல்லாத நிலையில் தன் வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். அதனால் அபிலாசைகள் எல்லாவற்றையும் மறந்து சகோதரிகளின் நல் வாழ்விற்காக தன் இல்லற வாழ்க்கையை வெறுத்து தன்னை வருத்தி உழைக்கும் ஒரு அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

இன்னும் வாழவேண்டிய சில பெண்கள் சீதனக் கொடுமையால் தங்கள் இளமைக் காலத்தில் குடும்ப வாழ்வை அடைய முடியாது வாழ்க்கையில் விரக்தியடைந்து தமது உயிரை மாய்த்துக் கொள்ளும் முயர்ச்சியில் இறங்குகின்றனர். சில பெண்கள் தமது வாழ்க்கைக்கு வழி பிறக்காதா எனக் கண்ணீர் வடிக்கின்றனர். சில பெற்றோர் உழைத்தும் மீதம் இல்லாததால் என் பிள்ளைகளை எப்படி வாழ வைப்பேன் எனத் துடிக்கின்றனர். சில பெற்றோர் பெண்பார்க்கச் சென்றுவிட்டு எல்லாம் இருந்தும் சீதனம் இல்லையென்பதால் அத் திருமணத்தினை செய்யாது விடுகின்றனர். சீதனப் பிரச்சினையால் தங்களது பிள்ளைகட்கு திருமணமாகவில்லையே என ஏங்கிக் கண்ணீர்விடும் பெற்றோர்கள் எத்தனை.

வருங்காலச் சமுதாயத்திற்கு ஒத்துவராத இச் சீதனப் பிரச்சனையை இல்லாதொழிக்க நாம் முயல வேண்டும். காலம் காலமாக பெண் சமுதாயத்தை வருத்திவரும் இவ்வரக்கனான சீதனக் கொடுமையையும் அதன் விழைவுகளையும் மக்கள் உணரவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் புரையோடிப் போயிருக்கும் புண்ணான சீதனம் என்னும் பேய்க்கு தனது அனுபவத்தாலும் ஆற்றலாலும் மருந்திட்டு மாற்றமுயல வேண்டும். வாழ்க்கைக்குச் சீதனம் அவசியம் இல்லை என்பதனை மக்கள் தங்கள் அறிவை உபயோகித்து விளங்க முயல வேண்டும்.

ஆணுக்குப் பெண் சழைத்தவள் அல்ல என்பதற்கிணங்க இன்று நம்நாட்டில் ஆண்களைப் போலவே பெண்களும் எல்லாத் துறையிலும் சரிநிகராக முன்னேறிக் கொண்டு செல்கின்றனர். அதனால் பெண்கள் இத்திட்டத்தை முற்றாக அழிக்கும் பணியில் செயற்படவேண்டும். தாய்மை என்னும் நிலையில் இருந்து ஆண்களை வழிநடாத்தும் பெண்களுக்கு இப்பணி மிகவும் இலகுவாகும். இதற்கு மனத்துணிவும் செயற்திறனும் பெண்களுக்கு அவசியம். அவர்களின் ஒவ்வொரு செயலும் பெண்களின் வாழ்க்கைக்கு ஒளி கொடுப்பதாக அமையவேண்டும். மக்களுக்கு எளிய முறையில் நாடகங்கள் கவிதைகள் பாடல்கள் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இதை மக்கள் உணரும் சமயத்தில் அவற்றை மாற்றி அமைப்பது சுலபம்.

பெண்ணானவள் வீடு என்னும் வட்டத்தைவிட்டு அப்பாலும் சமூகம் என்னும் திறந்த அரங்கினிலும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். சீதன வெறிபிடித்த ஆண்களில் போலியான மதிப்பீட்டை அளிக்க முயலவேண்டும். எல்லோரும் உழைப்பின் மகிமையை அறிந்து கொண்டால் இதை ஒழிப்பது இலகுவாகும்.

சீதனம் என்னும் அரக்கனின் கொடிய வலையில் அகப்பட்டு வாழும் பெண்களின் சிறை வாழ்க்கையை உடைத்து அவர்கள் வாழ்க்கையை நிலைநாட்ட பாடுபடவேண்டும். இங்கு பெண் ஆணுக்கு அடிமை என்ற நிலை மாறி இனிய குடும்ப உறவு அமைய ஏதுவாகும். எனவே சமூக அனீதியாக உருவெடுத்திருக்கும் இப் பிரச்சனை இனியும் நாட்டில் தொடர்ந்தால் பெண்களின் எதிர்காலம் கேள்விக்குரிதாவே அமையும். சீதனக் கொடுமையை ஒழிக்க நாம் அனைவரும் திரண்டெழுவோமாக.

# பெய்யெனப் பெய்யும் மழை

க. ஜெயவீரசிங்கம்
வற்றாப்பளை

அம்மாளாச்சி... படுக்கையில் புரண்டு படுத்த கனகருக்கு எழும்ப மனமில்லாமல் இருந்ததது. என்ன செய்யிறது மனதில் கேள்விக் கணைகள் அவரைத் துளைத்தெடுத்தன. ஒரு காலத்தில் மாடு கன்று வீடு நிலம் என்று எல்லாம் இருந்த அவருக்கு இன்று ஒன்றும் இல்லை என்பது ஒரு கசப்பான யதார்த்தமாகவே இருந்தது. என்றாலும் யதார்த்தம் யதார்த்தம்தான். அதை யாராலும் மறுதலிக்க முடியாதல்லவா? கனகண்ணையுடன் மண்வெட்டி பிடிச்சு வேலை செய்ய முடடியாது என்றளவுக்கு மண்ணை நம்பி வாழந்த அந்த விவசாயியின் வாழ்வில் ஜயசிக்குறு விளையாடித்தான் விட்டது. மண்ணிலிருந்து பெறுவதை மண்ணிலும் விருந்தோம்பலிலும் செலவழிக்கும் கமக்காரர்களில் கனகரும் ஒருவராக இருந்ததால் கறிபட்டமுறிப்புக்கு ஆமிக்காரன் வாறானாம் என்றவுடன் கனகரால் எதையுமே கொண்டு வரமுடியவில்லை. மனைவி பிள்ளைகள் தட்டுமுட்டச் சாமான்களுடன் வந்து வற்றாப்பளையில் குடியேறியவர் அம்மாளாச்சியுடனும் ஐக்கியமாகிவிட்டார். ஆவருக்கு இப்பொழுதுள்ள பிரச்சனை என்னவென்றால் காசுக்கு எங்கேபோறது--? ஏன்பதுதான்.

இஞ்சேருங்கோப்பா---- எழும்புங்கோவன்-- இன்றைக்காவது வடக்கு வெளியில வைச்ச சூட்டை அடிக்கிற அலுவலைப் பாருங்கோவன்-- மனைவி கனகம்மா தேநீர்க் கோப்பையுடன் வந்து நின்றாள்.

சூடடிக்கிறது பிரச்சனையில்லை. அடிச்சா ஏதும் மிஞ்சுமோ என்றுதான் யோசிக்கிறன். தறைக் குத்தகை மிசின் கூலி --- போதாக்குறைக்கு நெல்லும் நல்ல விலைக்கு விக்கேலுதே - கனகர் பெருமூச்சவிட்டார்.

என்ன செய்யிறது எல்லாம் எங்கடவிதி--

ஏன்னப்பா ஏதும் கிடைச்சுதே--- மனைவிதான் உரையாடலைத் தொடக்கினாள்.

என்னெண்டப்பா கிடைக்கும்-- எல்லாரும் நெல்லைக் குடுத்திட்டு காசுக்கு காத்திருக்கிறாங்கள்--- நானும் உந்த தணியூற்று முள்ளியவளை எல்லாம் திரிஞ்சிட்டு வாறன் ஒண்டும் சரிப்படேல்லை.---ஏதோ அம்மாளாச்சி ஏதாவது செய்வாதானே. நீ ஒரு தேத்தண்ணி கொண்டுவா----

சொல்லிவிட்டு கனகர் திண்ணையில் சரிந்து கொண்டார். ஆந்தக் காலத்தில் எத்தனை கொம்பறை நிரப்பிய கைகள் அவருடையவை. எத்தனை பேருக் இலவசமாக நெல் அளந்து கொடுத்திருப்பார்---இன்று நினைக்க அவருக்கே வேதனையாக இருந்தது.

தம்பி வன்னியான் படிக்காமல் விட்டதாலதான் பின்னுக்குப் பின்னுக்குப் போறான்-- பிள்ளையளை படிக்கவைச்சுப்போட்டு கனகரின் அப்பு இருபத்தைந்து வருடங்களுக்குமுன் சொன்னவை அவரின் காதுகளில்

எதிரொலித்தன--- அதற்காகத்தான் அவர் கடும் முயற்சி எடுத்தவர்-- அதன் விளைவுதான் --- இன்று

கனகண்ண--கனகண்ண--கனகண்ண-- என்ன இந்த நேரத்தில் நித்திரை --?

குமார் கூப்பிட்டபோதுதான் கனகருக்கு தான் நித்திரை என்றது ஞாபகம் வந்தது.

ஓண்டுமில்லை-- சும்மா-- கிடந்தனான்-- சமாளித்துக் கொண்டார்.

ஆது சரி எப்பிடியண்ண வடக்குவெளி வெள்ளாண்மை. பள்ள வெளித்தறை எடுத்தனீங்களாம் விதைக்கிறியளோ--? குமார் கேள்விகளைப் போட்டான்.

வேளாண்மை பரவாயில்லையடாப்பா ஆனால் கையும் கணக்கும் சரி--வேலை செய்த கை கால் சும்மா கிடக்காதுதானே. ஆதுதான் பள்ளவெளியையும் செய்வம் என்று பார்க்கிறன்----
.

அது சரியண்ணை வன்னிக் கமக்காறன்பாடு அதோகதிதான்-- சொன்னாப்போல உங்களுக்கென்ன பெடியனுக்கும் கம்பஸ் கிடைச்சிருக்காம்---குமார் முடிக்கவில்லை-----

ஓமடாப்பா-- அதுதான் இப்ப பெரிய பிரச்சனை------குத்தகைக்கு வயல் விதைச்சு என்னண்டு அவனைப் படிப்பிக்கப்போறன்---ஒரு சொத்தும் இல்லையடாப்பா---வீடு தரைமட்டம்--மாடுகள் ஒண்டுமில்லை---கையும் காலும்தான் மிச்சம்--- நாலு குமருகள்-ஏதோ அன்றாடம் கஞ்சி குடிக்கிறம்--- படிப்பிக்க என்ன செய்யிறது---கனகர் தனது கவலைகளை கொட்டித்தீர்த்தார்.

அண்ணை கவலைப்படாதேங்கோ---ஒருமாதிரி சமாளிச்சுபோறதுக்கு கொஞ்ச காசு ஏற்பாடு செய்யுங்கோ---ஒரு அப்பிளிகேசன் எழுதி உங்கட விதானையாரிட்ட உறுதிப் படுத்தித் தாரங்கோ--- வன்னிக் கலாச்சார அமையம் என்ற ஒரு அமைப்பு வன்னியின் கல்வியை உயர்த்தப் பாடுபடுது. அது கனடாலில இயங்குது. இஞ்சை அதுக்கு ஒரு குழு இயங்குது. அதனிடம் இந்த அப்பிளிகேசனை கொடுத்தால் நிச்சயம் உதவி கிடைக்கும்---.

கனகருக்கு நம்பமுடியவில்லை -- இந்தக் கலியுகத்திலும் இப்படி மனிதர்கள் இருக்கிறார்களா? நேரத்தை காசாக்கும் மேற்கு நாடொன்றில் இருந்தபடி தன் மண்ணை நேசிக்கும் அம்மனிதர்களை நினைக்கும் போது - அவருக்கு கண்கள் பனித்தன.

புழுதி விதைப்பு விதைத்துவிட்டு மழைக்குக் காத்திருக்கும்போது----"மேகம் கறுத்து" குளிர்காற்று---வீசிய உணர்வு அவருள் எழுந்தது..

அறியாமை என்னும்
புரியாத புயலில்
தெரியாத விடயம்
புரியாமல் பேசி
உடைபார் தம்மூக்கை

அறியார் சொற்கேட்டு
புரியார் நடைபயின்றால்
உரியார் செய்வதெல்லாம்
பிழையாய்த் தோன்றுமங்கே

# ஏக்கங்கள் தீருமோ...

தொண்ணூற்றேழு நீ சின்ன வண்டம்மா
ஏன்னென்று இன்று நீ வண்ணக் குண்டம்மா
கண்ணொன்று புலமைப் பரிசுத்திடம் உன்
பூச்செண்டம்மா
முன்னின்றுசெய் நம்தேசத்துக்கது தொண்டம்மா
இன்னொன்று வன்னிச் சங்கமே கடமை
யொன்றுண்டம்மா
மண்ணென்றென்றிராதே முழுத்தேசத்து ஏக்கங்கள்
-தீர்க்கும் உன் வாய்ப்பாடம்மா.

புல்வெளிப் பரப்பில் பூவரசு நிழலில்
வல்லை வெளித் தெருவில் வேப்பமரத்தருகில்
சொல்லச் சுகமிதப்பில் சோகங்கள் விரைவில்
மெல்லவிலகி யெழில் சுகமேதினி எத்தொலைவில்.

வளங்களைத் தொலைத்து- கண்
குளங்களை நிறைத்து- பல
மனங்களை இணைத்து - ஏன்
பழங்களாகவில்லை இன்னும் தீராது ஏக்கம்,

ஆடி ஆவணி மாதத்து வெயில்
மூடிக் குளிரூட்டியில் முந்தநாள் பொரியல்
வாடிக்கிடக்குது, மணிக்கூடு கையில்
ஓடித்திரியுது, மனிதமன மெங்கோ பொய்யில்,

வாடிக்கிடக்கின்ற நாற்றுக்கு வெய்யில்
ஓடிக்கிடக்கின்ற வரப்போரம் தொய்யில்
பாடித்திரிகின்ற வண்டிற்கோமையல்
ஆடித்திரிந்திட்ட ஏக்கங்கள் பொய்யில்,


புத்துப் பதினைந்து மட்டுமா பாரப்பா
சேத்து மடிந்து போகுதே எனப்பா
பித்துப் பிடித்துநாம் அலைவது வீணப்பா
மொத்தத்தில் நாமேன் இனிக்காத தேனப்பா,

கூடும் சமூகம் வாழ்வில் குஞ்சியப்பு, மாமி, பெரியப்பா
தேடும் தம் இரத்தசம்பந்தங்களையேன் அது சரியாப்பா
பாடும் பறவைகள் கூட்டத்துச் சிந்தையைப் பாரப்பா
நாடும் அடிப்படைமனிதனின் மனசும், மனிதமும்தானப்பா.

தடையெடுத்திருக்கு சாமான்கள் விலைகுறைந்திருக்கு
படை படுத்திருக்கு பல பழங்கதைகளுமிருக்கு
விடை கிடைத்திருக்கு விஷம் குறைந்திருக்கு
மடைதிறந்திருக்கு மனவருத்தங்கள் எதுக்கு,

*வே.கணேசலிங்கம்*

# WIND STAR
## AUTO COLLISION




*27 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்.*
*கனடாவில் 18 வருடங்கள் தொடர்ந்து..*


**FREE ESTIMATE**


## *குறைந்த கட்டணம்! நிறைந்த சேவை!!*

*எந்தரகமான வாகனங்களாயினும் சகலவிதமான* **Body Work, Painting** *வேலைகளையும் துரிதமாகவும், தரமாகவும் உங்கள் திருப்திக்கேற்பக் குறைந்த கட்டணத்தில் குறித்த தவணையில் செய்து கொள்ள நாடுங்கள்.*

*காப்புறுதித் திட்டத்தினால் செய்யப்படும் திருத்த வேலைகள், எங்கள் செலவில் உங்கள் வாகனங்களை கொண்டு வரும் வசதியும், வசதிற்கேற்ப வாகன வசதிகளும் செய்து தரப்படும்.*

**Towing Services**






*தொடர்புகளுக்கு: றஞ்சன்*

**Tel: (416) 564-9796 24 Hrs**
**(416) 757-8676**
**(416) 757-7599**

**Fax: (416) 757-0598**

**50A Howden Road**
**Scarborough, Ont., M1R 3E4**



# புலம்பெயர் மக்களும் வன்னியின் பெருமையும்

*நகுலா சிவநாதன் (ஆசிரியர்)*
*ஜேர்மனி*

யாழ்க்குடாநாட்டின் தென்பகுதி இயற்கை எழில் கொஞ்சும் அடர்ந்த காடுகளாலும், பசுமையான மரங்களாலும் இனிய கிராமங்களாலும் சூழப்பட்ட பகுதியே வன்னி நிலப்பரப்பாகும். மன்னார், முல்லைத்தீவு, வவுனியா அன்றும் இன்றும் பல்லாயிரக் கணக்கான மக்களால் போற்றப்படும் பிரதேசமாகவே இது விளங்குகின்றது. தமிழீழத் தலைவரின் தன்மானக் கோட்டையாக விழங்குவதும் இந்த வன்னி மண்ணேயாகும்.

இன்று மாவீரமணிகளையும் விடுதலை உணர்வாளர்களையும் ஏந்தி நின்று காவியம் படைக்கின்றது. எங்கள் உயிர் காக்கும் உணவினை உற்பத்தி செய்யும் வளமான நிலமாக வன்னி நிலம் விளங்குகின்றது. நெற்செய்கையையே சொந்தத் தொழிலாகக் கொண்டு சூரியனை நம்பி வாழ்ந்து நன்மை அடைந்தனர் இவ்வூர் மக்கள். வந்தோரை வாழவைக்கும் வழமான மண் பற்று கொண்டது எங்கள் வன்னி மண்.

இன்னும் சொல்லப்போனால் உலக சரித்திரத்தில் நடைபெற்ற பிரபாகரனின் பத்திரிகையாளர் மாகாநாட்டின் மூலம் சகல இடங்கட்கும் அறியவைத்த பெருமை வன்னி மண்ணுக்கே உரியதாகும். வளம் கொழிக்கும் வரலாற்றுத் தமிழர்கள் வாழ்ந்து வெற்றியடைந்த பகுதியும் இதுவே. இன்று இடம்பெயர்ந்து வந்தோரை அரவணைத்து அடைக்கலம் கொடுத்த மண்ணை எழிதில் மறந்துவிடமுடியுமா? இராணுவத்தினரைப் புறமுதுகோடச் செய்ததும் இந்த வீர மண்ணேயாகும். பண்டாரவன்னியன் புகழ்பாடும் இந்த நிலம் இன்று மக்களாலும் கட்டிக்காக்கப்பட்டு வீரமுடன் மிளிர்கின்றது. இந்த மகிமை பல பொருந்திய மண்ணை நினைவு குூர்ந்து விழா எடுப்பது பெருமையிலும் பெருமை. பாலர் முதல் பாட்டன்வரை பாதுகாத்த வன்னி இன்று புலம் பெயர் கனடாவாழ் அன்புள்ளங்கள் ஆதரவுக் கரம் கொடுத்து அணைப்பது வரவேற்கத் தக்கது. புலத்திலே வாழ்ந்தாலும் நிலத்தின் உறவுகளின் நிம்மதியான வாழ்விற்கும் சிறுவர்களது கல்வி வளர்ச்சிக்கும் சிறப்பான உதவிகள் புரியும் நேய நெஞ்சங்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.
உலக நாடெங்கும் தமிழர்கள் இன்று பரவி வாழ்கின்றார்கள். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சொந்த மண்போல் ஆகுமா. பிள்ளைப் பருவத்தில் துள்ளிப் பாய்ந்த சுதந்திர பூமியைக் காப்பதில் நாம் யாரும் பின்னிற்கலாமா. கனேடிய வன்னி மக்களின் ஒற்றுமையான உள்ளத்தால் தாயகத்தில் பல்வேறு உயிர்களும் வாழ்கின்றனர்.

கொம்பறை மலர் வன்னிமண்ணின் சிறப்பை வகையாகத் தாங்கி வருகின்றது. ஐந்தாவது அகவையைக் கடந்து ஆறாவது அகவையில் காலடிவைத்து ஆலம் விருட்சம்போல் வாழ வாழ்த்துகின்றோம். ஒரு மனிதனின் மொழிதான் சிந்தனையின் திறவுகோல். இதனால்தான் சிந்திக்கத் தெரிந்த இனம் இந்த மனித இனம் ஒன்றேயாகும்.

இந்த வன்னிவிழா மூலம் வன்னி மக்களின் நாட்டுப்பற்றையும் சேவைப்பற்றையும் எண்ணிப் பெருமிதம் கொள்கின்றேன்.

தாயகப் போரின் கொடிய தாக்கத்திற்கு அஞ்சி அன்னிய நாடுகட்கு புலம் பெயர்ந்தோர் புதிய வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப புத்துயிர் அடைந்து விட்டனர். புலம் பெயர் புது இலக்கிய வடிவங்கள் மலர்ந்தன. இந்த வகையில் பிறந்த மண்ணையும் வளந்த இடங்களையும் பெருமையாகப் பேசிப் புலம் பெயர் வாழ்விலே நினைவு குூர்வது பொருத்தமானதாகும். கனேடிய வன்னி மக்கள் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான விழா எடுப்பது சிறப்பானதாகும். இன்று வன்னி மைந்தர் பலர் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் நாட்டுப் பற்றையும் ஒற்றுமை உணர்வையும் ஓங்கி ஒலித்து வீர காவியம் படைக்கின்றனர். கனடாவாழ் நெடுங்கேணியூர் சித்தர் சிறந்த கவிதைகளையும் விடுதலை உணர்வுகளையும் வானொலிமூலம் கொடுத்து சிறப்புப் பெறுவது பெருமையிலும் பெருமை.

கேதீச்சரம் என்னும் திருத்தலம் இந்த மண்ணில் அமைந்தமையும் இதற்குப் பெருமை சேர்க்கின்றது. இன்று சிறந் அறிஞர்களையும் பாடகர்களையும் தாங்கி நின்று பெருமைபெறுவது எமக்கெல்லாம் மகிழ்வான விடயங்கள்.

ஒவ்வொரு தமிழனும் நாட்டின் பற்றுணர்ந்து தமிழ்த் தாயகம் மலர உழைப்பானானால் வெகுவிரைவில் மலரும் தமிழ் ஈழத்தை மகிழ்வுடன் எதிர்பார்க்கலாம். தன்னலம் கருதாது மண்ணிற்குச் செய்யும் உங்கள் உதவிகளும் இன்று வரலாறு பல படைக்கும் வன்னிவிழாவும் கொம்பறை மலரும் 2002ம் ஆண்டிலும் சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க கொம்பறை
வளர்க உன்சேவை.

## புரிந்துணர்வின் பின்னும் அவலம்

சமாதானம்---- அதன் வரவுக்காய்
தவம் கிடக்கிறோம்-------!
மழலைகள் நாங்கள் ஆனாலும்
வஞ்சிக்கப்படுகின்றோம்------!
உலகிற்கும் எமக்கும்
தூரம் மிகவதிகம்
காரணமெனில்------- நாங்கள்
வாழ்வது வன்னியிலே----------!
சுதந்திர பூமிதான் எம் பூமி அதில்
சோகங்கள் அதிகமடா
புத்தகம் கூடத் தாமதமாகும் - அதில்
எழத்துப் பிழைகள் அதிகமாகும்
பொருட் தடை எடுத்தாலும்
பொருட்கள் விலை மிக வதிகம்
பாதை திறந்து பண் செய்தாலும் - எம்
பாதை இன்னும் பண்ணாகவில்லை
இடிந்துபோன பாடசாலையில் - வர்ணம்
இழந்துபோன கரும்பலகையில்
எழுதித்தான் நாங்கள்
இப்பவும் படிக்கிறோம்

"கரன்ட்" இல்லா வன்னியிலே
கணனி தெரியா மாணவர்கள் - நாங்கள்
இன்றும் இவ்வுலக மாணவர்கள்
உலகத் தமிழர்களே - இதை
உணருங்கள் தெளிவாயே
உதவி புரிந்து எங்களை
உயர்திவிடுங்கள் விரைவாயே.

*செல்வி ரெளசி நித்தியானந்தராசா*
*மு கலைமகள் வித்தியாலயம்*
*முள்ளியவளை.*

## நான் தேடுகிறேன்

நான் தேடுகிறேன்
ஓலைக் குடிசைக்குள் உட்காந்து
நிம்மதியாய் கூழ் குடிக்கும்
மரகதம் பாட்டியை

நான் தேடுகின்றேன்
உச்சி வெயிலிலும் வயலில் நின்று
வாகாய் வேலை செய்யும்
சுந்தரம் தாத்தாவை

நான் தேடுகின்றேன்
தெரு ஓரங்களில் நின்று
சுதந்திரமாய் விளையாடும்
சிறுவர்களை

நான் தேடுகின்றேன்
மழை நேரங்களில்
சந்தோசமாய் கப்பல் விடும்
பள்ளி மாணவர்களை

நான் தேடுகின்றேன்
வயல் மங்கை
பச்சைத் தாவணியுடன்
பரவசப்படுத்தியதை

நான் தேடுகின்றேன்
தினமும் வீட்டிற்கு மேலே
சத்தமுடன் பறந்து செல்லும்
கிளிக் கூட்டத்தை

நான் தேடுகின்றேன்
போரினால் சிதறிப்போன
மனிதக் கூட்டங்கள்
மீண்டும் மீண்டு வந்தபோது

நான் தேடுகின்றேன்
இவர்கள் எல்லாம்
எங்கே? எங்கே?
விடைகாணக் கேள்வியுடன்
இன்றுவரை நான் தேடுகின்றேன்.


*கை. யசோதா(ஜெகை)*
*கொழும்பு-3*

# OPTOMETRIST

**கண் பரிசோதனை நிபுணர்**

**Eye Examination, Glasses and Contact Lenses...**

*DR. Yarlini Karunanith O.D*



**OHIP மற்றும் பிரத்தியேக காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**




**Gateway Corporate Centre**
**10 Gateway Blvd., #130**
**North York, ON, M3C 3A1**
**Tel: (416) 429-2548**


**5200 Finch Ave. East # 112**
**Scarborough, Ontario**
**(Corner of Finch/MiddleField)**
**Tel: (416) 298-9674**

# R & S Auto Sales

*Radha Automotive Eng & Radha International Financial Group*

**வன்னி விழா சிறப்புற**
**எமது இனிய வாழ்த்துக்கள்**

**UCDA Member**



**BBB Member**

**Call: Radha**

**Tel: (416) 412-3838 Fax: (416) 412-1174**

**4362 Sheppard Avenue East, Scarborough, Ont., M1S 1T6**

# Robin Restaurant

கொண்டாட்டங்களோ? வைபவங்களோ? எதுவானாலும் சிறந்த முறையில் ருசியான உணவு பரிமாற எம்மை அழையுங்கள்!

Fast Food &
Catering



**587 Parliament Street**
**Toronto, Ontario**
**M4X 1P9**

**Tel: (416) 925-3315**

---

**சிகை அலங்காரத்தில் புதிய சாதனை!**

# BOND SALOON

**நகரின் மத்தியில் உங்கள் அழகை மென்மேலும் அழகு படுத்திட இங்கு வாருங்கள்!**



**Tel: (416) 927-0299**

**560 Parliament Street, 2nd Floor**
**Toronto, Ontario**
**(Parliament/Wellesley)**

# வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் கனடா

# புலமைப்பரிசில் திட்டம்

கடந்த வருடங்களைப் போலல்லாது இவ்வருடம் புலமைபரிசில் என்னும் ஓர் சிறப்புப் பக்கத்தினைக் கொம்பறை மலரில் இணைத்துக் கொள்வதில் ஆசிரியர் குழு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது. 1998ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டதிற்கு 2001ம் ஆண்டுக் கொம்பறையில் ஓர் தனிப்பிரிவு ஏற்படுத்தப்படுகின்றது என்றால் இத்திட்டமானது நடைமுறையில் எவ்வளவு முன்னேற்றங் கண்டுள்ளது என்பதனை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதற்காக உங்கள் அனைவரையும் அன்போடு உள்ளே அழைக்கின்றோம்.

**புலமைப்பரிசில் செயற்திட்டக் குழு**

திரு ச. இராசேஸ்வரன்
திரு த. பாலசுப்பிரமணியம்
திரு க. யோகநாதன்
திரு இ. தங்கேஸ்வரன்

## புலமைப்பரிசில் தகவல் பிரிவு
## வ. த. ச. க. அமையம்
## கனடா

# புலமைப் பரிசில் திட்டம்

## (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள்)

## வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்-கனடா.

அன்புடன் நிதிவழங்க முன்வரும் பெருந்தகையாளர்கட்கு!

எமது பகுதியில் அன்றாட சீவியத்திற்கு எத்தனையோ குடும்பங்கள் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் நன்கறிவோம். அதேவேளையில் எத்தனையோ மாணவர்கள் வீட்டிலுள்ள வறுமைநிலை காரணமாக ஆரம்பக் கல்வியையோ அல்லது பல்கலைக்கழகக் கல்வியையோ தொடர முடியாதவர்களாகவும் உள்ளனர். ஆனால் தமிழ்ப் பெற்றோர்களது சதா சிந்தனை தாம் எத்தகைய கஸ்ரங்களை அனுபவித்தாலும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்பதேயாகும். இதனைத் தாங்கள் நன்கறிவீர்கள். சங்கத்தினது தற்போதைய நிதி நிலைமையினையும், நிதி வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது பொருளாதார வசதியினையும் கவனத்திற் கொண்டு தற்போது கீழ்வரும் சிறிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் வறிய குடும்பமொன்றின் கல்விச் செலவைக் குறைத்து அவர்களது வருமானத்தை உயர்த்தமுடியும் என்பதோடு, கற்றோர் எண்ணிக்கையையும் உயர்த்தமுடியுமென நம்புகின்றோம்.

எனவே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாகிய நாம் ஓர் வறிய குடும்பம் ஒன்றிற்கு உதவுவதன் மூலம் அவர்களையும் வாழ்வின் முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயல்வோமாக!!

1) மிக வருவாய் குறைறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

2) மிக வருவாய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான கற்கை நெறிகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

3) மிக வருவாய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பாடசாலை மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

4) பாடசாலை மாணவர்கட்கான பாடநெறிகள் அல்லது கற்கைத் துறைகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

5) மிக வருவாய் குறைந்த அல்லது பராமரிப்பற்ற 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளைப் பராமரிக்குந் திட்டம்.

மனமுவந்து புலமைப்பரிசில்களை வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது கவனத்திற்கு:-

1) நீங்கள் விரும்பிய மாவட்டத்தினைத் தெரிவுசெய்யலாம்.
2) நீங்கள் விரும்பிய கிராமத்தினைத் தெரிவுசெய்யலாம்.
3) நீங்கள் விரும்பிய பாடசாலையைத் தெரிவுசெய்யலாம்.
4) நீங்கள் விரும்பிய பாடநெறியைத் தெரிவுசெய்யலாம்.
5) நீங்கள் விரும்பிய துறையைத் தெரிவுசெய்யலாம்.
6) நீங்கள் விரும்பிய பல்கலைக்கழகத்தினைத் தெரிவுசெய்யலாம்.
7) நீங்கள் விரும்பிய கற்கைநெறியைத் தெரிவுசெய்யலாம்.
8) ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்காவது புலமைப் பரிசிலைக் கொடுப்பதற்கு முன்வருதல் வேண்டும்.
9) ஆகக் குறைந்தது மாதாந்தம் இலங்கை ரூபாயில் 1000.00 வரையில் கொடுப்பதற்கு முன்வருல் வேண்டும்.
10) புலமைப் பரிசிலினது பெயரை நிதியீடு செய்பவரே தனது சொந்த விருப்பத்தில் தீர்மானிக்கலாம்.
11) தாங்கள் விரும்புவீர்களாயின் ஒரு வருடத்திற்குரிய முழுப் புலமைப் பரிசில் பணத்தினையும் அல்லது புலமைப் பரிசில் காலத்திற்குரிய முழுப் பணத்தினையும் அல்லது மாதாந்தமாகப் பணத்தினைச் சங்கப் பொருளாளரிடம் சமர்ப்பித்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளளாம்.
12) தங்களது நிதியிலிருந்து புலமைப் பரிசிலினைப் பெறுபவரது விபரங்கள் அனைத்தும் தங்கட்குச் சமர்பிக்கப்படும்.
13) தங்களது புலமைப் பரிசில் நிதி தொடர்பான கணக்குகள் அனைத்தும் தங்களது பார்வைக்காக ஒப்படைக்கப்படும்.
14) தங்கட்கு வசதியீனங்கள் ஏற்படும்போது ஒரு வருடம் முடிந்தபின்னர் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து புலமைப் பரிசில் கொடுப்பனவை இடைநிறுத்தலாம்.

மேற்படி புலமைப் பரிசில் திட்டத்தில் சேர்ந்து கனடா - வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் ஊடாக நிதியுதவி செய்ய விரும்பும் பெருந்தகையாளர்களும், யாருக்கு உதவி அவசியமாகத் தேவைப்படுகின்றது என்ற விபரங்களைத் தந்துதவுவதற்கும், நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

திரு த.பாலசுப்பிரமணியம் (416) 286-4258 திரு இ.தங்கேஸ்வரன் (416) 421-0073 திரு கா.யோகநாதன் (416) 609-3179

# புலமைப் பரிசில் திட்டத்தினது செயற்திட்ட முன்னேற்றங்கள்.
## நிர்வாகசபை ஆண்டு 2002/2003

நடைமுறை நிர்வாகசபையானது பதவி ஏற்றதிலிருந்து தனது நிர்வாக ஆண்டு காலப்பகுதியில் வன்னிப் பிரதேசத்தில் மாவட்டரீதியாகப் பின்வரும் விபரங்களைக் கொண்ட தாய் தந்தையரை இழந்தவர்களும், வறியவர்களுமான மாணவர்கட்குப் புலமைப் பரிசில் நிதியினைத் தொடர்ச்சியாக வழங்கி உதவிபுரிந்து வருவதோடு மேலும் சில புதிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் நிதி வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அவை தொடர்பான விபரங்கள் பொதுமக்களது பார்வைக்காப் பின்னிணைக்கப்படுகின்றது. மேலும் இந் நிதியினை வழங்குவதற்கு உதவிபுரிந்த அனைத்துப் பெருந்தகையர்கட்கும் அமையம் தனது மனமார்ந்த நன்றிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

| நிதியுதவி பெற்ற மாணவர்கள் | மாவட்டம் உ.அ.அ.பிரிவு | பாடசாலை | புலமைப்பரிசில் வழங்கியவர்கள். |
|---|---|---|---|
| **மன்னார் மாவட்டம்:-** | | | |
| 1. ந. நந்தபாபு | மன்னார் | மன்னார் சித்தி வினா.இந் | அ. இராமேஸ்வரன் பிறம்ரன் (யாழ்ப்பாணம்) |
| 2. தெ. வசந்தராசன் | மன்னார் | மன்னார் சித்தி வினா.இந் | வ.த.ச.க.அமையம் |
| 3. ப. பாக்கியலட்சுமி | மன்னார் | புனித ச. பெ.தே. பாடசாலை | திரு. பரா சங்கானை சந்தை. |
| 4. சி. இதயராணி | மன்னார் | பாத்திமா மத்திய மகாவித் | Dr ஐ. ஞானேஸ்வரன், வவுனியா. |
| 5. பி. வ.அருள்மேரிறெவல் | மன்னார் | புனித ச. பெ.தே. பாடசாலை | திரு பி. எஸ். சூசைதாசன். |
| **முல்லைத்தீவு மாவட்டம் :- ஒட்டுசுட்டான் பிரிவு:** | | | |
| 1. சு. கேசலா | ஒட்டுசுட்டான் | இடதுகரை அ.த.க பாடசாலை | திரு. க. பாலமனோகரன். முள்ளியவளை. |
| 2. பு. பரணீதரன் | ஒட்டுசுட்டான் | யா.பல்கலைக்கழகம் | திரு. இ. தங்கேஸ்வரன். கற்சிலைமடு. |

| | | | |
|---|---|---|---|
| 3. மா. சிவசோதி | ஒட்டுசுட்டான் | கூழாமுறிப்பு அ.த.க பாடசாலை. | திரு. சி. சிவலோகநாதன்.<br>ஒட்டுசுட்டான். |
| 4. ப. கமலேஸ்வரி | ஒட்டுசுட்டான் | கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசா | வ. த. ச. க அமையம்.<br>கனடா. |
| 5. அ. சஜீபன் | ஒட்டுசுட்டான் | மாங்குளம் மாகாவித்தியாலயம். | திரு. சி. சிவலோகநாதன்.<br>ஒட்டுசுட்டான், கனடா. |
| 6. க. பார்த்திபன் | ஒட்டுசுட்டான் | | திரு. சி. யோகராசன்.<br>கற்சிலைமடு, கனடா. |
| 7. செ. றசீதரன் | ஒட்டுசுட்டான் | | திரு ம. இரவிச்சந்திரன்.<br>கனடா. |
| 8. த. அருட்செல்வி | ஒட்டுசுட்டான் | | திரு ம.ந. கிரிதரன்.<br>கனடா. |

## துணுக்காய்ப் பிரிவு:-

| | | | |
|---|---|---|---|
| 1. பா.பற்குணராசன் | முல்லைத்தீவு<br>துணுக்காய் | மல்லாவி மத்திய கல்லூரி | வை.இராஜேஸ்வரன்<br>365யோகபுரம்,க.அம்பலவாணர்<br>364 யோகபுரம். |
| 2. தே. தேவலக்ஷ்ன் | முல்லைத்தீவு<br>துணுக்காய் | கல்விளான் அ.த. க. பாட | கா.யோகநாதன்<br>758யோகபுரம்,பு.புனிதவதி<br>121வவுனிக்குளம் |
| 3. ராகினி புஸ்பநாதன் | முல்லைத்தீவு<br>பாண்டியன்குளம். | பாண்டியன்குளம் மகாவித் | பா.விஜயகுலசிங்கம்<br>முன்னாள்கிளை<br>முகாமையாளர்,துணுக்காய் |
| 4. தனுசா குலசிங்கம் | முல்லைத்தீவு<br>துணுக்காய். | யோகபுரம் மாகாவித்தி | பா.விஜயகுலசிங்கம்<br>முன்னாள்கிளை<br>முகாமையாளர்,துணுக்காய் |
| 5. கிருசா பரராசசிங்கம் | முல்லைத்தீவு | மல்லாவி மத்திய கல்லூரி | வ.த.ச.க.அமையம் |
| 6. கௌசிகா வரதராஜா | முல்லைத்தீவு | மல்லாவி மத்திய கல்லூவி | திரு பி. பாலசுப்பிரமணியம். |

| | | | |
|---|---|---|---|
| | | | கனடா. |
| 7. பு. தர்மிகா | பாண்டியன்குளம் | மல்லாவி மத்திய கல்லூவி | திருமதி தமிழ்ச்செல்வி<br>திருமதி க. இந்துமதி கனடா. |

## முள்ளியவளைப் பிரிவு: பாடசாலை:- வித்தியானந்தக் கல்லூரி.

| நிதியுதவி பெறும் மாணவர்கள் | ‘அவர்களின் ஞாபகார்த்தப் புலமைப்பரிசிலில். | நிதி வழங்கும் பெருந்தகையார்கள். |
|---|---|---|
| 1. வ.ஜெயசீலன் | -------------------------- | திரு.சி.பரம்சோதி,<br>திரு கா.கதிர்காமநாதன்.<br>(துணுக்காய்), கனடா. |
| 2. த.திலீபன் | அமரர் திருமதி க.வள்ளிநாயகி | செல்வி க. சுதர்சினி<br>(முள்ளியவளை), கனடா. |
| 3. சூ.சிந்துஜா | அமரர் திரு ந.பொன்னம்பலம் | திருமதி. பொ.அழகம்மா.<br>(மாமூலை), கனடா. |
| 4. ம.விசேந்தினி | ---------------------------------- | திரு.க.தமிழ்ச்செல்வன்<br>(கணுக்கேணி) கனடா. |
| 5. த.தாரணி | அமரர் திரு நா.காசிப்பிள்ளை | திரு.கா.யசோதரன்<br>(கணுக்கேணி) கனடா. |
| 6. அ.பவிதா | மாவீரர் த.பரமராசா (சத்தியன்) | திரு த.தேவராசா<br>(ஊற்றங்கரை) கனடா. |
| 7. பா.நவநீதன் | அமரர் திருமதி க.வள்ளிநாயகி | திரு.க.கருணாகரன்<br>(முள்ளியவளை) கனடா. |
| 8. கோ.சர்மிலா | ---------------------------- | சுமதி பத்மகாந்தன்.<br>கனடா. |
| 9. சி.யசிந்தன் | அமரர் திரு எஸ்.விஜயானந்தன். | திருமதி உ.கௌரி<br>(முள்ளியவளை) கனடா |
| 10.செல்வி. சண்முகவடிவேல் | அமரர் செல்வி ப. சௌமி | திருதிருமதி பத்மநாதன்.<br>குமுளமுனை, கனடா. |

## வவுனியா மாவட்டம்:-

| | | | |
|---|---|---|---|
| 1. செ. றஜிதா | வவுனியா | நெளுக்குளம் க மகா.வி | திமதி கா.வசந்தாதேவி<br>757 யோகபுரம், திரு சி.<br>கார்த்திகேசு 758யோகபுரம். |

| | | | |
|---|---|---|---|
| 2. அ. மியூசிகா | வவுனியா | நெளுக்குளம் க மகா.வி | திருமதி கு. சுரேந்தினி, கனடா. |
| 3. க. அமலதாஸ் | வவுனியா | நெளுக்குளம் க மகா.வி | Dr ஐ. ஞானேஸ்வரன், வவுனியா. |
| 4. ச. கோபிகா | வவுனியா | ஓமந்தை மத்தியகல்லூரி | வ.த.ச.க.அமையம். |
| 5. செ. கஜேந்தினி | வவுனியா | ஓமந்தை மகாவித்தியாலயம் | திரு ஏ. சண்முகலிங்கம் வண்ணார்பண்ணை, கனடா. |
| 6. சி. நிறஞ்சன் | வவுனியா | பம்பைமடு அ.த.க.பாடசாலை | திரு க. தவநாதன். கனகராயன்குளம், கனடா. |
| 7. க. தயாளினி | வவுனியா | பம்பைமடு அ.த.க.பாடசாலை | திரு ஜே. சண்முகலிங்கம் வண்ணார்பண்னை, கனடா. |

நெடுங்கேணிப் பிரிவு:

| | | | |
|---|---|---|---|
| 1. வி. மதனிகா | நெடுங்கேணி | நெடுங்கேணி ம. வி. | திரு. தா. பரமானந்தம் குடும்பம் பிறம்ரன் கனடா (நெடுங்கேணி). |
| 2. ச. மோகனாம்பிகை | நெடுங்கேணி | நெடுங்கேணி ம. வி | திரு. தா. யோகநாதன் (சிவம்) பிறம்ரன் (நெடுங்கேணி) |
| 3. சா. சஜிதா | நெடுங்கேணி சேனைப்புலவு | நெடுங்கேணி ம. வி. | திரு. ச. சதாசிவம் குடும்பம் ஸ்காபுரோ கனடா. (பழம்பாசி) |
| 4. பா. கோபிநாத் | நெடுங்கேணி சேனைப்புலவு | நெடுங்கேணி ம. வி. | திரு. ச. சதாசிவம் குடும்பம் ஸ்காபுரோ கனடா. (பழம்பாசி) |
| 5 ம. கார்த்திகா | நெடுங்கேணி | நெடுங்கேணி ம. வி. | திரு. பி. பாலசுப்பிரமணியம். ஸ்காபுரோ கனடா. |

# மு/யோகபுரம் மகா வித்தியாலயம்
## யோகபுரம்
# M/Yogapuram Maha Vidyalayam
## YOGAPURAM

15.04.2002.

தலைவர்,
வன்னித்தமிழ் சமூக கலாச்சார அமைப்பு
கனடா.

அன்புடையீர்,
பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்திக்கழகம்
யோகபுரம் ஊடாக

நன்றி நவிலல்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் திறமை மிக்க மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாகச் செயற்பட்டு வரும் தங்களது பணி பாராட்டுதற்குரியது. தங்கள் ஆதரவால் எமது பாடசாலையில் செல்வி. சிவலிங்கம். தனுஷா என்பவர் பெற்று வந்த உதவுதொகை அவர் கல்வியைத் திறம்படக் கற்பதற்குப் பேருதவியாக அமைந்தது இத்தகைய மாணவர் சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டு சேவையாற்றும் தங்களது பணி சிறக்க வேண்டும். தொடர்ந்தும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்றும் வாழ்த்துவதோடு தங்களது அரும் சேவைக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

Mrs. K. Krishnapillai
Principal
Mu/Yogapuram M. V.
Yogapuram.

திருமதி. கமலராணி. கிருஷ்ணபிள்ளை
அதிபர்
மு/யோகபுரம் மகாவித்தியாலயம்,
யோகபுரம்.

PANDIYANKULAM - THUNUKKAI
**DEVELOPMENT ORGANIZATION** (P.T.D.O)

THUNUKKAI ROAD YOGAPURAM Via MANKULAM N. P.
REGD No: MV / TNK / Vo / 01 / 95

**பாண்டியன்குளம் - துணுக்காய் அபிவிருத்திக் கழகம்**
துணுக்காய் வீதி யோகபுரம் - மாங்குளம்

18 . 04 . 2002

வாழ்த்துச் செய்தி.

குஞ்சியழகும் கொடுக்கானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நடு நிலைமை நீங்கா கல்வியழகே அழகென்றார்

அப்பெரியார் கூறிய அவ்வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் ஆழமாய் பதிந்திருக்கின்றது. உலகிலே பல அழகுகள் ஆர்ப்பரித்து நிற்கின்ற போதிலும் கல்வி அழகே சிறந்தது என்றும், ஈடில்லாதது என்பதையும் இப்பாடல் உணர்த்துகின்றது மட்டுமின்றி, எமது ஈழச்சிறார்களின் இந்நிலையிலும் " செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச் செல்வீகை" புகட்டுவதற்கு ஊன்று கோலாக அமைந்த உங்கள் அமையத்திற்கு என்றும் இப்பாடல் சாலச்சிறந்தது.

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ நாயில் நனி சிறந்ததுவே"

என்ற நல்லோர் வார்த்தையை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் கடல் கடந்து கூடா சென்றும், காலங்கள் பல கடந்த போதிலும் பிறந்து வளர்ந்த தாய் நாட்டை மறக்காத தர்ம சீலர்கள் நீங்கள் செய்யும் தர்மத்திற்கு ஈடேது.

கொம்பறை பெயர் கொண்ட கொடை விதர்ப்பர்களே, உங்கள் இமையம் வளர்ந்து பெருவிருட்சமாக கிளை பரவி ~~[illegible]~~ கல்வியை தொடர முடியாது ஆரம்பத்திலும், இடையிலும் நிறுத்தி இன்னல் பட்டுத் தவிக்கும் தமிழ்ச் சிறார்களுக்கு இளைப்பாற வழிவகுத்து தங்கள் அமையத்தை பல்லாண்டு காலம் வாழவென வாழ்த்தும்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பா.து.அ.கழகம்
யோகபுரம்.

பாண்டியன்குளம் துணுக்காய்
அபிவிருத்திக் கழகம்
யோகபுரம்
மாங்குளம்.

## வன்னி விழா

### சிறப்புற அமைய வாழ்த்துக்கள்

ROYAL LEPAGE



***Karu Kandiah***
*(Associate Broker)*
*Residential Specialist*

ஒன்றல்ல..
இரண்டல்ல...
பதினான்கு வருடங்கள்....
இத்துறையில் அனுபவம், திறமை.....

வீடு வாங்க, விற்க நாடுங்கள்.

*Karu Kandiah*

**Home: (416) 284-9999**
**Bus: (416) 284-4751**
**Car: (416) 616-7278**



## இரா சுப்பர் மார்க்கட்

**கனேடிய, மேற்கு-கிழக்கு இந்திய மற்றும் இலங்கைப் பல சரக்குச் சாமான்கள்**

**இராவின் புதிய அறிமுகம்**
**துரித பணமாற்றுச் சேவை**
**(416) 264-7373**

- சிறந்த உணவு வகைகள்
- மரக்கறி வகைகள்
- பால் மற்றும் பழவகைகள்
- மீன் இறைச்சி வகைகள்
- வீடியோ, சீடி (CD) அனைத்துப் பொருட்களுக்கும் நாடுங்கள்,



**ERAA SUPER MARKET**
**2607 Eglinton Avenue East**
**Scarborough, Ontario**
**M1K 2S2.**

**Tel: (416) 269-2622**
**Fax: (416) 269-2622**

# பேச்சுப் போட்டி 2002ம் ஆண்டு

**பாலர் பிரிவு:~**

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
| அ. பிரபாகரன் | எஸ். கஸ்த்தூரி | எஸ். துலசிகா |


**கீழ்ப் பிரிவு:~**

முதலாம் இடம்



அ. பூரம்மியா

இரண்டாம் இடம்



ஜெ. பிரியங்கா

மூன்றாம் இடம்



ஆர். ரம்யா

**மத்திய பிரிவு:~**

முதலாம் இடம்



த. தனுசன்

இரண்டாம் இடம்



ஜெ. சிந்துஜா

மூன்றாம் இடம்

எஸ். நிரத்திகா

மூன்றாம் இடம்



ஜி. கீர்த்தனி

## பேச்சுப் போட்டி 2002ம் ஆண்டு


**மேற்பிரிவு பிரிவு:-**

**முதலாம் இடம்**



இ. றஜீவன்

**இரண்டாம் இடம்**



பு. சிவகௌரி

**மூன்றாம் இடம்**




ப. பிரவீனா

## வினாவிடைப் போட்டி 2002 ஆண்டு

**முதலாம் இடம்**

இ. றஜீவன்

**இரண்டாம் இடம்**



இ. றதீசன்

**மூன்றாம் இடம்**

எஸ். பிரியங்கா


## ஓவியப்போட்டி 2002ம் ஆண்டு

**பாலர்பிரிவு:-**

**முதலாம் இடம்**

எஸ். துலசிகா

**இரண்டாம் இடம்**



எஸ். சாரங்கன்

**மூன்றாம் இடம்**



எஸ். மாதங்கி

**மூன்றாம் இடம்**




எஸ். நிலோசா

## ஓவியப் போட்டி 2002ம் ஆண்டு

**கீழ்ப்பிரிவு:-**

முதலாம் இடம்



என். அனுாசன்

இரண்டாம் இடம்



எ. மிதுலா

இரண்டாம் இடம்

பீ. ஜனனா

மூன்றாம் இடம்

எஸ். கீர்த்தன்


**மத்திய பிரிவு:-**

முதலாம் இடம்



சி. மாதங்கி

இரண்டாம் இடம்



எம். ஜெரோசன்

மூன்றாம் இடம்



கே. காருண்யன்

## 2002ம் ஆண்டுக்குரிய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றோர்

முதலாம் இடம்:- திருமதி இ. மீரா.

இரண்டாம் இடம்:- திரு க. இராஜநாதன்.

மூன்றாம் இடம்:- வி. நந்தினி.

# நன்றி சொல்கின்றோம்......

அமையத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் தூய மன எண்ணங்களோடு எங்களுடன் இணைந்து தங்களது பொருளையும் பொன்னான நேரத்தையும் அமையத்திற்கே ஒதுக்கிச் செய்த சேவைகள் அனைத்திற்கும் 2002/2003 நிர்வாகசபையினர் தங்களது மனந்திறந்த நன்றியறிதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாவர். அந்த வகையில்

எமது அழைப்பிதழ்களை அன்போடு ஏற்றுத் தங்களது சிரமத்தையும் பாராது விழாவுக்குச் சமூகந் தந்து சிறப்பித்ததில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு அவர்கட்கு நன்றி கூறவும் கடைமைப்பட்டுள்ளோம்.

ஆறாவது வருடத்திலும் வன்னி விழாவைக் கண்டுகளிப்பதன்மூலம் எமது ஈழமக்களது வளர்ச்சிக்கும், அமையத்தினது வளர்ச்சிக்கும் உறுதுணையாகவிருந்து பேராதரவு வழங்கிய தமிழ் மக்களாகிய உங்களுக்கு முதற்கண் நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

அமையத்தின் ஆறாவது ஆண்டு கொம்பறைமலரை வெளியிடுவதற்கு விளம்பரமூலமாக நிதியுதவி வழங்கிய அனைத்து வர்த்தகப் பெருமக்கட்கும், மலர் வெளியீட்டினைச் செய்வதற்குச் சகல வழிகளிலும் உதவிபுரிந்த விவேகா அச்சு நிறுவனத்தாருக்கும் அட்டை வடிவமைப்பாளர் டிஜி வரைகலை நிலைய அதிபர் திரு. கருணா அவர்கட்கும், மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்துப் பேராளர்கட்கும் எங்களது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

2002ம் ஆண்டு வன்னி விழாவினைச் சிறப்பு விழாவாக்கிய அனைத்து இயல், இசை, நாடகக் கலைஞர்கட்கும், மேடையமைப்பாளர்கட்கும், ஒலி, ஒளி வீடியோ, புகைப்படப்பிப்பாளர் Raju அவர்கட்கும் எங்கள் இனிய நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது சகல போட்டி நிகழ்ச்சிகட்கும் மத்தியஸ்த்தம் வகித்த அனைத்துப் பெருந்தகையர்கட்கும், போட்டிகளில் கலந்து சிறப்பித்த போட்டியாளர்கட்கும், போட்டி நிகழ்ச்சிகட்குத் தங்கப் பதக்கங்களைப் பரிசில்களாகத் தந்துதவிய பெருந்தகையர்கட்கும் அமையத்தின் நன்றிகள் உரித்தாகட்டும்.

பத்திரிகைகள் மூலமாக அமையம் தொடர்பான விளம்பரங்களை வெளியிட்ட அனைத்துப் பத்திரிகை ஆசிரியர்கட்கும், வானொலி மூலமாக விளம்பரம் செய்த வானொலி நிறுவன அதிபர்களுக்கும், ஊழியர்களுக்கும், வியாபார ஸ்தலங்களில் எமது விளம்பர அறிவித்தல்களை வைத்து விளம்பரப்படுத்திய உரிமையாளர்கட்கும் என்றென்றும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

நிர்வாகசபைக் கூட்டங்களை நடாத்துவதற்கும், ஏனைய தேவைகட்குமாகச் சேவையடிப்படையில் இடவசதி செய்து தந்த Insurance & Financial Services உரிமையாளர் திரு. பாலன் கணபதிப்பிள்ளை அவர்கட்கு அமையத்தின் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அமையத்தின் நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் செய்வதற்கு ஒத்துழைப்புத் தந்த முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கட்கும், ஏனைய தொண்டர்கட்கும், வன்னிவிழா 2002ற்கான அனைத்து ஆக்கபூர்வமான உதவிகளையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எமக்களித்து விழாவினைச் சிறப்புற வைத்த அனைத்து நெஞ்சங்கட்கும், அமையத்தின் சார்பாக நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலமைப்பரிசில்திட்டத்தின் மூலமாக இங்கிருந்து அனுப்பப்படுகின்ற நிதிகளை ஈழமண்ணில் இருந்து கொண்டெ உரியமுயையில் அம்மாணவர்கட்கு வழங்குவதற்கு ஆவன செய்து வருகின்ற முல்லைத்தீவு மல்லாவியைச் சேர்ந்த திரு. சி.சுதேசபவன் பொ.சு.உ, திரு.நா.சண்முகம் அவர்கட்கும், மன்னாரைச் சேர்ந்த திரு.ஏ.சூசையப்பு அவர்கட்கும், வவுனியாவைச் சேர்ந்த திரு.ம.அமிதலிங்கம், திரு.மா.சிவசேகரம் அவர்கட்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த திரு ஏ. கே. மகாலிங்கம், திரு. எம். விவேகாந்தன், திரு. எஸ். கிருஸ்ணமூர்த்தி அவர்கட்கும் ஒட்டுசுட்டான் அபிவிருத்தி நிதியத்தைச் சேர்ந்த தலைவர் திரு. ஜெயபாலன் செயலாளர் திரு சி. மு. சிவனேசன் போசகர் நாகேஸ்வரன் உதவி அரசாங்க அதிபர், ஆ. சேனாதிராசா ஆகியோருக்கு அமையத்தின் சாப்பாக நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆமையத்தினது நிதியுதவிப் படக்காட்சிக்கு திரையரங்கு தந்துதவிய எலனி சினிமா அதிபர் திரு. அசோகன் அவர்கட்கும் பரிசில்களைத் தந்துதவிய திரு. கா. யசோதரன், திரு ப. புவனேந்திரன், திரு ஐ. கனகராசா ஆகியோருக்கும் அமையத்தின் நன்றிகள் உரித்தாகுக.

இவர்கட்கு மாத்திரமின்றி இங்கு நாங்கள் பெயர் குறிப்பிடமறந்த அனைவருக்கும் எங்கள் அமையத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றியுடன்**
நிர்வாகசபை உறுப்பினர்கள் (2001/2002)
வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்



Century 21

குறித்த நேரத்தில்
குறித்த இடத்தில்
வீடு வாங்கவும், விற்கவும்
Mortgage நம்பிக்கைக்கும்
நாணயத்திற்கும்

**Rajeef Koneswaran**
Sales Representative

**416.568.1078**

தவறாத நேரம்

தரமான பாகம்





தரமோ நிரந்தரம்

# ராஜாராம்
## உணவுச்சேவை

**RajahRam** CATERERS

589 Middlefield Road #20, Scarborough, On M1V 4Y6

**Tel: (416) 299-5200**


Ambika
Jewellers
தங்க நகை உலகில் ஓர் அதிசயம்
MISSISSAUGA
25 Agnes St. Unit1
Mississauga, ON
(905) 270-6921
SCARBOROUGH
3852 Finch Ave. East
Scarborough, ON
M1T 3T9
(416) 335-1553
SCARBOROUGH
2388 Eglinton Ave. East
(Kennedy & Eglinton)
Scarborough, ON
(416) 751-1364
Viveka Print & Digi Graphic